1038

சித்த மருத்துவ

அகராதி

பதிப்பாசிரியர் :
மரு. அ. சுந்தரராசன், பி.ஐ.எம்.,
ஆய்வு மருத்துவ அலுவலர்.
இந்திய மருத்துவம்
மற்றும் ஹோமியோபதி இயக்ககம்

வெளியீடு:
இந்திய மருத்துவம்
மற்றும்
ஹோமியோபதித்துறை
சென்னை — 106.

1039

சித்த மருத்துவ அகராதி

அச்சிட்டோர் : மத்திய கூட்டுறவு அச்சகம், சென்னை-2. போன்: 849739

சுர்ஜித் கு.சவுதரி, இ.ஆ.ப.,
இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை,
சென்னை - 106.

வாழ்த்துரை

உங்கள் கைகளில் தவழும் இந்நூல் ஒரு கடினமான பணியின் வெளிப்பாடாகும். மாணவர்கள், மருத்துவர்கள், ஆய்வு அறிஞர்கள், சித்த மருத்துவம் அறிய விழைவோர் அனைவர்க்கும் பயன்படும் வகையில் அமைந்த இம்மருத்துவ அகராதி பாராட்டத்தக்க வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இதில் **'அகரம்'** மட்டுமே இடம் பெற்றுள்ளது. இதன் பிற பகுதிகள் தொடர்ந்து வெளியிடப்படும். இவ்வகையான சித்த மருத்துவ நூல்களை மென்மேலும் வெளியிட வேண்டும் என விரும்புகிறேன்.

இப்படியொரு அரிய நூல் தொகுப்பை வெளியிட ஆவன செய்த ஆய்வு மருத்துவ அலுவலர் மரு.அ.சுந்தரராசன், பி.ஐ.எம்., அவர்களைப் பாராட்டுகிறேன். அவரது எண்ணங்கட்குச் செயல்வடிவம் தரும் தமிழ்ப் புலவர்கள் மற்றுமுள்ள சுவடி நகற் பிரிவு பணியாளர்கள் அனைவர்க்கும் எனது வாழ்த்துக்கள்.

இடம் : சென்னை
நாள் : 7.9.92.

சுர்ஜித். கு.சவுதரி.

நன்றியுரை

இந்திய மருத்துவத் துறை வளர்ச்சியில் பெரிதும் கவனம் கொண்டுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு **சு.முத்துசாமி, எம்.ஏ.,** அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகட்டும்.

வேண்டியனவற்றை விரும்பியபோது அளித்துவரும் எம்துறை அரசு செயலர் திருமிகு. **க.இன்பசாகரன்,** இ.ஆ.ப., அவர்கட்கும் முறையானவற்றிற்கு உடன் அனுமதியளித்து, பணி விரைவில் நடைபெறுவதில் முக்கிய பங்கேற்கும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநர் திருமிகு. **சுர்ஜித் கு.சவுதரி,** இ.ஆ.ப., அவர்கட்கும் எங்கள் நன்றி உடைத்து.

இம்மருத்துவ அகராதி வெளிவருவதில் உறுதுணை புரிந்த திருமிகு. **து.முருகராஜ்,** இ.ஆ.ப. முன்னாள் அரசு செயலர், இந்திய மருத்துவத்துறை, திருமிகு. **க.கணேசன்** இ.ஆ.ப. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, திருமிகு. **க.பழனியப்பன்,** இ.ஆ.ப. இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை இயக்ககம் ஆகியோருக்கும் எங்களின் நன்றி!

தக்க தொழில் நுட்ப அறிவுரை வழங்கி நூல் வெளியீட்டிற்கு துணை நின்ற இணை இயக்குநர், மருத்துவர் வீ.சுப்பிரமணியன், எம்.டி. (சித்தா)யும் அகராதி வெளியிடும் எண்ணத்தைச் சொன்னதும், மகிழ்ந்து தன்னிடம் உள்ள நூற்களைத் தந்துதவி அறிவுரையும் ஆசியும் வழங்கிய என் ஆசான் டாக்டர். **ஆர்.தியாகராஜன்,** எல்.ஐ.எம். அவர்கட்கும், அகராதி அமைப்பை முறைப்படுத்தித் தந்த சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் டாக்டர்.**பொற்கோ,** எம்.ஏ.,பி.எச்.டி., அவர்கட்கும் அனைத்து வழிகளிலும் துணை நின்று செயற்படும் அரசு அலுவலர் மற்றும் பணியாளர்கட்கும் என் நன்றியுரித்தாகட்டும்.

இத்துறைபணிகட்கு வடிவமாகும் சுவடி நகற் பிரிவு தமிழ்ப் புலவர்கள் திரு.த.அழகப்பராசு, எம்.ஏ., பி.எட்., திருமதி.செ.இரா.பிரசன்னா, எம்.ஏ., பி.எட். இருவர்க்கும், சுவடி நகற்பிரிவு பணியாளர்களான திரு.வெ.சாரங்கபாணி, திருமதி. க.லலிதா, செல்வி. த.லெட்சுமி, திருமதி. நா.பாக்கியசுந்தரி, திருமதி. தா.நாகம்மா ஆகியோர்க்கும் நன்முறையில் அச்சிட்டளித்தமைய கூட்டுறவு அச்சகத்தார்க்கும் என் நன்றி.

மரு.அ.சுந்தரராசன், பி.ஐ.எம்.,
ஆய்வு மருத்துவ அலுவலர்.

பதிப்புரை

இந்த மருத்துவ அகராதி ஒரு தொகுப்பு நூலாக அமைந்துள்ளது. இதுவரை வெளிவந்துள்ள மருத்துவ அகராதிகள், மருத்துவ நூல்கள், வெளிவராத சுவடி வடிவிலுள்ள மருத்துவ அகராதிகள், தமிழ் அகராதி நூல்கள் போன்ற பலவற்றினின்றும் சொற்களை இயன்றவரை தொகுத்து, வகுத்து, பகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வகராதியில் மருத்துவத்திற்குத் தேவையான மரம், செடி, கொடி போன்ற மூலிகைகள், சரக்குப் பொருட்கள், நோய், மருந்து, மருந்து பொருட்கள், அறிவியல் தொடர்புச் செய்திகள், மறை பொருள் சொற்கள் போன்றவை தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. சிலபோழ்து மருந்து முறைகளும் கூட இடம் பெற்றுள்ளன.

ஒரே சொல்லிற்குப் பல பொருள் அமைகிறபோது பொருட்கள் அகர வரிசைப்படி அமைக்காமல் இயல்பு நோக்கியும், இன்றியமையாமை கருதியும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் தேவையும், பயன்பாடும் கருதி சிலவிடங்களில் மாற்றியும், சிலவிடங்களில் இருக்கும் வண்ணமேயும் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னர் சொல்லப்பட்ட ஒரு சொல் அல்லது குறிப்பிட்ட ஒரு பெயருக்குரிய வேறு சொற்கள் வரும் போது **'காண்க'** எனக் குறிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. எதிராட்சி (Cross Reference) உணருதற்காகப் பயன்படும் இச்சொல் (தவிர்க்கவியலாத போது) சிலவிடங்களில் மட்டும் பயன் கொள்ளப்பட்டுள்ளது. அகராதியின் இறுதி பாக முடிவில் எதிராட்சியை உணர்தற்காகத் தனிப்பகுதி அமையவிருப்பதால்தான் தற்போது 'காண்க' தவிர்க்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ அகராதி பல தொகுதிகளாக வெளியிட திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முதல் பாகமாக **'அகரம்'** மட்டும் தற்போது வெளியிடப்படுகிறது.

இது ஒரு கன்னி முயற்சிதான். இதில் பிறர் தொகுத்தவற்றோடு அச்சாகாத ஓலைச் சுவடிகளும் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே புதிய அறியாத சொற்களும், பொருட்களும் கூட இதில் இடம் பெற்றுள்ளன.

சில சொற்கள் என்னவென்றே முழுமையாக விளங்காத போதுங்கூட அவை உடுக்குறி (★) இட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன. அது அச்சேறாது தவிர்க்கப்படுமேயானால் ஒரு சொல்லாட்சி மறைந்து விடும் அல்லவா? எனவேதான் புரியாத சொற்களும் கூட அச்சுரு பெற்றுள்ளன. அவ்வாறுள்ள சொற்களை ஆய்வு வல்லோர் கற்று அச்சொல்லின் சரியான வடிவத்தை எமக்கு அறிவிப்பர் என்பதும் அவ்வகைச் சொற்களை அச்சேற்றியதற்குக் காரணமாகும்.

முன்னமே குறிப்பிட்டது போல் இது ஒரு கன்னி முயற்சி; எனவே பிழைகள் இருப்பின் தவிர்த்து நிறைகளை நுகர்ந்து தக்க வழிகாட்டி உதவி இனிவரும் பதிப்புகள் சிறந்த முறையில் அமைய ஆன்றோர்கள் முன்வருவார்களாக.

இந்திய மருத்துவத்துறை இயக்ககம்
சென்னை - 106.

அஃகம் - தானியம், ஊற்றுநீர்.
அஃகரம் - வெள்ளெருக்கஞ்செடி.
அஃகல் - சுருங்கல், நீர்ச்சுண்டல், குறைதல்.
அஃகு - ஊறும் நீர், கசியும் நீர்.
அஃகுதல் - அஃகல்.
அஃகுல்லி - பிட்டு.
அஃகுள் - அக்குள்.
அஃகேனம் - முள்ளில்லாப் பன்றி.
அஃபோதம் - நிலாமுகிப்புள்.
அகக்கடுப்பு - உடம்பின் உள்ளுறுப்புகளில், உண்டாகும் வலி, குடல்வலி.
அகக்கண் - புண், எலும்பில் உள்ள துளை, சிலந்தி, புண்புரை.
அகக்கால் - பிராணன், உயிர்க்காற்று.
அகக்காழ் - ஆண்மரம், உள்வயிரம், முள்மரம்.
அகக்குறி - நோயால் உடம்பில் ஏற்பட்ட குறி.
அகக்கொதிப்பு - உடம்பிலுண்டாகும் கடுப்பு, வெட்டை.
அகக்கொல்லி - தில்லை மரம், பாம்புக்கொல்லி (கீரிப்பூண்டு).
அகங்கம் - ஈயம்.
அகங்கனம் - வெண்காரம், பொரிகாரம்.
அகங்காம் - ஆண் மரம்.
அகங்கார முதற்கரு - கரு, தலை.
அகங்காரிக் கிரகம் - குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் ஏற்படும் கிரகத் தோடம்.
அகசம் - அகத்தி, எலுமிச்சை.
அகசம்பங்கி - பெரிய சம்பங்கி மரம்.
அகசி - அகத்தி, சீமையகத்தி, ஆளிவிதைச் செடி.
அகசிப்பிசின் - அகத்திப் பிசின்.
அகசு - பொழுது, பகல்.
அகசேபம் - கட்டுக் கொடி.
அகசேருகம் - முள்ளந்தண்டின்மை.
அகசை - சிறு கல்லூரிச் செடி, மரத்தில் பிறந்தது, மலையில் உற்பத்தியானது.
அகச்சூடு - உட்சூடு, கணச்சூடு.
அகச்சூலி - சிறிய சூலிமரம்.
அகடி, அகடு - வயிறு, அடிவயிறு, ஆடு, ஈருள்ளி.
அகடூரி - பாம்பு.
அகணி - உட்பாகம், தெங்கு பனை இவைகளின் நார், மரப்பட்டையின் உட்பக்கத்து நார், கடுக்காய் நஞ்சு, சுக்கிலப்புரணி, நஞ்சு.
அகணிக்கடுக்காய் - உட் சதைப்பற்றுள்ள கடுக்காய், முற்றிய கடுக்காய்.

அகணியகில் - மரத்தினுட் பாகத்திலிருக்கும் அகில்.
அகண் - அறுகு.
அகண்டகம் - முள்ளில்லாதது.
அகண்டகலை - சூரியகலை.
அகண்டகாலி வேதகன் - பூனைக்காலி.
அகண்ட காவண்டவுப்பு - முடியண்டம் படருப்பு.
அகண்டபூடு - பிரமிப்பூண்டு.
அகண்டபூண்டு - பிரமிப்பூண்டு, வல்லாரை, கற்பமூலிகை.
அகண்டமாரீசன் - பூசனிக்காய்.
அகண்டமெழுகு - மூளையினின்று செய்யும் ஓர் வித மெழுகு.
அகண்டம் - மூளை.
அகண்டரசம் - மூலாதாரம், மூளையின் சத்து.
அகண்டவரை - மூளை வரையிலும் ஆக்கினை.
அகண்டவறை - மூளையின் கண்ணறை.
அகண்டாகரம் - செண்பகம்.
அகதங்காரன் - மருத்துவன்.
அகதம் - குளிகை, மருந்து, விடம் நீக்கும் மருந்து, நோயின்மை.
அகதன் - நோயில்லாதவன்.
அகதஸ்காரன் - மருத்துவன்.
அகதி - வேலமரம், தில்லைமரம், வேலமரப்பொது, பலமில்லாதவன்.
அகதிகு - கழுதை.
அகதுகம் - ஆமணக்கு.
அகதூதி - மந்தாரை.
அகதேசு - பிணியில்லாதவன்.
அகதோரம் - நெல்லி.
அகத்தலா - கீழ்க்காய் நெல்லி.
அகத்தான் - தான்றி மரம்.
அகத்தி - அகத்தி மரம், பால், முலைப்பால், கத்தரிக்காய், செவ்வல்லி, சிற்றகத்தி, பேரகத்தி, சாழையகத்தி, செவ்வகத்தி.
அகத்தி ஆச்சா - ஆவரை.
அகத்திப்பால் - முலைப்பால், அகரு.
அகத்திப்பிசின் - அகத்திப்பட்டையினின்று உண்டாகும் ஓர்வகைச் சிகப்புப்பிசின்.
அகத்திமரம் - வெள்வேல்.
அகத்தியம் - ஆத்தி.
அகத்தியர்குழம்பு - பத்துவகை மருந்துச் சரக்குகளைச் சேர்த்து அனைத்து நோய்கட்கும் அனுபானம் மாற்றி கொடுக்கும் ஓர் மருந்து.
அகத்தியர் பால் - முலைப்பால்.
அகத்தியன் பூடு - கொட்டைச் செடி.
அகத்தியீசரறுகு, அகத்தியே சரறுகு - அறுகம்புல்.

பேரறுகம்புல், சிற்றறுகம்புல்.

அகத்தி விதைத் தைலம் - அகத்திவிதை முதலானவைகளைக் கொண்டு செய்யும் தைலம்.

அகத்தினில் வாசி - செப்பு சதுரக்கள்ளி.

அகத்தீ - வெட்டை, பித்தம், கணம், கர்ப்பம், மூலம் போன்றவற்றால் ஏற்படும் சூடு, வெண்கடுகு, மூலாக்கினி.

அகத்தீசரருகு, - அறுகம்புல், (சிற்றறுகு).

அகத்தூரம் - நாயுருவி.

அகத்தேசரருகு - அறுகம்புல் (சிற்றறுகு).

அகத்தேவி -சோணைப்புல்.

அகநாதம் - சுக்கு.

அகந்தணல் -வெண்கடுகு, உட்சூடு.

அகபம் - ✸புளிவசற்பாது.

அகப்பகந்தரம் - குதத்தினுள் துவாரமுண்டாக்கும் இரண நோய்; உட்பவுத்திரம்.

அகப்பத்தியம் - மருந்துண்ணும் காலங்களில் உடல் சேர்க்கை இல்லாதிருத்தல்.

அகப்பவுத்திரம் - குதத்தினுள் துவாரமுண்டாக்கும் இரண நோய், உட்பவுத்திரம்.

அகப்பாய்ச்சல் - ஊசியால் மருந்தேற்றல்.

அகப்பிரியம் - பழமுண்ணிப்பாலை.

அகப்பூ - இதயம்.

அகப்பை - தேங்காய் ஓட்டினாற் செய்த ஒரு கருவி, இரைப்பை, கருப்பை (கருப்பப்பை).

அகப்பை மூக்கன் - மூக்கு நீண்ட பறவை.

அகமதி - முலைப்பால்.

அகமமரம் - வெள்வேலமரம்.

அகமமிர்தம் - நாளமில்லாச் சுரப்பிகளால் சுரக்கப்படும் திரவம் (நாதவுப்பு).

அகமம் - மரப்பொது, மலை.

அகமரம் - வெள்வேலமரம்.

அகமனம் - பெண்ணிடம் சேராதிருத்தல்.

அகமாலிகம் - கருங்குமிழ் மரம்.

அகமூலம் - உள்மூலம், ஆசனத்தில் ஏற்படும் மூலம்.

அகம் - மார்பு, வலி, பாம்பு, தானியம், வெள்வேல், கெந்தக்குணம், கெந்தகம், ஆகாயம், மலை, பகல், ஓர் மரம், மருதம், நீர்முள், மரப்பொது, மலை, அசமதாகம், ஓமம்.

அகம்பனம் - மூச்சுத்திணறல்.

அகரகாயம் - உடலின் முன்பக்கம்.

அகரக்களங்கு - சூதக்களங்கு.

அகரத்திரவம் - பாலேடு, தயிரேடு.

அகரநீர் - முத்துச் சிப்பியில் இருக்கும் நீர்.
அகரபரணி - பூனைக்காலி.
அகரம் - கிராம்பு, சூதம், இரசம்.
அகரம்மா - வெள்ளெருக்கு.
அகரவுகரம் - நாதவிந்து.
அகரவுப்பு - கல்லுப்பு.
அகராஜசம் - சிவதை.
அகராது - கொன்றை.
அகரி - ஒரு வகைப்புல்.
அகரு - அமுக்கரா, கெந்தகம், கணம், அகிற்கட்டை, குக்கில், அகில்மரம், நூக்கமரம்.
அகருகட்டை, அகரு கந்தம், அகரு சந்தனம், அகரு மந்தம் - செஞ்சந்தனம்.
அகரும் - அகிலம்.
அகரோகம் - சயரோகம்.
அகர் - பகல்
அகர்ணம் - காதின்மை, பாம்பு, காதுகேளாமை.
அகர்நாதன் - சூரியன்.
அகர்ப்பதி, அகர்மணி - சூரியன்
அகர் முகம் - விடியற்காலம், காலைப்பொழுது.
அகலசத்து - சிலாசத்து, ஓர் உபரசச்சரக்கு.
அகலமுனி - ஆடுதின்னாப்பாலை.
அகலமூலி - மலைமூலி.
அகலம் - மார்பு, பூமி, ஆகாயம், மலை.
அகலவாலி சுரோதம் - வால்நீண்ட குரங்கு.
அகலமுகவூதல் - மருந்திட்டுச் சீலைமண் செய்த அகல் சிவக்கும்படி ஊதுதல்.
அகலறை - மலையின் குகை, மலையின்உச்சி, மலைப்பகுதி.
அகலாதரை - ஆடாதோடை.
அகலிகம் - ஆடுதின்னாப்பாலை, (புழுக்கொல்லி).
அகலிடம் - பூமி
அகலியம் - மரப்பொது, ஓர்மரம்.
அகலுதல் - பூமி
அகலுள் - அல்குலின் உட்புறம், அல்குலின் வாயில்.
அகல் - அல்குலின் மேற்பகுதி, வெள்வேல மரம், பெருமரம், ஓர் அளவு, அகில்.
அகவஞ்சம் - வெள்ளி.
அகவடி - உள்ளங்கால்.
அகவம் - அமுக்கிரா.
அகவாசிதம் - கருங்குறிஞ்சா.
அகவாயில் - மனம்.
அகவி - அத்தி.
அகவிதழ் - உள்ளிதழ்
அகவு - அமுக்கிரா.
அகவை - வயது.
அகழறை - மலையின் உட்குகை.
அகழாதரை - ஆடாதோடை.
அகழான் - ஒருவகை எலி.

அகழிப்பவுத்திரம் -வாதபித்தத்தால் ஏற்படும் ஒருவகை பவுத்திரநோய்.

அகழெலி - ஒருவகை எலி.

அகளங்கம் - குற்றமற்றது, சீதாங்கபாடாணம், (பிறவிப்பாடாணம் முப்பத்திரண்டில் ஒன்று).

அகளம் - தாழி, மிடா, சாடி.

அகளருக்கா - தூதுவளை.

அகளி - தண்ணீர் ஊற்றும் அகன்ற சட்டி, கொப்பரை, தாழை.

அகள் - அமுக்கிரா.

அகற்பித மரணம் - அகால மரணம்.

அகனம் - வேங்கை மரம், புல்லுருவி.

அகனாதி, அகனானிதம் -செங்கொடிவேலி, வெள்ளைக் குன்றிமணி, கொடிவேலி, வெண் கொடிவேலி.

அகன் - எருக்கு.

அகன்மணி - உயர்ந்த ரத்தினங்களுள் ஒன்று.

அகன்னம் - செவிடு.

அகன்னியகனி - நாளுக்கு நாள்.

அகாண்ட குசுமம் - காலந்தவறிப் பூத்தல்.

அகாண்டசாதம் - காலமில்லாத காலத்தில் பிறந்தது.

அகாண்டசூலை - குத்தல்வலி.

அகாண்டபாத சாதம் - பிறந்தவுடன் இறத்தல்.

அகாத - கொடிய, அதிகம்.

அகாத சுரம் - கொடிய சுரம்.

அகாத நோய் - தகாத நோய்.

அகாதம் - . கள், நீந்தும் தண்ணீர்.

அகாதிதம், அகாத்தியம் - கடித்து உண்ணத்தகாதது.

அகாந்தம் - தான்றி.

அகாயு - காகம், பாம்பு.

அகாரகம், அகாரம் - தான்றிக்காய்.

அகார வுப்பு - கல்லுப்பு.

அகாலகருப்பம் - இயற்கைக்குப் புறம்பாக உண்டாகுங் கருப்பம்.

அகால சூதகம், அகால பகிஷ்டை - இயற்கைக்கு விரோதமாக உண்டாகும் மாதவிடாய் அல்லது தீட்டு.

அகாலப்பக்குவம் - இயற்கைக்கு மாறாக (ஏற்ற காலத்திலல்லாது) பருவமடைதல்.

அகாலப்பசி - நீரிழிவு முதலிய நோய்களினால் உண்டாகும் பசி.

அகாலப்பிரசவம் - இயற்கைக்கு மாறாக நிகழும் பிரசவம்.

அகாலப்பூப்பு - காலமில்லாத காலத்தில் நிகழும் பூப்பு.

அகாலம் - காலமில்லாத காலம்.

அகாலருது - அகாலப்பூப்பு.

அகாலவெள்ளெழுத்து - சிறிய உருவங்கள்

கண்ணுக்கு முதலில் தெரிந்து பிறகு காணாமலே மறையுந் தன்மையுடைய ஒரு கண்ணோய்; பித்தக் கோளாறுகளினால் இது சிறுவர்க்கு உண்டாகிறது.

அகி - இரும்பு, ஈயம், ஒரு வகை மரம், சூரியன், பாம்பு.

அகிகண்டம் - மயிர் மாணிக்கம்.

அகிகாந்தம் - காற்று, சூரியகாந்தம், சூரியகாந்தி.

அகிகை - இலவமரம், பட்டுப்பருத்தி, (இலவம்பஞ்சு).

அகிச்சத்திரம் - ஓர்விடம், ஓர் பூண்டு.

அகிஞ்சிரம் - செங்கத்தரி, கருக்குவாளி (செடி).

அகிட்டம் - கடுகுரோகணி.

அகிதம் - உணவு, தீமை, இதமின்மை.

அகிபதி -பெரும்பாம்பு, பாம்புக்கரசன்.

அகிபத்திரம் - கரும்பு.

அகிபந்தன் - இரும்பு, ஈயம் இவைகளைக் கட்டும் சீர்பந்த பாடாணம்.

அகிபுக்கு - கீரி, மயில், கருடன்.

அகிபுசம் - கருடன், மயில், கந்தநாகுலி (ஓர்பூண்டு).

அகிபுட்பம் - நாகேசுரப்பூடு.

அகிபூதனம் - குழந்தைகளுக்கு மலவாயிலில் மலம், சிறுநீர் இவை தங்குவதால் அவ்விடத்தில் தினவுடன் தோல் கழன்று துன்புறுத்தும் தோல் நோய்.

அகிபேனம் - பாம்பின் விடம், கசகசாப்பால் (அபின்).

அகிமரால், வெள்வேலமரம், அகில் கட்டை.

அகி மாரம், அகிமார் - வெள்வேல மரம்.

அகியாகாசம் - கற்பூரப்புல்.

அகிரன் - நெருப்பு, சூரியன்.

அகிரிபு - கருடன், கீரி, மயில்.

அகிருத்திரம விடம் - மரம், புல், பூண்டு போன்ற பொருட்களாலும் பாடாணம் முதலிய தாதுக்களாலும் தேள், பாம்பு, சிலந்தி முதலிய பிராணிகளின் விடத்தினாலும் ஏற்படும் விட நோய்.

அகிரை - குரலடைப்பு, குரலின்மை.

அகிர்த்துரும விஷம் - அகிருத்திரம விடம்.

அகிர் - தலைச்சுண்டு, ஓர்வகைப் பாடாணம்.

அகிலதம் - வெற்றிலைக் கொடி.

அகிலமாமூலி - நன்னாரி.

அகில முனி - ஆடு தின்னாப் பாலை.

அகிலமேதகம் - அடுக்கு நந்தியாவட்டம்.

அகிலமேதகி - செந்தொட்டி, சிறுகாஞ்சொறி.

அகிலம் - அனைத்தும், பூமி, நீர்.

அகிலாதி - முசுமுசுக்கை.

அகிலாரம் - வெள்வேலி.

அகிலி - செவ்வகில் மரம்.

அகிலி மீனா - ஓர் மரம்.

அகிலோலிகம் - வெற்றிலைக் கொடி.

அகில்கட்டை - சந்தனக் கட்டை.

அகில் - அகிற்கட்டை, பஞ்சவிரைகளிலொன்று, மூங்கில், சந்தனம் வெள்வேல், இது அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என நான்கு வகைப்படும்.

அகில் மரம் - வெள்வேல்.

அகிவிடபாகம் - பாம்பின் விடமிறக்கல், கந்தநாகுலி (ஓர் பூண்டு).

அகிவைரி - மயில், கருடன்.

அகிற்கட்டை - ஒரு வாசனைக் கட்டை; இது தளர்ந்த தேகத்தை இறுகச் செய்யும். இதன் புகையால் சுரம், வாந்தி, அருசி, அயர்ச்சி முதலியன நீங்கும்.

அகிற்குறடு - அகிற்கட்டை.

அகிற்கூட்டு - ஏலம், காசுக்கட்டி (எரிகாசு), சந்தனம், கற்பூரம், தேன், அகில் ஆகிய இவைகள் சேர்ந்த வாசனைக் கலவை.

அகினிறம் - துருசு.

அகு சமாதிதம் - சிவப்புக் குண்டு மிளகாய்.

அகு சுலாபு - அதிவிடையம்.

அகுடகந்தம் - பெருங்காயம்.

அகுடம், அகுடரோகிணி - கடுகுரோகிணி, கருப்புக் கடுகுரோகிணி.

அகுடாரிகம் - கருங்குங்கிலியம்.

அகுட்டம் - மிளகு, கடுகு ரோகிணி.

அகுணாத்தி - குளப்பாலை.

அகுணி - ஒருவகை அகில்.

அகுணியகில் - செம்பில் மரம்.

அகுதம் - இஞ்சி.

அகுதி - வேலமரம், கருவேல மரம், இரும்பு, பாம்பு.

அகுதியாத்தம் - பூனைக்காலி.

அகுத்தம் - குக்கிலம்.

அகுபாரை, அகுப்பரா - கையாந்தகரை.

அகுப்பி - சங்கங்குப்பி.

அகுப்பிபரா - கையாந்தகரை.

அகுப்பியகம், அகுப்பியம் - பொன், வெள்ளி.

அகும்பை - கவிழ்தும்பை, தும்பை.

அகுரம் - சடராக்கினி.

அகுரா - மோதிரக் கன்னி (மூலிகை).

அகுரு - வெட்டிவேர், அகில் மரம், குக்குலு, நூக்க மரம்.

அகுர் - எட்டி, மோதிரக்கன்னி.

அகுலாதிகம் - கரிசலாங்கண்ணி.

அகுலி - நறுவிழி; இது, சிறு நறுவிழி, பெருநறுவிழி, நாய் நறுவிழி, நாறு நறுவிழி, பொன் நறுவிழி, அச்சி நறுவிழி எனப் பலவகைப்படும்.

அகுலோதிகம் - நீலக் கொடிவேலி.

அகுல்லி - வெள்வேல்.

அகுவல்லி - பலகாரம்.

அகுவைக்கட்டி - அரையாப்புக் கட்டி.

அகுளத்தி - குடசப்பாலை.

அகுளிதி, அகுளுதி, அகுளூதி - வேப்பமரம்.

அகுளை - கருஞ்சேம்பு.

அகுள் - கம்பளத்தோல். (ஆட்டின் கழுத்துத் தோல்).

அகூடகந்தகம், அகூடகந்தம் - பெருங்காயம்.

அகூபாதம், அகூபாரம், அகூபாரன் - கடலாமை, கடல், குன்று, கல்மலை.

அகைத்தல் - வருத்துதல், அறுத்தல், கிளைத்தல்.

அகை - துளிர், உள்ளங்கை.

அகைமம் - புல்லுருவி, குருவிச்சை, கருந்தாளி.

அகையுருவி - புல்லுருவி.

அகையுலாதிகம் - கருங் காணம்.

அகோடம் - பாக்கு மரம், கழுகு.

அகோண்டி - சவரி லோத்திரம்.

அகோரப்பல்லதகி - சங்கிலை, பீச்சங்கிலை.

அகோரமயமாதி - உடம்பின் வெப்பத்திற்கு காரணமான இடம்; ஆக்கினை.

அகோரவிரம் - சுவா திட்டானம்.

அகோராத்திரம் - பகலிரவு.

அகோரி -மோதிரக்கன்னி (மூலிகை).

அகோரை - வெப்பமான நாள்.

அக்ககோலம் - தேற்றாங் கொட்டை.

அக்கக்கொடி - ஒருவகைக் கொடி.

அக்கணம் - பொரிகாரம், வெண்காரம், முள் மரம்.

அக்கணா - தான்றி மரம்.

அக்கணாகிதம் - கருங் கற்றாழை.

அக்கண்டகம் - நெபத்திகை எனும் ஓர் மூலிகை (அறியப்படாதது).

அக்கண்டர், அக்கண்டிகா - தைவேளை.

அக்கதத்தம் - தான்றிக்காய்.

அக்கதம் - அட்சதை.

அக்கதி - முலைப்பால்.

அக்கதேவி - சோனைப்புல், தான்றிக் கன்று. (சுனைப்புல்)

அக்கந்தம் - தான்றி மரம்.

அக்கபாரம் - கருப்பட்டி.

அக்கபாரி - கருஞ்சடைச்சி, ஓர் கறுப்பு நீர்ப் பூண்டு, கருநிமிளை.

அக்கபிரம், அக்கப்பிரம் - மாமரம்.

அக்கமணி - உருத்திராட்ச மணி, உத்திராட்ச மரம்.

அக்கமலம் - குடலில் மலம் தங்குவதால் ஏற்படும் நோய்.

அக்கமினி - கொள்.

அக்கமுன்றி - கண்.

அக்கம் - கயிறு, முதுமருந்து, தான்றிக்காய், வெள்ளெருக்கு, கண், பொன், உருத்திராட்சம், முதுகு, உப்பு, தானியம், அருகு, ஒருமரம், கடலுப்பு, தான்றி மரம், துருசு.

அக்கரகணரோகம் - கணச்சூட்டினால் வாய், வயிறு, குடல் முதலிய உறுப்புகள் வெந்து தேகவோட்டம், வாய்நாற்றம், சுரம், மயக்கம் முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகைக் கணநோய். இது 12 வயது வரை தொடரும்.

அக்கரகாரம் - பல்வலி, வாத நோய்க்கு உபயோகப் படும், வட ஆப்பிரிக்க தேசத்தில் விளையும் ஓர் வகைப் பூ மரம்.

அக்கரக் கழிச்சல் - வாய் புண்ணாகி குடல் வெந்து அசீரண பேதியை உண்டாக்கும் ஓர் நோய்.

அக்கரக் காய்ச்சல் - வாயிலழற்சியை உண்டாக்கி நாக்கிலு முதட்டிலும் சிறு கொப்புளங்களை எழுப்பும் ஓர்வகைக் காய்ச்சல்.

அக்கரசி - உள் வேக்காட்டினால் நாக்கில் காளான் பூத்தது போல் காணும் ஓர் இரணநோய்.

அக்கரசுரம் - அக்கரக் காய்ச்சல்.

அக்கரடிப்பூண்டு - மருளூ மத்தை.

அக்கரத்தான், அக்கரந்தான் - தான்றி.

அக்கரபாகம் - முன்பக்கம், நுனி, உடம்பின் நுனி அதாவது கை, கால், உறுப்பு.

அக்கரப்படுவன் - சுரத்துடன் வாய் வெந்து நாற்றமும் கொப்புளமும் உருவாகும் ஒரு நோய். கண்ணிமையில் சிறு கொப்புளங்களை உருவாக்கி கண்ணீர் வடிய பீளை தள்ளுமோர் நோய்.

அக்கரப்பட்டை - மாமரப்பட்டை.

அக்கரப்புண் - வாய், நாக்கு, உதடு ஆகிய இடங்களில் வெந்து அதனால் ஏற்படும் புண். மேலிமையில் உண்டாகும் புண்.

அக்கரமது - கருப்பட்டி.

அக்கர மாந்த சுரம் - குழந்தைகட்கு அசீரணத்தால், வாயில் ஏற்படும் புண்ணால், உண்டாகும் சுரம்.

அக்கரம் - வெள்ளெருக்கு, தான்றிக்காய், சர்க்கரை, மாமரம், கருப்புக்கட்டி, கருப்பட்டி, சோமனாதி, வட ஆப்பிரிக்க தேசத்தில் விளையும் ஓர் வகைப் பூ மரம்.

உடம்பினுட் பக்கத்திலுள்ள சளிச்சவ்வில் அழற்சி ஏற்பட்டு சிறு சிறு கொப்புளங்கள் உண்டாகும். இதில் பலவகை உண்டு.

சிறு குழந்தைகட்குக் கணச்சூட்டினால் வயிறு கோளாறு அடைந்து வாய், நாக்கு, உதடு ஆகிய இவ்விடங்களில் சிறு கொப்புளங்களை எழுப்பும் நோய் (அச்சரம்).

நாக்கினடியில் அட்சரம் பொங்கி அதனால் ஈரல், மண்ணீரல் (முதலியன) வீங்கி மரணத்தை உண்டாக்கும் நோய்.

வெப்பமான இடங்களில், குழந்தைகளுக்கு மாந்த நோயினால் அழற்சி உண்டாகிப் பொங்கும் அச்சரம்.

விஷக்காற்றினால் இரத்தம் முறிந்து அதனால் தாகம், கை, கால் உளைச்சல், உடம்பு சில்லிடல் முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகைக் கழிச்சல்.

மேலிமை தடித்து வலியுண்டாகிக் கண்ணீர் வடிந்து பீளை தள்ளும் ஓர்வகைக் கண்ணோய்.

அக்கரம்பில்லம் - கண்ணிமை விறைத்தலுடன் புருவத்தில் நீர் கட்டிப் புடைத்து, கண் சிவந்து வலியுண்டாக்கிப் பீளை தள்ளும் ஓர் வகைக் கண்ணோய்.

அக்கரம்புழுவெட்டு - இமை மயிர் உதிர்தல், இமையில் இரணம், அனல் போல் காந்துதல், இரத்தம் வடிதல், வீக்கம் அல்லது தடிப்பு ஆகிய குணங்களை உண்டாக்கும் ஓர்வகைக் கண்ணோய்.

அக்கரம் பொங்கல் - வாய், உதடு அல்லது நாக்கு ஆகிய இவ்விடங்களில் அழற்சியினால் சிறு கொப்பளங்கள் எழும்புதல்.

அக்கரம்மா - வெள்ளெருக்கு.

அக்கரவல்லி - குறிஞ்சில்.

அக்கரவிரணம் அக்கரப்புண்

அக்கரள் - ஆண் மரம்.

அக்கரன் - மூன்று வித வாந்திபேதிகளில் ஒன்று. நாபியின் கீழ்ச் சார்ந்து உஷ்ண பேதி போலும் செரியா மாந்தம் போலும் வெண்மையாயும் சோறு சோறாகவும் பேதி கண்டு குடலிரைச்சல், குமட்டல் நெஞ்சு குத்தல், நாவறட்சி, தாகம், வியர்வை படுக்கையில் பொருந்தாமை, வலி, உடல் குளிரல் முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகை வாந்தி பேதி.

அக்கரா, அக்கராகாரம் - வட ஆப்பிரிக்க தேசத்தில் விளையும் ஓர் வகைப் பூ மரம்.

அக்கராசி - வாலுளுவை, வாலுளுவை அரிசி.

அக்கரோட்டு - ஒரு வகைப் பருப்பின் கொட்டை, நாட்டு அக்கரோட்டுக் கொட்டை.

அக்கலாட்டி - காசுக்கட்டி.

அக்கவடம் - உருத்திராக்க மாலை.

அக்கவாலதி -நெருஞ்சில்.

அக்கழலை, அக்கழற்சி - எலும்புக்கு உண்டாகும் அழலை.

அக்கழிவு - எலும்பிற் கேற்படும் அழிவு.

அக்களவு - எலும்பின் அளவு, பூநீறு.

அக்கறக்கி - செந்தினை.

அக்கறம் - தான்றிக்காய்.

அக்கனக்காய் - பூவந்திக் கொட்டை.

அக்கனா, அக்கனாகம் - தான்றி

அக்கன் - கருடன், குருடன், நாய்.

அக்காகலம் - அகுரு மரம்.

அக்காகுருவி - கூச்சலிடும் ஓர் வகைக் குருவி.

அக்காடச் செல்லி கண்டன் - தாவிச் செல்லும் அணில்பிள்ளை, பறவையணில்.

அக்காடிதம் - கவுரி பாடாணம், ஓர்வகைப் பரங்கி வைப்புப் பாடாணம்.

அக்காடிப் பயறு - மொச்சைக்காய்.

அக்காடுதி, அக்காத்தான், அக்காந்தர், அக்காந்தான் - தான்றி.

அக்காரடலை - சர்க்கரைப் பொங்கல்.

அக்காரப்பட்டை - மாமரப்பட்டை, புளிமாமரப்பட்டை.

அக்காரமோனி - கருப்புக்கோவை.

அக்காரம் - சர்க்கரை, கருப்புக்கட்டி, கரும்பு, மாமரம், தான்றிக்காய், சீலை, சுனைப்புல்.

அக்காரவடிசில் - சர்க்கரைப் பொங்கல்.

அக்காரவல்லி - குறிஞ்சி, வெங்காரம்.

அக்காரை - சிற்றுணவு.

அக்காவவெலும்பு - முழங்காலெலும்பு.

அக்காளம் - தரகம்புல், வயிரமுள்ள மரம், முள் மரம், பலகாரம்.

அக்காளன் - காட்டுப் புல்.

அக்கி - வெயில் காலத்தில் வெப்பத்தினால் வரும் தோற்பிணி (அக்கினி கரப்பான்), அகில், கண், வெப்பம், ஓர்பூச்சி, கற்றாழை, அத்தி, அக்கிப்பூடு, அக்கியால் வருத்தப்படுபவன், சங்கு.

அக்கிஎழுதுதல் - குயவனிடம் சென்று செங்காவிக் குழம்பால் சிங்கம் (அல்லது) நாயுருவத்தை அக்கிப் புண் மீது எழுதுதல்.

அக்கிக்கண் - அக்கியைப் போல கண் சிவந்து சிறு குருக்களை எழுப்பி எரிச்சலையுண்டாக்கும் ஓர் கண் நோய்; கருவிழியின் மேல்தோலில் சிவந்து அக்கியைப் போல் சிறுசிறு கொப்புளங்கள் எழும்பி எரிவு கண்டு புண்ணாகும் கண்நோய்.

அக்கிக்கல் - ஓர்வகை வெண்படிகம், ஓர்வித சிவப்பு இரத்தினம், ஓர்வகை மஞ்சள் இரத்தினம், கண்ணிலிருக்கும் லென்சு.

அக்கிக்கள்ளி - வெருகு.

அக்கிக் காய்ச்சல் - உடம்பில் அக்கியை எழுப்பும் காய்ச்சல், உடம்பில் சிறு குருக்களை எழுப்பும் காய்ச்சல், குழந்தைகட்கு அக்கியை எழுப்பும் காய்ச்சல்.

அக்கிக்குதி - கடுக்காய்.

அக்கிக் கொடி - ஓர்வகைக் கொடி.

அக்கிசம் - நீர்முள்ளி.

அக்கிசா - மிளகு.

அக்கிசி, அக்கிசில் - வெந்தோன்றி.

அக்கிச்சூர் - கண்ணோய்.

அக்கிடம் - வசம்பு, கற்றாழை.

அக்கிணி - சிறுவெந்தோன்றி.

அக்கித்தாரை - கண்ணின் நடுவில் உள்ள துவாரம், கண்மணி.

அக்கிநீர் - அக்கியினின்று வடியும் நீர், கண்ணினின்று வடியும் நீர் (கண்ணீர்), பனிக்குடத்து நீர்.

அக்கி நோய் - கண்ணோய், அக்கி.

அக்கிப்படலம் - கண்படலம், கண் நரம்பின் வழியாய் அக்கியைப் போன்ற குருக்களை எழுப்பி வலியையுண்டாக்கும் நோய். கருவிழியின் மேல்தோலில் சிவந்த அக்கியைப் போன்ற

குருக்கள் எழும்பி எரிச்சல் ஏற்பட்டு துன்புறுத்தும் ஒருவிதக் கண்ணோய்.

அக்கிப்படுவன் - குளிர் காய்ச்சலுடன் உடம்பிலுள்ள சில பாகங்களில் சதை வீங்கி தினவும் வலியும் எரிச்சலும் தரும் ஒரு தோல் நோய்.

அக்கிப்படை - உடலில் அக்கியைப் போலெழும்பும் ஒருவிதப் படை.

அக்கிப்பீச்சல், அக்கிப் பீச்சிடல் - அக்கி எழும்பல், பல்லியின் சிறுநீர் உடலில் படுவதால் சிறுசிறு கொப்புளங்கள் எழும்பும் அக்கியைப் போன்ற புண்.

அக்கிப்புடை - அம்மையைப் போன்ற குருக்களால் உடம்பில் உண்டாகும் வீக்கம்.

அக்கிப் பூடு - கொடி மாமரப் பூண்டு, படரும் பூண்டு.

அக்கி மச்சா - அமுக்குரா இலை.

அக்கிமைகாரம் - வடஆப்பிரிக்க தேசத்தில் விளையும் ஓர் வகைப் பூ மரம்.

அக்கியசார் - அமுக்கிரா.

அக்கியம் - துத்தநாக மணல், நாகமணல்.

அக்கியெழுதல் - அக்கி எழுதுதல்.

அக்கிரகத்தம், அக்கிரகரம் - கை நுனி, வலக்கை.

அக்கிரகாரம் - அக்கராகாரம்.

அக்கிரசங்கை - கணைக் காலின் முன்பாகம், முன்தொடை.

அக்கிர சருமம் - நுனித்தோல், ஆண் குறியின் நுனித்தோல்.

அக்கிரசூதகம் - மகளிரின் முதற்பூப்பு.

அக்கிரணம் - அக்கியினால் ஏற்பட்ட புண்.

அக்கிரநோய் - கண் சிவந்து மாறி கண்கள் விழிக்க முடியாது கண்ணீர் ஒழுகி, இமைதடித்து, கடைக்கண்ணில் அறுப்பது போல வலியையும் கூச்சத்தையு முண்டாக்கி பீளைதள்ளும் கண்ணோய்.

அக்கிரபாகம் - முன்பக்கம், நுனி, முதற் பங்கு, உடம்பின் நுனியாகிய கைகாலுறுப்பு.

அக்கிரப்பாணி - கைநுனி, வலக்கை.

அக்கிரமசூதகம் - முறைமைக்கு மாறாகக் காணும் மாதவிடாய்.

அக்கிரமப்பிரசவம் - பிரயாசை, காலம், அபாயம் இவற்றால் வேறுபடும் பிரசவம்.

அக்கிரமமலம் - அகாலத்தில் மலங் கழித்தல்.
அக்கிரமம் - தான்றிக்காய், சோமனாதி.
அக்கிரமாமிசம் - இதயம், இதயத்தின் சதை.
அக்கிரம் - உச்சி, நுனி.
அக்கிரவம் - தான்றி.
அக்கிரா, அக்கிராகரம் - அக்கராகாரம்.
அக்கிராத்தம் - கைநுனி, வலக்கை.
அக்கிராந்தம் - சோம்பு, சேம்பு.
அக்கிரு - விரல், கழுதை.
அக்கிருகம் - மாஞ்சரோகணி எனும் ஓர் மூலிகை (அறியப்படாதது)
அக்கிலாங்கொடி - கருப்பு நாகதாளி.
அக்கிலி - நெருஞ்சி(ல்).
அக்கிலீபதை - ஆண்தன்மை.
அக்கிலு, அக்கில் - அக்கிலி.
அக்கிவகை - உடம்பின் உறுப்பின் அமைப்புகளுக்கேற்ப வேறுபடும் அக்கி வகைகள்.
அக்கிள் - கைக்குழி.
அக்கிறாடம் - பச்சை.
அக்கினி - நெருஞ்சில், வெடியுப்பு, நவச்சாரம், மூலாக்கினி, கொடிவேலி, நெருப்பு, செங்கொடி வேலி, பொன், உதராக்கினி (சடராக்கினி), தாபாக்கினி, தீபாக்கினி, காடாக்கினி, கமலாக்கினி, வெப்பம், கற்றாழை, செரிக்கும் சக்தி, சிறுவெந்தோன்றி, பித்தம், சேங்கொட்டை, சிறுநீர், சுழிமுனை (நாடி), இலிங்கம், சக்கிமுக்கிக்கல்.
அக்கினிகட்டல் - மூத்திரத்தைக் கட்டல்.
அக்கினிகபம் - கடல்நுரை, சூரியகாந்தம்.
அக்கினிகம் - ஓர் பாம்பு, இந்திரகோபப்பூச்சி, சேங்கொட்டை.
அக்கினி கம்பி - ஓர்வகை வெடியுப்பு, ஆறாங்காய்ச்சலுப்பு (அகத்தியர் பஞ்ச காவிய நிகண்டின்படி).
அக்கினி கயல் - கடல்நுரை.
அக்கினி கரப்பன், அக்கினி கரப்பான் - நமைச்சலையும் எரிச்சலையும் உண்டாக்கும் அக்கியைப் போன்ற ஓர்வகைக் கரப்பன்.
அக்கினி கருப்பம் -சூரியகாந்தம், கடல்நுரை, தீப்பொறி, நீர்மேல்நெருப்பு (மகாசோதிஷ்மதி) எனும் ஒருவகை மூலிகை.
அக்கினி கருப்பை -சாமைப்பயிர்.
அக்கினி கருமம் - தீயினால் சுடல், மருந்தின் சக்தியால் உடம்பில் சூடு எழுப்பும் ஆற்றல்.

அக்கினி கர்ப்பம் - அக்கினி கருப்பம்.
அக்கினி கர்ப்பை - அக்கினி கருப்பை.
அக்கினி கலை - சுவாசம், சுவாசத்தின் பகுதி (உள்வாங்கல், வெளியிடல்), நெருப்பு, வெப்பத்தைப் பற்றிக் கூறும் நூல்.
அக்கினி கல்பம் - நெருப்பு, வெப்பத்தன்மை வாய்ந்தது.
அக்கினிகற்பம் - இலிங்கம்.
அக்கினி கன்மம் - சுடுதல்.
அக்கினி குணப்பாடு -நெருப்பு (அல்லது) வேறுவகை வெப்பத்தினால் உடம்பிலுள்ள நோயைக் குணப்படுத்தல்.
அக்கினிகுணம் -உடம்பிலுள்ள வெப்பத்தை எழுப்புங் குணம்.
அக்கினிக்கண் - இரத்தக் கண்.
அக்கினிக்கல் -சக்கிமுக்கிக்கல், தீக்கல்.
அக்கினிக் கள்ளி -கொப்புளங்களை எழுப்பும் ஒருவிதக் கள்ளி.
அக்கினிக்கணம் - நெருப்புக் கோழி.
அக்கினிக் காட்டம் -அகருகட்டை, அகில்.
அக்கினிக்கீடம் - ஒருவகை விடப்பிராணி, இது கடித்த கடிவாயில் இரத்தம் கன்றி, இலுப்பைப்பூ, பேரிச்சங்காய் முதலியன போல் கொப்புளங்களை எழுப்பி எரிச்சலையுண்டாக்கும்.
அக்கினிக் குமரம் - மாந்தம், சீதளம் இவற்றிற்குக் கொடுக்கும் ஒருவகைக்கூட்டு மருந்து.
அக்கினிக்குமரன் - ஒரு வகை மாத்திரை.
அக்கினிக் குமாரரசம் - இரசம், கெந்தி முதலிய சரக்குகளைச் சேர்த்து செரியாமை, கழிச்சல் ஆகிய நோய்களுக்குக் கொடுக்கும் ஒரு மருந்து.
அக்கினிக் குமாரன் - சன்னி, சைத்தியம், கழிச்சல் முதலிய வியாதிகளால் உடம்பு குளிருங் காலத்து சூடுண்டாக்க அனுபானத்தைக் கொடுக்கும் ஒருவகை மாத்திரை.
அக்கினிக் குமாரி - பதினெண்குட்டம், மகோதரம், விப்புருதி முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் குளிகை (அகத்தியர் 1500).

அக்கினிக் குளிகை - சுரம், சன்னி போன்ற நோய்களுக்குத் தரும் ஒரு மாத்திரை (தட்சிணாமூர்த்தி திருமந்திரம் 1500).

அக்கினிக் கூர்மை - கடல்நுரை, சவுட்டுப்பு.

அக்கினிக் கூறு - உடம்பின் சூட்டுத்தன்மை, சூடுண்டாகும் பகுதிகள்.

அக்கினிக் கெற்பம் - அக்கினிக் கூர்மை.

அக்கினிக் கேது - புகை.

அக்கினிக் கொடி - சிறுதேக்கு.

அக்கினிக்கோதகம் - மாதவிடாயின் போது குளிக்கும் குளியல்.

அக்கினிக் கோத்திரம் - நெய், நெருப்பு.

அக்கினிக் கோபம் - பித்தம்.

அக்கினிக் கோமுச்சிரவல்லி - கொடிவேலி.

அக்கினிசகன், அக்கினி சகாயம், அக்கினி சகாயன் - வாயு, காற்று.

அக்கினி சக்தி - செரிமானம், நெருப்பின் வல்லமை.

அக்கினி சஞ்சீவி குமாரன் சன்னிமாத்திரை (போகர் முறை) - 18 வகை சன்னிக்கும் தேனில் அல்லது இஞ்சிச் சாற்றில் இழைத்துக் கொடுக்கும், போகர் முறைப்படி செய்த ஒரு மாத்திரை.

அக்கினிசமதீபனம் - செரிமானத்தைத் தூண்டுதல், செரிமானத்தை ஒழுங்குபடுத்துதல்.

அக்கினி சம்பவம் - காட்டுக் குங்குமப்பூ.

அக்கினிசருமன் - மஞ்சள்.

அக்கினிசலம் - நெருப்பும் நீரும், குப்பைமேனி, கார்த்திகைக் கிழங்கு.

அக்கினிசாதகம் - செரியாமை.

அக்கினி சாந்தம், அக்கினி சாந்தி - ஓமம்.

அக்கினி சாலம் - கடல்நுரை, மகாசோதிஷ்மதி எனும் நீர் மேல் நெருப்பு, (ஓர் பூண்டு).

அக்கினி சிகம் - கார்த்திகைக் கிழங்கு, மஞ்சள், சீந்தில்.

அக்கினி சிகை - குங்குமப்பூ, கார்த்திகைக் கிழங்கு.

அக்கினிசிலம் - வெண்தோன்றி, கார்த்திகைக் கிழங்கு, குப்பைமேனி.

அக்கினிசிலாசம் - மலைமேல் விளையுங் கொடிவேலி, கருங் கொடிவேலி, நீலக் கொடிவேலி.

அக்கினி சிலேட்டுமம் - இருமல், கோழை, உடம்பெரிச்சல், கை, கால் அழற்சி, தாகம், உண்டபின் பசி முதலிய குணங்களைக் காட்டும் ஓர்விதச் சிலேட்டும நோய், அதிக வெப்பத்தினால் உண்டாகும் சிலேட்டும நோயில் ஒன்று.

அக்கினிச்சியம் - கார்த்திகைக் கிழங்கு.

அக்கினிச்சிலம் - குப்பைமேனி, கார்த்திகைக் கிழங்கு.

அக்கினிச் சிலை - நெருப்புக்கல்.

அக்கினிச் சில் - வெந்தோன்றி.

அக்கினிச் சிவம், அக்கினிச் சிவள் - குப்பைமேனி.

அக்கினிச் சிவாகம் - அக்கினி சிலாசம்.

அக்கினிச் சுவாலை - கிரிஞ்சிப்பூ, தாதகிப்பூ, காந்தள், உயிர்.

அக்கினிச் சூரணம் - கொடிவேலியுடன் மற்ற சரக்குகளுஞ் சேர்ந்த ஒருவகைச் சூரணம்.

அக்கினிச் செடி - செங்கொடி வேலி.

அக்கினிச் சேகரம் - மஞ்சள், குங்குமத்தூள், குங்குமம், குசும்பாமரம்.

அக்கினிச் சேர்வை - புண்ணாக்கக்கூடிய ஓர் சீலை மருந்து, காரச் சீலை.

அக்கினிச் சேவகன் - கருநாபி, கருநாபிக் கிழங்கு.

அக்கினிதமம் - கண்டங்கத்திரி.

அக்கினிதம் - செரியாமையைப் போக்கும் மருந்து, உடம்பில் வெப்பத்தைக் கொடுக்கும் மருந்து.

அக்கினித்தம்பம் - அக்கினிக்கட்டு; 64 கலைகளுள் ஒன்று.

அக்கினித் தியாகியானோன் - பொட்டிலுப்பு

அக்கினித் திரவ சம்மதி - பால், தயிரேடு

அக்கினித் திராவகம் - வெடியுப்புத் திராவகத்தின் இனத்தைச் சேர்ந்த ஒருவகைச் செயநீர்.

அக்கனித்தீ - உதரத்தீ.

அக்கினித் தீநுரை - கடல்நுரை.

அக்கினித்தீபதி - செரியாமையால் ஏற்படும் வயிற்றிரைச்சல்.

அக்கினித்தீபனம் - செரிப்புத் தன்மையை வளர்க்கும் மருந்து.

அக்கினித்துண்டவடுகம் - அக்கினி மாந்தத்திற்குக் கொடுக்கும் ஓர்வகை ஆயுர் வேத மாத்திரை.

அக்கினித்தோடம் - பாசகநீர் சரியில்லாமையால் ஏற்படும் நோய்.

அக்கினி நிர்ம மந்தினி - தழுதாழை.

அக்கினிநீர் - பாசகநீர், சிறுநீர்.

அக்கினிநோய் - ஓர்வகைக் கண்ணோய், பித்த நோய்.

அக்கினிபம் - பொன்.

அக்கினிபலம் - செரிப்புத்தன்மை.

அக்கினி பல்லி - இருட்டில் ஒளிவீசும் ஓர் கொடி அதாவது சோதிஷ்மதி.

அக்கினிப்பலா - காட்டுப்பலா, பேய்ப்பலா.

அக்கினிப் பாகு - புகை.

அக்கினிப் பாதச் சிலந்தி - விடங்கொண்ட சிவந்த பாதங்களையுடைய சிலந்திப் பூச்சி.

அக்கினிப் பித்த சுரம் - 6 நாள் முதல் 10 நாள் வரை பசியின்மை, வாய்க்கசப்பு, எரிச்சல், கை, காலுளைவு முதலிய குணங்களைக் காட்டுமோர்வகைக் காய்ச்சல்.

அக்கினிப் பிரத்தரம் - தீக்கல், சூரிய காந்தக்கல்.

அக்கினிப்பிரபம் - ஓர்விடப்பூச்சி.

அக்கினிப் பிரீதி செய்தல் - புடமிடல், நெருப்புக்கு இரையாகச் செய்தல்.

அக்கினிப் பிளவு - காட்டுப்பலா, பேய்ப்பலா.

அக்கினிப் பீசம் - பொன், காட்டுச் சீரகம்.

அக்கினிப் புடைப்பு - நெருப்புக் கொப்புளம்.

அக்கினிப்பூ - நீர், தண்ணீர்.

அக்கினிப் பூண்டு - கொடிமா.

அக்கினிப் போக்கு - உடம்பினுள் வெப்பம் பரவி இருக்கும் நிலைமை. உடம்பிலுள்ள வெப்பம், பேதி, மூத்திரம் முதலியவைகளால் கழிதல் (அல்லது) உடம்பை விட்டு அகலல்.

அக்கினி மச்சம் - இறால்.

அக்கினி மணி - சூரிய காந்தக்கல்.

அக்கினி மண்டலம் - அடி வயிறு.

அக்கினி மந்த சுரம் - 7 முதல் 10 நாள் வரை பசி, தாகமின்மை, பலவீனம், எரிச்சல், மலபந்தம், தலைவலி, சுவையின்மை, ஏப்பம், வாந்தி, விக்கல், கை, கால் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஒருவிதக் காய்ச்சல்.

அக்கினி மந்தம் - செரியாமை நோய், உடம்பில் சூடு அதிகமாக இருக்கும்போது

உணவுண்டவுடன் பொருமும்; உடனே மறுபடி உண்பதால் ஏற்படும் இந்நோய், அதிகமாய்க் கொதிக்கும் நீரை உட்கொள்வதாலு முண்டாகும்.

அக்கினி மந்த வாயு - செரியாமையினால் வயிற்றிலும் குடலிலும் வாயு தங்கி அதனால் ஏற்படும் ஓர் வாயு நோய்.

அக்கினி மரம் - பசுமுன்னை மரம் (முன்னை) காட்டுப்பலா, சேங்கொட்டை மரம்.

அக்கினி மாதா - கொடிவேலி.

அக்கினிமாந்தம் - அக்கினி மந்தம்.

அக்கினி மாந்தி - வாதமடக்கி மரம்.

அக்கினிமாந்தியம் - செரியாமையால் புளி யேப்பம், வயிற்றுப்பிசம், மலபந்தம் இவை ஏற்படும் நோய். (மந்தாக்கினி ரோகம்).

அக்கினி மாருதி - அகத்தியர்.

அக்கினிமானி - வெப்ப அளவைக் கருவி.

அக்கினிமுகக்சிலந்தி - அக்கினிபாதச் சிலந்தியைப் போன்ற ஒருவகைச் சிலந்தி (முகத்தில் விடமிருக்கும்).

அக்கினி முகச்சிலந்தி விடம் - கொடியநோய்கள் நெருப்பாற் சுட்டது போன்ற கொப்புளங்கள், தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, இரத்தம் வடிதல் முதலியவற்றை உண்டாக்கும்.

அக்கினிமுகச் சூரணம் - கொடிவேலிச் சூரணம்.

அக்கினி முகம் - கொடிவேலி, சேங்கொட்டைநீர், கார்த்திகைக் கிழங்கு.

அக்கினி முக லவணம் - சித்திரமூலம், சிவதைவேர் இந்துப்பு, முதலானவைகளைப் புடமிட்டு அக்கினி தீபனம் உண்டாகக் கொடுக்கும் மருந்து. (அநு.வை)

அக்கினிமுகி சேங்கொட்டை.

அக்கினிமூலம் பெருங்குடலின் கீழ் பகுதியில் தங்கி இருக்கும் சூடு, அபான வாயுவின் காரணமாய் உடம்பின் சூட்டை உட்கொண்டிருக்கும் மூலாதாரம், சேங்கொட்டை.

அக்கினி மூல வாயு - மலம் சத்தத்துடன் கழியும், கிறுகிறுத்து வயிறு வலித்து, உளைந்து மலத்தில் இரத்தம் விழும்;

பலமின்றி முகம் வெளுத்துக் காணும் ஓர் வாயு நோய்.

அக்கினி மூலி - கற்றாழை, கொடிவேலி.

அக்கினியாசயம் - இரைக்குடலோடு சேர்ந்திருக்கும் சிறு குடலின் முற்பகுதி. உணவுகள் நன்றாகப் பக்குவமாதற்கு வேண்டிய பித்தம் தங்கியிருக்குமிடம்.

அக்கினியாடன் - எட்டி மரம்.

அக்கினியாள்வோன் - உடம்பின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் மூளையிலிருக்கும் ஒரு பொருள்.

அக்கினியிணக்கம் - உடம்பினில் தோன்றும் வெப்பம் சமநிலையடைதல்.

அக்கினியுப்பு - வெடியுப்பு, ஆறாங் காய்ச்சலுப்பு, பூநீரினின்றும் காய்ச்சி எடுக்கும் ஐந்தாங் காய்ச்ச லுப்பு; தலையோட்டி னின்று தயாரித்த ஓர்வகையுப்பு.

அக்கினியோற்பத்தி - உடம்பினுள் ஏற்படும் சூடு.

அக்கினிரசம் - இந்திரகோபப் பூச்சி, பொன், நெருப்பின் கொடிய தன்மை, பாசக நீர்.

அக்கினி ரோகனி - அக்குள் கட்டி.

அக்கினிலம் - பொன்.

அக்கினி லிங்கம் - புகை.

அக்கினில் - நெருஞ்சில்.

அக்கினி வர்ண சிலந்திக்கடி - கடிவாயில் எரிச்சல், சுரம், மயிர்கூச்சம், உடம்பெரிவு, குருக்கள் ஆகிய குணங்களை உண்டாக்கும் ஒருவகைச் சிலந்திக்கட்டி.

அக்கினிவர்த்தனம் - உதராக்கினியை அதிகப்படுத்தும் மருந்து.

அக்கினிவல்லபம் - குங்கிலியம்.

அக்கினி வாகம் - புகை, ஆடு.

அக்கினிவாகனம் - வெள்ளாடு, ஆட்டுக்கிடா.

அக்கினி வாதம் - பாசக நீரால் ஏற்பட்ட வாத நோய்.

அக்கினி விகாரம் - உண்ட உணவுகளை வயிற்றினுள் பக்குவம் செய்வதற்கேற்ற பாசக நீர் கெடுவதனால் ஏற்படும் நோய். பித்தக் கோளாறு.

அக்கினி விசற்பி - சுரம், பேதி, தாகம், மூர்ச்சை, வாந்தி, பிரமை, தூக்க மின்மை முதலியவற்றோடு உடம்பில் குருக்கள் ஏற்பட்டு அவ்விடம் கறுத்தல், பிற இடங்களில் நீலம் அல்லது இரத்த

நிறமுண்டாதல் முதலியன உண்டாக்கும், படரும் தன்மையுள்ள தோல் நோய்.

அக்கினி விடபாகம் - இரத்தம் விடமாகும் நிலைமை. இது அசாத்தியம்.

அக்கினி விடம் - அதிக வெப்பத்தால் இரத்த நிலையிலோ உடம்பிலுள்ள வேறு கருவிகளிலோ ஏற்படும் விடம்.

அக்கினி வீரியம், அக்கினி வீசம் - பொன்.

அக்கினி வேசசம்மிதை - சரக சம்மிதை என்னும் ஓர் ஆயுள் வேத நூல்.

அக்கினி வேந்திரம் - கல்லுருவி, இலவங்கம், நீர்மேல் நெருப்பு எனுமோர் பூண்டு. (மகாசோதிஷ்மதி).

அக்கின் - செங்கொடிவேலி.

அக்கு - எலும்புகள், பலகறை, கருப்பட்டி, உகாமரம், மாமரம், உத்தராட்சமணி, புகையூரல், எட்டி மரம், ✱சோளி, அகில், கண், சங்குமணி, வெட்டிவேர், எருத்துத்திமில்.

அக்குக்கணம் - குழந்தைகளுக்குண்டாகும் எலும்பைப் பற்றிய ஓர் கணநோய்.

அக்குக்கழலை - எலும்பின் மேலுண்டாகும் கழலை.

அக்குக் குறுக்கம் - எலும்பு சிறிதாதல்.

அக்குக் குறுக்கி - எலும்பைச் சிறிதாக்கும் ஓர் நோய், கண்களைச் சிறியதாக்கும் கண்ணோய்.

அக்குச்சாடம் - அக்குரோட்டு.

அக்குச் சுருக்கம் - அக்குக் குறுக்கம்.

அக்குணம் - குமிழம்.

அக்குணி - சிறிதளவு.

அக்குணிப் பிள்ளை - தோடத்தால் இளைத்து சிறிதாக உள்ள குழந்தை, சிறு குழந்தை.

அக்குத் திமிர் - கண்ணின் சதையிலுண்டாகும் ஓர் திமிர்நோய்.

அக்குபு - புகையூறல்.

அக்குப்பால் - காரை.

அக்குப்பி - தழுதாழை.

அக்குப்பிசின் - அகிற்சத்து.

அக்குப் பீளை - கண்பீளை.

அக்குமணி - கண்மணி, பலகரைமணி.

அக்குமம் - எட்டி.

அக்குரம் - வெள்ளுள்ளி.

அக்குரு - விரல், அகில்.

அக்குருக்கி - எலும்புருக்கி நோய்.

அக்குரோசம் - கருஞ்சீந்தில்.

அக்குரோட்டு - இது ஒரு பெரிய மரம். மூலிகை.
அக்குரோதம் - மதன காமப்பூ.
அக்குலி - வெண் கொடிவேலி.
அக்குல்லி - புட்டு, உக்காரி, சிற்றுண்டி.
அக்குவம் - பலகறை.
அக்குவலி - எலும்பிலேற்படும் நோய், கண்வலி.
அக்குவி - வட்டு.
அக்குளாசி - குடசப்பாலை, கொடிப்பாலை.
அக்குளிக்கபம் - கடல்நுரைக்கிழங்கு.
அக்கெலும்பு - மார்பெலும்பு.
அக்கொல்லி - தில்லை மரம், பாம்புக்கொல்லி, கீரிப்பூடு.
அக்கோடகம், அக்கோடம், அக்கோடன் - கடுக்காய்.
அக்கோடிகம் - கருஞ்சுரை.
அக்கோரம் - ஊசிக்காந்தம்.
அக்கோலம் - தேற்றா மரம், தேற்றான்கொட்டை அழிஞ்சில், உள்வயிரம், முள்மரம்.
அக்ரணிவாசி - அமுக்கிரா.
அக்ரம் - அட்சரம்.
அக்ரா - அக்கராகாரம்.
அக்ரு - அகில்.
அக்ரு அகில் - எட்டி, உகரக்காய், சங்கு, பலகறை.
அக்ரோட்டு - அக்குரோட்டு.
அக்னியாசயம் - பித்தமிருக்கும் பை, மூத்திரப்பை, பித்த நீர், சீரணிக்கச்செய்யும்நீருள்ள இடமான வயிறு.
அஙருசி - கண்டங்கத்தரி,
அங்க கஷாயம் - உடம்பின் சத்து, விந்து, சிறுநீர்.
அங்ககம் - அங்கம்.
அங்கக்கிரகம் - நரம்பு இசிவு நோய்; இது கெண்டைக்கால், கெண்டைக்கை இவற்றைப் பாதிக்கும்; கெண்டையேறல் என்பது இதன் மற்றொரு பெயர்.
அங்கக்கிரியை - உடம்பின் உறுப்புகளின் தொழில்; வாத நோயாளிகளுக்கு கஞ்சி அல்லது தைலம் ஊற்றி அழுத்தித் தேய்க்கும் சிகிச்சை; உடம்பிற்கு எண்ணெய் பூசல்.
அங்கக்கோற்பூச்சி - உடம்பினில் வசிக்கும் வளைவான புழு.
அங்கசங்கம் - புணர்ச்சி.
அங்கசபிசாகம் - கருநாயுருவி.
அங்கசப்பிசாரி - கூகைநீறு.
அங்கசம் - இரத்தம்; நோய்; மயிர்; சங்குத் திராவகம்; ஆயுள்வேத முறைப்படி

பல மூலிகைகளின் உப்புகளைக் கொண்டு செய்யும் ஒருவகைத் திராவகம்.

அங்கசலனவாதம் - வாயுபண்டங்களை அதிகமாக உண்பதால் நரம்புகளைத் தாக்கி நடுக்கத்தை யுண்டாக்கும் வாதநோய் (உதறுவாதம், கம்பவாதம், நடுக்கவாதம்).

அங்கசாதனம் - உடற் பயிற்சி.

அங்கசு - கற்றாழை.

அங்கசுபாதி - சிறுபுள்ளடி.

அங்கசூதம் - கொன்றை.

அங்கடத்தன் - பாசிப்பயறு.

அங்கணபாடாணம் - மிருதபாடாணம்.

அங்கணப்பிரியம் - அசோகு.

அங்கணம் - கடுக்காய் மரம், பலகரை, பத்து முழமளவு, வெள்ளெருக்கு, பிட்டு, பொரிகாரம், சேறு, வெங்காரம், இலவணம் (உப்பு).

அங்கணன் - மிருதபாடாணம்,

அங்கணி - கற்றாழை, செங்கற்றாழை, குறிஞ்சி.

அங்கணிதப்பூண்டு - பருத்தி.

அங்கணு, அங்கணும் - கடுக்காய்.

அங்கணுக்கள்ளி - ஐந்து கணுக்களையுடைய ஓர் கள்ளி.

அங்கதம் - பாம்பு, மார்பு, யானை, உணவு.

அங்கதாரி - உயிர், எலும்பு, உடம்பு.

அங்கதி - வாயு, நெருப்பு, நோய்.

அங்கத்தீ - உதராக்கினி.

அங்கநதி - மூளையின் நீர், சிறுநீர்.

அங்கந்திறத்தல் - வாந்திபேதி, கிராணி, கழிச்சல் முதலிய நோய்களினால் ஆசனவாய் திறத்தல்.

அங்கபங்கம் - வாதத்தால் ஏற்படும் அவயவச் சோர்வு.

அங்கபறைநாதி - இலவங்கப்பட்டை.

அங்கபாதி - முடக்கற்றான்.

அங்கபாலி - மருத்துவச்சி, ஓர்பூண்டு.

அங்கப்படியெலும்பு - குதிரைச்சேணத்து அங்கவடியைப் போல இருக்கும் காதின் எலும்பு.

அங்கப்பால் - முலைப்பால்.

அங்கப்பிச்சு - உடம்பிலிருக்கும் பித்து.

அங்கப் பிரளி - தன் உடம்பைச் சுருட்டிக் கொள்ளும் தன்மையுள்ள மரவட்டை.

அங்கப்புணர்ச்சி - பரியங்கயோகம்.
அங்கமண் - சவுட்டு மண்.
அங்கமருடம் - உடம்பு வலி, வாதநோய்.
அங்கம் - உடம்பின் பாகம், அவயவம், ஆசனம், அரையின் மேலுள்ள உடம்பின் பகுதி, எலும்புக் கோர்வை, வாழை, உடம்பு, கட்டில், மேனியழகு, கோளகபாடாணம், மூளை, கொன்றை, இருவாட்சி, எலும்பு, பத்து.
அங்கயற்கண்ணி - கற்பூரவல்லி.
அங்கரத்தான் - தான்றி.
அங்கரமாதி - கௌரி பாடாணம்.
அங்கரமோதகி - கருநாரத்தை.
அங்கரவல்லி - சிறுதேக்கு, குறிஞ்சா, பெருங்குமிழ், கஞ்சா, குறிஞ்சில், குறிஞ்சி.
அங்கருகம், அங்கரூபகம் - உடம்பின் மயிர்.
அங்கரேசம் - கூகைநீறு.
அங்கலம் - கொன்றை.
அங்கலி - ஐவிரலிக் கொவ்வை.
அங்கவம் - பழவற்றல்.
அங்கவன் - மிருதபாடாணம்.
அங்கவாதம் - எலும்பில் காணும் வாத நோய்.
அங்களம் - கடுக்காய் மரம்.
அங்களி - கற்றாழை, ஒருவகை முட்செடி.
அங்கனம் - கடுக்காய் மரம், பலகறை.
அங்கனாமம் - மூளை.
அங்கனி - கற்றாழை.
அங்கனைப்பால் - முலைப்பால்.
அங்கன்னி - அங்கனி.
அங்கா - கொட்டாவி.
அங்காகருஷண நாச்சாரி - இழுப்பைக் கண்டிக்கும் மருந்து.
அங்ககாகருஷண வாதம் - இழுப்பு, வலிப்பு, நாக்கு போன்ற அவயவத்தை உள்ளுக்கு இழுக்கும் வாதநோய்.
அங்காடிப்பயறு - மொச்சைக்காய்.
அங்காத்தல் - கொட்டாவிவிடல், வாய்திறப்பு.
அங்காத்தான் - தான்றி.
அங்காப்பு - அங்காத்தல்.
அங்கார - சவரிலோத்திரம்.
அங்காரகமணி - பவளம், இரத்தினம்.
அங்காரகம் - கையாந்தகரை, கரிசலைத்தயிலம், கரி, பூசும்பரிமளம்.
அங்காரகன் - நெருப்பு, சிவப்பு நிறமுத்து.
அங்காரதாளிகை - சூட்டடுப்பு, நெருப்புச்சட்டி.
அங்காரத்தான் - தான்றி.

அங்காரமஞ்சரி - கழற்சி.
அங்காரமாதி - கெவுரி பாடாணம்.
அங்காரம் - கரி, நெருப்பு, மூளை, முனை, முளை, நீறு.
அங்காரவல்லன் - குறிஞ்சா.
அங்காரவல்லி - சிறுதேக்கு, குறிஞ்சா(ன்), பெருங்குமிழ், கஞ்சா, குறிஞ்சில், குறிஞ்சி.
அங்காரவாயு - திணர்வாயு.
அங்காரவாரிதி - கையாந்தகரை.
அங்காரன் - அங்காரகன்.
அங்காரி - வெண்காரம், நெருப்புச்சட்டி.
அங்காரிகம் - கரும்புத்தண்டு, பலாசு.
அங்காரிகை - கரும்பு, நன்னாரி.
அங்காரிதம் - ஓர்கொடி என்று அறியப்படுகிறது, பலாசு (கிஞ்சுகம்).
அங்காவல்லி - குறிஞ்சா.
அங்கி - வன்னி, கார்த்திகைக் கிழங்கு, எலும்பு, சடராக்கினி, நெருப்பு, சாதிலிங்கம், கவசம், மூலாக்கினி.
அங்கிகத்தம் - கடல்நுரை.
அங்கிகீடம் - ஒருவகை விடப்பூச்சி, இது கடித்த உடன் மரணம் ஏற்படும்.
அங்கிக்கரு - சாதிலிங்கம்.
அங்கிசபாதி, அங்கிசமாதி, - சிறுபுள்ளடி.
அங்கிசம் - தோள், வாழை, பாதம்.
அங்கிசு - சூரியன், சூரியக்கிரணம்.
அங்கிடசபாதி, அங்கிடபாதி, அங்கிஷபாதி - சிறுபுள்ளடி.
அங்கிஷப்பிச்சு - உடம்பிலிருக்கும் பித்து.
அங்கிஷம், அங்கிடம் - சீதாங்கபாடாணம், மாங்கிஷம், வாழை, சாரத்தைக் கட்டுமோர் குரு மருந்து.
அங்கிஷாபதி - கற்றாழை
அங்கிட்டோமம் - கோமேதகம்.
அங்கிதம் - அடையாளம், தழும்பு, நாய்ப்பாகல் (அல்லது) காட்டுப்பாகல்.
அங்கிப் பூட்டுதல் - சீலை மண் செய்தல்.
அங்கிரகம் - உடம்பின் நோய்.
அங்கிரசு - நெருப்பு.
அங்கிரமாதி பாடாணம் - பிறவிப் பாடாணம்.
அங்கிரி - மரமூலம், மரவேர், கால், பாதம்.
அங்கிரிநாமகம் - மரமூலம்.
அங்கிரிபம் - மரம்.
அங்கிரிப்பலா - சிற்றாமல்லி.
அங்கிரிவல்லி - மூவிலை, சிறுபுள்ளடி.
அங்கில் நாமகம் - மரமூலம்
அங்கில்பம் - மரம்.

அங்கிழி, அங்கிளி - ஓர்வித கற்றாழை.
அங்கினி - ஓர்வித கற்றாழை, தாழை.
அங்கினீண்டான் - கருஞ்செம்பை.
அங்கு - சவுரிலோத்திரம், சோழி, சிறுபுள்ளடி.
அங்குச - சவுரிலோத்திரம்.
அங்குசதாரி - தாளகம், அரிதாரம்.
அங்குசத்தும்பை - கருந்தும்பை.
அங்குசநீறு - பூநீறு.
அங்குசநேமி - கருந்துத்தி, துத்தி.
அங்குசபாதி - சிறுபுள்ளடி.
அங்குசபிகாரி - கொள்ளு.
அங்குசப்பாடாணம் - சரகாண்ட பாடாணம்.
அங்குசப்பாதி - அங்குசபாதி.
அங்குசப்பிகாரி, அங்குசப்பிசாரி - கொள்ளுப்பூண்டு, பேரீச்சம்பழம்.
அங்குசப் பீசாரி - கொள்ளு.
அங்குசப்போசதம் - கருந்தட்டைப் பயறு.
அங்குசமாதிதம் - கருந்துவரை.
அங்குசம் - வாழை, காந்தம், பூநீறு, ஒரு பிரசவ ஆயுதம், வாளை, கருமை, தொட்டி வாழை.
அங்குசயோதனம் - கருப்பு தினை.
அங்குச ரோகன் - கூகை நீறு.
அங்குசரோசணி - கூகைக் கிழங்கின் மாவு.
அங்குசரோசனம் - மூளை, கூகைக் கிழங்கின் மாவு.
அங்குசலாவிகம் -கருந்துத்தி, துத்தி.
அங்குசலி - கொள்ளு.
அங்குசவரி - லோத்திரம்.
அங்குசவி - கொள்ளு.
அங்குசன் - சரகாண்ட பாடாணம், காந்தம்.
அங்குசாதிமூலி - சிறுதும்பை.
அங்குசோதி - நீலி.
அங்குசோரி, அங்குசோலி - அறுகம்புல்.
அங்குஸ்தான் - பெருந்தாரா.
அங்குடாகினி, அங்குடாக்கினி - கருங்கடுகுரோகினி.
அங்குட்ட பிரமாணம், அங்குட்ட மாத்திரம் - பெருவிரலளவு.
அங்குஷ்டம், அங்குட்டம் - பாண்டு நோய்.
அங்குட்ட வாதம் - பெருவிரல் வாதம்.
அங்குணம் - வெண்காரம், கோதுமை.
அங்குணாசிக்காய் - பெருந்தும்மட்டி, தும்மட்டி.
அங்குணேசம் - கூகைநீறு.
அங்குபோதி - சிறுபுள்ளடி.
அங்குயாசக்காய் - பலகரை.
அங்குயொலி - அறுகு.

அங்குரப்பிராணி - முளைச்சீவி.

அங்குரம் - வாழை, பூண்டின் முளை, முளை, இரத்தம், தளிர், குப்பைமேனி, மயிர்.

அங்குரி - விரல், தளிர்த்தல்.

அங்குரித்தல் - முளைத்தல், உண்டாதல்.

அங்குரோசனம் - கூகை நீறு.

அங்குல - கற்றாழை.

அங்குலப் பரிட்சை - குழந்தை உண்டாயிருப்பதைக் கனத்தால் அறிந்து கர்ப்பத்தை நிர்ணயிக்கும் ஓர் கைமுறை.

அங்குலம் - கொன்றை, வெண்காரம், பொரிகாரம்.

அங்குலராசி - ஒருவகைச் சிறிய பாம்பு.

அங்குலி - விரல், ஐவிரலிச் செடி, கால்விரல், கால்விரல் எலும்பு, விரல் நகம்.

அங்குலித்திராணிகம் - சன்னி முதலிய நோய்களால் பல் கிட்டியிருக்கும் போது வாயைத் திறக்க பயன்படுத்தும் கருவி.

அங்குலிப் பஞ்சகம் - ஐந்து விரல்.

அங்குலிப் பருவன் - விரற்கணு.

அங்குலி முகம் - விரல் நுனி.

அங்குழம் - வாழை.

அங்கூடம் - கீரி.

அங்கூட்டு நெய் - ஆமணக்கு, வேம்பு, எள், புங்கு, புன்னை, ஆகிய ஐந்து வித எண்ணெய் களையும் கூட்டிக் காய்ச்சுமோர் தைலம்.

அங்கூரம் - தளிர், புதிதாய் முளைத்த புல், எலும்பில் தோன்றிய முளை.

அங்கை - மீன்.

அங்கையப்பூடு - நிலத் துளசி.

அங்கையாஞ்சனம் - கையாந்தகரை.

அங்கையானஞ்சம் - பொற் றலைக் கையாந்தகரை.

அங்கொல், அங்கோடம், அங்கோதகம் - அழிஞ்சில்.

அங்கோத மூலி - செங்குன்றி.

அங்கோலக் கன்னி - வாலுளுவை.

அங்கோல சாரம் - அழிஞ்சிலினின்று தயாரிக்கும் ஓர் விடச்சத்து.

அங்கோலத்தைலம் - அழிஞ்சில் தைலம்.

அங்கோலமாசகம் - கரும்பூவரசு.

அங்கோலம் - அழிஞ்சில், கொள்ளு.

அங்கோலவம், அங்கோல வைரவன், அங்கோலை, அங்கோளம், அங்கோளவைரவன் - அழிஞ்சில்.

அசகங்கை - தில்லைப்பால்.
அசகசாதம் - அசகம்.
அசகணாகம் - கருந்துவரை.
அசகண்ட, அசகண்டம், அசகண்டர், அசகண்டா - வேளை, தைவேளை.
அசகண்டி, அசகண்டிகா - தைவேளை.
அசகநோய் - எட்டுவகை அம்மைகளுள் ஒன்று. கண்ணில் சதை வளர்ந்து சீழ் வடியும் ஒருவகைக் கண்ணோய்.
அசகந்தம் - ஆடுகள் தங்கியிருக்கும் கொட்டிலினின்று வரும் வாடை.
அசகந்தா - கிருமிச்சத்துரு.
அசகந்திகம் - எலுமிச்சந் துளசி.
அசகந்தை - தைவேளைப்பூடு.
அசகம் - மலையாடு, வெள்ளுள்ளி, அகத்தி, எட்டுவகை அம்மைகளுள் ஒன்று. கண்ணில் சதை வளர்ந்து சீழ் வடியும் ஓர் வகைக் கண்ணோய்.
அசகரம் - ஒரு வகை மலைப்பாம்பு, ஒரு பூண்டு, பெரும்பாம்பு.
அசகர்ணகம் - குங்கிலியம்.
அசகர்ணம் - மருத மரம்.
அசகல்லி, அசகல்லிகா நோய் - குழந்தைகளுக்கு வாதத்தினால் உண்டாகும் நோய்.
அசகா - கருவிழியில் கொப்புளங்களை உண்டாக்கி, சிவந்த நீரொழுக்கையும், இரணத்தையும் எழுப்பும் நோய்.
அசகாமிகம் - கருப்பு மொச்சை.
அசகாயம் - சிறுகாயம்.
அசகாரிதம் - முயல்.
அசகாவம் - ஓர் விடமுள்ள உயிர், அட்டை, தேள், முதலியன.
அசகும்பி - ஓர்வகை நீர்ப்பூண்டு.
அசகெந்தா - அசகந்தா.
அசகை - ஒருவகை அம்மை நோய், பருத்தும் தடித்துமுள்ள கொப்புளங்களை எழுப்பி இரணத்தை ஏற்படுத்தும்.
அசக்கியம் - நாகமணல், துத்தநாகமணல்.
அசக்கீரம் - ஆட்டுப்பால்.
அசசிரிங்கி - ஒதிய மரம், நரிக்காந்தள், ஆடுதின்னாப்பாலை.
அசசீரம் - ஆட்டுப்பால்.
அசசுரம் - நெருஞ்சில், முருங்கை.
அசடம் - அசமதாகம்.
அசடு - புண்ணின் பொருக்கு. உலோகங்களிலிருந்து உதிரும் பொருக்கு.
அசடுவா - பால்.

அசட்டி - அசமதாகம், ஓமம்.
அசதிசன்னி - வாத, பித்த, சிலேத்தும தோடங்களினால் வாயு தாக்கப்பட்டு உயிர்நிலையைத் தாக்கி கீழே விழச் செய்து சவத்தைப் போல் கிடக்கச் செய்யும் ஓர் வகைச் சன்னிநோய்.
அசதி நோய் - நரம்பின் அசதியால் ஏற்படும் நோய்.
அசத்திகரணி - சிற்றாமணக்கெண்ணெய்.
அசத்திசூலிகை - நிலபாதிரி.
அசத்திதந்தம் - பெரிய முள்ளங்கி.
அசத்துலியம் - எட்டி.
அசருவு - இலையத்தி.
அசநாமகம் - ஓர்வகைத்தாது.
அசநீர் - ஆட்டின் சிறுநீர், அதிமதுரம்.
அசநீர் வாயு - ஓர் நோய்.
அசநோற்பவ விக்கல் - காரமான, எளிதில் செரிக்காத, பண்டங்களை உண்ணுதல் குற்றத்தினால், வயிற்றில் வாதமேற்பட்டு அதனால், தொண்டை, கம்மல், குரற்கம்மல், சிறு இருமல் முதலியவைகளை உண்டாக்கும் ஒருவகை விக்கல்.
அசந்தாகம் - உப்பு.
அசந்திருடகை - காளான்.
அசந்தீண்டாப்பாலை - ஆடுதின்னாப்பாலை.
அசபத்திரகம் - கரும்பு.
அசபுரீடம் - மூத்திரம், ஆட்டுப்புழுக்கை.
அசபையடிமூலி - ஓர்பூண்டு.
அசப்பியன் - கணவாய் மீன்.
அசப்பிரியை - ஆடு பிரியமாகத் தின்னும் இலந்தை.
அசப்பை இளகன் - வாழைப்பழம்.
அசமகதமம் - அத்திமரம்.
அசமடம் - அசமதாகம்.
அசமணக்கு - சிறு பீர்க்கு, சிறு பீளை.
அசமதம் - ஓமம்.
அசமதரகம் - ஓமத்தைப் போன்ற ஒரு கடைச்சரக்கு.
அசமதாகம் - ஓமம், அதிமதுரம், அழிஞ்சில்.
அசமதாகவிதை, அசமதாகவோமம் - ஓமம் போன்ற ஒரு விதை.
அசமநாகி - குரோசாணி ஓமம்.
அசமந்தம் - மலையத்தி, அத்திமரம், ஓமம், மலையகத்தி, பலா.
அசமந்திபம் - மலையத்தி.
அசமந்தியம், அசமந்திரம் - அசமந்தம்.
அசமம் - சோறு.
அசமருதம், அசமனாதம் - அத்தி.
அசமா - ஈருள்ளி.
அசமாதகம் - ஓமம்.

அசமாருதம் - அசமருதம்.
அசமுசாரி - மலம் தாராளமாய் இறங்கல்.
அசமேலிகம் - கருப்பு, அம்மான் பச்சரிசி.
அசமோடிகம் - பல பூண்டுகளைக் குறிக்கும் பெயர்.
அசமோதகம், அசமோதம் - ஓமம், அசமதாகம்.
அசமோதாகம் - கறுப்பு அறுகம்புல்.
அசம் - ஆடு, வெள்ளாடு, நாட்டு வெங்காயம், மூன்று வருடத்திய நெல், அத்திக்காய், சந்தனம், சந்தனமரம், ஓமம், ஈர வெங்காயம், வெள் வெங்காயம், ஆன்மா, வெருகு, உள்ளி, மூவருட நெல்லி, நீர்முள்ளி.
அசம்தாகம், அசம்தாஓமம் - ஓமம்.
அசம்பமோக்கம் - சவரிலோத்திரம்.
அசயம் - கோரைப்புல், ஈசுரப்புல், அகத்தி.
அசரக்கம் - கசகசா.
அசரசம் - மான்.
அசரம் - அரசு.
அசராது - கொன்றை.
அசரு - தலைச்சுண்டு, புண்ணின் அசடு, சொறி, தூங்கல், அயர்தல், பூச்சிப்புழு.
அசருது - அசராது.
அசரை - ஆற்றில் மேயும் ஒரு வகைச் சிறிய மீன்.
அசர் - பொடுகு, அகிர், தலைச்சுண்டு, அயர்தல், தூங்கல், புண்ணின் அசடு.
அசலக்கால் - தென்றற் காற்று.
அசலம் - பூமி, இரும்பு, மலை, நிலத்தினை, கற்பாடாணம்.
அசலம் பனம் - நீலாஞ்சனம்.
அசலவுற்பத்தி - கற்பரிபாடாணம்.
அசலாமாங்கம் - வெட்டி வேர்.
அசலை - பூமி, மலை.
அசலோமன் - பூனையவரை.
அசலோமி - பொற்றலைக் கையாந்த கரை (பொற்றலையான்).
அசல் - கொசு, பூமி, வெள்வேல்.
அசல்சாதி - மூலி, கஞ்சாங்கோரை.
அசவகை - அலரி.
அசவல் - கொசு.
அசவாகிகம் - கருப்பு கசகசா.
அசவாங்கை - நெருப்பு.
அசவை - முள்வேங்கை, பெருவிரலடி.
அசறவு - மலை.
அசறு - கிட்டம், சிறுபூச்சி, சேறு, தலைச்சுண்டு, புண்ணின் அசடு, புழு, வண்டு, இரணச் செதிள், சொறி.

அசறு பிடித்தல் - செடி (அல்லது) பழத்தில் பூச்சி பிடித்தல்; புண்ணின் மேல்பக்கு உண்டாதல்.

அசறுப்புழுநோய் - உடம்பில் சிறு பூச்சிகளால் ஏற்பட்ட நோய்கள்.

அசறை - ஆற்றில் மேயும் ஒருவகைச் சிறிய மீன்.

அசனபர்ணி - ஓர் பூண்டு.

அசன பன்னி - சிற்றகத்தி, சோறு, வெள்ளுள்ளி, வெள்ளைப் பூண்டு, வேங்கை.

அசனபாணிகம் - கருப்புப் பாவட்டை.

அசனப்பல் - பால்பல்.

அசனப்பெருக்கம் - உதராக்கினி விருத்தியால் அதிகமாகப் புசித்தல்.

அசனம் - கொழுப்பு, வேங்கைமரம், உணவு, வெள்ளுள்ளி, பசி, கடுக்காய், வெருகு.

அசனவு - இலையத்தி.

அசனவேதி - சீரகம், உணவைச் செரிக்க வைக்கும் ஒரு பொருள் (போசனகுடாரி).

அசனாமிர்தத் தைலம் - வேங்கைப்பட்டை, சீந்தில் முதலியவைகளினின்று வடிக்குந் தைலம்.

அசனாமிர்தம் - சோறும் பாலும்.

அசனி - சாம்பிராணியிலை, வயிரம், அனிச்ச மரம், ஓமம்.

அசனுகம் - கருவழிதல்.

அசனுதம் - கருவழிக்கக்கூடிய மருந்து.

அசனோமந்தாரை - கருப்புமந்தாரை, மந்தாரை.

அசன்றிகா - வேளை, தைவேளை.

அசா - ஆடு, தளர்ச்சி.

அசாகம் - அரசு.

அசாகரம் - கரிசாலை.

அசாகி - கருஞ்சீரகம், சீந்தில்.

அசாகை - களி.

அசாக்கீரம் - ஆட்டுப்பால்.

அசாசி - அசாகி.

அசாடம் - தாளிசபத்திரி.

அசாணி மூலி - வேலிப்பருத்தி.

அசாத்திய அதிசாரம் - பலவித நாற்றத்துடன் கழிச்சல் கண்டு, சுரமும் மயக்கமும் உண்டாக்கி நினைவிழக்கச் செய்யும் நோய்; மரணத்தை உண்டாக்கும்.

அசாத்திய எலிவிடம் - மூர்ச்சை, வீக்கம், வேற்றுருவம், சுரம், இரத்தவாந்தி, ஆகிய குணங்களை உண்டாக்கும் ஓர்வித எலிவிடம்.

அசாத்திய கட்டி - சீழ் கட்டுண்டு சதையாக மாறி ஆறாத கட்டி.

அசாத்திய கண்டமாலை - கழுத்தைச் சுற்றிலும் அறுக வேரைப் போன்று கிளைத்து எழும்புவதும் பிறகு அழுந்துவதுமாயுள்ள ஒரு தீராத நோய்.

அசாத்திய கபாலநோய் - தலைமுடி உதிர்ந்து அவ்விடத்தில் வலி ஏற்படும் ஒருவகை தீராத தலைநோய்.

அசாத்திய கருப்பம் - குழந்தை வெளிப்படாது இருக்கும் போது வயிற்றைக் கீறி எடுக்க நேரிடும் ஒரு கடினமான கருப்பம்.

அசாத்திய கழலை - நரம்பின் துவாரங்களிலும் எலும்பின் பொருத்துகளிலும் ஏற்பட்டு அதிகமாகக் கிளைத்து ஆறாது மரணத்தையும் ஏற்படுத்தும்.

அசாத்திய கழிச்சல் - பெருவாரி நோய், இரத்த சீதபேதி ஏற்படும் போதும், சயரோகம், கிராணி போன்ற நோய்களின் போதும் மரணகாலத்திலும் வரும் தீராத பேதி.

அசாத்திய காசம் - இருமல், மேல் மூச்சு, தாகம் அதிகமாக ஏற்பட்டு மாரடைப்பை யுண்டாக்கி மரணத்தையும் ஏற்படுத்தும் காசநோய்.

அசாத்திய குட்டம் - தசை, நாடி, நரம்புகளில் பூச்சிகள் ஏற்பட்டு சதை அழுகி, திமிர் உண்டாகி குரல் வேறுபட்டு, உருமாற்றத்தை உண்டாக்கும் தீராத குட்டநோய்.

அசாத்திய குணம் - நோயின் குறிகுணங்களைக் கொண்டும் அதன் தன்மை கொண்டும் அசாத்தியத் தன்மை நிர்ணயிக்கப்படும்.

அசாந்திரி - பூமி சருக்கரைக் கிழங்கு, ஆட்டுக்கால் கொடி.

அசாப்பிரியம் - ஆடுதின்னாப்பாலை.

அசாரணை - கிராம்பு.

அசாரது - கொன்றை.

அசாரம் - ஆமணக்குச் செடி, வாழை.

அசாரூன் - மூத்திர கிரிச்சனம், கல்லடைப்பு, உதிரச்சிக்கல், வாதம், பாண்டு, காமாலை, நீரடைப்பு, நரம்பிசிவு, கீல்வாதம், வீக்கம் முதலிய நோய்களுக்குதவும் யுனானி மருந்து.

அசிகம் - கீழுதட்டுக்கும், மேவாய்க் கட்டைக்கும் இடையேயுள்ள பகுதி.

அசிகை - பட்டுப் பருத்தி

(இலவம்பஞ்சு), அவுரி.
அசிசெறுகாத்துப்பு - கறியுப்பு.
அசித எலி - விடத்தன்மையுள்ள ஒருவகை எலி.
அசித கருனி - கருப்பு வழுதலை.
அசிதத்துருமம் - மலைப்பச்சை.
அசிதமயப்பூ - பூநீறு.
அசிதம் - கருமை, விடப்பிராணி, கரும்பாம்பு, நீலிப்பூடு.
அசிதாசுமம் - இந்திர நீலமணி.
அசிதாமபுழுகம், அசிதாம் புருகம் - நீலோற்பலம்.
அசிதேசுமம் - புட்பராகம்.
அசிதேலு - ஓர் பூடு.
அசிதை - அவுரி.
அசிதோகதம் - கற்பலா.
அசிதோற்பலம் - நீலத்தாமரை, நீலமணி, நீலோற்பலம், செவ்வாம்பல்.
அசிபகாந்தம் - கருவீழி.
அசிபதிரம் அசிபத்திரகம், அசிபத்திரம், அசிபத்திரி - கரும்பு.
அசிமேதம் - ஓர் நாற்றப் பூடு.
அசியம் - ஊமத்தங்காய்.
அசிரநாணம் - கழுத்து வரையில் குளித்தல்.
அசிரபத்திரகம் - கஸ்தூரி வெண்டை.
அசிரபித்தம் - இரத்த பித்தம்.
அசிரமாத்திரிகம் - அன்னரசம்.
அசிரம் - வெட்டிவேர், காற்று, உடல், தவளை, வெள்ளை, தலைமுடி.
அசிரவணம் - செவிடு.
அசிரன் - சூரியன், நெருப்பு.
அசிராற்சகம் - வெண்துளசி.
அசிருத்தரநோய் - பெரும்பாடு, செரியாமை, கருப்பபாதம், அதிகப்புணர்ச்சி, அதிக நடை, அதிகத்தூக்கம், உடல்மெலிவு, அதிகபாரம் எடுத்தல், பகல்நித்திரை முதலிய காரணங்களால் பெண்களுக்கு இரத்தப் பெருக்கை யுண்டாக்குவது.
அசிருபாதம் - கண்ணீர்ப் பெருக்கு, இரத்தப் பெருக்கு.
அசிர்க்க சிராவம் - இரத்தம் வாங்கல்.
அசிர்க்கதரம் - சூதகப் பெருக்கு.
அசிர்க்க பாதம் - இரத்த வீழ்ச்சி, இரத்தவொழுக்கு.
அசிர்க்கர நோய் - இரத்தப் பெருக்கை உண்டாக்கும் பெரும்பாடு, மூக்கு ரத்தம், இரத்தங்கக்கல் முதலிய இரத்த சம்பந்தமான நோய்கள்.
அசிர்க்கரம் - இரத்தமுண்டாதல்

பக்குவப்படாத நிலைமையில் உள்ள நிணநீர், நிணநீர்நோய்.

அசிர்க்கவகம் - இரத்தக்குழாய்.

அசிர்க்கின் மிசிரம் - இரத்தக் கலப்பு.

அசிர்க்கு - இரத்தம்.

அசினபத்திரி, அசினபத்திரிகை, அசின பத்திரை - வௌவால்.

அசினம் - மான்தோல், தோல்.

அசினயோனி - மான்.

அசீடவத்தி - ஈரலில் இருக்கும் தலையில்லாத நாக்குப் பூச்சி.

அசீடன் - மூளையில்லாத ஓர் அகோரப் பிராணி.

அசீடி - தலையில்லாத.

அசீதகரன் - சூரியன்.

அசீதம் - உஷ்ணம், (வெப்பம்).

அசீதளம் - கற்பூரம்.

அசீதனு - சூட்டுடம்பு.

அசீரகம் - பாலின்மை, பால்வற்றல், பால்மறுத்தல்.

அசீரண எரிச்சல் - உண்ட உணவு செரியாமல், வயிற்றில் புளித்து அதனால் மார்பில் ஏற்படும் எரிச்சல்.

அசீரணக் காய்ச்சல் - உண்ட உணவு செரியாமையால் வயிறு பொருமி கழிச்சல் ஏற்பட்டு அதனால் புளித்தேப்பம், கொட்டாவி, விக்கல் ஆகிய குணங்களைக் காட்டும் ஒருவகைக் காய்ச்சல்.

ஆசீரணக் கிராணி - (1) குழந்தை பெற்ற பெண்களுக்குக் குடற்கோளாறினால் உண்ட உணவு செரியாமல் ஏற்படும் வயிற்றுப் போக்கு. (2) குழந்தைகட்கு முறைப்படி பாலூட்டத் தவறுதல், அதிகமாக ஊட்டல், பால்குற்றம் (அல்லது) பழைய மலச்சிக்கல் ஆகியவற்றால் ஏற்படும் கழிச்சல்.

அசீரண சுரம் - அசீரணக் காய்ச்சல்.

அசீரண சூலை - உணவு செரியாமை, மலக் கட்டினால் அடிவயிற்றில் உண்டாகும் குத்தல் நோய்.

அசீரண நாடி - உணவு செரியாமையைக் காண்பிக்கும் நாடி.

அசீரண நோய் - சீரண உறுப்புகளின் தொழில் வேறுபாடு அடைந்து உண்ட உணவு செரியாமல் வயிற்றில் புளிப்பு அதிகம் ஏற்படல். அட்சரம் பொங்கல், வாயு பரிதல், ஏப்பம், புளித்தேப்பம்,

நெஞ்செரிச்சல், எதிர்க்களித்தல் முதலிய குணங்கள் ஏற்படல், மயக்கம், அரோசிகம் சிலசமயம் ஏற்படும்.

அசீரண பித்தம் - பித்தத்தினால் மலம் இறுகி, தலைவலி, செரியாமை, வயிற்றிரைச்சல், வாயில் நீரூறல் முதலிய குணங்களைக் காட்டும் ஒருவகைப் பித்த நோய்.

அசீரண பேதி - உண்ட உணவு செரியாமையால் ஏற்படும் கழிச்சல்; மலமானது நாற்றத்துடன் வெளியேறும்; செரிக்காத உணவு கலந்த நீராக வெளிப்படும்; வயிற் றிரைச்சல், வயிற்றுவலி, வாயில் நீரூறல் முதலிய குறிகுணங்களைக் காட்டும்.

அசீரணம் - செரியாமை.

அசீரண வாயு - உணவு செரியாமையால் வயிற்றிலும், குடலிலும் சேரும் வாயு; வயிற்றில் உள்ள பொருள் புளிப்பதால் இது ஏற்படும்.

அசீர்த்தி - செரியாமை.

அசு - பிராண வாயு, மூச்சு.

அசுகதாபம் - சுவாசக் குழல்களுக்கு ஏற்படும் அழற்சி.

அசுகந்தம் - கெட்ட நாற்றம்.

அசுகம் - காற்று, சுவாசக் குழற்பகுதி, குரல்வளை.

அசுகரம் - அசுகதாபம்.

அசுகி - கடுகு.

அசுகுணி - பூக்களிலுள்ள ஓர்வகைப் பூச்சி; காதில் படரும் ஓர்வகைக் கரப்பன்; காதுநோய்.

அசுசி - அசுத்தம், அழுக்கு.

அசுடகம் - உலராதது, பசுமை.

அசுடவங்கம் - அசுத்தமான வங்கம், காரீயம்.

அசுணமா - கேகயப்புள், இசையறி பறவை.

அசுணம் - வெள்ளைப் பூண்டு, கேகயப்புள்.

அசுணவம் - மலையத்தி.

அசுணன் - வெள்ளைப்பூண்டு, வெள்வெங்காயம்.

அசுணாதி - இரசம்.

அசுண்டவாயு - பூமிக்கு மேல் 50 யோசனைக்கு அப்பால் இருக்கும் ஓர் வாயு.

அசுதை - நஞ்சு.

அசுத்தம் - நாய், வசநாபி, நாவி, அமிர்தவல்லி, சீந்தில்.

அசுபதம்பவாதம் - ஒருநோய்.

அசுபதி - தங்கம், அமுக்கிரா.

அசுபதி சங்கம் - வாலுளுவை.

அசுபம் - அமுக்கிரா, சாவு.

அசுபரி - அலரி, அமுக்கிரா

அசுபாவக்குறி - மரணக்குறி.

அசுபாவப் பிரமேகம் - தாய்தந்தை உடல் விகற்பத்தால், பத்தியங் காக்காமையாலும் சிகிச்சை செய்யத் தவறினாலும் ஒழுங்கற்ற சிகிச்சை செய்வதாலும் ஏற்படும் மூத்திர நோய்கள்.

அசுமகதலி - கல்வாழை, மலைவாழை.

அசுமகேது - மலையில் விளையும் ஓர்விடப் பூண்டு.

அசுமசத்து - கல்மதம், (சிலாசத்து).

அசுமசம் - கல்லின்சத்து, கல்லிற் பிறந்தது, இரும்பு.

அசுமசாரம் - கல்லில் உற்பத்தியாகும் எண்ணெய் முதலிய பொருட்கள். இரும்பின் சாரம் அதாவது நீலக்கல், கல்மதம்.

அசுமணக்கு - சிறுபீளை.

அசுமந்தகம் - நாணற்பூண்டு, தர்ப்பைப்புல், மரணம்.

அசுமந்தம் - மரணம், அடுப்பு.

அசுமபித்தம் - மூத்திரப்பையில் உண்டாகும், கற்களைக் கரைக்கும் தன்மையுள்ள ஓர் பூண்டு.

அசுமபுட்பம் - சாம்பிராணி.

அசுமம் - தீத்தட்டிக்கல், கல், மேகம், இரும்பு.

அசுமரவரம் - வெள்ளை மருது, கல்லடைப்புக்குக் கொடுக்குமோர் மருந்து.

அசுமரி - மூத்திரப்பையில் உண்டாகும் மணல், சிறு கல்.

அசுமரிக்கினம் - மாவிலிங்கம், சிறுபீளை, பாடாணபேதி.

அசுமரி நோய் - நீரடைப்பு, கல்லடைப்பு.

அசுமனகுடம் - சிறுபீளை.

அசுமன் - ஒருவகை இரத்தினம், இடி, மேகம், இரும்பு.

அசுமை - வெள்ளுள்ளி.

அசுமோத்தம் - கல்மதம் (சிலாசத்து).

அசும்பு - சேறு, (நீர்ப்பொசிவு)

அசுரகன் - நெருப்பு

அசுரசந்தி - அந்திநேரம், (வெளிச்சமும், இருட்டும் சந்திப்பு).

அசுரசம் - ஓர்பூண்டு.

அசுரபி - கெட்டவாசனை.

அசுரம் - அமுக்கிரா, ஓர்பூண்டு.

அசுரவைத்தியம் - கத்தியால் அறுத்துக் குணப்படுத்தும் ஒருவித சிகிச்சை.

அசுரன் - நவச்சாரம்.

அசுராவம் - வெண்கலம்.

அசுருத்திரநோய் - அசிருத்தரநோய்.

அசுருநாலி - கண்ணீர்த் தாரையிற் காணும் ஓர் நோய்.

அசுருநேத்திரம் - நீர்வடியும் கண்.

அசுருமயம் - கண்ணீர்ப்பெருக்கு.

அசுல - அமுக்குரா.

அசுவகந்தம் - அமுக்கிரா, அரசு.

அசுவகந்தாதி - அமுக்கிராங் கிழங்குடன் மற்ற கடைச் சரக்குகளையுங் கொண்டு தயாரிக்கும் ஓர் தைலம்.

அசுவகந்தி - அமுக்கிராங் கிழங்கு, குதிரை மூத்திரம்.

அசுவகந்தை - அமுக்கிராங் கிழங்கு.

அசுவகர்ணகம், அசுவகர்ணம் - குதிரைக்காது, குதிரைச் செவிப்பூடு (அல்லது) குங்கிலிய மரம், குதிரைக் காதைப் போன்ற எலும்பு முறிவு.

அசுவகளா, அசுவகள், அசுவகெந்தி, அசுவக் கிழங்கு - அமுக்குரா.

அசுவக்கிளா - பொன்.

அசுவக்கினம் - அலரி.

அசுவக்குரம் - வெள்ளைக் காக்கணம், குதிரைக் குளம்படி, ஒரு வாசனைப் பொருள் (மீனம்பர்).

அசுவசட்டிரம் - நெருஞ்சில்.

அசுவசாகுடம் - ஓர் பூண்டு.

அசுவணி - ஓர்விதப் பூச்சியின் கடியினால் ஏற்படும் தோலைப் பற்றிய சொறி, இதுதொற்றும் நோய்.

அசுவதட்டிரம் - நெருஞ்சில்.

அசுவதம் - அரசு, அமுக்கிரா.

அசுவதரம் - ஆண்கோவேறு கழுதை.

அசுவதரி - பெண் கோவேறு கழுதை.

அசுவத்த மேதம் - வெள்ளால், புத்திரசீவி.

அசுவத்தம், அசுவத்த விருட்சம் - அரசு, அரசமரம், பசு.

அசுவத்தாதி - கருப்பு வழுதலை.

அசுவத்தை - நெட்டிலிங்க மரம், நெடுநாரை, பூப்பருத்தி.

அசுவநகம் - அரசு

அசுவநோய் - குதிரைநோய்.

அசுவந்தம் - அடுப்பு, மரணம்.

அசுவந்தி - அசுவகந்தம்.

அசுவபரி - அலரி.

அசுவபலம் - அமுக்கிராங் கிழங்கு, குதிரை, குதிரைப்பல் விடம்.

அசுவபலை - நாரி, (இதன் இலை சிகப்பாய் இருக்கும்).

அசுவபாரி - அசுவபரி.

அசுவபுச்சகம் - ஓர் பூண்டு.
அசுவ பெற்றி, அசுவபேதி, அசுவபேத்தி - அமுக்குரா.
அசுவமரி - அவுரிச் செடி.
அசுவமாரகம், அசுவமாரி - அலரி.
அசுவமியம் - குதிரைப்பல் பாடாணம்.
அசுவமூர்த்தி - ✸அந்துருசெட்டு.
அசுவம் - குதிரைப்பல் பாடாணம், வாழை, அமுக்கிரா, வெள்ளைப்பூ, உள்ளி, குதிரை.
அசுவரதகம் - அரசு.
அசுவரலி - அசுவலரி.
அசுவர்க்கம், அசுவர்த்தோ - அரசமரம்.
அசுவலரி - குதிரையைக் கொல்லும் அலரிச் செடி.
அசுவவலக்கால் - வாலுளுவை.
அசுவவாதம் - குதிரைக் குட்டியின் பாய்ச்சல் போல் உடம்பில் வீக்கத்தை உண்டாக்கும் ஒரு வாத நோய்.
அசுவவாரம், அசுவவாலம் - பேய்க்கரும்பு.
அசுவவிருச்சிகை - உளுந்து.
அசுவ வைத்தியம் - குதிரை வைத்தியம்.
அசுவற்கதம் - அரசு.
அசுவனி - அபின்.
அசுவனீயம் - குதிரை வைத்தியம் பற்றிய ஒரு ஆயுர்வேத நூல்.
அசுவன் - ஓமம்.
அசுவாதிகன் - குதிரை வைத்தியன்.
அசுவாதி சூரணம் - அமுக்கிராங் கிழங்குடன் மற்ற கடைச் சரக்குகளையும் சேர்த்து செய்யும் சூரணம்.
அசுவாபரி, அசுவாபறி - அசுவபரி.
அசுவாபாணிதம் - கருப்பு மருதோன்றி.
அசுவாமணக்கு - சிறுபீளை.
அசுவாரம் - அமுக்குரா.
அசுவாரி - எருமை.
அசுவினம் - ஐப்பசி மாதம்.
அசுவினி - முதல் தினம், பருத்தி.
அசுவு - அமுக்குரா.
அசுவுகம் - அரசு.
அசுவுணி - பூக்களிலுள்ள ஓர் வகைப்பூச்சி; காதில் படரும் ஓர்வகைக் கரப்பன்; காது நோய்.
அசுவேதம் - வியர்வையின்மை.
அசுழம் - நாய்.
அசுறு கெந்தி - குதிரை மூத்திரம், வாசம்.
அசுனம் - வெள்ளைப் பூண்டு.
அசுனி - அனிச்சைமரம்.
அசுன்ன - வெள்வெங்காயம்.
அசூசம், அசூசி - சூதகம்.

அசுதசரதி - மலடி.
அசுதி - அம்மை, மலடி.
அசுதிகம் - மலடு.
அசுத்திரம் - மரமஞ்சள்.
அசுரம் - பெரும்பயறு (பயித்தம்).
அசூரி - வைசூரி, அம்மை, கடுகு, செங்கடுகு.
அசேதகி - நீர்தாமரை.
அசேதனி - மயக்கத்தை உண்டு பண்ணும் பொருள்.
அசை - சீரகம், பெண்ணாடு, யானைத்திப்பிலி.
அசைதல் - இளைத்தல், உலாவுதல், ஓய்தல், கலங்குதல், இளைப்பாறுதல்.
அசைபருங்கல் - மலை.
அசையு - அமுக்கிரா, சீரகம்.
அசைவு - அதிர்ச்சி, மூட்டுகள், சோர்வு.
அசோகணக்கு - கருணைக்கிழங்கு.
அசோகதரு - அசோக மரம்.
அசோகம் - பிண்டி மரம், மருதமரம், ஓர் பச்சை மரம், நெட்டிலிங்க மரம், வாழை, அசோகமரம், பாதரசம், மருந்து, அகத்தி, வரிலோத்திரம், சவுரிலோத்திரம், கறளை மூலம், கடுகுரோகணி, அவுரிச்செடி.
அசோகரோகிணி - கடுகுரோகிணி, நேபாளத்தில் விளையும் மருந்துப் பூடு.
அசோகவனம் - வாழைத்தோட்டம், அசோக மரக்காடு; மருத மரக்காடு.
அசோக வனிகை - அசோக மரச்சோலை.
அசோக வாசவாடை - புனுகு.
அசோகா - அசோக மரம், இரசம்.
அசோகாதிதம் - சிவதுளசி.
அசோகாரி - கடப்பமரம்.
அசோகி - சீவகமூலி.
அசோகாரிட்டம் - இது ஒருவகைக் குடிநீர், பெண்களின் சூதகக் கோளாறு, பெரும்பாடு, வெள்ளை, இடுப்புவலி போன்றவற்றை நீக்கும்.
அசோகு - அசோக மரம், மருந்து, வாழை, வரிலோத்திரம், மருந்து.
அசோகை - சவரிப்பூண்டு.
அசோடகத்தி - செவ்வகத்தி.
அசோணம், அசோண்டி - வாழை, குறட்டை, சவரிலோத்திரம்.
அசோதகி - அவுரி.
அசோதம் - சவரிலோத்திரம்.
அசோரிதம் - வால்மிளகு.
அசோலம் - தேற்றாமரம்.
அசோனம் - வாழை, அசோகம், குறட்டை.
அச்சகத்தி - கத்தரி.
அச்சகம் - நீர்முள்ளி,

ஈருள்ளி, உள்ளி.

அச்சங்கொடி - ஓர்வகைக் கொடி.

அச்சசமம் - மூசறுப்புல்.

அச்சட செயநீர் - வேகாதுப்பு செயநீர்.

அச்சடை - கீழ்க்காய் நெல்லி.

அச்சட்டா - துராய் (கீரை).

அச்சணம் - பூண்டு.

அச்சதாப்பிரியம் - கருப்பு வாழை.

அச்சதிந்தம் - பச்சோந்தி.

அச்சத்தி - கத்தரிக்காய், தந்திரிப்புல், கத்தரிப்புல்.

அச்சத்து - சிலாசத்து.

அச்சநீலம் - சுத்த நீலம்.

அச்சபரம் - நாணற்புல், நான்முகப்புல்.

அச்சபல்லம் - கரடி.

அச்சபாணிதம் - சிவப்பம்மான் பச்சரிசி.

அச்சபாபம் - அகத்தி, நான்முகப்புல்.

அச்சமம் - மூசறுப்புல், அளத்துப்புல், நான்முகப்புல்.

அச்சமரமுகம், அச்சமரம், அச்சமாமுகம் - புல்லுருவி, நாணல், முயற்புல்.

அச்சமாயிதம் - செங்கழற்சிக் கொடி.

அச்சமுக மரம் - நான்முகப் புல்.

அச்சம்- அகத்தி, கரடி, தகடு, மஞ்சள், அன்னம், கோரைப்புல், ஈசுரப்புல், காய்ச்சற்பாடாணம், கத்தரிக்காய், ஈருள்ளி, கற்புல்.

அச்சம்பரம் - நான்முகப்புல்.

அச்சம் பேரளம் - சிகப்பு அடுக்கலரி (அல்லது) இரட்டைச் சிகப்பு அலரி.

அச்சயிரம் - உள்ளி.

அச்சயில் கரணை - அச்சாணிக்கொடி.

அச்சரக்காய்ச்சல் - வாயிலழற்சியை உண்டாக்கி நாக்கிலும் உதட்டிலும் சிறு கொப்புளங்களை எழுப்பும் ஓர்வகைக் காய்ச்சல்.

அச்சரம் - சிறு குழந்தைகட்கு, வயிறு கோளாற்டை வதனால் வாய், நாக்கு, உதடு முதலிய இடங்களில் சிறு கொப்புளங்களை எழுப்பி வாயை வேகச் செய்யுமோர் நோய், நெருஞ்சில்.

அச்சனம் - வெள்ளுள்ளி, ஈருள்ளி, எருக்கு, வெள்ளி.

அச்சன் - அழிஞ்சில்.

அச்சன் முள்ளு - ஓர் முட்கொடி.

அச்சாணி - உத்தாமணி, (உத்தமதாளி), கருப்பு வேம்பு.

அச்சாணிக் கொடி, அச்சாணிமூலி - அச்சன்முள்ளு எனப்படும் ஓர் முட்கொடி.

அச்சான் கொடி - அச்சங் கொடி.

அச்சி - அகத்தி மரம், பாலையுடைச்சி, பூதபுட்பம், ஒரு நாடு.

அச்சிக்கிச்சிலி - அச்சி நாட்டு கிச்சிலிப் பழம்.

அச்சித்தினை - ஒரு வகைத் தினை, ஒருவகைப் புல்.

அச்சி நறுவிலி - சிகப்புப் பூ பூக்கும் ஓர் வகை மரம்.

அச்சிப் பாக்கு - அச்சி தேசத்து பாக்கு.

அச்சியம் - நெய்.

அச்சிரக் காலை, அச்சிரம் - முன்பனிக்காலம்.

அச்சிருங்கி - ஆட்டுச்செவி (அல்லது) ஆடுதீண்டாப்பாலை.

அச்சில்லியா - அமெரிக்க நாட்டில் விளைந்து வயிற்று வலிக்காக உபயோகப் படுத்தப்படும் கசப்புச் செடி.

அச்சு - நெய், உடம்பு, பெண்ணின் உறுப்பு, ஓர் பூண்டு, உயிர்.

அச்சுகம் - நீர்முள்ளி.

அச்சுங்கி - உத்தாமணி, ஓதி.

அச்சுதம் - அறுகும், வெள்ளரிசியும் கூட்டி அணிவது, அறுகு.

அச்சுரம் - நெருஞ்சில், முருங்கை, நெருப்பு.

அச்சுவத்தம் - அரசு.

அச்சுவம் - குதிரை, அமுக்கிரா, அரசு.

அச்சுவாதீதம் - சிவப்புக்கா சரளி.

அச்சுறை - உயிருக்கு உறையான உடம்பு.

அச்சுனி - எட்டாம் மாதம்.

அச்சுனை - செந்தினை.

அச்செயநீர் - சாகாவுப்பு செயநீர்.

அச்சை - பைத்தியம், பலமுண்டாக்கு மருந்து, பயத்தினாலுண்டாகும் நோய்.

அச்சொல், அச்சோலம், அச்சோளம் - தேற்றான்விரை.

அஷம் - உருத்திராட்சம்.

அஸ்கா - கஞ்சம் மாவட்டத்தில் அஸ்கா எனும் ஊரில் காய்ச்சி வரும் ஓர்வகைச் சர்க்கரை.

அஸ்தமந்தகம் - சரக்கொன்றை.

அஸ்தவருக்கம் - கருஞ்செம்பை.

அஸ்திகரணி - சிற்றா மணக்கெண்ணெய், செவ்வாமணகு.

அஸ்திசம்பனம் - தினை.

அஸ்வத்தம் - அரசு.

அஞராட்டி - நோயுள்ள பெண்.

அஞர் - நோய்.
அஞலம், அஞல் - கொசு.
அஞ்சடுக்கு - மல்லிகை.
அஞ்சடுக்கு மூலி - கருமத்தைப் பூ.
அஞ்சதி - காற்று.
அஞ்சத்தம் - சுக்கு.
அஞ்சநாலா - கருங்காக் கணம், நீலோற்பலம்.
அஞ்சபாதம் - சாதிலிங்கம்.
அஞ்சமாஷம் - காட்டுளுந்து.
அஞ்சமிருகல் - சிற்றரத்தை.
அஞ்சம் - அன்னப்புள்.
அஞ்சராகம் - மஞ்சள்.
அஞ்சலா - பலமானது.
அஞ்சலாதிறை - சீவகமூலி.
அஞ்சலி - காட்டுப்பிலவு (பெரும்பிலவு).
வறச்சுண்டி,
ஆடுதின்னாப்பாலை,
வண்டுகொல்லி,
அஞ்சனக்கல்,
நீலாஞ்சனக்கல், நெருஞ்சி, தாழை, மாவிலங்கு, நான்குபலம், சங்கங்குப்பி, பல்லி, வெளவால், வண்டு.
அஞ்சலிகாரிகை - ஓர் பூண்டு, தொட்டாற்சுருங்கி.
அஞ்சலிகை - வெளவால், அம்பாளம்.
அஞ்சலிப்பாலை - ஆடுதீண்டாப்பாலை.
அஞ்சலோமசம் - அன்னபேதி.
அஞ்சல் - மனோசிலை.
அஞ்சல்நாடி - இடைவெளிவிட்டு அடிக்கும் நாடி.
அஞ்சவி - ஆடுதின்னாப்பாலை.
அஞ்சறக் குழச்சி, அஞ்சற் குழச்சி, அஞ்சற் குளச்சி - குங்குமப்பாடாணம்.
அஞ்சன குமாரி - சிமிட்டி.
அஞ்சன கேசி - கண்ணிற்கிடும் கலிக்கம்.
அஞ்சனக் கலிக்கம் - சுரம், கண்ணோய், சன்னி தீர கண்ணிலிடும் ஓர் கூட்டு மருந்து.
அஞ்சனக்கல் - சுருமாக்கல், துருசு, நீலாஞ்சனக்கல் (அல்லது) கருநிமிளை.
அஞ்சனக்கல் செந்தூரம் - மஞ்சளும் சிகப்பும் கலந்த மருந்துப்பொடி, தோல்நோய், மேகப்படை, கீல் வாயுவிற்குப் பயன் நல்கும்.
அஞ்சனக்கல் பற்பம் - பலவகையான மேக நோய்கள். காய்ச்சல், இருமல், தோல் நோய் முதலியவைகளுக்குக் கொடுக்கும் பற்பம். வெண்மையாயும் கனதியாகவும் சுவையற்றதாகவும் இருக்கும். நெருப்பில் உருகி பிறகு ஓடி விடும்.
அஞ்சனச் சலாகை - கண்ணில் மருந்து

தீட்ட மருந்துக்கேற்ப பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, சீலை முதலியவைகளால் செய்யப்பட்ட கூர்மையற்ற இருமுனைகளுள்ள கம்பி.

அஞ்சனச்சிலை - அஞ்சனக்கல்

அஞ்சனத்திரவியம் - ஐங்கோலத் தைலம்.

அஞ்சனபாடாணம் - முப்பத்திரண்டு விளைவுப் பாடாணங்களுள் இது ஒன்று. பொற்றொட்டிப் பாடாணம் செய்கையில், அடியில் நிற்கும் கசடு. இது வைத்தியத்திற்கு உதவும்; நீலாஞ்சன பாடாணம், கல்லீயம்.

அஞ்சனபோளம் - கரியபோளம் (அல்லது) மூசாம்பரம், கல்லீயம்.

அஞ்சன மாலி - கருநாய்.

அஞ்சனம் - கண்ணிலிடுமை, யானை, கலிக்கம், மேற்பூச்சு மருந்து, குற்றம், கருவைக் கொண்டு தயாரிக்கும் மை, கருமை, நீலத்தோற்றமுள்ள மலை, மேல்திசை, சண்பகம்; இமைகளில் எரிச்சல், குத்தல், வலி ஏற்பட்டு சிவப்புக் கட்டியையெழுப்பும் கண்ணோய், சுருமாக்கல்.

அஞ்சனவண்ணம், அஞ்சன வர்ணம் - கருமை, கருநீலம்.

அஞ்சனவர்த்தி - கண்ணோய்களில் கண்ணுக்கு இழைத்துப் போட உபயோகிக்கும் ஓர் மருந்துக் குளிகை.

அஞ்சனவேர் - அவுரிவேர், கரிசாலை வேர்.

அஞ்சனா - மூக்கத்தாரி எனுமோர் கடைச்சரக்கு, ஒருவித பல்லி, ஒருவித பாம்பு, மை, ஒரு விதமரம்.

அஞ்சனாதி - வெள்ளை நாயுருவி.

அஞ்சனாதிகை - ஒருவித பல்லி.

அஞ்சனாமிகை - இமைகளின் வீக்கம்.

அஞ்சனாலா - நீலோற் பலம், கருங்காக்கணம்.

அஞ்சனி - நாணற்புல், காயா (அல்லது) காசா, நீலோற்பலம், வறட்சுண்டி.

அஞ்சனிகா - ஒருவித கருப்புப்பல்லி, ஒருவகை நீலச்சுண்டெலி.

அஞ்சனை நாமிகா வர்த்தம் - இமைகளின் நடு மையத்தில் (அல்லது) முனைகளில் இரத்தத்தைக் கக்கும் சிவந்த கட்டிகளை எழுப்பி நமைச்சலையும் வலியையும் உண்டாக்கும் ஓர்விதக் கண்ணோய்.

அஞ்சன் - கருப்பு (அல்லது) நீலநாரை.

அஞ்சாங்காய்ச்சலுப்பு - முறைப்படி ஐந்துதரம் காய்ச்சிச் சுத்தி செய்த ஓர்வகை வெடியுப்பு.

அஞ்சாணி - உத்தாமணி, (வேலிப்பருத்தி.)

அஞ்சாவிரா - கருங்குமிழ்.

அஞ்சானனம் - சிங்கம்.

அஞ்சி - ஐங்கோலம்.

அஞ்சிகம் - கண்.

அஞ்சித பத்திரி - வளைந்த இலைகளுள்ள ஓர்விதத் தாமரை.

அஞ்சிலி - வறட்சுண்டி.

அஞ்சில்சேமா - அழிஞ்சில்.

அஞ்சினி - ஐந்தாம்மாதம், ஐந்து மாதத்திய கருப்பிணி.

அஞ்சீரகம், அஞ்சீரம் - அத்தி, அத்திப்பழம்.

அஞ்சுகம் - இலவங்கம், சிவப்பு அரைக்கீரை, கிளி, சிலாவங்கம்.

அஞ்சுகிலம் - வெண்ணொச்சி.

அஞ்சுகொம்பு - ஐம்புலன்கள்.

அஞ்சுண்ணக்குகை - கடல்நுரை, கல்லுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், சூடன் ஆகிய இவ்வைந்து சுண்ணாம்பினால் செய்த குகை.

அஞ்சுநீர் - சரக்குகளைக் கட்ட உபயோகிக்கும் ஐந்து வகை மருந்து நீர். ஐந்து வகைச் சரக்குகளைக் கொண்டு தயாரிக்கும் ஓர் வகைச் செயநீர்.

அஞ்சுநீறு - ஐந்துவகைப் பற்பம் (அல்லது) சுண்ணம், பஞ்சலோக பற்பம்.

அஞ்சுப்பு - வெடியுப்பு, கற்பூரம், சீனக்காரம், இந்துப்பு, கறியுப்பு ஆகிய ஐந்துவித உப்புக்கள்.

அஞ்சு மதி - முக்கோண இலை, நிலப்பூசனி, சிறு புன்னை.

அஞ்சுமந்தம் - மலையத்தி.

அஞ்சுமாலி - சூரியன்.

அஞ்சுமித்திரம் - நல்லெண்ணெய், தேங்காய்ப்பால், இலுப்பைப்பூச்சாறு, பசு நெய், தேன் ஆகிய இவ்வைந்தும் கலந்த கூட்டு. உலோகங்களை உருக்கும் போது அதைப் பேதிக்கச் செய்யும்படி சேர்க்கும் ஐந்துவித மித்துருச் சரக்குகள், குன்றி, நெய், வெல்லம், காரம், தேன்.

அஞ்சு முத்திரைத் தகடு - தாம்பிரத்தைப் பற்பம் பண்ணுவதற்காக முன்னர் உபயோகித்து வந்த ஓர்வித உயர்ந்த செப்புத்தகடு.

அஞ்சுருக்காணியுப்பு - முடியண்ட படருப்பு.

அஞ்சுருவாணி - துருசு, பூநீறு, மூலாதாரத்தினின்று ஆக்கினை வரைக்கும் கத்தரி மாறலாகப் பாயும் தசநாடி.

அஞ்சுருவாணிப் பூட்டு - துருசுச் செம்பு.

அஞ்சுருவாணி மூலம் - முப்பு. இது எல்லாவித மருந்தையும் நீறாக்குந் தன்மையுடையது.

அஞ்சுருவாணியுப்பு - கல்லுப்பு, பூநீறு.

அஞ்சுவண்ணத்தி - ஐந்து நிறங்கலந்த பஞ்சபட்சி பாடாணம்.

அஞ்சுவர்ணத்தான் - நாகமணல், துத்தநாகம்.

அஞ்சுவர்ணத்தேர் - துத்தநாகம்.

அஞ்சுவர்ண நிறத்தோன் - நாகமணல், துத்தநாகம்.

அஞ்சுவாதம் - அன்னபேதி, மாங்கிஷபேதி, சாத்திரபேதி, பரிசனபேதி, துகபேதி ஆக ஐந்து.

அஞ்சுவித பேதி - அன்னபேதி, மாங்கிஷபேதி, சாத்திர பேதி, செகறண பேதி, துக பேதி.

அஞ்சு விரலி - ஐவேலிச் செடி.

அஞ்சுளசிங்கம் - ஐந்து பொறிகள்.

அஞ்சுளோநேமி - திமிசு (அல்லது) வேங்கை மரம்.

அஞ்சூகம் - சிகப்பு அறைக்கீரை.

அஞ்செண்ணெய்த்தயிலம் - பிண்டத்தயிலம், இரசம், கெந்தி, தாளகம், மனோசிலை, இலிங்கம் முதலிய சரக்குகளைப் பழங்காடியிலரைத்துச் சேர்த்து இறக்கும் தைலம். சன்னி, சீதளம் போன்றவற்றிற்கு உடம்பில் தேய்க்கக் குணமாகும்.

அஞ்செருப்புடம் - ஐந்து விராட்டியைக் கொண்டு போடும் புடம்.

அஞ்செலி - காட்டுப்பலா, வறச்சுண்டி, தாழை.

அஞ்செவி - உட்செவி, வறச்சுண்டி.

அஞ்சோளம் - எருக்கு.

அஞ்ஞலம் - கொசு.

அஞ்ஞலாத்தி - நோய் கொண்டவள்.

அஞ்ஞானத்தம்பம் - குரல் வலித்து வாயினால் மூச்சுவிட்டு நாவறண்டு நெஞ்சுலரும் ஓர் வகைத் தொண்டை நோய்.

அஞ்ஞானப்பாறை - கருங்கற்பாறை.

அஞ்ஞானம் - விலாமிச்சை.

அடகம் - வசம்பு, நாய்வேளை.

அடகாய் - பாக்கு.
அடகி - சிற்றாமுட்டி.
அடகு - இலைக்கறி, பச்சிலை, கீரை, வெற்றிலை.
அடகை - நுரை.
அடக்கணம் - வெண்காரம்.
அடக்கத்து சோரம் - நாரி சுக்கிலம்.
அடக்க மெழும்பல் - மூர்ச்சை தெளிதல், விஷமிறக்கல்.
அடக்காப்புல் - பீனசப்புல்.
அடக்காய் - அடகாய்.
அடக்கும் தோட்டி - அறிவு.
அடக்கொட்டை - புங்கங்கொட்டை.
அடங்கணம் - அடக்கணம்.
அடங்கம் - கடுகுரோகிணி.
அடங்காக்கரத்தி, அடங்காதசத்தி - சதுரக்கள்ளி.
அடங்காத்தணலி - கருப்பு சித்திரமூலம்.
அடங்காப் பச்சை - முலைப்பால்.
அடங்கா வாரிதி - கடலுப்பு, சிறுநீர்.
அடசர்ப்புல் - பீனசப்புல்.
அடசாவி - புளியாரை.
அடசுத்திர கோவித்தகரம் - ✸பயிடி, தேவகாஞ்சனம்.
அடசுவர் - பால்.
அடச்செம்பை - கருஞ்செம்பை.
அடடா - சமூலம்.
அடதம் - வெந்துளசி.
அடந்தகம் - வெள்ளைச் சாரணை.
அடந்தகும்பம் - இருவழுதிலை.
அடப்பங்கொடி - ஆட்டுக் காலடம்பு எனப்படும் முசற்றழை, குதிரைக்குளம்பிலை (நெய்தல் கொடி), வெள்ளடம்பு.
அடப்பதாதி - சிகப்புக் கூத்தன் குதம்பை.
அடப்பமரம் - வாதுமை மரம்.
அடப்பம் - தேற்றான்.
அடப்பம் விதை - வாதுமைப்பருப்பு.
அடப்பன், அடப்பன் கொடி, அடப்பான் - கடம்பு (கடப்பன்), அடப்பங்கொடி, நெய்தல் கொடி.
அடப்பி - அடப்பங் கொடி.
அடப்பி மாதிகம் - சிவப்புக் காசித்தும்பை.
அடப்பை - வாதுமைக் கொட்டை.
அடம் - கொட்டைப்பாசி.
அடம்பங்கொடி - அடப்பங்கொடி.
அடம்பி - தான்றிக்காய்.
அடம்பு - கடலிப்பூ, அடப்பங்கொடி (வாதுமை).
அடம்புகை - கச்சோலம், கோரோசினை.

அடர் - தகடு, பூவிதழ், சமூலம்.

அடர்வைசூரி - ஒன்றோடொன்று கலக்கும்படி நெருக்கமாக வார்க்கும் அம்மை.

அடலி - சாம்பல்.

அடலை - சாம்பல், பற்பம், சுரம்.

அடல் - பலம், ஓர்மீன்.

அடவாபிதன் - மஞ்சள்.

அடவி - கச்சோலம், கோரோசனை, மனம், உடம்பு, சாம்பல், கத்தூரி மஞ்சள்.

அடவிஈ - காட்டு ஈ, இது கடித்தால் அதிக தூக்கமும் மூர்ச்சையுமுண்டாகும்.

அடவிகச்சோலம் - கோரோசனை.

அடவிகம் - சாம்பல்.

அடவிக்கச்சோலம் - கஸ்தூரி மஞ்சள்.

அடவிக்கம்பம் - அடவிகம்.

அடவிக்காணம் - காட்டுக்கொள்.

அடவிக்கோலம், அடவிசோலம், அடவிச்சொல், அடவிச்சோலம் - கோரோசனை.

அடவிநீர் - காட்டாற்று நீர், காட்டிலிருக்கும் நீர்.

அடவி மஞ்சள் - மரமஞ்சள்.

அடவிமூர்ச்சி - சிவப்புக்கிலுகிலுப்பை.

அடவிமேற்புல்லுருவி - கள்ளிச் செடியில் முளைக்கும் புல்லுருவி.

அடவிமை - கருங்கரிசாலை.

அடவியில்திருஷ்டி, அடவியில் திருடி - சதுரக்கள்ளி.

அடவியை - கற்பூரவழுதலை.

அடவுசோலம் - அடவிக்கோலம்.

அடளை - ஓர்வகைக் கடல் மீன்.

அடாசளி - ஆரை.

அடாசனி - ஆரை, புளியாரை.

அடாஞ்சி - இலவங்கப்பூ.

அடாதஞ்சம் - யாளி.

அடாரளப்பூ - முடக்கற்றான்.

அடி - செருப்படி வேர், தாது, வேர், உள்மூலம், ஆசனத்திற்குள் உண்டாகும் மூலநோய், கல்லுப்பு, வழலை.

அடிக்கடி சம்போகி - சேவல், அடைக்கலங்குருவி.

அடிக்குடலிசிவு - அடிக்குடலை இழுத்துப் பிடித்துத் துன்புறுத்தும் அபாயமான நோய்.

அடிசில் - சோறு.

அடிதகம், அடிதரிகம் - அமுக்கரா.

அடித்தள்ளிப்போதல் - ஆசனவாய் மூலம் வெளிப்பிதுங்கி

நிற்றல், பெண்களுக்கு உறுப்பு தள்ளல்.

அடித்திகம் - அமுக்குரா, அக்கரா, தீமுறுகற்பாடாணம்.

அடிநடுமுடி - வைத்தியத்தில் பொதுவாக காரம், சாரம், உப்பு, என்பவைகளையும் சூதம், பூரம், சாரம் என்பவைகளையும் குறிக்கும் பரிபாஷை.

அடிநாச்சூலை - வாதத்தினால் நாவினடியில் ஏற்படும் குத்தல் நோய்.

அடிபட்ட காந்தி, அடிபட்ட முறுவல், - தீமுறுகற்பாடாணம்.

அடிப்பினை - வங்கமணல், வங்கம்.

அடிப்பையாதகம் - காட்டெருமை.

அடிமண்டி - வண்டல்.

அடிம்பு, அடிம்புருகம் - சிவதை.

அடியக்காந்தி, அடியட்காந்தி, அடியற்காந்தி - அடிபட்ட காந்தி.

அடியாணவேர் - ஆணிவேர்.

அடியாளுறுத்தி - சிறுகுறிஞ்சா.

அடியீரல் - மண்ணீரல்.

அடியுப்பு - கல்லுப்பு.

அடியும் முடியும் - மண்ணும் விண்ணும்.

அடியோட்டி - நெருஞ்சில்.

அடிலவோடாகம் - மலையாளத்தில் விளையுமோர் செடி.

அடிவயிற்றிசிவு - அடிவயிற்றின் சதை கடினமானதால் வலி, இசிவு ஏற்பட்டு வயிற்றுவலியும் காணும் ஒரு நோய்; மலம், சிறுநீரை அடக்கும் ஓர் வாதநோய்.

அடிவயிற்றிறுக்கம் - தாழ்ந்த இருக்கையில் உட்காருதல், இறுக்கமான உடைகளை அணிதல் இவற்றால் அடிவயிறு அழுந்துவதால் ஏற்படும் ஓர் நோய், இதனால் செரியாமை, கருப்பவலி ஏற்படும்.

அடிவயிற்றுக்கட்டு - பிரசவித்த பெண்களுக்கு மார்பிலிருந்து அடிவயிறு வரையில் கருப்பை அழுந்தும்படி துணியால் இறுகக் கட்டுவது.

அடிவயிற்றுக் கருப்பம் - பெண்களின் கீழ் வயிற்றில் கர்ப்பம் தங்கிப் புடைத்துக் காட்டும் ஓர் வகைச் சூல்.

அடிவயிற்றுக் கழலை - பசுவிற்கு அடிவயிற்றில் ஏற்படும் ஓர் இரணநோய்.

அடிவயிற்றுட் சவ்வு -கீழ் வயிற்றினுட்புறத்தேயுள்ள சவ்வு.

அடிவயிற்றுப் புரட்டல் - வாந்திபேதி,

பித்தக்கோளாறு, விடசம்பந்தம் முதலியவைகளால் வயிற்றில் ஏற்படும் கோளாறு.

அடிவயிற்றுப் பொருமல் - செரியாமையால் அடிவயிற்றில் ஏற்படும் உப்பிசம்; அடி வயிற்றுச் சவ்வு அழற்சியினால் ஏற்படும் வீக்கம்.

அடிவயிற்று வலி - கீழ் வயிற்றில் காணும் வலி, பெருங்குடலில் ஏற்படும் வலி, குடலில் காணும் கொடிய வலி, சூதகக் கோளாறினால் பெண்களுக்கு அடிவயிற்றில் ஏற்படும் கொடிய வலி, பித்தக் கோளாறினால் வரும் வலி.

அடிவளையம் - அபான வாயிலுக்குள் உள்ள மூன்றுவித வளையங் களுள் அடிப்பாகத்தில் இருக்கும் வளையம்.

அடிவாரச்செயல் - கபாலத்தின் மூலத்துவாரத்திற்கு முன்பாகவுள்ள ஓர் எலும்பு.

அடிவீக்கம் - உள் வீக்கம், ஆழ்ந்த (அல்லது) அடிகனத்த வீக்கம்.

அடிவெண் குருத்து - மரத்தின் முருந்து (இளங்குருந்து).

அடிவெயில் காய்தல் - மாலை வெயிலிற் காய்தல்; இதனால் நோய் குறைவாம்.

அடுக்கம் - சுக்கு.

அடுக்கலரி - இரட்டை அலரி.

அடுக்கல் - அடுக்கடுக்காய் கல் பாய்ந்த மலை.

அடுக்கவரை - ஓர் வகை அவரை. இதனால் அரிதாரம் வெள்ளையாகும் அதாவது பற்பமாகும்.

அடுக்கான கன்னி - பவளப் புற்றுப் பாடாணம்.

அடுக்கிளநீர் - செவ்விளநீர்.

அடுக்கிறை - வெண்டாமரை.

அடுக்குச் செம்பரத்தை - இரட்டைச் சிகப்புச் செம்பரத்தை, குங்குமச் செம்பரத்தை, இரட்டை மஞ்சள் செம்பரத்தை; இரட்டை வெள்ளைச் செம்பரத்தை; செம்பரத்தை செவ்வரத்தை எனவும் அழைக்கப்பெறும்.

அடுக்குத் தும்பை - காசித் தும்பை.

அடுக்கு நந்தியாவட்டம் - இரட்டை நந்தியாவட்டம்.

அடுக்குப் பருத்தி - உயர்ந்த பருத்தி.

அடுக்குப் பல் சுறா - ஒருவகைச் சாம்பல்

நிறமான சுறா.

அடுக்குப்பூண்டு - கோபுரப் பூண்டு.

அடுக்கு மல்லிகை - ஓர் மல்லிகை.

அடுக்குமுள்ளி - பெருமுள்ளி.

அடுக்குவாகை - பெருவாகை மரம்.

அடுக்குவாழை - பனை வாழை.

அடுக்குவேம்பு - நிலவேம்பு, சிவனார் வேம்பு.

அடுக்குளமைந்தோன் - மிருதபாடாணம்.

அடுக்கூமத்தை - காட்டூமத்தை.

அடுங்குன்றம் - யானை.

அடுசிலைக்காரம் - செந்நாயுருவி.

அடுதிகம் - அக்கராகாரம்.

அடுத்தம் - குக்கில்.

அடுத்தாரைக் கொல்லி - நெருப்பு.

அடுத்தாரை மயக்கி - கஞ்சா.

அடுப்பிடுமூன்று - சூரியன், சந்திரன், அக்கினிக் கலைகள், இரேசகம், பூரகம், கும்பகம்.

அடுப்பு - மூலாதாரம்.

அடுப்புக் கும்பி - அடுப்புச் சாம்பல். இது கட்டி, வீக்கம் முதலியவற்றிற்கும் சன்னி, பேதி, சுரம் முதலியன கண்டு உடம்பு சில்லிட்ட நேரத்தில் சூடுண்டாக்க, ஒத்தடம் கொடுக்க இது பயன்படும்.

அடுமா - கொட்டை, ஒட்டடை.

அடு மாசு,
அடும் - ஒட்டறை.

அடும்பு - அடப்பங் கொடி.

அடுராகம் - திருகுப்பாலை.

அடுவிரைவு - சாரணை.

அடை - இலைக்கறி, குடிநீர், மாப்பண்டம், இலை, முளை, வெற்றிலை, செருப்படை, தோசை போல் தட்டப்பட்ட மருந்து.

அடை கட்டி - வண்டல் படிந்த மண்கட்டி.

அடைகாய் -ஊறுகாய், வெற்றிலைப்பாக்கு, காயவைத்துப் பதப்படுத்திய காய், அடை கட்டி, அரை மண், பாக்கு.

அடைக்கண் - கண்ணிமைகள் இரண்டும் ஒட்டிக் கொள்ளும்படிச் செய்யும் ஓர் நோய்.

அடைக்கலக்குருவி,
அடைக்கலங்காத்தான்,
அடைக்கலங்குருவி,
அடைக்கலாங்குருவி,
அடைக்கலான்,
ஊர்க்குருவி.

அடைக்காய் - பாக்கு.

அடைக்குஞ் சவ்வு - மூடு சவ்வு.

அடைக்குடிநீர் - வேர், கிழங்கு, பட்டை முதலியவைகளை ஒன்றுபட இடித்துப் பானையிலிட்டுக் கொதிக்க வைத்துப் பல நாட்களுக்குதவும் படிச் சுண்டக் காய்ச்சி வடித்த குடிநீர்.

அடை சீலை, அடைசு பொட்டணம் - மருந்துச் சீலை.

அடைசு மருந்து - வாய் புண்ணிற்காகக் கொப்புளிக்கும் மருந்து நீர்.

அடைந்தெழுந்திடுதல் - கண்ணில் நீர் வடிந்து விழி கடுத்து இமைகள் வீங்கிக் கண் சிவந்து எரிச்சல் உண்டாகிப் பீளை கட்டும் ஓர் கண்ணோய்; அன்றியும் பூச்சி ஊர்வது போல் அரிப்புண்டாகி மூக்கில் நீர் வடிவதுடன் அடுத்தடுத்து வலியையும் உண்டாக்கும்.

அடைப்பக்காரன் - வெற்றிலை கொடுப்போன்.

அடைப்பன் - கடுக்காய், மாடுகளுக்குத் தொண்டையில் வரும் ஓர் வெப்ப நோய்.

அடைப்பன் கட்டு - ஆடு மாடுகளுக்கு உண்டாகும் ஓர் வகை வெப்ப நோய், மனிதர்களுக்கு உண்டாகும் தொண்டை அடைப்பு.

அடைப்பான் - அடைப்பன்.

அடைப்பான் வந்தை - அடைப்பன் நோயை யுண்டாக்கும் பூச்சி.

அடைப்பு - மல வாயில், பெண்ணின் பிறப்புறுப்பு, செவி, கண் முதலான துவாரங்களில் ஏற்படும் தடை.

அடைப்புக்குழல் - குழாயின் வழியாய் வரும் தண்ணீர் முதலிய திரவப் பொருட்களை நிறுத்தப் பயன்படும் ஓர் வகைத் திருப்பு மூடி.

அடையங்கம் - உளுந்து.

அடையல் - திரவம் தெளிதலினால் உண்டான வண்டல்.

அடையவம், அடையன் - கடுக்காய்.

அடையோடு அறுதல் - ஓர் வகைக் கண்ணோய்.

அடைவாக உண்ணல் - தொடர்ச்சியாய் மருந்துண்ணல்.

அடைவி கச்சோளம் - அடவிக்கச்சோலம்.

அடைவு - முறை, ஆம்பல்.

அட்சசம் - விளா.

அட்சணி - காட்டு முருங்கை.

அட்சதம் - கோதுமை.

அட்சத நோய் - நகச்சுற்று ஏற்பட்டு நகத்தின் வேரைக் கெடுத்து அந்த நகம் விழுவதற்கு முன்னமே

மறு நகத்தை முளைக்கச் செய்யும் நோய்.

அட்சதை - முழு அரிசி, பொரியரிசி, மஞ்சளரிசி.

அட்சத்தி - திப்பிலி.

அட்சபிஞ்சை - ஈசுரமூலி.

அட்சமணி - உருத்திராட்சம்.

அட்சம் - வெங்காயம், கண், தான்றி; பூண்டின் பெயர்களில் விதையைக் குறிக்கும் இறுதிச் சொல். (எ.டு) உத்திராட்சம், கோகிலாட்சம்.

அட்சயம் - கல்லுப்பு.

அட்சயவடம் - பழங்காலத்தில் கயையில் இருந்த ஆலமரம்.

அட்சரசமுத்தி பலம் - விளா.

அட்சரத்துடையான் - ஈ.

அட்சரபோளம் - கரியபோளம்.

அட்சரப்புல் - பீனசப்புல், அறுகம்புல்.

அட்சரமாந்தசுரம் - குழந்தைகட்கு செரியாமையால் வாயில் அட்சரம் பொங்கி அதன் காரணமாய் ஏற்படும் காய்ச்சல்.

அட்சரமாந்தம் - குழந்தைகட்கு எலும்பில் கனல் ஏறிக் குளிர் சுரங்கண்டு, உடல்மெலிந்து வாய், உதடு புண்ணாகிப் பேதியை உண்டாக்கும் மாந்த நோய்.

அட்சரம் - உருத்திராக்கம், நாக்கு வெடிப்பு, நாவில் சிறுசிறு கொப்புளங்களை யுண்டாக்கி முள் பரப்பியது போல் காணப்படும் நோய்.

அட்சரரேகை - மண்டையின் பின்புறத்தில் குறுக்காக ஓடுமோர் எலும்புப் பொருத்து.

அட்சர வகுப்பு - வாயிலுண்டாகும் கொப்புளங்களின் பல வகைகள்.

அட்சர விருட்சத்தி - பலா.

அட்சாரம் - காரமின்மை.

அட்சி - கண், கழற்கொடி, உடம்பின் சில திறந்த பாகங்களைப் பரிசோதிக்கும் கண்ணாடி.

அட்சிகம் - ஓர் மரம்.

அட்சிகோபம் - கண் சிவப்பு.

அட்சிகோளம் - கண்விழி.

அட்சிதர்ப்பணம் - கண்ணில் துளித்துளியாக விடும் மருந்து.

அட்சிதாரை - கரு விழி.

அட்சிபடலம் - கண்ணின் தோல்.

அட்சிபந்தம் - கண் நோயில் கட்டும் கட்டு.

அட்சிபாகாத்திய நோய் - கண்கள் வீங்கல், கலங்கல், நீர்கம்மல், பீளை வடிதல், கருவிழி, வெள்விழி சிவத்தல், எரிச்சல், அடிக்கடி வலியுறல் ஆகிய

குணங்களை உண்டாக்கி பார்வையைக் கெடுக்கும் கண்ணோய்.

அட்சி பாகம் - கண் இரைப்பையின் அழற்சி, இதில் வீக்கம் இருக்கும்; இல்லாமலும் இருக்கும் சாதாரணக் கண்நோய்.

அட்சி பாசத்தியம் - கண் சிவந்து கரு விழியில் வெண்ணிறச் சதை படர்ந்து குத்தலும் வலியும் காணும் ஒருவகைக் கண்ணோய்.

அட்சி லோமன் - கண் மயிர்.

அட்சீபம் - மாமரத்தின் ஒருவகை, முருங்கை.

அட்சை - கோதுமை, தான்றிச் செடி.

அட்டகசம் - ஆடாதோடை.

அட்டகஞ்சிகை - பாளைவேர்.

அட்டகணம் - எட்டுவித கண நோய். சூலிகணம், முக்குக் கணம் (மூலகணம்), ஆம கணம், தேரைக் கணம், மகா கணம், கழி கணம், சுழி கணம், வறட் கணம்.

அட்டகணி - அட்டகசம்.

அட்டகத்தாதி - சிவப்புச் சர்க்கரை வள்ளி.

அட்டகந்தம் - சந்தனம், அகரு, கத்தூரி, பச்சைக்கற்பூரம், பச்சிலை, குங்குமப்பூ, விலாமிச்சை, கோட்டம் ஆகிய எட்டு வித வாசனைத் திரவியங்கள்.

அட்டகம் - வசம்பு, கழுதை, குதிரை, மலை.

அட்டகம்பப் பாவை - வழலை.

அட்டகராசி - சிறுசிமிட்டி.

அட்டகாசம் - அட்டகசம்.

அட்டகாய் - சாதிக்காய்.

அட்டகிராம் - மைசூரில் இருக்கும் ஆஸ்காவில் இருந்து வரும் ஓர்வகை வெள்ளை மணற் சர்க்கரை.

அட்டகிரியிலொன்று - நீலச் செடி.

அட்டகீடம் - எட்டுவகை விட உயிர். ஓணான், தவளை, அடவி ஈ, வீட்டுப்பல்லி, காட்டுக்கொசு, குளவி, மலைக்கட்டெறும்பு, சிலந்திப்பூச்சி.

அட்டகுட்டம் - எண்வகைக்குட்டம், கருங்குட்டம், இரணக்குட்டம், வெண்குட்டம், செங்குட்டம், கிருமிகுட்டம், நீர்க்குட்டம், விரற்குறைகுட்டம், சொறிகுட்டம்.

அட்டகுறி - நோயாளிக்குச் சிகிச்சை செய்வதற்கு முன் வைத்தியர்கள் கவனிக்க வேண்டிய எட்டுவித அடையாளங்கள்.

அட்டகுன்மம் - செரியாமையால் எழுந்த எட்டுவித குணங்களையுடைய குன்ம நோய்கள்; எரி, சத்தி, சன்னி, சிலேத்துமம், சூலை, பித்தம், வலி, வாதம்.

அட்டக்காய், அட்டக்குழு - சாதிக்காய், நற்சீரகம், (கருஞ்சீரகம்,) அசமோதம், மிளகு, திப்பிலி, சுக்கு, இந்துப்பு, பெருங்காயம்.

அட்டசரக்கு - எட்டுவித வைத்தியச் சரக்குகள். சூதம், பூரம், வழலை, துத்தம், காந்தம், இரசிதபாடாணம், சுக்கான், விந்து.

அட்ட சரம் - ஆடாதோடை, கொடிவேலி.

அட்டசாந்திநெய் - எலும்புருக்கி, சயம், பெரும்பாடு முதலிய எட்டு வகை நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து நெய் (அகத்-வை. காவியம் 1500).

அட்டசித்தி - அனிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிரார்த்தி, பிரகாமியம், ஈசத்துவம், வகித்துவம் ஆகிய எண்வகைச் சித்திகள்.

அட்டசுபம் - எண்வகை மங்கலம்; இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறைகுடம், முரசு, விளக்கு.

அட்ட சூரணம் - திரிகடுகு, பருத்திவிதை, கழற்சிப் பருப்பு, பெருங்காயம், வளையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, கருவேம்பு ஆகிய எண்வகைச் சரக்குகள் சேர்ந்த மருந்துப் பொடி. அனைத்து வாயுக்களுக்கும் சிறந்தது.

அட்ட சூலை - மலவாயில் கடுத்து நீர் துளித்துளியாய் வருமோர் சூலை நோய். நிதம்பச்சூலை, பக்கச் சூலை, கருப்பச்சூலை, நாபிச்சூலை, நேத்திரச் சூலை, கபாலச்சூலை, கர்ணச்சூலை, உதரச்சூலை.

அட்டதகம் - ஆமணக்கெண்ணெய்.

அட்டதச மூலம் - கொடிவேலி, எருக்கு, நொச்சி, முருங்கை, மாவிலிங்கம், சங்கங்குப்பி, தழுதாழை, குமிழ், பாதிரி, கண்டங்கத்திரி, வில்வம், கறிமுள்ளி, சிற்றாமல்லி, பேராமல்லி, வேர்க்கொம்பு, கரந்தை, தூதுவளை, நன்னாரி.

அட்டதந்திரவாதம் - உணர்ச்சியற்று வாய் நீர் கசந்து பல்கிட்டி மூச்சற்றுப் பிணத்தைப் போல்

கிடக்கச் செய்யும் ஒருவித வாதநோய்.

அட்டதம் - சமூலம், குமிழஞ் செடி, பாதிரி, கொடிவேலி.

அட்டதளம் - எட்டு இதழ்களையுடைய தாமரைப் பூ.

அட்டதற்கம் - இலவங்கப் பூ.

அட்டதாதிகம் - சிறு கொன்றை.

அட்டதாது - எண்வகை உலோகம், வெள்ளி, பொன், செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம்.

அட்ட தாய் - திப்பிலிவேர், சரமூலம், கொடிவேலி, எருக்கு, நெருஞ்சில், மாவிலங்கு முதலிய தாயைப் போன்ற எண்வகை மூலிகைகள்.

அட்டதானப் பரிட்சை - வைத்தியர்கள் நோயாளியைத் தெரிவு செய்யும் போது நாடி, முகம், மலம், சிறுநீர், கண், நாக்கு, உடம்பு, தொனி முதலியவற்றைத் தெரிந்து கொள்வது.

அட்டதானம் - உடம்பிலுள்ள எட்டு இடங்கள்.

அட்டதிசமூலம் - அட்டதசமூலம்.

அட்டதிசம், அட்ட திசை - எருக்கு.

அட்ட திசை மூலம் - எருக்கம் வேர்.

அட்ட திசை மூலி - எருக்கிலை.

அட்டதிசை ரசம் - சுத்த ரசம் (அல்லது) எருக்கம்பால்.

அட்டதிரச மூலம் - எருக்கு.

அட்டதிரசம், அட்டதிரச்சம், அட்டதிரேகம், அட்ட தீரசம் - அரப்பொடி.

அட்டதுர்க்கை மூலி - மாந்திரிகத் தொழிலுக்கு உபயோகிக்கும் எட்டுவித மூலிகைகள். முருங்கை வேர், முடக்கொற்றான் வேர், மூக்கரைச்சாரணை, முசுட்டைவேர், முட்காவேளை, முள்ளி, முசலை (அல்லது), மஞ்சணை.

அட்டதேச மூலம் - முருக்கு.

அட்டதேறல் - காய்ச்சின சாராயம்.

அட்டத்திசமூலம் - அட்டதச மூலம்.

அட்டத்தைக்கட்டி - விந்துவைக் கட்டி.

அட்டநவகண்டம் - பழு வெலும்பு.

அட்டபத பத்திரம் - பொன் தகடு.

அட்டபந்தனம் - கருப்பு (அல்லது) வெள்ளைக் குங்கிலியம், சுக்கான் கல், தேன் மெழுகு, செம்பஞ்சு, கொம்பரக்கு, காவிக்கல், வெண்ணெய், மைசாட்சி.

அட்டபாதம் - எட்டுக்கால் பூச்சி (சிலந்தி).

அட்ட பிரமி - பெரும் பிரமி.

அட்டபுகைச்சொல் - கோரோசனை.

அட்டபுட்பம் - புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தகம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரை.

அட்டமகாநோய் - வாதம், கல்லடைப்பு, குட்டம், மேகம், மகோதரம், பவுத்திரம், மூலம், கிராணி.

அட்டமதுரம் - அதிமதுரம்.

அட்ட மாந்தம் - எட்டு மாந்தம், செரியாமையால் உண்டாகும் மாந்தங்கள், செரியா மாந்தம், போர் மாந்தம், மலடி மாந்தம், பெரு மாந்தம், வாத மாந்தம், சுழி மாந்தம், வலி மாந்தம், கண மாந்தம்.

அட்ட மிசை - அரைப்பலம்.

அட்டமூத்திராணி - எட்டுவகை மூத்திரம்.

அட்ட மூலம் - எட்டு மூலம் இதில் மூன்று வகை கருத்துகள் உண்டு.
1. சிற்றாமுட்டி, பேராமுட்டி, ஆதளை, முத்தக்காசு, சீந்திற் கொடி, தூதுவளை, கருமுள்ளி, கண்டங்கத்திரி.
2. கண்டுபாரங்கி, காஞ்சொறி, கோரைக்கிழங்கு, சித்திரமூலம், சுக்கு, நன்னாரி, செவ்வியம் (மிளகு), அரத்தை.
3. விட்டுணுகிரந்தி, கோரைக் கிழங்கு, துளசி, பற்பாடகம், கஞ்சாங் கோரை, ஆடாதோடை, பேய்ப்புடல், சீந்தில்.

அட்டமை - வெண்பாதிரி, பசும்வெங்காயம்.

அட்டம் - அண்ணம், மேல்வாய், எட்டு, சாதிக்காய்.

அட்டம்பு - முத்து, மருந்து.

அட்டம் விதை - அடப்பம் விதை.

அட்டயோகம்,
அட்டயோசம் - அரப்பொடி.

அட்டயோற்கம் - அரப்பொடி, அண்டம், கோழிமுட்டை.

அட்டரித்தான் - கோவை.

அட்டரோகம் - சீரகம், கடுகு, ஓமம், பெருங்காயம், அரப்பொடி.

அட்டர் - சாதிக்காய்.

அட்டலோகபற்பம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், பித்தளை, வங்கம், துத்தநாகம் முதலியவைகளை ஒன்றாகச் சேர்த்து புடமிட்டெடுத்த பொடி.

அட்டவகைக்கடை மருந்து - சிற்றரத்தை, பேரரத்தை,

செவ்வியம், சித்திர மூலம், நன்னாரி, கோரை, சத்திச்சாரம், துன்பச்சாரம், செண்பகப்பூ, அதிமதுரம்.

அட்டவத்தனாதி - கடுகு.

அட்டவத்தி நெருஞ்சி - யானை நெருஞ்சில்.

அட்டவருக்கம், அட்ட வருக்கு, அட்டவர்க்கம் - நற்சீரகம், கருஞ்சீரகம், அசமோதம், மிளகு, திப்பிலி, சுக்கு, இந்துப்பு, பெருங்காயம்.

அட்டவாகம் - மடல்வில்லை.

அட்டவிதப்பரிட்சை - அட்டதானப்பரிட்சை.

அட்டவிருட்சம் - உரோமவிருட்சம், எருமைக்கனைச்சான், சுணங்கன் விருட்சம் (அல்லது), நாய்க்குட்டி மரம், திலகம் (அல்லது) மயிலை, இரசகாந்த விருட்சம், சாயாவிருட்சம், சோதி விருட்சம், முண்டினி மரம்.

அட்டனம் - சீரகம்.

அட்டனாதிப்பூடு - பெருந்தும்மட்டி.

அட்டாங்கயோகம் - யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தியானம், தாரணை, சமாதி ஆகிய எட்டு வகையும் அடங்கிய யோகாப்பியாசம்.

அட்டாசிக்காய் - சிறுதும்மட்டிக்காய்.

அட்டாட்சரம் - குழந்தைகட்குண்டாகும் எட்டுவித அட்சர நோய்கள். சூலியட்சரம், நீலியட்சரம், சோதியட்சரம், வீழியட் சரம், குண்டியட்சரம், கபாலியட்சரம், குமரி யட்சரம், உள்ளட்சரம் ஆகியவை.

அட்டாட்சரவாசி - ஆடா தோடை.

அட்டாதச மூலம் - அட்ட தசமூலம்.

அட்டாபதம் - சிலந்திப் பூச்சி, பொன், சரபப்புள்.

அட்டாபதி - மல்லிகை.

அட்டாம் - சாதிக்காய்.

அட்டாலை, அட்டாளை - ஓர் மரம்.

அட்டி - அதிமதுரம், செஞ்சந்தனம், குதிரைநோய், பருப்பு, இலுப்பை, குன்றிவேர், எட்டி, சந்தனம், சுக்கு, கரந்தை, இசமல்லி, இசைவமுதலை.

அட்டிகதாகம் - அதிமதுரம்.

அட்டிகம் - சாதிக்காய்.

அட்டி காலா - அதிமதுரம்.

அட்டிதம் - சமூலம் என்பது கொடிவேலி, பசாந்திரி, முருங்கை, வில்வம்,

நெருஞ்சில், இருவழுதலை, மாவிலங்கு, இராமல்லி, சங்கங்குப்பி, தழுதாழை.

அட்டி தாமதம் - சிறு சீரகம்.

அட்டி மதுசாரம், அட்டி மதுரம், அட்டி மதுரி, அட்டிமதூகம் - அதிமதுரம்.

அட்டிமாட்டியம் - அதிமதுரம், அட்டம், சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, இந்துப்பு, பெருங்காயம், அசமதாகம்.

அட்டிமாமதி - கருநொச்சி.

அட்டி மை - ஓமம், சீரகம், கருஞ்சீரகம்.

அட்டியம் - அதிமதுரம், சாதிக்காய்.

அட்டியு மாட்டியும் - அதிமதுரம்.

அட்டியோசம், அட்டியோரகம் - அரப்பொடி.

அட்டிரபாணிதம் - சிவப்புப் புளியம் பிரண்டை.

அட்டிரம் - இலுப்பை.

அட்டிலம் - வீக்கம்.

அட்டிலாநோய்

அட்டிலாவாதம் - நாபியின் கீழ் சிறுநீர்ப் பையிற்கும் மல வாயிலுக்கும் இடையே வாயுதங்கி அதிகரித்து கட்டியைப் போல் எழுப்பும் ஓர் வாதநோய்; இதனால் மல நீர் பந்தம், குடல் வாயு, வயிற்றுப்பிசம், மூத்திரப்பை வலி முதலிய குணங்கள் உண்டாகும்.

அட்டிவெள்ளை - அதிமதுரம்.

அட்டினம் - சீரகம், ஓமம்.

அட்டீலிகம் - கல்.

அட்டீலிகா நோய் - ஆண்குறியில் இரணத்தை உண்டாக்கி அதில் குழி விழுந்து கெட்டியாக இருக்கும்படிச் செய்யும் ஓர் நோய்.

அட்டு - வெல்லக்கட்டி, பனாட்டு அதாவது பனங்கனியிலட்டது.

அட்டுதல் - வார்த்தல், சீழ்வடிதல்.

அட்டுப்பு - காய்ச்சிய உப்பு, கறியுப்பு, பூநீறு, வெடியுப்பு, சீனம், சாரம், இந்துப்பு முதலியவற்றைக் கழுதை மூத்திரத்தில் கணக்காய் எரித்துப் பதங்கண்டு இறக்கி ஆறினபின், கட்டியாய் நிற்கும் ஓர் வகை வைப்புச் சரக்கு.

அட்டைக்கடி சிகிச்சை - நோயாளிகளுக்கு, அட்டையைக் கடிக்கவிட்டு நோயைக் குணப்படுத்தல், இரத்தங்கெட்டுப் போயிருந்தால் அட்டையை நோயாளியின்

உடம்பின் மீது பாயச் செய்து இரத்தத்தை நீக்குவது.

அட்டைத் தைலம் - அட்டைத் தலைகளினின்று தயாரிக்கும் ஓர்வகைத் தைலம்.

அட்டைப்பால் - பனங்கள்.

அட்டைப்பிசின் - அட்டையைப்போல் ஒட்டிக் கொள்ளும் தன்மை வாய்ந்த பிசின்.

அட்டைப்பிரயோகம் - அட்டைக்கடி சிகிச்சை.

அட்டைப்பூச்சி - அட்டையைப் போல் குடலில் ஒட்டிக் கொண்டிருக்கும் வயிற்றிலுள்ள பூச்சி.

அட்டைவிடல் - அட்டைக்கடி சிகிச்சை.

அண - தயிர்.

அணங்கம் - மல்லிகை.

அணங்கு - நோய், பெண், வருத்தம், மரம்.

அணடி - கீழ்வாய்.

அணம், அணரி, அணர் - மேல்வாய், மேல்வாய்ப்புறம்.

அணல் - கழுத்து, உள்மிடறு, மேல்வாய்ப்புறம், கீழ்வாய், குரல்வளை.

அணல்விரை - நேர்வாளம்.

அணவா - ஓர் பூண்டு.

அணற்க மந்திரம் - தூதுவளை.

அணார் - கழுத்து.

அணி - அடுக்கு, நுணா, மண்ணிலம் (ஆத்தா).

அணிகை - காட்டுக்களா.

அணிக்கிழங்கு - நுணா மரத்தின் அடிவேர்க் கிழங்கு.

அணிசநாசம், அணிச்சுரம் - நாக மல்லிகை.

அணிச்சுராவிதம் - சிகப்புக் கீழ்க்காய் நெல்லி.

அணிச்சை - நாகமல்லிகை.

அணிஞ்சகம் - கொடிவேலி.

அணிஞ்சில் - சிற்றாமுட்டி, கொடிவேலி, நொச்சி, முள்ளி.

அணிஞ்சேபம் - சிகப்புக் கொம்மட்டி.

அணிநுணா - இராம சீத்தா, மணிலாவாத்தா.

அணிநோக்கி - சிவப்புக் கொன்னை.

அணிப்பூ - புளி.

அணிமாக்கசங்கு - இந்துப்பு.

அணிமுலை - பூசனிக் கொடி, பூசனி, அழிஞ்சில்.

அணி முலைப்பால் - பூசனிக் காம்பினின்று ஒழுகும் நீர்.

அணிமுலை மாது - பூசனிக் காய்.

அணியம் - ஆட்டின் தலை, உபகரணம்.

அணியாத்தரங்கன் - அணில்.

அணியுஞ் செம்பு.- உயர்ந்த களிம்பற்ற செம்பு.

அணில்வரிக் கொடுங்காய் - வெள்ளரி.

அணில்வரியன் - உடலில் அணிலைப் போன்ற வரிகளையுடைய பசு, வரிப்பலாப்பழம், வரிகளையுடைய வெள்ளரி.

அணில் வால்தினை - அணில்பிள்ளை வாலைப்போன்ற கதிர்களையுடைய ஒருவகைத்தினை.

அணிவரிக் கொடுங்காய் - வெள்ளரிக்காய்.

அணிவேச கந்தம் - கோழி முட்டை.

அணிவேர் - குரு வேர், வெட்டி வேர்.

அணு - தினை, வரகு.

அணுகண்டகம் - வில்வம்.

அணுகை - காட்டு மிளகு.

அணுக்கம் - சந்தனம்.

அணுக்காபிதம் - செஞ்சந்தனம்.

அணுக்கிருமி - இரத்தக்கிருமி, சிறிய புழு, அறுவகைப் பூச்சிகளுளொன்று.

அணுத்தைலம் - பல சரக்குகளைச் சேர்த்து மூக்கில் நசியமிடுவதற்காகத் தயாரித்த ஓர் வகைத் தைலம். இது நுண்ணிய இரத்தக் குழாய் மூலமாக ஊடுருவிச் சென்று தாதுக்களில் பரவும்.

அணுபலை - காட்டுப்பயறு.

அணுமுலு - துவரை (போகர் நிகண்டில் சொல்லியுள்ள ஓர் வகைத் துவரை).

அணையமறி,

அணையமாதி - நஞ்சுக் கொடி.

அணையம் - நஞ்சுக் கொடியோடு சேர்ந்த ஓர் உறுப்பு; இது கருப்பையில் தாய்க்கும் குழந்தைக்கும் தொடர்பை ஏற்படுத்தும்.

அணையுறு - மூக்கு, பேய்க்கொள், காட்டுக் கொள்.

அணோக்கம் - மரம், மரப்பொது.

அண்ட எரு - வைத்திய முப்பு.

அண்டகமேனி, அண்டகம் - குப்பைமேனி, பீஜம், சிறு முட்டை.

அண்டகருமேனி - குப்பைமேனி.

அண்டகேசரி - சத்தியுப்பு.

அண்டகோசம் - விதையின் தோல், முட்டைக்கருவின் மேல்தோல், பீஜம் (அல்லது) அண்டத்தின் மேல் தோல்.

அண்டகோசு - முட்டைக்கோசு.

அண்டக்கட்டுதல் - வீங்குதல்.

அண்டக்கமர் - தலை மண்டையோட்டின் பிளப்பு.

அண்டக்கல் - பூமியில் தோண்டிப் பார்க்கும்போது பல்லி அல்லது ஓணான் முட்டைகளைப் போலிருக்கும் சிறு சுண்ணாம்புக் கற்கள், ஒரு வகை விடக்கல்.

அண்டக்கழலை - விதையில் வரும் ஓர்வகைக் கழலைக் கட்டி, தலைமண்டையில் வரும் கழலைக் கட்டி, விதையிலுண்டாகும் ஓர்விதக் கொழுப்புக் கட்டி.

அண்டக்கெவுனம் - காட்டுப்பருத்தி.

அண்டசவுக்காரம் - காக்கை, வெண்கோழி, புறா, கழுகு ஆகிய இவைகளின் முட்டைகளில் வகைக்கு ஐந்து எடுத்துக் கொண்டு அவற்றுடன் செயநீர், கல்லுப்பு, ஐந்து சுண்ணம் ஆகியவற்றைச் சேர்த்து இடித்துச் சித்தர்கள் செய்யும் குளிகை.

அண்ட சவ்வு - மண்டையோட்டை மூடியிருக்கும் சவ்வுப் பகுதி.

அண்டசாரணை - இரசக்குளிகை செய்யும் போது சாரணை தீர்ப்பதற்காகப் பயன்படுத்தும் முடியண்ட படருப்பு.

அண்டசிறுநீர் - மூத்திரப்பையில் தங்கி நிற்கும் சிறுநீர்.

அண்டசூலை - வாதத்தினால் விதையின் நரம்புகள் தாக்குண்டு அதிகமான குத்தலையும் வலியையுமுண்டாக்கும் ஓர் வகைச் சூலை நோய்.

அண்டசெயநீர் - கோழிமுட்டையினின்று தயாரிக்கும் ஓர்வகைச் செயநீர்.

அண்டசை - கஸ்தூரி.

அண்டசோதி - சோதி விருட்சம்.

அண்டச்சத்து - முட்டையினின்றும் மண்டையோட்டினின்றும் எடுத்த சத்து.

அண்டச் சுண்ணம் - முப்புச் சுண்ணம், மூன்றுவகை உப்புகளிலான சுண்ண மருந்து; இது வாதவேதியியல் முறையிலும் உயர்தர மருந்துகளைச் செய்வதற்கும் பயன்படும்; வாதம் பித்தம் வைத்தியத்திற்கு இது உதவும்; தலை, மண்டை ஒட்டினின்று தயாரிக்கப்படும் சுண்ண மருந்து.

அண்டச் செந்தூரம் - கோழி முட்டை ஓட்டைக் கொண்டு செய்யும் செந்தூரம்; அடைவைத்த கோழி முட்டையோட்டுடன் மற்ற சரக்குகளையும் சேர்த்து செய்யும் சிகப்பு மருந்து; கோழிமுட்டை குடுக்கைக்குள் வைத்துத் தயாரித்த மருந்து; தலைமண்டையோட்டில் வைத்துத்தயாரித்த செந்தூரம்.

அண்டச் சோர்வு - விதைத் தளர்ச்சி.

அண்டதம் - குப்பைமேனி.

அண்டத்தயிலம் - கோழிமுட்டைத் தயிலம்; இது குழந்தைகளின் சன்னி, வலிப்பு, நாப்பிறழ்வு, திக்குவாய் முதலிய நோய்கட்கு உதவும்.

அண்டத்தாங்கம் - பெருங்குறிஞ்சான்.

அண்டத்தாசி - கண்டங்கத்திரி.

அண்டத்தாபிதம் - விதை வீக்கம், விதைகளில் ஏற்படும் அழற்சி.

அண்டத்தை மயினமாக்கி - நாணற்புல், சற்பாட்சி.

அண்டத் தைலம் - அண்டத் தயிலம்.

அண்டத்தோடு - முட்டை யோடு, மண்டையோடு, தலை மண்டைத்தோல், விதையின் மேல்தோல், முட்டையினுட் கருவின் சவ்வுப்பை.

அண்டநீர் - முட்டை வெண்கருவினின்று தயாரித்த நீர், அண்டச் செயநீர், விதையில் சேர்ந்த நீர், பூமியினின்று வரும் ஊற்று நீர், நீராகச் செய்த வெண்கரு.

அண்ட நோய் - தலைவலி, விதை வலி, விதை வாதம், குடலண்ட நோய்.

அண்டபம் - ஆமணக்கு.

அண்டபேதி - தலைமண்டை ஓட்டினின்று தயாரித்த ஓர் கார மருந்து; உலோகங்களைச் செரிப்பிக்கும் தன்மையுடையது.

அண்டப்பவுத்திரம் - விதையிலுண்டாகும் அசாத்தியமான பவுத்திர நோய்.

அண்டப் பாத்திரம் - தலைமண்டை யோட்டினால் செய்த பாத்திரம்.

அண்டப்பிளவு - தலைமண்டையோட்டின் பிளப்பு (அல்லது) வெடிப்பு. மூளைப் பகுதியின் இடையேயுள்ள இடைவெளி. கருவில் ஏற்பட்ட முகத்தின் விகாரம். விந்து வரும்

வழியில் ஏற்படும் வெடிப்பு, பவுத்திரம்.

அண்டப்புற்று, அண்டப் புத்து - விதையிலுண்டாகும் ஓர் புற்றுநோய்.

அண்டப்பூடு, அண்டப் பூண்டு - முயல்.

அண்டப்பேரொளி - தலையின் மூளை.

அண்டப்பை - விதையின் தோல்.

அண்டமஞ்சள் - முட்டையின் மஞ்சள்.

அண்டமயிமை, அண்ட மயினா - இருசுவ சற்பாட்சி, (ஓர்வகை நாணற் புல்.)

அண்டமுடிமெழுகு - மூன்று மாதத்திய தலைச்சன் கருப்பிண்டத்தின் தலை மண்டையோட்டை இடித்து அதனின்று தயாரிக்கப்படும் ஓர் வகை மெழுகு.

அண்டமுறுகல் - தீமுறுகல் பாடாணம் (தலைமண்டை யோட்டினின்று தயாரிக்கப்பட்டது.)

அண்டம் - விதை, முட்டை, தலை, கொட்டை (விதை), ஆகாயம், மூளை, கஸ்தூரிப்பை, மதம், அண்டநோய் (ஏறண்டம், இறங்கண்டம்), பூமி, வழலை.

அண்டயம் - உடம்பிலுள்ள வெண்கருவின் சத்தாகிய அண்டசிதத்தின் ஓரினம்.

அண்டயெரு - வயித்திய முப்பு.

அண்டயோனி - முட்டையிற் பிறப்பன, சூரியன்.

அண்டரசம் - மூளையின் சத்து, முட்டையின் கரு, சுத்த இரசம்.

அண்டர்நிலை - பொன்னாங்கண்ணி.

அண்டலம் - ஆமணக்கு.

அண்டவம் - முட்டைவடிவு.

அண்டவர்த்தனம், அண்டவலி, அண்ட விருத்தி - விதையில் காணப்படும் வலிகள், வாதத்தினால் விதைய்யில் ஏற்படும் வலி; வாதத்தினால் விதையில் ஏற்படும் குத்தல்; வாயுவினால் காணும் வலி; சூலையினால் ஏற்படும் குத்தல்.

அண்டவாசி - முட்டையின் உள்தாரை.

அண்டவாதசூலை - விதையில் நீர் சேர்ந்து குத்தல்.

அண்டவாதநோய், அண்டவாதம் - வலியையுண்டாக்கும் ஓர் சூலை, விதையில் நீர் இறங்கிப் பருத்துக் காணும் நோய்.

விதைவாதம்:- விதையைச் சூழ்ந்துள்ள தோல்பைக்குள் நீரிறங்கிப் பருத்துக் காணும் நோய்.

தசையண்ட வாதம்:- விதையில் சதை தடித்து வளர்ந்து நீரும் சேர்ந்து பருத்துக் காணும் வாதம்.

குடலண்டவாதம்:- வாதமிகுதியால் விதையில் குடலிறங்கி பருத்துக் காணும் வாதம்.

அண்டவாயு - விதைவாயு, வாயு, விதையைத் தாக்கி அழற்சியையும் வீக்கத்தையும் உண்டாக்கும் வாயு நோய்; வாயு குடலில் தங்கி நரம்பு வழியாய் விதையிலிறங்கி வலித்து நரம்பு புடைத்துக் காணும் நோய், விதைவீக்கம், வலி முதலிய குணங்களை உண்டாக்கும்.

அண்டவாரு - மருந்தரைக்கும் கல்வம்.

அண்டவித்து - உலகத்திலுள்ள உயிர்.

அண்டவித்தை - பத்துவிதப் பறவைகளின் முட்டைகளை மெழுகாகச் செய்து வேதைக்கு உபயோகிக்கும் ஓர் முறை.

அண்டவிருத்தி - மூத்திரத்தை அடக்குவதால், உடம்பிலுள்ள வாயுவினால், விதைப் பையில் நீர் சேர்வதால், வாதத்தில் குடல்கள் பலவீனமடைந்து இயற்கையிடத்தை விட்டு நழுவி அண்டத்திற்குள் கீழ்வழியாய் இறங்குவதால், அண்டத்திற்குள் இருக்கும் தசைகள் தடித்து இருத்தலால் விதை பருத்தல்.

அண்டவுப்பு - தலை மண்டையினின்று தயாரிக்கப்படும் ஓர் வகை உப்பு.

அண்டவுருள் - பூசனிக்காய்.

அண்டவெண்கரு, அண்டவெள்ளை - முட்டையின் வெள்ளைக்கரு.

அண்டவெள்ளை ரசம் - முட்டையின் வெண்கருவினின்று தயாரிக்கும் ஓர் வகைச் சத்து.

அண்டவோடு - முட்டை ஓடு, தலை மண்டை ஓடு.

அண்டகாரகாசம் - கண்ணிற்குள் முட்டை வடிவத்தைப் போலுள்ள கண்ணாடி.

அண்டகார கோளம் - முட்டை வடிவமான கோளம்.

அண்டகாரம் - முட்டைவடிவம்.

அண்டாசயம் - சினைப்பை, விதையின்பை, பூப்பிஞ்சு.

அண்டிகம் - நாய், செந்நாய், யானை, சிங்கம் இவைகளுக்குக் காணும் சுரம், கெட்ட தண்ணீர்.

அண்டிகா - மட்பானை.

அண்டிக்கொட்டை - முந்திரிக்கொட்டை.

அண்டியன் - கடுக்காய்.

அண்டில் - மாடு முதலியவைகளின் கண்களில் பற்றுமோர்பூச்சி.

அண்டினி - சன்னிபாத தோடத்தால் ஏற்படும் ஓர் யோனி நோய்.

அண்டுகம் - ஓர் பறவை.

அண்டு தள்ளுகை - ஆசனத்தின் உள்ளுறுப்பு வெளித்தள்ளல், மலக்குடல் பிதுக்கம், பெண்ணுறுப்பு சதை நழுவி வெளிவருதல், கருப்பைச் சுவர் தளர்ச்சி, கருப்பைப் பிதுக்கம்.

அண்டுப்புழு - அண்டில்.

அண்டைகட்டல் - உடம்பில் நோய் கண்ட பாகத்திற்கு மாறாக மற்றொரு பக்கம் வலி கொள்ளல்.

அண்டோடு - அண்ட வோடு.

அண்ணக் குஞ்சம் - உண்ணாக்கு.

அண்ணச் சோர்வு - மேல்வாயின் நரம்புச் சோர்வு.

அண்ணத் தாபிதம் - மேல்வாயழற்சி, வாயின் மேற்பரப்பிற் காணும் அழற்சி.

அண்ணத் தொங்கனி - அண்ணக் குஞ்சம்.

அண்ணப்பரடு - மேல்வாயின் கரடு.

அண்ணம் - உண்ணாக்கு, அண்ணாக்கு, மேல்வாய்.

அண்ணம் வீழ்ச்சி - அண்ணாக்கு விரிந்து தொங்கல், உண்ணாக்கு வளர்த்தி.

அண்ணல் வல்லி - கோவை.

அண்ணவிரணம் - மேல்வாய்ப்புறத்தில் ஏற்படும் புண், அண்ணாக்கு இரணம் (அல்) கொப்புளம்.

அண்ணவெலும்பு - மூக்கின் பின்புறத்தில் இருக்கும் எலும்பு.

அண்ணா - மேல் நாக்கு.

அண்ணாக்கழற்சி - அண்ணத்தாபிதம்.

அண்ணாக்குப்பிரிவு - இரண்டாகப் பிரிந்த உண்ணாக்கு.

அண்ணாக் கெடுத்தல் - உண்ணாக்கிற்கு மேற்புறம் தொங்கும் சதையை வாய்க்குள் கையை

விட்டோ உச்சி மயிரைத் தூக்கிப் பிடித்தோ தொங்காத படிச் செய்தல்; இதைச் சாதாரணமாய்க் குழந்தைகட்குச் செய்வது உண்டு.

அண்ணெரிச்சான் பூண்டு, அண்ணெரிஞ்சான் பூண்டு - பச்சையாகப் பறித்து அப்போதே அடுப்பில் வைக்க எரியும் பூண்டு.

அண்பல் - மேல்வாய்ப்பல்.

அத - அத்தி.

அதககந்தி - கந்தகவண்டல்.

அதகக்கொடி - பெருமருந்துக் கொடி.

அதகமனம் - வண்டலாகப் பிரிந்து தங்கல்.

அதகம் - (முதுமருந்து) பெருமருந்து, சுக்கு, உயிர்தரு மருந்து, முத்து, மருந்து, மூர்ச்சை தீர்த்து உயிர்தரு மருந்து.

அதகன் - மருத்துவன்.

அதகாய நாளம் - ஈரலின் இடது நாளம்.

அதகாய வெலும்பு - இடுப்பின் கீழ்ப்பாகத்திலுள்ள எலும்பு.

அதகாயம் - தொடை, கால், பாதம் இவைகள் அடங்கிய உடம்பின் பகுதி.

அதகோமனம் - குடமல்லி.

அதக்கதி - திப்பிலி.

அதக்கம் - கஞ்சா.

அதக்குதல் - மெதுவாக அமுக்குதல், கசக்குதல், வாயில் அடக்குதல்.

அதங்கம் - ஈயம்.

அதசம் - காற்று.

அதசயம் - தரையில் தூங்கல்.

அதசல்லியை - நாயுருவி.

அதசி - சணல், அகத்தி, திருவகத்தி, செவ்வகத்தி.

அதசிரம் - தலைகீழாகப் பிடித்தல்.

அதசிரேணி - நாயுருவி.

அதசுப்தி - இடுப்பின் கீழ் சொரணையற்று கால் விழச் செய்யும் ஓர்வகைப்பாரிச வாயு.

அதசேவியம் - நாயுருவி.

அதட்டம் - பாம்பின் கீழ்வாய்ப்பல்.

அதபட்சம் - சுக்கு.

அதபவாதம் - ஆயுர்வேதத்தில் கூறியுள்ள ஓர் வகை வாதநோய்.

அதபி - அத்தி.

அதமதசம் - வெங்காரம்.

அதமம் - கருநெல்.

அதமாணம் - ஆமணக்கு.

அதம் - அத்தி மரம், பள்ளம்.

அதம்பம் - கற்பரி பாடாணம்.

அதரகுட்டம் - உதட்டின் புண்.

அதரம் - நிதம்பம், மஞ்சள்.

அதரவன் - வெந்தோன்றி.

அதரவாய்வு - வாயுக் கோளாறினால் வாய், உதடு

அல்லது பெண் குறியில் காணும் நோய்.
அதரி கோலம் - அழிஞ்சில்.
அதரிசி - மூங்கிலரிசி.
அதருண்டாதல் - கழிவு உண்டாதல், கிட்டம் ஏற்படல்.
அதர் - நுண்மணல், புழுதி, மருந்து வண்டல், அத்தி.
அதலதலம் - காரீயம், காரீய மணல்.
அதலமூலி - ஆடுதின்னாப்பாலை.
அதலாயிலோகம் - பூமியின் கீழுண்டாகும் தாதுப்பொருள், பூமிக்குள் விளையும் உலோகம்.
அதலோகம் - காட்டுப்பூனை.
அதல் - தோல், தண்ணீர்.
அதவம் - அத்தி மரம்.
அதவாய்வு - சவுட்டு மண்.
அதவி - அத்தி.
அதவிடம் - அதிவிடயம்.
அதவு - அத்தி மரம், பள்ளம், அத்திப் பிசின், அதிமதுரம், அத்திநெய்.
அதவு நெய், அதவு நேயம் - அத்திப்பிசின்.
அதவுபாசனம் - புணர்ச்சி.
அதழ் - பூவிதழ்.
அதளக்காய், அதளங்கம், அதளங்காய் - பீர்க்கங்காய்.
அதளப்பிச்சி - செந்நிறமான சீமைப்பிச்சி; வாதுமையைப் போன்றிருக்கும், இதற்குப 'பாரசீகப் பழம்' என்ற பெயருமுண்டு.
அதளமூலி - அதலமூலி.
அதளமேலிச்சாரணை - சிவப்புச் சத்திச் சாரணை.
அதளை - நீர்ப்பீர்க்கு, பாகல், நிலப்பீர்க்கு (பீர்க்கு), புளியதளை.
அதள் - தோல், பட்டை.
அதறஞ்சி - காட்டு முருங்கை.
அதற்றி - மாவிலங்கு மரம்.
அதனை - நிலப்பீர்க்கு.
அதன் பூடு - சிவகரந்தை, சிவனார் மூலி.
அதா - அத்தி.
அதாகம் - சிவப்புச் சிவதை.
அதாகி - மூங்கிலரிசி.
அதாங்கி - ஓர் காட்டு மரம்.
அதாசலம் - காட்டு மல்லிகை.
அதாதி மந்தம், அதாதி மாந்த நோய் - கண்களின் நரம்புகளில் வாயு தங்கி நிற்பதால் பார்வையைக் கெடுத்துப் பிறகு ஏற்படும் கண்ணோய். (அசாத்தியம்).
அதா பீசம் - பாகல்.
அதாவரிசி - வெட்பாலையரிசி.
அதாவன் - வெந்தோன்றி.
அதி - மிருத்தியாதி மாத்திரை, கோரோசனை மாத்திரை.
அதிகக்காதி - கொடிவேலி, அங்குசம்.

அதிக சிலேட்டுமம் - சிலேட்டுமம்.

அதிக சுரசாந்தினி - வல்லாரை.

அதிகடப்பால், அதிகடம் - எருக்கம்பால்.

அதிகண்டகம் - பெருகாஞ்சொறி.

அதிகண்டம் - ஓர் வகைக் கண்டமாலை.

அதிகண்ணி - முன்துடரி.

அதிகதந்தம் - தொத்துப்பல், யானைத்தந்தம், மிகுதியான தந்தம்.

அதிகதம் - வாயு.

அதிகத்தி - குருக்கத்தி.

அதிகநங்கை - சிறியாணங்கை.

அதிகநாரி, அதிகநாலம் - கொடிவேலி.

அதிக நாலினி - சிகப்புத் தட்டைப் பயறு.

அதிக நாவி - வெண்ணாவி.

அதிக நாறி - கொடிவேலி, பெருங்காயம், பீநாறி.

அதிகநேமி - செவ்வந்தி.

அதிகந்தம் - ஓர் வாசனைப்புல், சண்பகப்பூ, கந்தகம், மிகுந்த வாசனையுடையது.

அதிகமந்தாரம் - பார்வையை மழுங்கச் செய்யுமோர் கண்ணோய்.

அதிகமலம் - மாவிலிங்கம்.

அதிகமாஞ்சருமன் - கண் சதை வளர்ச்சி.

அதிகமாலி - குருக்கத்தி.

அதிகமேனி - கற்காவி, மங்கல் நிறமானதும் பாரசீக தேசத்திலிருந்து இறக்குமதியாவதுமான சிவப்புக் களிமண்.

அதிகம் - குருக்கத்தி, யானைத்திப்பிலி.

அதிகரணத்தைலம் - அகத்தியவல்லாதி 600-இல் சொல்லிய முறைப்படி விடாச்சுரங்களுக்காகத் தயாரித்த தலை முழுக்குத் தயிலம்.

அதிகரம் - காட்டு மல்லிகை.

அதிகராதி - கொடிவேலி.

அதிகராவிகம் - செந்துளசி.

அதிகல் - அதிகரம்.

அதிகழிச்சல் - பேதி, சீதபேதி.

அதிகற்றாதி - அதிகராதி.

அதிகன்னி - வெருகு.

அதிகாந்தம் - விலையுயர்ந்த கல்.

அதிகாந்தி - அதிகமாலி.

அதிகாய சித்தி - கருமருது.

அதிகாரி - கொடிவேலி, கொடியநஞ்சு, வெண்காரம், அதிகக் கருமை.

அதிகிராதி - அதிகராதி.

அதிகுகம் - பேராமல்லி.

அதிகுபை, அதிகுப்பை, அதிகும்பை - பொற்றலைக்

கையாந்தகரை.
அதிகேரளம் - சீதாசெங்கழுநீர்.
அதிகோபம், அதிகோலம், அதிகோவம் - அழிஞ்சில்.
அதிகோவிகம் - செந்தொட்டி.
அதிக்கருதி - கொடிவேலி, (சித்திரமூலம்).
அதிங்கம், அதிங்கன், அதிங்கை - நாட்டு அதிமதுரம் அல்லது குன்றிமணிவேர் (கொடிவேலி).
அதிங்காலிகம் - செம்புளியம் பிரண்டை.
அதிசத்திரகம் - நட்சத்திர சீரகம், காளான்.
அதிசத்திரம் - காளான், மருதோன்றி.
அதிசயக்காரன் - இரும்பு.
அதிசயபுட்பி - அத்தி.
அதிசயம் - கொடிய சயநோய்.
அதிசரம் - நெட்டுயிர்ப்பு, அதிவிடையம்.
அதிசரை - மேட்டுத்தாமரை.
அதிசனகி, அதிசனசி, அதிசனதி - கொடிவேலி.
அதிசாதிதம் - செந்துளசி.
அதிசாமியை - வெண்குன்றிச்செடி.
அதிசாரக்கடுப்பு - செரியாமையாலேற்படும் வயிற்றுவலி.
அதிசாரக்கழிச்சல் - செரியாமையால் மந்தம் ஏற்பட்டு வாந்தி, பேதி களைப்பு போன்ற குணங்களையுண்டாக்கும் கழிச்சல், சீத பேதிக் கழிச்சல்.
அதிசாரக் காய்ச்சல் - செரியாமைக் கழிச்சலால் ஏற்படும் காய்ச்சல்.
அதிசாரக்கினி - அதிவிடயம்.
அதிசாரங் கட்டி - செரியாமைக் கழிச்சலைக் குணப்படுத்தும் சரக்கு, கற்கடகசிங்கி.
அதிசார சன்னிபாத சுரம் - அதிசாரக் கழிச்சலுடன் கூடிய சன்னிக் காய்ச்சல்.
அதிசாரசாந்தி - வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தும் மருந்து, காட்டாத்தி.
அதிசார சிலேட்டுமம் - செரியாமையால் கழிச்சல், வயிற்றிரைச்சல், விலாக்குத்து, நெஞ்சுவலி, நாவறட்சி, உடம்பெரிச்சல், இருமல், தாகம் முதலிய குணங்களை உண்டாக்கும் நோய். செரியாமையால் குழந்தைகட்கு கழிச்சலும் சீதமும் கலந்து போகும், அத்துடன் சுரமும் காயும் ஓர் கபநோய்.

அதிசார சுரசமரசி - அதிவிடையம்.

அதிசாரசுரம் - அதிசாரக்காய்ச்சல்.

அதிசாரஞ் சுருக்கி - இலவம்பிசின், பெருங்கழிச்சலை நிறுத்தும் மருந்து.

அதிசாரணம் - மாவிலங்கு.

அதிசாரத் திரவியங்கள் - கழிச்சலுக்காகக் கொடுக்கும் சரக்குகளின் தொகுப்பு. வெட்பாலையரிசி, சிறுகாஞ்சோரி, அதிவிடையம், இருபூலா, வட்டத்திருப்பி, சாதிக்காய், வறட்சுண்டி, நீர்முள்ளி விரை, சுக்கு, முத்தக்காசு, கீழ்க்காய்நெல்லி, குங்கிலியம், இலவம்பிசின், காட்டாத்திப்பூ, ஓமம், கிராம்பு, கஞ்சா, கருங்காரைப்பிசின், மாவிரை, ஆவிரை, திப்பிலி, புளியம்வேர், வாழை, மாதுளம் பிஞ்சு, வெள்ளிலோத்திரம், கருவேல், தேன், புளியங்கொட்டைத் தோல், தென்னம்பாளை.

அதிசாரத் தோடம் - விடப்பூச்சி, பாடாணம் அல்லது விடத்தன்மை வாய்ந்த பேதி மருந்து, அசுத்தபண்டம் இவற்றால் உண்டாகும் நோய்.

அதிசாரநாசனி - கழிச்சலைப் போக்கும் ஒருவகைச் சரக்கு. வறட்சுண்டி, தவராஜசர்க்கரை, (வெள்ளைச் சர்க்கரை,) வெட்பூலா, கஞ்சா, தீன்பூ (அறியப் படாதது).

அதிசாரபந்தனி - கழிச்சலைக் கட்டும் ஓர் சரக்கு, மருவகம் (ஓர் மூலிகை).

அதிசார பந்து - செரியாமைக் கழிச்சலைக் குணப்படுத்தும் சரக்கு, கற்கடகசிங்கி.

அதிசார பித்தம் - வயிற்றிரைச்சலுடன் கழிச்சல், வயிற்றுப்பிசம், விலாவலி, ஈரலெரிச்சல், மயக்கம் முதலிய குணங்களையுண்டாக்கும் நோய்.

அதிசார பேதி - அதிசாரக் கழிச்சல்.

அதிசார மூரி - ஊணங்கொடி.

அதிசாரம் - உண்ட உணவு செரியாத நிலையில் நீர் நீராகக் கழியும் நிலை; உணவின் குற்றத்தினால் குழந்தைகளுக்குண்டாகும் கழிச்சல்; பல்முளைக்கும் குழந்தைகட்குண்டாகும் கழிச்சல்; அசுத்த நீர், பூச்சிகள் இவற்றினால்

எந்நேரமும் கழிந்து கொண்டே இருத்தல்; மலத்தில் சீதமும் இரத்தமும் கலந்து விழுந்து வயிற்று வலியும் காணும் நோய்; சீதபேதி.

அதிசாரம் - சத்திச்சாரம். இது வெடியுப்பு, நவச்சாரம், சோற்றுப்பு, பூநீறு முதலியவைகளைக் கொண்டு செய்யும் ஒருவகை உப்பு; அதிமதுரம், மிக்க இனிப்பு, கல்லுப்பு, தும்பை, சவ்வீரம், அதிக சத்து.

அதிசாரம் போக்கி - ஓதிய மரம்.

அதிசாரவுபரசம் - கருப்பத்திலுண்டாகும் ஓர்வகை நீர் (பனிக்குடத்து நீர்)

அதிசிகுவை - அடிநாக்கின் கீழ் வீக்கத்தை உண்டாக்கிப் பிணி நீர்ப்பை அல்லது சிறு முளைகள் போல் கொப்புளங்களை எழுப்பிப், புசிக்க முடியாதவாறு வலியை உண்டாக்கும் ஓர் நோய்.

அதிசிங்கம் - அதிமதுரம்.

அதிசிவம், அதிசிவிகம்- நாக்கு அல்லது உண்ணாக்கில் உண்டாகும் ஓர்வித வீக்கம்.

அதிசீதம் - மிகக்குளிர்ச்சி.

அதிசுட்கம் - செரிமானச் சக்தியின் (சமாக்கினியின்) குறைவால் நாளுக்கு நாள் உடல் மெலிந்து கழுத்து, வயிறு, தொடை முதலிய உறுப்புகள் உலர்ந்து சூம்பித் தேவாங்கைப் போல் இளைத்த உருவத்தை அடையச் செய்யும் நோய்.

அதிசுரபி - சுரபிப்பூ.

அதிசுழூத்தி - மயக்கத்தோடு கூடிய தூக்கம்.

அதிசெளபரம்

அதிசெளரபம் - மாங்காய்.

அதிச்சத்திரகம்

அதிச்சத்திரசம் - காளான்.

அதிச்சத்திரம்

அதிச்சத்திரை - சர்க்கரை.

அதிச்சந்திரகம் - காளான்.

அதிட்டச்சொல்லி - இந்திரபாடாணம்.

அதிட்டம் - மிளகு.

அதிதல் சிலேட்டுமம் - ஓர்வகைச் சிலேட்டும நோய்.

அதிதனு - பொன்.

அதிதாபக வாதம் - உடம்பைத் தவிக்கச் செய்யும் வாத நோய்.

அதிதாரம் - இலந்தை, பழுப்பு.

அதிதிபூசிதம் - சத்திச் சாரணை.

அதிதிப்பம் - பசியின்மை.

அதிதீசம் - பேரரத்தை.

அதிதீபம்
அதிதீபனி - ஓமம்.
அதிதும்மல் பீனசம் - கபால வறட்சியினாலும் நாசித் தண்டாகிய எலும்பில் அடிபடுவதனாலும் வாயு மிகுந்து நாசி, கண், வாய், செவி ஆகிய இடங்களை அடைப்பதனாலும் எந்நேரமும் தும்மலை உண்டாக்கும் ஓர் வகைப் பீனசம்.
அதிதூல நோய் - ஆண்களுக்கு உடம்பைப் பருக்கச் செய்யும் நோய்; பெண்களுக்கு சூதகவாயு போன்ற காரணங்களினால் உடம்பு பருத்து அதனால் களைப்பு, மேல் மூச்சு முதலிய குணங்களைக் காட்டும் நோய்.
அதிதோவயம் - சர்வத்திராவகம்.
அதிநரம் - சீமை அதிமதுரம்.
அதிநாரம் - இலந்தை.
அதிநிதி - நவச்சாரம்.
அதிநீர் - அதி மூத்திரம்.
அதிநீலம் - இலுப்பை.
அதிநோய் - சயரோகம், தொந்தரோகம், சலரோகம்.
அதிபகம், அதிபசமி, அதிபசம் - கொன்றை.
அதிபதாதி - செம்பசளை.
அதிபதி - சண்பகம், நெருப்பு, வாலுளுவை, சங்கு, சிங்கம்.
அதிபதிங்கி - கொடிவேலி.
அதிபதிசம், அதிபதிச்சங்கம், அதிபதிச்சம் - வாலுளுவையரிசி.
அதிபதிஞ்சி - அதிபதிங்கி.
அதிபதிநாசி, அதிபதுங்கி - அதிபதிங்கி.
அதிபத்திரம் - தேக்குமரம், மயிர் மாணிக்கம்.
அதிபநிச்சம் - வாலுளுவை
அதிபம் - வேம்பு, மூளையின் முக்கிய பாகம்.
அதிபரிசகம், அதிபரிச்சம், அதிபரிட்சாயி - வாலுளுவை.
அதிபலம் - மயிர்மாணிக்கம், மாவிலங்கை, வெள்வேல், நேர்வாளம்.
அதிபலா - சிறுதுத்தி.
அதிபலை - பேராமுட்டி.
அதிபறிச்சம் - அதிபதிசம்.
அதிபாதிதம் - முழுவதும் முறிந்த எலும்பு.
அதிபாரகம் - கோவேறு கழுதை.
அதிபுரசாதினி - நீலி, (அவுரி).
அதிபேதி - குய்யபேதி, அதிசார பேதி.
அதிப்பிலா - பேராமுட்டி.
அதிமது - அதிமதுரம்.
அதிமதுக்குரு - நீரிழிவு நோயில் சர்க்கரையினால் ஏற்படும் குருக்கள்.

அதிமதுக்குருதி - அதிகமாக இனிப்பு சேர்ந்த இரத்தம்.

அதிமதுரப்பாணி, அதிமதுரப்பால் - அதிமதுரச் செடியின் வேரினின்று வடிக்கும் பால், இதன் வேரை வாயிலடக்கிக் கொள்ள நாவறட்சி, வாய்ப்புண், வெப்பம் முதலியவை நீங்கும்.

அதிமதுரம் - அதிக இனிப்பு, ஓர் கடைச்சரக்கு, சீமை அதிமதுரம், நாட்டு அதிமதுரம் அல்லது குன்றிவேர், வெண்குன்றி, மலைக்குண்டு மணிவேர்.

அதிமந்தம் - கண்ணை வேருடன் எடுத்துவிடுவது போல் மிக்க வலியையும் அத்துடன் ஒற்றைத் தலைவலியையும் உண்டாக்கும் ஒருவிதக் கண்ணோய்.

அதிமந்தாரம் - கண்களில் வலியையுண்டாக்கிக் கடுத்து நீர் வடிதலுடன் பார்வையில் குத்தலுண்டாக்கிப் பார்வையை நாளுக்கு நாள் இருண்டு வரும்படிச் செய்யும் கண்ணோய். (மருந்திட அதிகமாகும்.)

அதிமலம் - மாவிலிங்கம்.

அதிமாங்கிசம் - சதை வளர்த்தி; பல உறுப்புகளில் ஏற்படும். கண்ணில் சதை வளர்ந்து துன்புறுத்தும் ஒரு நோய்.

அதிமாதவம் - இலுப்பை.

அதிமாமிசகம் - ஈறுசுரந்து அதனாலேற்படும் பல்வலி; உண்ணாக்கு வளர்ந்து அதனாலுண்டாகும் அழற்சி.

அதிமாமிசசருமன் - வெள்விழி மேல் சதை வளர்ந்து, உலர்ந்த இரத்த உண்டையைப்போல் கறுத்தும் பருத்தும் இருக்கும் ஒரு கண்ணோய்.

அதிமாமிச நோய் - உடம்பின் வெளியுறுப்புகளில், எலும்பு, தசை, தோல் முதலியவற்றில் சதை வளர்ச்சியால் வரும் நோய்; பற்களின் வேர்ச்சந்துகளில் ஆணி போன்ற கட்டிகளை எழுப்பித் தாடை, காதுகளில் வலி, சுரத்தை உண்டாக்கும் பல் நோய்.

அதிமாமிசபாகம், அதிமாமிசம்- உடம்பின் உறுப்புகள் பலவற்றில் காணும் சதை வளர்ச்சி; கண் சிவந்து சதை வளர்ந்து உறுத்தும் கண்ணோய்.

அதிமாமிசா சரும நோய் - வெள்விழியில் சதை வளர்ந்து காணும் நோய்; பிறவியில் ஏற்படும் கண் சதை மடிப்பு.

அதிமானம் - ஆமணக்கு.
அதிமிருத்தியாதி மாத்திரை - கோரோசனை மாத்திரை.
அதிமுத்தகம் - அனிச்சை, மஞ்சள் மந்தாரை, சிறு மல்லிகை.
அதி முத்தம் - குருக்கத்தி, நரிவேங்கை, ஊசி மல்லிகை, சரக்கொன்றை.
அதிமூத்திரநீக்கி, அதிமூத்திரம் நீக்கி - சிவப்புப் பொன்னாங்கண்ணி.
அதிமூத்திரம் - சிறுநீர் மிகுதியாய்ப் பெய்தல்.
அதிமோதம் - மல்லிகை மரம்.
அதியக்கினி - மிகு பசி.
அதியசனம் - உண்டவுணவு செரியாமுன் உணவை உட்கொள்ளுதல்; அளவுக்கதிகமாக உண்ணுதல்.
அதியச்சாரன் - மாவிலங்கை.
அதியண்டம் - பூனைக்காலி.
அதியத்தம் - எலும்பின் மேற்பாகம்.
அதியத்தி - எலும்பின் மேல் எலும்பு வளர்தல்.
அதியமிலபரணி - புளியிலை, மாவிலை, புளிச்சிறு கீரை.
அதியமிலம் - புளிமா, புளிநாரத்தை.
அதியம் - அப்பிரகபாடாணம்.
அதியருவதம் - முன்புள்ள கழலை மேல் எழும்பும் அசாத்தியக்கட்டி; ஒரேகாலத்தில் ஒன்றன்மேல் எழும்பும் பல கட்டிகள்.
அதியாமம் - அறுகம்புல், முயற்புல்.
அதியாயம் - முயற்புல்.
அதியோமகம் - சிவப்பு வாடாமல்லி.
அதிரக்கல் - காட்டுமல்லிகை.
அதிரசம் - இரசம், உப்பு, இனிப்புக் குடிநீர், பல பூண்டுகளின் பெயர், ஓர் பலகாரம், அரசமரம்.
அதிரசை - சன்ராஷ்டகம்.
அதிரத்த நோய் - இரத்த ஆதிக்கம். இதனால் தலையில் இறுக்கமான உணர்ச்சியும் சிவந்த நிறமும் மூக்கில் இரத்த ஒழுக்குமுண்டாகும்.
அதிரத்தம் - இலிங்கம்.
அதிர புரசத்தான் - அலரி.
அதிரம் - குக்கில்.
அதிரம்பை - பொற்றலைக் கையாந்தகரை.
அதிரல் - புனலிப்பூ, காட்டு மல்லிகை.
அதிராகம் - கந்தகம்.
அதிராம்பை - பொற்றலைக் கையாந்தகரை.
அதிரி - கல்.
அதிரிக்கர்ணி - காக்கணம்.
அதிரிசம் - குருடு.
அதிரிசன் - குருடன்.

அதிரிசாரம் - இரும்பு, கற்சத்து, கல்மதம்.
அதிருகை - மாமிசரோகிணி.
அதிருக்கு - குருடு.
அதிருசன் - அதிரிசன்.
அதிருப்பை - பொற்றலைக் கையாந்தகரை.
அதிரூபம் - தான்றிக்காய்.
அதிரை - சிறுநீர்.
அதிர்கல், அதிர்க்கால் - காட்டுமல்லிகை.
அதிர்சன்னி - சன்னியால் தாக்குறும்போது ஏற்படும் நடுக்கம்; தாங்கமுடியாத நோய், அடி, காயம், இரணம், புண் இவைகளினால் ஏற்படும் அதிர்ச்சியால் தோன்றும் சன்னி.
அதிலவிதம் - வெள்ளி லோத்திரம்.
அதிலவோடாகம் - மலையாள நாட்டில் விளையுமோர் செடி.
அதிலூறமாமுகம் - புல்.
அதிலோகமருஞ்சாகம், அதிலோகம் - இரசகற்பூரம்.
அதிலோகிதம் - அதிகச் சிவப்பு.
அதில் - மூங்கில், மரகதம்.
அதிவகம் - அதிமதுரம்.
அதிவகா, அதிவசம், அதிவசம்பு - அதிவிடயம்.
அதிவரை - வெளித்தாமரை.
அதிவல்லபம் - முல்லை.
அதிவாசனம் - நாரத்தை.
அதிவாதநாடி - உடம்பில் வாதம் அதிகமிருப்பதைக் குறிக்கும் நாடிநடை.
அதிவாதம் - வாதக்கதிப்பு.
அதி வாலகன் - குழந்தை.
அதி வாவிகம் - சிகப்பு மருதோன்றி.
அதிவிஷம், அதிவிடம் - அதிவிடையம்.
அதிவிடாகிகம் - சிவப்பு ரோஜா.
அதிவிடை, அதிவிடையம் - ஓர் கடைச்சரக்கு, பூண்டு, மருந்து, குணபலம்.
அதிவியதை - அதிக வேதனை.
அதிவிருட்டி - பெருமழை.
அதி வீரம் - வீரம்.
அதிவு - அத்தி.
அதிவெள்ளை, அதிவெள்ளைச் சிந்தூரம் - பரங்கிப்பாடாணம் (சவ்வீரம்).
அதிள் - ஆட்டின் கழுத்துத் தோல்.
அதிறாப்பை - பொடுதலை, அரிசித் திப்பிலி.
அதினாதிப்பூண்டு - கொடிவேலி.
அதீசாரம் - அதிசாரம்.
அதீதபேதி - அதிகமான கழிச்சல்.
அதீதம் - பொன், கொன்றை மரம்.
அதீதம் காவி - தேவதாரம்.

அதீதவிடந்தீண்டி - நாகப்பாம்பு.
அதீபனம் - மந்தாக்கினி (சுரம் மற்றும் பல்வகை நோய்களில் ஏற்படும் பசியின்மை.)
அதுக்கல் - கடித்தல், மெல்லுதல், அமுக்குதல்.
அதுஷ்ட பத்திரிகை - மல்லிகை.
அதுபதுங்கி - கொடிவேலி.
அது மதுரம் - பெரும் பூசனி.
அதும்பை - கவிழ்தும்பை.
அதுலாக்கிமை, அது லாக்கியம், அதுலாக்கினம் - கருஞ்சீரகம்.
அதேச்சாலம் - தேற்றா.
அதைதல் - கற்கடகசிங்கி.
அதைப்பு - உள்வீக்கம், வெளிவீக்கம், விம்மல், எலும்பின் எழுச்சி, நீர்க்கோப்பு.
அதோ - கீழ், உள்.
அதோகந்தம் - நாயுருவி
அதோகாணு - முழங்காற்கீழ்
அதோங்கம் - குதம் அல்லது பெண்ணுறுப்பு
அதோசததோடம் - நீர்த்தாரைக் குழாய் கோளாறினால் கொப்பூளின் கீழ் வாயு அனுசரித்து அதனால் மலம் நமுகல், வாய் உலர்தல் முதலிய குணங்களைக் காட்டும் ஐவகைத் தோடங்களுள் ஒன்று.
அதோசீவிகம் - உள்நாக்கு.
அதோதரம் - கீழ்வயிறு.
அதோதிதம் - சிவப்பு முள்ளுக்கீரை, செம்முள்ளி.
அதோபக்தம் - சாப்பிட்டவுடன் எடுத்துக் கொள்ளும் மருந்து.
அதோபரம் - மலவாயில்.
அதோ பிரகனனாளம், அதோ பிரகன்னாளம், அதோபிரசன நாளம் - கீழ் உடம்பினின்று இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டு போகும் ஓர் வகை நாளம்.
அதோமார்க்கம் - நாயுருவி.
அதோமுகக்கட்டி - வயிறு, இடுப்பு முதலிய கீழ்ப்பாகங்களிற் பெரிதாய், கருப்பாய் எழும்பி மிக்க வலியையுண்டாக்கி நிமிர வொட்டாமல் செய்யும் கட்டி.
அதோமுகம் - கறிமுன்னை.
அதோமுக ரத்த பித்தம் - உடம்பின் கீழ்ப்பகுதியில் பெண் உறுப்பு, சிறுநீர் தாரை, மலம், மயிர் ஆகிய துவாரங்கள் வழியாக இரத்தப் போக்கை உண்டாக்கும் ஓர் நோய்.
அதோமுகவாதம் - உடம்பின் கீழ் முகமாக நோக்கும் வாதம்.
அதோமுகி - கவிழ்தும்பை,

கள்ளுதும்பை.
அதோமுகியான் - கன்று போடும் பசு.
அதோரத்த பித்தம் - அதோமுகரத்த பித்தம்.
அதோலம்பம் - தூங்கல்.
அதோவசம் - பெண்ணுறுப்பு.
அதோவாயு - அபான வாயு.
அத்தகண்ணி - வெருகு.
அத்தகம் - ஆமணக்கு, கருஞ்சீரகம்.
அத்தகம்பவாதம் - கைகளை நீட்டவும் மடக்கவும் முடியாதபடிச் செய்யும் வாதநோய்.
அத்த காகிதம் - அதிவிடயம்.
அத்தகாசாரம் - சவுட்டுப்பு.
அத்தகாண்டகம் - முத்து.
அத்தகிதம் - சிவப்பு மூக்கரைச்சாரணை.
அத்தகைச்சாரணை - சிவப்பு வட்டச்சாரணை.
அத்தகோரம் - நெல்லி.
அத்தகோளம் - வியர்வைக் கோளத்தின் பகுதி.
அத்தங்கி - முழங்கால்.
அத்தஞ்சடம் - கௌரி பாடாணம்.
அத்தடம் - அதிவிடையம், பொன்.
அத்ததோம் - நெல்லி.
அத்தநாதம் - சிறுகீரை.
அத்தநாரி, அத்தநாரை - கட்டுக்கொங்கை எனும் செடி.
அத்தப்பிரகரம் - 4¼ நாழிகை கொண்டது.
அத்தப்பொருந்தி - எலும்பு முறிந்ததை ஒன்றாகச் சேர்க்கும் பூடு, எலும்பொட்டி எனும் பூடு.
அத்தமம் - அதிவிடயம், குக்கில், அந்திப்பொழுது.
அத்தமா - அதிவிடயம்.
அத்தமானம் - ஆமணக்கு, அதிவிடயம், பொன்.
அத்தம் - கெந்தியுறுபாடாணம், குக்கில், அதிவிடயம், பொன், கண்ணாடி, நாய்வேளை, கை, கரிசலாங்கண்ணி, பச்சைக் கற்பூரம், பாதி, குந்துருக்கம், கருப்புக் குங்கிலியம், வெள்ளையாமணக்கு, காடு, பொழுது சாய்கை, கருஞ்சீரகம், அத்தி, கொள்ளு.
அத்தயாமம் - ஒரு நாளில் 1/16 பங்கு நேரம்.
அத்தரசிதம் - மடல் துத்தம்.
அத்தராங்கி - இதயம்.
அத்தராவாயு - புளித்தேக்கிட்டு உடம்பின் வலுவைக் குறைக்கும் வாயு.
அத்தர் - வாசனைத்திரவியம்.
அத்தலை ஐவர் - தேகத்திலுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி

ஆகிய ஐந்து.

அத்தலைப் பொருந்தி - அத்தப்பொருந்தி.

அத்தவாகுடம் - வெள்ளைச்சாரணை.

அத்தவி - சேகனைப்புல்.

அத்தனாபேதி - கடுக்காய் சேர்ந்த குய்யபேதி.

அத்தனுகம் - ஆமணக்கு.

அத்தன் - கடுக்காய், வெள்ளீயம்.

அத்தன்பாதம், அத்தன் புள்ளடி - செருப்படை.

அத்தாங்கத்தியானி - ஆமை.

அத்தாசிதம் - மடல்துத்தம்.

அத்தாரம் - மரமஞ்சள், மஞ்சள்.

அத்தாவரி - வெட்பாலரிசி.

அத்தாழ் - கண்புருவப்பூட்டு.

அத்தாளம் - சாயுங்காலம்.

அத்தானம் - ஆமணக்கு.

அத்தான் - முடக்கற்றான், கடுக்காய்.

அத்தி - எலும்பு, உடம்பு. கண்ணிலோடும் ஓர் வகை நரம்பு, பத்து நாடிகளுள் ஒன்று, ஓர் மரம், திப்பிலி, அரசு, கடல், எருக்கன் கிழங்கு, பெண்யானை, சிவப்பாமணக்கு, மூர்ச்சை, யானை வணங்கி, ஆனை நெருஞ்சில், வெருகு.

அத்தி - எலும்பு, வெருகு, நாட்டு அத்தி மரம், ஊழலத்தி நீரத்தி, மலையத்தி, கொடியத்தி, சீமையத்தி, கல்லத்தி, பேயத்தி.

அத்திகங்கம் - சூரியகாந்தப்பூ.

அத்திகண்ணி - வெருகு.

அத்திகபம் - கணவாய் மீன் எலும்பு, கடல்நுரை.

அத்திகமணி - மெருகு.

அத்திகமநீர் - நீர்முள்ளி.

அத்திகம்

அத்திகரம் - பலகறை, ஊனீர்.

அத்திகன்னி - வெருகு.

அத்திகு - அரசு.

அத்திகேசரம் - சிகப்புவல்லி.

அத்திகோபம் - கண்ணில் நிற்கும் நரம்புக்கு அழற்சி கண்டு அதனால் ஏற்படும் கண்ணோய்.

அத்திகோலம் - அழிஞ்சில்.

அஸ்தி, அத்தி - எலும்பு, வெருகு, திப்பிலி, யானைத் திப்பிலி, வாலை ரசம்.

அத்திகோவிகம் - சிவப்பு எலிச்செவிப்பூடு.

அத்திக்கண்ணி - கரிசலாங்கண்ணி, வெருகு.

அத்திக்கரணி - சிற்றாமணக்கு, பலாசு.

அத்திக்கவிப்பு - எலும்பின்மேல் கவிந்துள்ள சவ்வு.

அத்திக்கள்ளி - வெருகு, கரிசலாங்கண்ணி.

அத்திக்கள்ளு - அத்தி மரத்தின் வேரினின்று

வடிக்கும் கள்ளு.
அத்திக்கனி - வெருகு, கரிசலாங்கண்ணி.
அத்திக்கன்னி - வெருகு, வெருக்க மரம்.
அத்திக்காய் கிரந்தி - மேகநோயினால் உடல் முழுவதும் அத்திக்காய்ப் பருமன் கட்டிகளை எழுப்பும் விரணநோய்.
அத்திக்காய்ச்சல் - எலும்புக் காய்ச்சல்.
அத்திக்காய்ப்பரு - ஓர் மேகக் கிரந்தி.
அத்திக்கால் - ✸ மணிஞ்சிலா.
அத்திக் காளிக்கீரை - கோழிக் குறும்பான் கீரை.
அத்திக்காற் சுவடு - ஆனையடிப் பூண்டு.
அத்திக்கிரந்தி - எலும்புகள் நொறுங்குதலால் பருத்துயர்வதும் அமுங்குவதுமாக இருக்கும் ஒரு இரண நோய்.
அத்திக் குட்டி மலம் - கண்டில் வெண்ணெய் (அறியப்படாதது). யானைக் குட்டியின் மலம்.
அத்திக்கொடி - கொடியத்தி.
அத்திக் கொம்பு - யானைக் கொம்பு.
அத்திக்கோலம், அத்திக் கோல் - அழிஞ்சில்.
அத்திக்கோவிகம் - சிறுகுறிஞ்சா.
அத்திசங்கம் - வாலுளுவை.
அத்திசந்தி - எலும்பின் மூட்டு.
அத்திசம் - நீர்முள்ளி, எலும்புக்குள் உற்பத்தியானது.
அத்திசம்மாரகம் - நான்முகப் பிரண்டை.
அத்திசன்னி - வெருகு, கரிசலாங்கண்ணி.
அத்திசா - கொடிமுந்திரிகை.
அத்திசாதிப்பல் - குதிரைப்பல்.
அத்திசாரபேதி - எலும்பு, மூளை இவைகளின் சாரத்தை வெளிப்படுத்தி மலத்தோடு கலந்து கொண்டுவரும் ஒருவகைக் கழிச்சல்.
அத்திசிராவம் - அல்குல் வழியோ, கருப்பைக்குள்ளிருந்தோ பால்போல், சீழ்போல் திரவம் வெளிப்படும்; கை, கால் ஓய்ச்சலுடன் உடம்பு மெலிந்து அல்குல், முதுகில் வலியையுண்டாக்கும் நோய்; எலும்புருக்கி.
அத்தி சுரசூலை - உடம்பில் சூடுண்டாக்கி பொருத்துகளை வீங்கச் செய்யும் நோய்.
அத்தி சுரம் - நடு இராத்திரியில் குழந்தைகளுக்கு வரும்

எலும்பைப் பற்றிய காய்ச்சல்.

அத்திசோலம் - அழிஞ்சில்.

அத்திதந்தம் - முள்ளங்கிக் கிழங்கு, யானைத் தந்தம்.

அத்திதாதுகதசுரம் - உடம்பை உருகச் செய்யும் எலும்பு பற்றிய ஒரு வகைச் சுரம்; நரம்பு, எலும்பு, கீல் முதலியவைகளில் வலியுடன் உடம்பு வெளுத்து மெலிந்து சுரத்தின் குணங்களையும் பெற்றிருக்கும்.

அத்தித் திப்பிலி - யானைத் திப்பிலிக் கொடி.

அத்தித் திவகம் - எலும்பின் பாகத்தை அடுத்த சவ்வு.

அத்தித் தேக்கி - சிறு கொத்து அவரை.

அத்திநாடி இரணம் - எலும்பில் பிறந்து எலும்பின் நரம்புகளுக்கு வலியையுண்டாக்கும் ஒரு மிருதுவான கட்டி (சல்லிய நாடிவிரணம்).

அத்திநாத்திவாதம் - எலும்பை அழிக்கக்கூடிய ஓர் வாதம்.

அத்திநீர் - அத்திப்பதனி.

அத்தி நெய் - அதளப்பிசின்.

அத்தி பங்கம் - எலும்பு முறிவு, எலும்பின் கோணல்.

அத்திபஞ்சரம் - எலும்புக் கூடு.

அத்திபுரசாதனி, அத்திபுரசாதன் - அவுரி.

அத்திபேதி - எலும்பை நீராக்கும் மருந்து; யானைகளுக்குக் கொடுக்கும் பேதி மருந்து (கார மருந்து).

அத்திபைரவி - சீமைவிளா.

அத்திப்பதனி - அத்திமரத்தின் வேரினின்று வடியும் நீர். (அத்திக்கள்) (அத்தி வேர்த்தண்ணீர்).

அத்திப்பழம் - மனம்.

அத்திப்பதினி - அத்திப்பதனி

அத்திப் பிடிப்பு - எலும்பில் காணும் அழற்சி, எலும்பு பொருத்துக்களில் காணும் பிடிப்பு; மூட்டுகளிலுள்ள குருத்தெலும்புகள் வன்மையடைவதனால் ஏற்படும் பிடிப்பு.

அத்திப்பைரவி - சீமைவிளா.

அத்திமண்டூகி - முத்துச்சிப்பி.

அத்தி மரம் - நீர்முள்ளி.

அத்தி மானம் - ஆமணக்கு.

அத்திமேகம் - யானைச் சிறு நீரையொத்து ஒருவேளை தடைபடாமலும் ஒருவேளை தடைபட்டும் வெண்ணிறமாகவோ சிறிது நிறம் மாறியோ, காணும் ஒரு அசாத்தியமேக நோய்; மேகநோயினால் ஏற்படும் ஓர் எலும்புருக்கி நோய்;

மேகத்தினால் மூத்திரம் பால்போல் ஒழுகல்.

அத்திமேற்புல்லுருவி - அத்தி மரத்தின் மேல் முளைத்திருக்கும் புல்லுருவிப் பூண்டு.

அத்தியசனம் - முதல் நாள் புசித்த உணவு செரிக்காமலே மறுநாள் கொள்ளும் உணவு.

அத்தியந்த சீதளம் - நாவல்.

அத்தியம்பிலை - ஈச்சு.

அத்தியயம் - சாவு.

அத்தியாகாரம் - மிகுந்த உணவு.

அத்தியாகிரகம் - பெருங்காயம்.

அத்தியாகினம், அத்தியாகுனம் - பெருஞ்சீரகம், கருஞ் சீரகம்.

அத்தியாசவாதம் - முகத்தில் ஒரு பக்கமும் அதற்கு மாறாக உடம்பில் மற்றொரு பக்கமும் காணும் வாத நோய்.

அத்தியாமிசம் - எலும்பின் மேலுண்டாகும் கழலைக்கட்டி.

அத்தியாம்சரக்கு - யானையைப் போல் எளிதில் கட்டுப்படாத சரக்கு.

அத்தியாவிரதவாதம் - உடம்பில் எலும்பின் பாகங்களில் வீக்கம் அல்லது கழலையைப் போல் காணும் வாத நோய்.

அத்தியிளக்கம் - எலும்பின் தாது மிருதுவாதல், எலும்பு மிருதுவாதல்.

அத்தியுதாரை - மரமஞ்சள்.

அத்திரசிகிச்சை - அம்பைப்போல் உடம்பினுட் குத்தி குத்தி மருந்தைப் புகட்டும் வைத்திய முறை; கத்தியால் அறுத்து வைத்தியம் செய்தல்.

அத்திரணம் - அதிவிடயம்.

அத்திரதம் - இஞ்சி.

அத்திரதாமம், அத்திரதாமரை - குளிர் தாமரை.

அத்திர தேலம் - ஆவியாய்ப் போகக்கூடிய தைலம்.

அத்திரத்துவம் - ஆவியாய்ப் போகல்.

அத்திரநீர் - கழுதை மூத்திரம்.

அத்திரப்பல் - குழந்தைகளுக்கு ஏழு மாதம் முதல் 36 மாதம் வரை முளைக்கும் 20 பற்கள், பாற்பல், குதிரைப்பல்.

அத்திரப்பால் - கழுதைப்பால், குதிரைப்பால்.

அத்திரம் - இஞ்சி, மரமஞ்சள், கற்கடகசிங்கி, கடுக்காய்ப்பூ, கழுதை, இலந்தை, கடுக்காய்,

குக்கில், குதிரை, மலையினுட்குகை.

அத்திர வக்கிதம் - தாமரைத்தாது.

அத்திரவசமை - கொடிப்பாகு.

அத்திரா - அரசு.

அத்திராதாளி - யானை.

அத்திரி - ஒட்டகம், கோவேறு கழுதை, மலை, மரம், குதிரை, உலைத்துருத்தி.

அத்திரிகா - சிறுசிமிட்டி.

அத்திரிகாரம், அத்திரிசாரம் - இரும்பு.

அத்திரிவியாக்கிரி - சிறுவழுதலை.

அத்திரு - அரசு, பொன்.

அத்திரோபம் - அழிஞ்சில்.

அத்திர் - குக்கிலம்.

அத்திலிங்கம் - அரிதாரம்.

அத்திலை - செருப்படை (செருப்படி).

அத்தில் - யானை நெருஞ்சில்.

அத்திவங்கம் - காரீயம்.

அத்திவிகாயம் - கருஞ்சீரகம்.

அத்திவிசாணிகா, அத்திவிசாணிகை - வாழை.

அத்தி வீரம் - சவ்வீரம், வீரம்.

அத்தி வெட்டை - எலும்பில் பாய்ந்த மேகச்சூடு.

அத்திவேர் - மயிர்க்கால், யானை மயிர்.

அத்திறாதாளி - யானை.

அத்தினி - பெண் யானை, காக்கை, வழலை, மூன்று அல்லது நான்கு மாதத்திய பிண்டக் கரு.

அத்தினுரை - கடல் நுரை.

அத்தின்வயிரம் - செம்புளிச்சை, செம்மணாத்திச் சிராய்.

அத்தீர் - குளிர்தாமரை.

அத்து - அழிஞ்சில், துவர்ப்பு, சிவப்பு, கடப்பம்பட்டை, காட்டத்தி.

அத்துகமணி, அத்துகமாணி, அத்துகமானி- அரசு.

அத்துகமேதி - சிறு சிலும்பான் (அறியப்படாதது)

அத்துகம் - ஆமணக்கு, அரத்தை.

அத்துகாமணக்கு - சிற்றாமணக்கு.

அத்துகோசகம் - சிறு சீரகம் (சீரகம்).

அத்துக்கிரம் - பெருங்காயம்.

அத்துக்கீரை - வெண்சிவதை.

அத்துசம் - மரமஞ்சள்.

அத்துதல் - அரத்தைப்பூடு, அப்புதல், பூசுதல்.

அத்துபாரம் - கையாந்தகரை.

அத்துமணி - அரசு.

அத்துமநீர் - அப்பம்.

அத்துமம் - அரத்தை.

அத்துமா - அரசு.

அத்துமாகசம் - சிறுசெந்தொட்டி.

அத்துமாசாரம் - உருக்கு.

அத்துமாணி - அரசு.
அத்துமாவி - அன்னம்.
அத்துமானி - அரசு.
அத்துராதி - வால்மிளகு.
அத்துருகம் - செம்மறியாடு.
அத்துலாக்கி, அத்துலாக்கியம், அத்துலாக்கினம் - கருஞ்சீரகம்.
அத்துலி - சிறுதெல்லு.
அத்துலோக்கி - கருஞ்சீரகம்.
அத்துவகபோக்கியம் - ஓர் மரம், மாம்புளிச்சை.
அத்துவகாயம், அத்துவகாய் - கருஞ்சீரகம்.
அத்துவசம் - ஓர் பூண்டு.
அத்துவசல்லியம் - நாயுருவி.
அத்துவசிரமம் - நடையினால் ஏற்பட்ட களைப்பு.
அத்துவமாசி - மணத்தக்காளி.
அத்துவம் - சிவப்பு.
அத்துவர்கயம் - கருஞ் சீரகம்.
அத்துவர்காயம் - சீரகம், கருஞ்சீரகம்.
அத்துவர்க்கயம் - கருஞ் சீரகம்.
அத்துவர்க்காய் - சீரகம்.
அத்துவாக்காயம்
அத்துவாக்கி - கருஞ்சீரகம்.
அத்துவாக்கியம் - கருஞ்சீரகம், சீரகம்.
அத்துவாஞ்சை - வெண்குன்றி, காக்கை.
அத்துவாந்தம் - காலை, மாலை, வெளிச்சம்.
அத்துவாய் - குயம் (தருப்பை), கருஞ்சீரகம், பிட்டு.
அத்துவாரகம் - கருஞ்சீரகம்.
அத்துளா சுண்ணம் - ஈரற் சுண்ணம்.
அத்தூரம் - மரமஞ்சள்.
அத்தெவி - சேகனைப்புல்.
அத்தை - கற்றாழை.
அத்தைதாளி - காட்டுப் பூவரசு.
அந்தகக்கல் - ஓர் உபரசச் சரக்கு.
அந்தக சன்னி - மூளைக்கு அதிர்ச்சியையுண்டாக்கிக் கண்ணைக் குருடாக்கும் ஓர்வகைச் சன்னி; பாடாணத்தினால் ஏற்படும் சன்னி.
அந்தக சன்னிபாத சுரம் - மிகுதியாகச் சுரம் காய்ந்து விக்கல், தாகம், சோர்வு, இரைப்பு, உப்பிசம், தலைநடுக்கம், மறதி, சன்னி முதலிய மூளைக் கோளாறுகளை உண்டாக்கும் சுர நோய்; மரணத்தை உண்டாக்கும் தன்மையுடையது.
அந்தகச்சாரம் - சவுட்டுப்பு.
அந்தகம் - ஓர்வகைச் சன்னி, ஆமணக்கு, சாலாங்க பாடாணம், அவுபல பாடாணம், தேவதாரம்.

அந்தகரணம் - கண்ணைக் குருடாக்கும் ஓர் இரணநோய்.

அந்தகரூபி - எலி, குருடன்.

அந்தகலை - சந்திரகலை.

அந்தகன் - சவர்க்காரம், வெள்ளாடு, புல்லூரிப் பூண்டு, காய்ச்சுவழலை, காசிச்சாரம், காகபாடாணம், திராய் (கசப்பான கீரை), வெள்ளி, சீர்பந்த பாடாணம்.

அந்தகாரம் - நெல்லி.

அந்தகை - கீழ்வயிற்றில் வலப்பக்கமாகப் பெருங்குடலின் துவக்கத்திலுள்ள பை; இது பெண்களின் கருப்பையின் கழுத்திற்குப் பின்னாக உள்ளது.

அந்தகோம், அந்தகோரகம், அந்த கோரம், அந்த கோலம், அந்தகோளம் - நெல்லி.

அந்தக்கணம் - குழந்தைகளுக்கு மூளையில் கனல் ஏறி அதனால் உடல் வெதும்பி நா உலர்ந்து, முகம் மஞ்சள் நிறமடைந்து காணும் ஒரு வகைக் கண்ணோய்.

அந்தக்கிருமி - உடம்பில் கிருமிகளால் ஏற்பட்ட ஒரு வகை நோய்.

அந்தசடம் - வயிறு, அடி வயிறு.

அந்த செயநீர் - வழலையுப்பு செயநீர்.

அந்தச் சுண்ணம் - வழலைச் சுண்ணம், முப்புச் சுண்ணம்.

அந்தச் சோபம் - புளிப்பு.

அந்தணநாபி - விடத்தன்மையைப் போக்கும் முதன்மையான மருந்து; வெண்ணாபி.

அந்தணன் - கடுக்காய்.

அந்ததம் - ஆகாயம், கஸ்தூரி.

அந்ததுருஷ்டி - சிவகரந்தை.

அந்தத்துவம் - குருடு.

அந்த மந்தம் - உறுப்புக்கேடு, செரியாத்தன்மை.

அந்தமலர்ந்தாரு - அத்திப் பூ.

அந்த முள் - குறிஞ்சா.

அந்த மூசிகம் - ஓர்வகைப்புல்.

அந்தம் - ஆமணக்கு, அவயவம், கெந்தியுரி பாடாணம், கஸ்தூரி பாடாணம், பச்சைக்கற்பூரம், நீர், சோறு, பிண்டம், கடுக்காய், பொன், சாவு, குருடு, எலும்பின் இறுதிப்பகுதி, தலைச்சன் குழந்தை மண்டையோட்டிலிருந்து செய்யப்படும் ஒருவித அண்டச்சுண்ணம்.

அந்தயெரு - வைத்தியமுப்பு.

அந்தரகும்பகம் - பிராணவாயுவை (உயிர்க்காற்றை)க்

குடலினுள்ளே தம்பிக்கச் செய்தல்.
அந்தரகெந்தன் - சூதபாடாணம்.
அந்தரக்கோன் - புல்லூரி.
அந்தரங்கக்கரப்பன் - கோசமலரின் தோலிற்கடியில் வட்டமாய்ச் சிவந்து எரிச்சலோடு கூடிய தழும்பு.
அந்தரங்கச் சொறி - மேகச் சூட்டினால் ஆண், பெண் இருவருக்கும் பிறப்புறுப்புகளில் சகிக்க முடியாத நமைச்சலோடு சிறிய வியர்க்குருக்கள் போல் காணும் ஒரு வகைச் சொறி.
அந்தரங்கத் தியானி - ஆமை.
அந்தரசமி - செரியாமை, வாயுவினால் வயிறு உப்பல்.
அந்தரசித்து, அந்தரச்சிந்து - கற்பாடாணம்.
அந்தரஞ்சனம் - கொடி மாதுளை.
அந்தரட்சி - உடம்பிலுள்ள துவாரங்களின் வழியாக விட்டுப் பரிசோதிக்கும் ஓர்விதக் கருவி.
அந்தரதம் - குடல் புழு.
அந்தரதாகம் - இறக்குங்காலை ஏற்படும் ஓயாத விடாய்; மேகவெட்டையின் தொடர்பால் அதிகமான தாகத்தை உண்டாக்கும் ஓர் நோய்.
அந்தரத்தாமரை - ஆகாயத் தாமரை.
அந்தரத்தேசரி - சிறுபசலை.
அந்தரபுட்பம் - பலாசு.
அந்தரமாமூலி, அந்தரமூலி - ஆகாயத் தாமரை.
அந்தரம் - ஆகாயம், புருவத்தினடு, இடுப்பு, அளவு.
அந்தரவசம் - கொட்டைப் பாசி.
அந்தரவசனம் - கொடிப் பாசி.
அந்தரவருணி - சிறு நெருஞ்சில்.
அந்தரவல்லி - கொல்லன் கோவை, கருடன் கிழங்கு.
அந்தரவனசம் - கொடிப்பாசி
அந்தரவாசம் - கொட்டைப்பாசி
அந்தரவாயு - குடல் வாயு, வாயுவினால் குடல் இறக்கம், ஆகாயத்தின் இடமாக உள்ள காற்று, இடுப்பிலேற்பட்ட வாயு நோய், அண்ட வாதம்.
அந்தரவாயுக்கிரகணி - குடலில் தங்கியவாயுவினால் உண்டவுடன் வயிறு இரைந்து பேதியாகித் தாகம், தளர்ச்சி

விலாவிசிவு, விக்கல் முதலிய குணங்களையுண்டாக்கும் ஒரு வகைக் கிரகணி.

அந்தரவிகூசனம் - வயிற் றிரைச்சல்.

அந்தரவிட்டை - குடலில் இறங்கி நிற்கும் மலம்.

அந்தரவிதனம் - ஓர் கண்ணோய்.

அந்தரவித்திரதி - உடம்பின் உள்ளுறுப்புகளில் (மூத்திரப்பை, ஈரல், இதயம், மண்ணீரல், மலப்பை ஆகிய) காணும் கழலையைப் போன்ற கட்டி.

அந்தரவிருத்தி - குடல் பருத்தல்.

அந்தராஞ்சம் - புயத்திற்கும் மார்பிற்கும் இடையேயுள்ள பாகம்.

அந்தராபதியை - சூல்கொண்ட பெண்.

அந்தராபத்தம் - சாப்பாட்டிற்கிடையே கொள்ளும் மருந்து.

அந்தராபத்தியை - கருப்பிணி.

அந்தராவாயு - புளித்தேக்கிட்டு உடம்பின் வலுவைக் குறைக்கு மோர் வாயு.

அந்தரோகம் - நெல்லி.

அந்தர்கதசுரம் - உட்சுரம்.

அந்தர்ச்சடரம் - இரைக்குடல்.

அந்தர்தாமரை - குளிர்தாமரை.

அந்தர்மலக்கிருமி - இனிப்புப் பொருட்களைச் சேர்த்தலினாலும் மலபந்தத்தினாலும் கபம், இரத்தம், மலம், சிறுநீர் இவைகளில் உண்டாகும் கீரிப்பூச்சி.

அந்தர் மிருதம் - பிறக்கும் போது இறந்தது.

அந்தர்வதி - கருப்பிணி.

அந்தர்வமி - வாயு, செரியாமை.

அந்தர்வித்திரதி - பெண்களுக்கு மாதவிடாய் தடைப்பட்டு அதனால் இரத்தம் கோளாறடைந்து கருப்பையிற் திரண்டு கறுத்த கொப்புளங்களாற் சூழப்பட்டு அழற்சி, வலி, சுரம் முதலியவைகளை யுண்டாக்கும் ஒரு சூதகநோய்.

அந்தர்வேகசுரம் - எலும்புக்குள்ளிருக்கும் மச்ச தாதுவைப்பற்றி ஏற்படும் ஒரு வகைச் சுரம்,

அந்தவும் - புல்லூரி.

அந்தளம் - புல்லுருவி.

அந்தனம் - கடுக்காய்.

அந்தனாதி - பழம்புளி.

அந்தன் - கடுக்காய், குருடன்.

அந்தாசி - விடமில்லாத பாம்பு, ஓர் மீன்.

அந்தாரப் பனை - தொட்டிப் பனை.
அந்தாலசி - முகம்விடாக்கட்டி.
அந்தி - மாலை, தில்லை மரம், இரவு, அந்திமந்தாரை, மணிபூரகம், குருடு, குருடாக்கல்.
அந்திகண்ணி - கரிசலாங்கண்ணி.
அந்திகா - ஒரு கண்ணோய்.
அந்திகாசம் - சாயுங்காலத்தில் கண் ஒளி மழுங்கும் ஒரு கண்ணோய்.
அந்திகாரம் - நெல்லி.
அந்திகால் - சுரப்புன்னை.
அந்திகுணம் - பெருங் காயம்.
அந்திகை - ஒரு கண்ணோய் குருடு, இரவு.
அந்திகோரம், அந்திக்கோர் - கோரோசனை, நெல்லி.
அந்திக் கோல் - அழிஞ்சில்.
அந்திசந்துவாதம் - அதிகமான வலியை யுண்டாக்கி மூட்டுகளைத் தாக்கும் ஒரு வாத நோய்; இது இரவு கண்டு விடிந்தவுடன் மாறும்.
அந்தித்தல் - பொருமுதல், அந்தி, பகல்.
அந்தித் தாமரை - ஆகாசத் தாமரை.
அந்தி பூதம் - குருடாதல்.
அந்திப் பீழை - சிறு பீளை.
அந்திப்புள் தோடம் - குழந்தைகளை மாலைப்பொழுதில் வெளியிற் கொண்டு செல்வதனால் தாக்கும் பட்சி தோடம்.
அந்திப் பூ - அந்தி மந்தாரை, அந்தி மல்லிகை.
அந்திமந்தாரம், அந்தி மந்தாரை - சாயுங்காலத்தில் பூக்கும் பூ, அந்தி மல்லிகை.
அந்தி மரித்தான் - சிறு பேய்க்கொம்மட்டி.
அந்தி மலரக்கம், அந்தி மலரி, அந்தி மலர்ந்தான், அந்தி மல்லி, அந்தி மல்லிகை - அந்தி மந்தாரம் (பத்திராட்சி) இருவாட்சி.
அந்தி மாலை - மாலையில் கண்ணொளியை மறைக்கும் ஒரு கண்ணோய்; கண்களுக்கு யாதொரு கெடுதியுமில்லாமலே கண்ணின் நரம்பு, தரிச நரம்பு இவைகளின் நிமித்தமாகப் பார்வையை மந்தமாக்கும்.
அந்தி மிரியம் - ஓர் மரம்.
அந்தியகமனம் - இறத்தல்.
அந்தியகாபிம் - முடிவுகாலம் (இறக்குங்காலம்).
அந்தியத்துகசுரம் - இறக்குங்காலத்துக் காணும் ஒரு அகோரக் காய்ச்சல்.

அந்தியந்த பித்தன் - இச்சி.

அந்திய பரணி - ஆயுர்வேதத்தில் பயன்படும் மூலிகை.

அந்தியம் - மரணம், மரணகாலம், ஓர் பூண்டு.

அந்தியவோடாலிகாகிரகம் - எட்டாம் நாளில், எட்டாம் மாதத்தில் அல்லது எட்டாம் வருடத்தில் தாயை அல்லது குழந்தையைத் தாக்கும் ஒரு வகைக் கிரகதோடம்.

அந்திரகாசம் - வானத்தில் சந்திரன் தோன்றும் போது கண்புகைச்சல் நீங்கியும் மற்ற காலத்தில் கண் சிவந்து பார்ப்பதற்குப் பயமாயும், நாட்பட்டால் அதிக இருளையும் கொடுக்கும் ஒரு வகைக் கண்ணோய்.

அந்திரகிராணி - குடல் கோளாறினால் ஏற்படும் கிராணிக் கழிச்சல்.

அந்திர கொடிச்சி - கந்தகம்.

அந்திரக் கண்மணி - நீலக்கல்.

அந்திர சுரம் - குடலுக்குத் தாபிதங் கண்டு அதனாலுண்டாகும் ஒருவகைக் கடினமான காய்ச்சல்.

அந்திரசுவனம் - கொட்டைப்பாக்கு.

அந்திரதாபிதம் - குடலின் அழற்சி.

அந்திரத்தாமரை - குளிர்த்தாமரை.

அந்திரத்தாரை - ஆகாசத்தாமரை.

அந்திரத்தூள் - ஒட்டடை.

அந்திரபாசி - உப்பு.

அந்திரபுரீதரம் - சிறுகுடலுக்கும் பெருங்குடலுக்கும் காணும் தாபிதம்.

அந்திரமுட்டி வாயு - குடல் முட்டி வாயு.

அந்திரம் - குடல், வயிற்றினுள் இரைப்பை ஒழிந்த மற்ற குடல் முதலானவை, சிறு குடல்.

அந்திரருகம் - குடல்வாதம்.

அந்திரலகுணம் - கொட்டைப்பாக்கு.

அந்திரலோகிதம் - சிறுபொடுதலை.

அந்திரவகம் - கொட்டைப்பாக்கு.

அந்திரவசம் - கொட்டைப்பாசி.

அந்திரவசனம் - கொட்டைப்பாக்கு (பச்சையாகக் காயவைத்த).

அந்திர வர்த்தமன் - குடல் விருத்தி.

அந்திரவல்லி - குளிர்த் தாமரை

அந்திரவனசம் - அந்திரவசனம்.

அந்திரவாசமனம் - கொட்டைப்பாக்கு.

அந்திரவாதம் - குடல்வாதம்.
அந்திர வாயு சூலை - குடலில் வாயு சேர்வதனால் ஏற்படும் குத்தல் நோய், சுரம் வரும்.
அந்திரவிரணம் - சிறுகுடலில் காணும் இரணநோய்.
அந்திர விருட்சம் - தேவதாரி.
அந்திரவிருத்தி - ஆண் குறித்தண்டிற்கு மேல்பாகமாகக் காணும் வீக்கம்; வாதத்தினால் சிறுகுடல் பலவீனப்பட்டு கீழிறங்கிக் காற்றுப்பை போல் பருத்துக் காணும் நோய்.
அந்தில் - வெண்கடுகு.
அந்திவசனம் - கொட்டைப்பாசி.
அந்திவாசம் - இருவாட்சி.
அந்திவிருட்சம் - தில்லைமரம்.
அந்தி வீருகம் - சிறு முள்ளங்கி.
அந்து - நெற்பூச்சி, நிலவண்டு.
அந்துதிம் - வாகை மரம்.
அந்துவாசம் - கொட்டைப்பாசி.
அந்தேசாதிகம், அந்தே சாதிம், அந்தேசாலம் - தேற்றா.
அந்தை மந்தை - மந்த குணம்.
அந்தோ - நெல்லி.
அந்தோசோலிகம் - சிறு எழுத்தாணிப் பூடு.
அந்தோட்டம் - உதட்டிலுண்டாகும் ஓர் இரண நோய்.
அந்தோர் - அந்தோ.
அந்நகத்தி - வயிற்றுளைவு.
அந்நகாரம் - கஞ்சி.
அந்நகோடகன் - சூரியன்.
அந்நாட்டெலும்பு - மாரெலும்பு.
அந்நிய புட்டம், அந்நியம் - குயில்.
அந்நியம் - சிறுகரும்பு.
அந்நியேத்துக வாதம் - உணவின் குற்றத்தினால் பிரமை, மூர்ச்சை, தாகம் முதலிய குணங்களையுண்டாக்கும் ஒருவாத நோய்.
அந்நீர் - நாரி சுக்கிலம், பழந்தண்ணீர்.
அந்நை - பழைய காலத்து நிறை.
அபகத வியாதியை - நோயினின்று நலமானவன்.
அபகமம் - மரணம்.
அபகரம் - வட்டத்துத்தி.
அபகனம் - அவயவம்.
அபகோலம் - அழிஞ்சில்.
அபக்குவம் - செரியாமை, பழுக்காமை.
அபங்கம் -கோளகபாடாணம்.

அபசகம் - சிற்றிலந்தை.
அபசவ்வியம் - இடது பக்கம்.
அபசாரம் - மரணம், பத்தியங் காக்காமை.
அபசி - அக்குள், ஆண்குறி, இடுப்பு ஆகிய இடங்களில் உண்டாகும் புற்றுநோய்; கண்டமாலை.
அபசி அம்பர் - கருப்பு நிறமான அம்பர்.
அபசிமை -சேராங்கொட்டை.
அபசுமாரக்கிரகம் -குழந்தைகளைத் தாக்கும் ஓர் வகைக் கிரகதோடம்.
அபசுமாரநோய் - பித்தம் அதிகமாகி உடல் முழுதும் பரவியதால் நரம்பைப் பற்றி, புத்தியைக் கலக்குமொரு நோய்; காக்கைவலி.
அபசுமாரம் -உறுப்பினுக்கேற்படும் அழிவு, மயக்கம் (நினைவிழந்த நிலை).
அபசுவாசம் - ஐந்துவித வாயுக்களில் ஒன்று; அபானன்.
அபச்சாயை - ஆள் நிழலில் ஏற்படும் விகாரங்கள், இது ஓர் மரணக்குறி.
அபச்சி - கண்டமாலை.
அபச்சுமாரம் - அபசுமார நோய்.
அபட்கை - பாம்பின்கீழ்வாய் நச்சுப் பற்களில் ஒன்று.
அபட்சியம் - புசிக்கத் தகாதது.
அபதந்திரகம் - வாயு ஆதிக்கத்தினால் மூளை தாக்கப்பட்டு , அதனால் ஏற்படும் இழுப்பு வலி.
அபதந்திரகவாதம் -வாயுவின் ஆதிக்கத்தினுடன் கபமும் இணைந்து நரம்புகளைப் பற்றி இழுத்து உடம்பை வளைக்கச் செய்யும் வாத நோய்.
அபதந்திரம் - அபதந்திரகம்.
அபதரோகிணி - ஓர் புல்லுருவி.
அபதர்ப்பணம் -பட்டினியாயிருத்தல்.
அபதா - கோரைக் கிழங்கு.
அபதாங்கம் - கருவைக் கலைத்தல் அல்லது கரு தானாக அழிதல் இன்ன பிற காரணங்களால் இரத்த ஒழுக்கு அதிகமாவதால் உண்டாகும் அதிர்ச்சி.
அபதானகம் - அனைத்து நோய்களிலும் காணும் இசிவு; வாயுவினால் நரம்புகள் தாக்கப்பட்டு அதனால் ஏற்படும் வலி; காக்கை வலியாற் காணும் இசிவு.
அபதானக வாதம் - உடம்பு, வாத ஆதிக்கத்தினால் கதித்து வாயு நரம்புகளில் பரவுவதால் திடீரென

எழுந்திருத்தல், நடத்தல், நகைத்தல் முதலிய தீய குணங்களைக் காட்டும் நோய்.

அபத்த சந்தம் - சாப்பாட்டில் விருப்பமின்மை, பசியின்மை.

அபத்தமுகம் - நாற்றவாய்.

அபத்தம்ப மர்மம் -சுவாச நாளக் கிளைகள் இரண்டுங் கூடுமிடம்.

அபத்தம்பம் - சுவாசநாளக் கிளை அதாவது மூச்சுக் குழாயின் பிரிவு.

அபத்தம்பினி - ஓர் பூண்டு.

அபத்தி சந்தம் - அபத்த சந்தம்.

அபத்திய சத்துரு - நண்டு.

அபத்தியதை - மருத்துவச்சி.

அபத்திய தோடம் - பத்திய கேட்டினால் உடம்பிற் கேற்படும் குற்றம்; எழுவகைத் தோடங்களுள் ஒன்று.

அபத்தியபதம் - பெண் பிறப்புறுப்பு.

அபத்தியம் - பத்தியத்தை மீறல்; இச்சாபத்தியம் மீறல்.

அபநயம் - பிணி தீர்த்தல், மரணம்.

அபந்தசம், அபந்தம், அபந்தலம், அபந்தல் -செங்கத்தாரி.

அபந்துகம் - அன்னம்.

அபப்பிரசாதை - வயிற்றில் கருவை அழித்த பெண்.

அபமட்டர் - வட்டத்திருப்பி.

அபமரணம் - அகால மரணம், துன் மரணம்.

அபமாதகம் - நாயுருவி, தசவாயுவில் ஒன்று.

அபமாரகம் - நாயுருவி.

அபமார்க்கம் -நாயுருவிச்சமூலம்.

அபமார்க்கி - செந்நாயுருவி.

அபமார்க்கிதம் - நாயுருவி, தசவாயுவிலொன்று.

அபம்பாதி - வசம்பு.

அபயம் - செவ்வியம், ஓர் வாசனைப்புல்.

அபயலை - விலாமிச்சம்வேர்.

அபயன் - எலும்பு பற்றிய நோயைப் போக்கும் கருப்பு நிறமான ஓர்வகைக் கடுக்காய்; இது பொதிகை மலையில் உற்பத்தியாகிறது.

அபயை - கடுக்காய், ஓமம், வெட்டிவேர்.

அபரங்கப்பருப்பு - உளுந்து.

அபரங்கிரிகை -கற்கடகசிங்கி.

அபரஞ்சி - கம்மாறு வெற்றிலை, பொன்.

அபரணம் - கடுக்காய்.

அபரதரன், அபரதன்- வெடியுப்பு.

அபரமார்க்கம் - வெண்ணா யுருவி, நாயுருவி.

அபரம் - முதுகு, யானையின் பின் கால், பின்பக்கம்.

அபரராத்திரம் - கடைச்சாமம்.
அபரவங்கம் - பின்னிசிவு; உடம்பை வில்லைப் போல் பின்புறமாக வளைக்கும் ஓர் வாதநோய்.
அபரா - நஞ்சுக்கொடி.
அபராங்கம் - உடம்பின் பின்புறம்.
அபராசி, அபராசிதம் -விட்டுணுகிராந்தி.
அபராத்திரம் - அபரராத்திரம்.
அபரிசகுட்டம் - கிரந்தியைப் போல் உடம்பு முழுதும் வீங்கி வெடித்து கறுப்பு இரத்தம் வடிந்து தொடக்கூடாதபடி வலியை உண்டாக்கும் குட்டம்.
அபரிபூதம் - திமிங்கிலம்.
அபரோக்ஷை -பெருஞ்சார்வேளை.
அபலம் - திமிங்கிலம், ஆற்றலரி, சோற்றுக் கற்றாழை, ஓர் பூண்டு.
அபலை - பருத்தி, தாளிப்பனை.
அபல் - சிலேத்துமம்.
அபல்முசுக்கு - கத்தூரி வெண்டை.
அபல்லியம் - நோய்.
அபவம் - திமிங்கிலம்.
அபவனம் - காற்றில்லா இடம்.
அபவாரணம் - மரணம்.
அபளமார்க்கம் - நாயுருவி.
அபனாதி - நிலத்துளசி.
அபாகசாகம் - இஞ்சி.
அபாகம் - செரியாக்குணம்.
அபாகிநோய் - உடலில் கொப்புளங்கள் பலவற்றை எழுப்பி அதிகநாள் அவை இறங்காமல் துன்பப் படுத்தும் ஒரு நோய்.
அபாங்கம் - கடைக்கண்.
அபாடவம் - நோய்.
அபாதரன் - வெடியுப்பு.
அபாதிரி - வில்வம்.
அபாபம் - மரணம்.
அபாமாருதமூலி, அபாமாருதம் -வெண்ணாயுருவி.
அபாமார்க்கசாரம் -நாயுருவிச்சத்து அல்லது சாம்பல்.
அபாமார்க்கம் - நாயுருவிச்ச மூலம், வெண்ணாயுருவி.
அபாரசிதை - வெண் காக்கட்டான், வெள்ளைவிட்டுணு கரந்தை, செம்பை.
அபாரணகாலம் -உண்ணத்தகாத வேளை.
அபாலங்கம் - கொன்றை.
அபாவம் - கடுக்காய்.
அபானக்கடுப்பு - மலவாய் கடுத்தல்.
அபான சுத்தி - வஸ்திச் சிகிச்சை; மலவாயிலைச் சுத்தி செய்தல்.
அபானமால் - அபானவாயு.

அபானம் - கடுக்காய், மூலாதாரம்.

அபானவாயு - பத்து வாயுக்களில் ஒன்றாகிய கீழ்நோக்கிச் செல்லும் வாயு.

அபானவாயுக் கெரிச்சான் -புகையிலை.

அபானவித்திரிதி - குதத்தில் எழும்பி மிக்க வலியை யுண்டாக்கும் கட்டி.

அபானவிப்புருதி - குதத்தில் எழும்பும் ஓர் வகைச் சிலந்தி.

அபானவேர் - மூலமுளை.

அபானனம் - கடுக்காய்.

அபானன், அபானோத்காரம் - அபானவாயு.

அபான்மை - தசவாயுக்களி லொன்று.

அபிகண்டகை - தேவதாரி.

அபிகாச சேத்துமம் - இருமல், இளைப்பு, ஈளை உண்டாகி, வயிறு மந்தித்து உடல் வற்றி உருவழிந்து பலத்தைக் குறைக்கும் நோய்.

அபிகாதசம் - அடியால், காயத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி.

அபிகாத சுரம் - காயம், இரணம், நெருப்பிடைவேலை, பனியில் திரிதல், அதிக நடை, உழைப்பு இவற்றால் ஏற்படுங் காய்ச்சல்.

அபிகாதசூலை - கல் போன்றவற்றால் செவியில் அடியேற்பட்ட போது இரத்தம், சீழ் சேர்ந்து குத்தலை உண்டாக்கும் காது நோய்.

அபிகாத சோபை - இரசகெந்த பாடாணம், சேராங் கொட்டை முதலியவற்றால் உண்டாகும் சோபை; ஆயுத காயத்தினால் இரத்த ஒழுக்கு ஏற்பட்டு அதனால் உண்டாகும் சோபை.

அபிகாதம் - வெடிப்பு, பிளவு, கருப்பைச் சுருக்கம், பறவைகளுக்கு ஏற்படும் சுரம், காயமுண்டாக்கல், அதிக உழைப்பு, வேதனை.

அபிகாதவாதம் - அதிகநடை, அதிக உழைப்பு போன்ற உடலுக்கு வருத்தம் தரக்கூடிய செய்கைகளால் நரம்புகளுக்கு அசதியை ஏற்படுத்தும் வாதநோய்.

அபிகாயம் - ஓர் கொடிய காசநோய், உள்ளழற்சி.

அபிசங்க சுரம் - விடம், காமம், ஔடதம், கோபம், துக்கம் போன்ற காரணங்களால் செயற்கையாய் உண்டாகும் காய்ச்சல்.

அபிசயந்தி போசனம் - உடலைப் பருமனாக்கும்

தயிர் போன்றவை.
அபிசவம் - புளிப்பேறிய கஞ்சி.
அபிசிதமூலம் - உருளைக் கிழங்கு.
அபிசிந்தி - மாசிப்பத்திரி.
அபிசியந்தம் - வாயுவினால் ஏற்படும் கண்ணோய்.
அபிசுதம் - கஞ்சி.
அபிடியந்தம் - கண்ணின் பலக்குறைவு.
அபிட்டதம் - புளி,காடி.
அபிட்டம் - இரசம்.
அபிஷதம், அபிதம் - ஔடதம்.
அபிஷபுச்சகம் - மரக்காரை.
அபிஷிமை - சேராங்கொட்டை.
அபிஷியந்தி - நாளங்களில் பிசுபிசுப்பையும் அதனால் கை கால் கனதியை உண்டாக்கும் சிலேட்டுமம்; நீர் கசியச் செய்தல்.
அபிஷோரா - பொட்டிலுப்பினால் சில்லிட்ட குடி நீர்.
அபிஷோலா - சர்பத்தினால் சில்லிட்ட குடிநீர்.
அபிநாகிதம் - தேற்றான் கொட்டை.
அபிநாசசன்னி - அதிகமாகச் சுரங்காய்ந்து பசியின்மை, முகபளபளப்பு, உடம்பு வலி, மேற்சுவாசம், பலவீனம், ஐம்புலன்களின் தன்மைக் குறைவு, மயங்கியதூக்கம், அறிவின்மை முதலிய குணங்களைக் காட்டும் ஓர்வகைச் சன்னிபாத சுரம்.
அபிநீலம் - மிகக்கறுப்பு.
அபிபிங்கலம் - மிகச்சிவப்பு.
அபிபேயம் - கள்.
அபிமந்தம் - கண்ணோய்.
அபிமானங்கார்த்தான் -பருத்தி.
அபிரங்கி - கருநெல்லி, நீர்ப்பூலா.
அபிராமஞ்சி - சடாமாஞ்சில்.
அபிராமிமூலி - சாறுவளை.
அபிரேகம், அபிரேக்கு -கண்ணாடியைப் போன்ற ஒரு தாதுப் பொருள்.
அபிற்சாந்து - பூஞ்சாந்து.
அபிற்சீரம் - சிற்றீஞ்சு.
அபினி - கசகசாப்பால், ஓர் மருந்து.
அபினிச்சாராயம் - 'பங்கி' என்று சொல்லப்பட்ட ஓர் வகை மதுபானம்; இது கசகசாவினின்று தயாரிக்கப்படும்.
அபினித் தைலம் - அபினிச் சத்தினின்று தயாரிக்கும் தைலம்; வாதநோய், வாதப்பிடிப்பு முதலான வலியுள்ள நோய்களுக்கு மேற்பூச்சு மருந்தாகப் பயன்படும்.
அபினிப்பாகு -கசகசாத்தோல், சாராயம், சர்க்கரை ஆகிய

இவைகளை வெந்நீரில் கலக்கிக் கொதிக்க வைத்துப் பாகு பதமாய் இறக்கிய ஒரு மருந்துப்பாகு.

அபினியுப்பு - அபினியினின்று எடுக்கப்படும் உப்புச் சத்துக்கள்.

அபினிரஞ்சம் - அபினியைச் சாராயத்தில் கரைத்துப் புளிக்க வைத்து வடித்த ஓர் திரவச் சத்து.

அபினிலேகியம் -கபாடலேகியம்; மலத்தைக்கட்ட குழந்தைகளுக்குத் தருவது.

அபினி வைப்பு - கடுகு, கசகசா, கஞ்சா, மராட்டிமொக்கு முதலிய சரக்குகளைக் கொண்டு தயாரித்து அபினிக்குப் போலியாக விற்கும் போலி அபினி.

அபின் - அபினி, ஒரு மருந்து.

அபீசனம் - நோயற்றதன்மை.

அபீசு - கைவிரல்கள்.

அபீடனம் - அபீசனம்.

அபீரு - தண்ணீர் விட்டான்.

அபுசு - துடரி.

அபுடம் - கோரைக் கிழங்கு.

அபுட்பபலம் - பூவாது காய்க்கும் மரங்களான பலா, அத்தி.

அபுஷ்பம் - அகத்தி.

அபுழை - வெள்ளைக்கொடி.

அபூரணி - பட்டுப்பருத்தி.

அபேகிவாதம் - முதியார் கூந்தல்.

அபேசனம் - பருத்தி.

அபேனம் - ✱தார்காந்தம், நுரையின்மை, அபினிச் செடி.

அபையம் - செவியம், கடுக்காய்.

அபையனம் - கடுக்காய்.

அபையன் - 7 விதக் கடுக்காய்களில் ஒன்று; கறுப்பு நிறமாய் இருக்கும் இது சிறந்தது; செவியம்; விலாமிச்சு.

அபோசம் - பருத்தி.

அபோதகம் -கொத்துப்பசலை.

அப்சந்தீன் - இரைப்பை, நுரையீரல், ஈரல் இவைகளுக்கு வலிவை உண்டாக்கும்; பெண்களின் உதிரச்சிக்கலைப் போக்கும் ஓர் மூலிகை.

அப்திபேனம் - கடல்நுரை, மீன் எலும்பு.

அப்தி மண்டூகி - முத்துச் சிப்பி.

அப்திமுன் - ஓர் கடைச்சரக்கு (கொடி வகை).

அப்பகம் - வட்டத் திருப்பி.

அப்பகாசம் - சீமைச் சோம்பு.

அப்பக்கொடி - அப்பைக் கொடி.

அப்பக்கொவ்வை மூலம் -சரக்கோவைக் கிழங்கு.

அப்படம் - இரதம்.
அப்படா, அப்பட்டம், அப்பட்டரி, அப்பட்டர், அப்பட்டவர் - வட்டத் திருப்பி.
அப்பட்டா - வட்டத்திருப்பி, பொன் முசுட்டை.
அப்பட்டான் - வட்டத் திருப்பி.
அப்பட்டை - சர்க்கரை.
அப்பம் - புட்டுத் திருப்பி, வட்டத் திருப்பி, சிற்றுண்டி.
அப்பயத்துட ராகம் - எட்டிமரம்.
அப்பரகம் - வாலுளுவை.
அப்பரியந்தம் - ஓதிய மரம்.
அப்பர் - ஆண் குரங்கு, ஆடு.
அப்பளகோரம் - எவாச்சாரம்.
அப்பளக்காரம் - சவுக்காரம்.
அப்பள் - கடம்பமரம்.
அப்பறாத்தூணி -சரகண்டபாடாணம்.
அப்பனார் சரீரம் - உடல்.
அப்பன் - கடப்ப மரம்.
அப்பாகம் - வாலுளுவை.
அப்பாரகம் - புளிமா.
அப்பிகு - பீதரோகணி.
அப்பிடி - சீனிச் சர்க்கரை.
அப்பியங்கம் - உடம்பு முழுதும் எண்ணெயைப் பூசி ஒரே நீரால் குளித்தல்.
அப்பியங்கன் - நல்லெண்ணெய்.
அப்பியசம் - தாமரை, வெண்டாமரை.
அப்பியமேகம் - ஓர் வகை மூத்திர நோய்.
அப்பிரகக்கிண்ணி - அப்பிரகத்தை உருகும்படிச் செய்து அதை வார்த்தெடுத்த ஓர் வகைப் பாத்திரம். இதைச் சித்தர்கள் உண்கலமாகவும், இரசத்தைக் கட்டவும் உபயோகிப்பார்கள்.
அப்பிரகச் சத்து - அப்பிரகத்தினின்று தயாரித்த ஓர் வகைச் சத்து. இது இரசத்தைக் கட்டும்.
அப்பிரகச் செந்தூரம் -அப்பிரகத்தை முறையாகச் சுத்தி செய்து அதைப் புடத்திலிட்டெடுக்கும் ஓர் வகைச் செந்தூரம்.
அப்பிரகத் தகடு - அப்பிரகச் செதில், அப்பிரகத்தை உருக்கி அதனின்று தயாரிக்கும் தகடு.
அப்பிரக நவநீதம் - அப்பிரக வெண்ணெய், அதாவது அப்பிரகத்தை மற்ற சரக்குகளோடு சேர்த்து வெண்ணெயைப் போல் செய்யப்படும் ஓர்வித மருந்து.
அப்பிரக பற்பம் - அப்பிரகத்தைப் புடத்தி லிட்டுத் தயார் செய்து நீரிழிவு முதலிய நோய்களுக்குக்

கொடுக்கும் மருந்து.
அப்பிரகப் பாடாணம் -விளைவுப் பாடாணம் 32ல் ஒன்று; இரசப்பிரீதி, இரசமாதா என்பன இதன் வேறு பெயர்கள்.
அப்பிரகமணல் -பூமியினின்று வெட்டி எடுக்கப்படும் அப்பிரகமும் மணலுங் கூடிய ஒரு தாது; கருமணல்.
அப்பிரகம் - காக்கைப் பொன், கண்ணாடியைப் போன்ற ஓர் தாதுப் பொருள், ஓர் வகை உலோகக்கல், இதனைப் பூவிந்து நாதம், மனோன்மணி நாதம், மகாவிந்து, மகாப்பிரகாசத்தி, கேசரம், அம்பரை நாதம் என்பர்.
அப்பிரகிருட்டம் - காக்கை.
அப்பிரசம் - மலடு.
அப்பிரதம் - காக்காய்ப் பொன், நிமிளை.
அப்பிரதிப்பழம் - பேரீந்து.
அப்பிரபஞ்சம் - எலிப்பயறு.
அப்பிரபடலம் - அப்பிரகம்.
அப்பிரபுட்பம் - மழை, மழைநீர்.
அப்பிரம் - பொன், அப்பிரகம்.
அப்பிரியதரு, அப்பிரியம், அப்பிரியா - ஒதிய மரம்.
அப்பிரு - சர்க்கரை.
அப்பிரேகம் - அப்பிரகம்.
அப்பிருகம் - அப்பிரகப் பாடாணம்.
அப்பில் - எலுமிச்சை.
அப்பீரகம் - புளிமா.
அப்பீரா - சீமையத்தி.
அப்பு - பாதிரி மரம் அல்லது பூம்பாதிரி, வங்கம், கடல், தண்ணீர், தொடை, எலுமிச்சை, மூங்கில், பனிக்குடத்து நீர்.
அப்புக்காய் - ஓர்விதக் காய்.
அப்புக்குட்டி - ஓர் வகைக் கடல் மீன்.
அப்புக்கோவை - அப்பைக் கோவை.
அப்புசம் - தாமரை.
அப்புண்டம் - தகரை.
அப்புத்திரட்டி - கட்டுக் கொடி.
அப்புநீர் - கடல்நீர்.
அப்புநீறு - கடலுப்பு.
அப்புப்பு - சோற்றுப்பு.
அப்புரா - பாதிரி.
அப்புருவம் - உப்பு நவாச்சாரம்.
அப்புலண்டம் - தகரை.
அப்புலோகிதம் - சீமையிலந்தை.
அப்புவின் கோபம் - சிலேட்டுமம்.
அப்புவின் ரசம் - உப்பு.
அப்புவுப்பு செயநீர் - பிண்டவுப்பு செயநீர்.
அப்புளண்டம் - தகரைச் செடி.

அப்புளண்டா - தகரை, விறகு.
அப்புளபம் - தகரை.
அப்புளாகாசம் - வேரில்லாக் கொத்தான்.
அப்புள்ளாடம் - தகரை.
அப்புறத்தை ஓட்டிவைத்தான் - காசுக்கட்டி.
அப்புறாத்தூணி - அப்பறாத்தூணி.
அப்பை - கொன்றை, ஓர் சிறு கடல் மீன், சரக்கொன்றை, கற்கோவை, கொவ்வை, வெருகன் கிழங்கு, அப்பைக் கோவை.
அப்பைக்காய் - கொவ்வைக்காய்.
அப்பைக் கிழங்கு - அப்பைக் கோவைக் கிழங்கு.
அப்பைக் கொடி, அப்பைக் கொவ்வை, அப்பைக் கோவை - ஓர் வகைக் கோவைக் கொடி.
அப்பைச் சுருக்கி - சிறுகீரை.
அப்பைச் சேவகம் - சீமை ஆமணக்கு.
அப்பைத் திரட்டி - அப்புத்திரட்டி.
அப்பை மாரிசம் - செங்கத்திரி.
அப்ரகம் - மிளகு.
அம - தண்ணீர்.
அமகண்டகம் - ஓமம்.
அமங்கலம் - ஆமணக்கு.
அமங்குரம் - தளிர்.
அமசுதபலை - வாழை.
அமச்சம் - கடகரோகிணி.
அமடிவாடிகம் - ஓர் வெற்றிலை.
அமட்டம் - வட்டத்திருப்பி.
அமட்டி - கொட்டிக் கிழங்கு.
அமணம் - ஆமணக்கு.
அமண்டம், அமண்டலம் -ஆமணக்கு.
அமண்டலாதி - செங்கடம்பு.
அமதம் - சித்திர பாடாணம், நோய், இறப்பு.
அமத்திரம் - வெண்கலம்.
அமந்தம் - நாட்டு வாதுமை மரம்.
அமந்தலம் - செங்கத்தாரி.
அமந்தாசிகம் - சுருள்பட்டை.
அமந்தி - அமந்தம்.
அமம் - நோய்.
அமரகண்டம் - ஓர் வகை வலிப்பு நோய்; உடம்புவலி, மூர்ச்சையாதல், அசைவறக் கிடத்தல், வியர்வை, பல்லை இளித்தல் முதலிய குணங்களைக் காட்டும் ஓர் வலிப்பு நோய். (குதிரை வலி)
அமர கிச்சிலி - மஞ்சள் கிச்சிலி.
அமரகுணர் - கடுக்காய்ப்பூ.
அமரசயம் - இரைக்குடல்.
அமரசிலை - ஓர்வகைக் கெந்தகம், ஓர் வகை வைப்புப் பாடாணம்.

அமரசிலைக் கெந்தகம், அமரசிலைக் கெந்தம் -ஒரு பாடாணம்; வைப்புப் பாடாணம் 32ல் ஒன்று.

அமரதாரு - தேட்கொடுக்கி, தேவதாரு.

அமரபில்லம் - கண்ணிமையில் இரத்தம் போல் சிவந்து தசை தடித்துப் பீளைகட்டும்; கீழிமை ஒட்டிக் கொண்டு கண்ணொளி மயங்கி நீர் வடியும் ஓர் கண்ணோய்.

அமரபுட்பி - ஒரு விதச்செடி.

அமரபுட்பிகம் - ஓர்வகைப் பெருஞ்சீரகம்.

அமரம் - இரசம்; பொன்; வெண்மை; கண்களின் இமைத் தோலில் குருக்களைப் போன்றெழுப்பி அப்பாகத்தை உருவழியச் செய்யும் ஒரு கண்ணோய்; பலவிதப் பூண்டுகளின் பெயர்; நஞ்சுக் கொடி; ஓர் செடி, ஓர் மரம்.

அமரம்பால் - சுத்தமானபால் (பனங்கள்ளு).

அமரம் பிரிதற்கண் - ஓர் வகைக் கண்ணோய்.

அமரர் வணங்கும் கன்னி -இந்திரபாடாணம்.

அமரவல்லரி, அமரவல்லி -கொத்தான்.

அமராகிதம் - செங்கருங்காலி.

அமராசயம் - கருப்பை, வயிறு.

அமராஞ்சனம் - சந்தனம்.

அமராவம் - நாயுருவி.

அமரி - கற்றாழை, அமிழ்து, விடம், பேய்ப்புல், காய கற்பம், மருந்து, சிறுநீர்.

அமரிகம் - நெல்லி.

அமரிகோள் - கற்கடகசிங்கி.

அமரிதம் - கடுக்காய்.

அமரிதாவிகம் -செங்கரிப்பான் (சிகப்புக் கரிசாலை).

அமரிப்பூகம் - செங்கரந்தை.

அமரிமருந்து - மூத்திரம்.

அமரியம் - குருந்த மரம், செண்பகப்பூ.

அமரியுப்பு - சிறுநீரினின்று எடுக்கும் உப்பு; சுண்ணத்தினின்று நீரை விடுக்கும் ஓர் உப்பு.

அமரேருகம் - தாமரை.

அமரை - அறுகு, கருப்பை, கொப்பூழ் கொடி, சிறு செவ்வந்தி, வள்ளை.

அமர்குணர் - கடுக்காய்ப்பூ.

அமர்குண்டகம் - கடுக்காய்.

அமர்க்கம் - எருக்கு.

அமர்க்குகை, அமர்க்குரா -கடுக்காய்ப்பூ.

அமர்க்கோளி - கற்கடகசிங்கி.

அமர்தாளி - தேவதாளி.

அமலகமலம் - கோசலம், (கோமயம்), கொட்டைப்பாசி.

அமலகம் - நெல்லி, பித்தத்தால் ஏற்படும் வாய்ப்புளிப்பு, வயிற்றுப் புளிப்பு, புளியாரை, புளியமரம்.

அமலகாண்டம் - ஓர் பூண்டு.

அமலகேசரம் - நாரத்தை மரம்.

அமலக்கம் - நெல்லிக்காய்.

அமல சம்பீரம் - எலுமிச்சை மரம்.

அமலசாகம் - ஓர்செடி, புளியாரை.

அமலசாந்தம் - சுண்ணாம்பு, பசுவின் சாணம்.

அமலசாரம் - எலுமிச்சை, ஓர்வகை ஆரைச் செடி, வடித்தகஞ்சிக் காடி.

அமலசுக்கிரம், அமலசூடம் -ஓர் விளாரிச் செடி.

அமலதித்த கஷாயம் -துவர்ப்பு, கைப்பு, புளிப்பு இவைகள் சேர்ந்த குடிநீர்.

அமல நாயகம் - புளியாரை.

அமலநிசா - கிச்சிலிக் கிழங்கு.

அமலநிம்பூரம் - எலுமிச்சை.

அமலந்தை - புளிப்பு.

அமலபத்திரை - புளியாரை முதலிய பூண்டுகள்.

அமலபலம் - புளியமரம்.

அமலபனசம் - ஈரப்பலா.

அமலபித்தம் - வயிற்றுப் புளிப்பு, புளிப்பித்தம், நெஞ்செரிவு, குலையெரிவு.

அமலபேதனம் - ஓர்வகை ஆரைச் செடி.

அமலமேகம் - மூத்திரம் புளித்தலாகிய ஒரு மூத்திரநோய்.

அமலம் - மரமஞ்சள், செவ்வள்ளி, அரிநெல்லி, நெல்லி மரம், நஞ்சுக் கொடி, அப்பிரகம், புளியாரை, புளித்ததயிர், வெண்மை, ஓர் பூண்டு, புளிப்பு.

அமலருகம் - ஓர் வித வெற்றிலை.

அமலர் - நெல்லிமுள்ளி.

அமலலோனி, அமலலோனிகம் - புளியாரைச் செடி.

அமலவடகம் - நெல்லிக்காய் வடகம்.

அமலவரித்திரா - கிச்சிலிக் கிழங்கு.

அமரவர்க்கம் - நாரத்தை, கிச்சிலி முதலிய புளிப்பான இலைகளை உடைய மரம்.

அமலவல்லி - ஓர் செடி.

அமலவாடகம் - புளிமா.

அமலவாடிகம் - ஓர் வகை வெற்றிலை.

அமலவிருட்சம் - புளியமரம்.

அமலவேதசம் - ஓர்வகை ஆரைச் செடி, காடி.

அமலன் - கடுக்காய்.

அமலா - நெல்லி முள்ளி அல்லது நெல்லி வற்றல்.

அமலாங்குசம் - ஒரு செடி.
அமலாதியுசிதம் - புளித்த உணவு அல்லது புளித்த மாங்காயைப் புசித்தலினால் ஏற்படும் கண்ணோய்.
அமலிகம் - வயிற்றுப் புளிப்பு, புளியாரை.
அமலை - கடுக்காய், நெல்லி, கொப்பூழ்க் கொடி, சோறு, சோற்றுருண்டைக் கட்டி.
அமலைகடுவி - காணம்.
அமலோத்கரம் - எதிர்க்களித்தல்.
அமளிதம் - தீவதாட்சி (அறியப்படாத ஒரு பழம்)
அமளி முருங்கை - தவசு முருங்கை.
அமளை - கடுகுரோகிணி, ஒரு செடி, கடுக்காய்.
அமளோகிதம் - செங்கீரைத் தண்டு.
அமறகுணர் - கடுக்காய்ப்பூ.
அமனாகனம் - கோதுமை.
அமனிதம் - புளியாரை.
அமனைக்கன்னி - காணம்.
அமாகளம் - அபினி.
அமாசயம் - வயிறு.
அமார்க்கம் - நாயுருவி.
அமாவாசை கண்டம் - அமாவாசையன்று நோயாளிக்கு மிகுந்து காணும் மரணத்திற்கான ஆபத்து நிலைமை.
அமானி, அமானை - புளியாரை.
அமிசபிதம் - தோளெலும்பின் கவை.
அமிசுகம் - இலை.
அமிதம் - தாரபாந்தம், சவுராட்டிர பாடாணம், நெய்.
அமிரடி, அமிரம் - மிளகு.
அமிராகிதம் - செங்கருங்காலி.
அமிரிதம் - கடுக்காய்.
அமிரிநாளம் - வெட்டிவேர்.
அமிரியம் - குருந்து.
அமிருதை - திப்பிலி, மது, துளசி.
அமிர் - மிளகு.
அமிர்த கடுக்காய் - சதை மருந்துள்ள 32 வித கடுக்காய்களில் ஒன்று.
அமிர்தகரணன் - கருடன்.
அமிர்தகல்பம் - அமிர்தத்திற்கு ஒப்பான கடுக்காய், அல்லது நெல்லிக்காய்.
அமிர்தகிரணன் - சந்திரன்.
அமிர்தகுமரி - சீந்திற்கொடி, கற்றாழை முதலிய மூலிகைகளினால் செய்யும் ஓர் வகைத் தைலம்.
அமிர்தக் கொடி - சீந்திற்கொடி.
அமிர்த சஞ்சீவி - சீந்தில் சர்க்கரை, பூநாகம், உயிர்தரு மூலிகை.
அமிர்த சஞ்சீவினி - உயிர்தரு மருந்து; கடுக்காய்.

அமிர்த சம்பவம், அமிர்த சர்க்கரை - சீந்திற் சர்க்கரை, சீந்திற்கொடியினின்று எடுக்கப்படும் வெண்மையான உப்பு; இது மண்ணீரல் வலிமைக்கும் மெலிந்த உடலைப் பலப்படுத்தவும் பயன்படும்.

அமிர்த சாமரம் - சிவப்புச் சிற்றகத்தி.

அமிர்த சாரம் - கற்கண்டு, வெண்ணெய், பாலின் சத்து.

அமிர்தசித்தி - கடுக்காய்.

அமிர்த சுரோணிதம் - இந்திரகோபப்பூச்சி.

அமிர்தசை - நெல்லி.

அமிர்தசோதரம் - குதிரை.

அமிர்ததலைச்சி - சீந்தில்.

அமிர்த தொப்பூதம் - வெண்காயம்.

அமிர்தத்துருமம் - கோங்கு.

அமிர்த பலம் - நெல்லிக்காய்.

அமிர்த பலா - கொய்யா.

அமிர்தபலை - ஓர் மரம், ஓர் பூண்டு, எலுமிச்சை, கடுக்காய், நெல்லிக்காய்.

அமிர்த பழம் - நீலகிரிப் பழம்.

அமிர்தப் பால் - தாய்ப்பால்.

அமிர்தமா - கடுக்காய், திரிபலை.

அமிர்த மூடிய விடம், அமிர்த மூடுமிடம் - மாச்சுக்கு.

அமிர்தம் - இனிப்பு, மூர்ச்சை தீர்த்துயிர்தரு மருந்து, விடந்தீர்க்கும் மருந்து, தேன், ஓர் பூண்டு, நீர், உணவு, அமுரி, சீந்தில், பொன், நெய், மிளகு, முலைப்பால், அமுதம், வெண்ணெய், கடுக்காய், அமிர்தபீஜம், சோறு (பரிபாஷை), வெள்ளைப் பாடாணம், சாராயம், ஓர் பூண்டின் வேர், சிவப்பாமணக்கு, இரசம், சுக்கிலம்.

அமிர்தரசம் - நீலகிரிப் பழத்தினின்று சாறு எடுத்துப் புளிக்க வைத்த ரசம்.

அமிர்தவடிகம், அமிர்தவல்லி - சீந்தில்.

அமிர்தவள்ளி - சர்க்கரை வள்ளிக் கிழங்கு.

அமிர்தவிந்து - வாலைரசம்.

அமிர்தவுப்பு - சீந்திலுப்பு.

அமிர்தா - சீந்தில்.

அமிர்தாதிச் சூரணம் - சீந்திற் சூரணம்.

அமிர்தாமலகம் - அமிர்தா.

அமிர்து - அன்னம், பால்.

அமிர்தை - நெல்லி, வெள்ளைப் பூண்டு, கள், திப்பிலி, சீந்தில், அமிர்த கடுக்காய், துளசி, இரசாஞ்சனம், திரவிக் கடுக்காய்.

அமிர்தையுப்பு - வளையலுப்பு.

அமிர்த்ததம் - கடுக்காய், திப்பிலி.
அமிலகம் - காடி.
அமிலகரம் - பிராணவாயு.
அமிலதீகரணம் - பிராணவாயுவைக் கலக்கச் செய்யல்.
அமிலப்பிரதிகாரம் - புளிப்பெதிர்க்கை.
அமிழ்தக் கொடி - அமிர்தக் கொடி.
அமிழ்து - மருந்து, பால்.
அமீதுரம் - செம்மறிக்கடா.
அமுகம் - அமுதம்.
அமுகாரி - பூனைக்காலி.
அமுகு - பால்சோறு, பால், மருந்து.
அமுக்கடிகாசம் - மந்தாரகாசம்.
அமுக்கனங் கிழங்கு - அமுக்கிலாங் கிழங்கு.
அமுக்காலி - பூனைக்காலி.
அமுக்கிரவி, அமுக்கிரா, அமுக்கிரி, அமுக்குரவு - அமுக்குரா.
அமுக்குரா - சூரை, முள்ளி, துளசி, அமுக்கனாங் கிழங்கு.
அமுக்குரால் - வெள்வேல்.
அமுசகம் - செருப்படை.
அமுசம் - சிறு செருப்படை.
அமுசு - ஒட்டறை.
அமுத கதிரோன் - சந்திரன்.
அமுதகம் - நீர்.
அமுதகரந்தை - சிவகரந்தை.
அமுதகிரணன் - அமுத கதிரோன்.
அமுதகுவிகம் - செங்கற்றாழை.
அமுதகோணிகம் - செங்கிளுவை.
அமுதக் கடுக்காய் - கடுக்காயின் ஒருவகை.
அமுதக்காய் - கடுக்காய்.
அமுதங்கம் - சதுரக் கள்ளி, கள்ளி, தண்ணீர்க்கள்ளி.
அமுதங்கர் - தண்ணீர்.
அமுதசருக்கரை, அமுத சர்க்கரை - சீந்தில் மா (சத்து), சீந்தில் சர்க்கரை.
அமுத சாரணி - வெள்வேல்.
அமுத சாரம் - வெள்வேல், தேன், கற்கண்டு.
அமுத சுறா - வெள்வேல மரம், பால் சுறா.
அமுதசேவிதம் - சிறு குறிஞ்சா.
அமுத சோகிதம் - செங்குமிழ்.
அமுதச்சுருள் - வெள்வேல்.
அமுததகரம், அமுததரம் - மஞ்சிட்டி.
அமுதத்தை பெந்தம் பண்ணி - தீன் பூ (ஒரு செடி).
அமுதநிலை - மூளை, கண்டமூலம், மார்பு முதலிய இடங்களில் உள்ள கோளங்களில் அமுதம் தங்கி நிற்கும்.
அமுத நீர் - பிண்ட நீர், சூதக நீர்.

அமுத பாடாணம் - மிருத பாடாணம்.
அமுதபுட்பம் - சிறுகுறிஞ்சா.
அமுதப்பால் - முலைப்பால்.
அமுதப்பீ - தான்றிக்காய்.
அமுதப்புனல் - ஆற்றங்கரை.
அமுத மூளை - பெரிய மூளை.
அமுதம் - தயிர், பச்சை நாவி, உயிர் தரு மருந்து, உப்பு, கடுக்காய், திரிபலை, சீந்தில், திரிகடுகு, கொஞ்சி (பழம்), உருக்கு, சீதேவி, தேவாமிர்தம், மழைநீர் (பரிபாஷை), நீர், நெல்லி, பால், சுவை, தலைப்பிண்ட செயநீர், தான்றி, கடுக்காய்ப்பால், சோறு.
அமுதராசன் - வெள்வேல்.
அமுதவல்லி - சீந்தில் கிழங்கு.
அமுதவல்லிக்காய் - சீந்தில்காய்.
அமுதவல்லியுப்பு - சீந்தில் சர்க்கரை.
அமுதவி - கடுக்காய், சீந்தில், நெல்லி.
அமுதவிந்து - அமிர்தத்துளி, வாலைரசம்.
அமுதவிருட்சம் - பாலுள்ள மரம்.
அமுதாரி - பூனைக்காலி.
அமுது - நீர், மிருதசஞ்சீவி, சோறு, உணவு, மூர்ச்சை தீர்த்துயிர்தரு மருந்து, அமிழ்து, பால், பாற்சோறு.
அமுதுபடி - அரிசி.
அமுதுபால் - சோறு.
அமுதுபுரடம், அமுதுபுரம் - சிறு குறிஞ்சா.
அமுது மோர் - பிரைமோர்.
அமுதுறை - எலுமிச்சை.
அமுதை - கடுக்காய்.
அமுத்தம் - நெல்லி, வசநாபி, கடுக்காய்ப்பால்.
அமுத்தரம் - மஞ்சிட்டி.
அமுத்தல் - கற்கடகசிங்கி.
அமுத்தா - மிளகு.
அமுத்தாரம் - மஞ்சிட்டி.
அமுத்திரகாலி - வாலுளுவை.
அமுத்திரம் - முத்தக்காசு, மஞ்சிட்டி.
அமுத்திரா - கோரைக்கிழங்கு.
அமுந்தா - கடுக்காய்.
அமுந்திரி - அரிசி.
அமுந்திர் - முத்தக்காசு.
அமுபசறா - வெள்வேல்.
அமுபாதுவல்லி - சீந்தில்.
அமுரதாகம் - தண்ணீர்.
அமுராகு - அமுக்கிராக் கிழங்கு.
அமுரி - சிறுநீர், கருங்குன்றி, குன்றி, கடல்நீர், சிறுகுழந்தையின் சிறுநீர்.
அமுரிசம் - மூத்திரத்தினுள் இருக்கும் ஓர் பொருள்.
அமுரிசிங்கி - ஓர்வித மருந்துத் தைலம்.
அமுரிதம் - மூத்திர பேதிகள்.

அமுரித்திரகம் - குண்டிக்காயினுள் இருக்கும் மூத்திரக் குழாய்கள்.

அமுரித்திராவகம் - மூத்திரத்திற் கலந்துள்ள ஓர் வகைத் திராவகம்.

அமுரி மருந்து - சிறுநீர்.

அமுரி முறித்தல் - சிறுநீரில் உள்ள தோடங்களை நீக்குதல்.

அமுரியான் - நவாச்சாரம்.

அமுரியிரத்தம் - சிறுநீர்க்கழிவு இரத்தத்திற் கலப்பதனால் ஏற்பட்ட ஓர் நோய்.

அமுரியுப்பு - சிறுநீரினின்று எடுக்கும் உப்பு; சுண்ணத்தினின்று நீரை விடுவிக்கு மோர் உப்பு.

அமுரியோட்டி - சிறுநீரை அடிக்கடி வெளிப்படுத்தும் பொருள்.

அமுரிவிடபாகம், அமுரிவிடம் - சிறுநீர்ப் பொருள்களினால் ஏற்பட்ட விடத்தன்மை.

அமுருதுரபம் - சிறுகுறிஞ்சான்.

அமுர்தக்கொடி - ஈசுரமூலி.

அமுர்தங்கி - பாடாணம், வெள்ளைப் பாடாணம்.

அமுர்த சஞ்சீவிப் பூடு - மூளை.

அமுர்த சுறான் - வெள்வேம்பு.

அமுர்தபடலம், அமுர்தபலம் - பேய்ப்புடல்.

அமுர்தப்பச்சை - நெல்லி யிலை.

அமுர்தமதிரசம் - கற்பூர சிலாசத்துச் சாரம்.

அமுர்தமூட்டுவாள் - பசு.

அமுர்தம் - கடுக்காய், மிளகு, தண்ணீர், சத்து, தயிர், மருந்து.

அமுர்தவல்லி - சீந்தில்.

அமுர்த விந்து - வாலைரசம்.

அமுர்பரப்பி - சிறுகுறிஞ்சான்.

அமுளம் - வெள்ளெருக்கு.

அமுனாருளம் - பெருவெட்டிவேர்.

அமுனைக்கண்ணி - காணம்.

அமூசிகை - சுண்டெலி.

அமூலம் - வேரில்லாதது, கார்த்திகைக் கிழங்கு.

அமெந்திக் கொட்டை, அமெந்து கொட்டை - வாதுமைக் கொட்டை.

அமேகநீக்கி, அமேத நீக்கி - கற்றாழை.

அமேத்தி - அமுங்கல்.

அமேத்திய நாறி - பீநாறிப் பூண்டு, பெருமரம்.

அமேத்தியம் - மூங்கில், மலம்.

அமேத்திர சன்னி - குழந்தை தாய்ப்பால் குடிக்காது, முகம் வேறுபட்டு,

வலியுண்டாகி, குரல் கம்மி, மலங்கட்டிச் சுரங்காயும் ஓர் வகைச் சன்னி.
அமேந்திய நாறுமரம் - ஒரு பூண்டு, ஒரு மரம்.
அமை - மூங்கில், நாணல், கூந்தற் கமுகு, கெட்டி மூங்கில்.
அமைச்சாகிதம் - செங்குருந்தொட்டி.
அமைச்சி - அண்டவாதம்.
அமைச்சு - பித்தம்.
அமைதிப்பொடி - அடக்கத்தை யுண்டாக்கும் ஓர்வகை மருந்துப்பொடி.
அமை நீக்கி - கற்றாழை.
அமைமோனி - செங்கொடிவேலி.
அமையம் - விலாமிச்சு (இலாமிச்சை), காலம்.
அமைலம் - மாப்பசை.
அமோகம் - ஓர் வாயு, பாதிரிப் பூ, ஓர் செடி (மலையாளத்தில் 'இரும்பீயத்தாளி' என்று பெயர்).
அமோகினி - பாதிரி.
அமோகை - களா, கழற்கொடி, கடுக்காய், பாதிரி, வாய்விடங்கம்.
அம் - நீர், அழகு.
அம்சசந்தி - தோட்பொருத்து.
அம்சபாதயிலை - சிறு புள்ளடி.
அம்சம் - அன்னப்பறவை.
அம்சரூபி - காட்டுளுந்து.
அம்சுகம் - தமலாபத்திரி, புங்கு, பச்சிலை.
அம்தை - கடுக்காய்.
அம்ப - முயல், தண்ணீர்.
அம்பகம் - கண், சேம்பு, சோம்பு, செம்பு.
அம்பகன் - சீர்பந்தபாடாணம்.
அம்பங்கி - விளாவரிசி.
அம்பசாதிதம் - செங்கொத்தான் கொடி.
அம்பசாரம் - முத்து.
அம்பசி - ஆடு தின்னாப்பாலை.
அம்படம் - ஆடு தின்னாப்பாலை, (புழுக் கொல்லி), புறாக்கொல்லி, வெள்ளீயம்.
அம்படலம் - ஈயம், அம்மி, வெள்ளி, வாழை, மரக்கால்.
அம்படி - கொட்டிக்கிழங்கு.
அம்பட்டகி, அம்பட்டம், அம்பட்டர் - வட்டத் திருப்பி.
அம்பட்டன் - மருத்துவன்.
அம்பட்டன் கத்தி, அம்பட்டன் பாரை - ஓர் வகைக் கடல் மீன்.
அம்பட்டன் வாளை - சொட்ட வாளை (ஆற்று மீன்).
அம்பட்டை - காட்டு முல்லை, அகலச்சுக்கு, புளியாரை, அம்பாளம், வட்டத் திருப்பி,

பாவட்டை, மாசக்காய்.
அம்பணம் - ஆமை, நீர், வாழை, ஊறுகாய்.
அம்பதி - தான்றிக்காய்.
அம்பதை - கள்.
அம்பயம் - ஆமை, புளிமா.
அம்பரஸ்திகம் - சிறுதேக்கு.
அம்பரநேமி - வெண்கிலுகிலுப்பை.
அம்பரமணி - சூரியன்.
அம்பரம் - ஆகாயம், கடல், மஞ்சள், சீலை, அப்பிரகம், வாசனை.
அம்பரவாணம் - எட்டுக்காற்பறவை.
அம்பராம்புயம் - கடல் தாமரை, பெருந்தாமரை, ஆகாயத்தாமரை.
அம்பரிடம் - சூரியன்.
அம்பரியம் - பிரசவநோய்.
அம்பரீசம் - எண்ணெய்ச்சட்டி.
அம்பரை - நிமிளை, பொன்னிமிளை, வெண்கலநிமிளை.
அம்பரை சுமபசை - நிமிளை.
அம்பரைநாதம் - அப்பிரகம்.
அம்பர் - பொன்னம்பர், கற்பூரமண், தேவதாரு முதலிய மரங்களின் பிசின்; திமிங்கிலத்தின் ஈரல், மணிக்குடலில் உண்டாகும் சத்து; இதற்கு மீன் அம்பர் என்றும் பெயர்; இரும்புத்துரு, மணற்சத்து முதலிய பாடாணப் பொருட்கள் சேர்ந்த இயற்கை மண்; கருப்பு அம்பர், ஓர் மருந்து.
அம்பலக்கனி - செங்கொய்யா.
அம்பலக்கோடகம் - கோடகசாலை.
அம்பலத்தி - தான்றிக்காய், தில்லை.
அம்பலத்தோதிதம் - செஞ்சதுரக்கள்ளி.
அம்பலம் - ஆமை, புளிமா, தில்லை மரம்.
அம்பலவிருக்கம், அம்பல விருட்சம், அம்பல விருத்தம் - தில்லைமரம்.
அம்பலா - எலுமிச்சை.
அம்பலி - களி, பசை, முட்டையின் வெள்ளைக்கரு.
அம்பல் - இருமிச்சு.
அம்பல்லி - அம்பலம்.
அம்பவாசினி - பாதிரி, எலுமிச்சை.
அம்பளங்காய் - சீனதேசத்துக்காய், பேரிக்காய்.
அம்பளம் - வாழை.
அம்பளாசை - அகத்தி.
அம்பனத்திப்பழம் - பொன்னாங்காய் (பூவந்திக் கொட்டை).
அம்பனம் - வாழை.
அம்பன் - சீர்பந்த பாடாணம்.
அம்பாயப்படல், அம்பாயம் - பிரசவ வேதனைப்படல்.

அம்பாயனக் குங்கிலியம் - ஓர் வகைச் சுத்தமான குங்கிலியம்.
அம்பாலம் - மருமாங்காய்.
அம்பாவனம் - சரபப்பட்சி.
அம்பாளம் - வாழை.
அம்பி - கள்.
அம்பிகா - சீனதேசத்துக்காய்.
அம்பிகை - வெட்பாலை.
அம்பிகைக் குழலாள் - பெருச்சாளி.
அம்பிசினி - தாமரைச்செடி.
அம்பிடி - சீனிச் சர்க்கரை.
அம்பிட்டது - இரசம்.
அம்பியம் - கள்.
அம்பிரகம் - தினை.
அம்பிளி - முட்டை வெள்ளைக்கரு, களி.
அம்பினடி - திப்பிலிமூலம்.
அம்பு - ஆடுதின்னாப்பாலை, மூங்கில், பூரம், தளிர், எலுமிச்சை, தேற்றான் கொட்டை, திப்பிலி, குடிநீர், பாதிரி மரம், கடல், தண்ணீர் விட்டான், அன்னசாரம், யானைத் திப்பிலி, தாமரை, மேகம், சங்கு, சரகாண்ட பாடாணம்.
அம்புகணை - சரகாண்ட பாடாணம்.
அம்புகபம் - கடல்நுரை, மீனெலும்பு.
அம்புகிராதம் - முதலை.
அம்புகுக்குடம் - நீர்க்கோழி.
அம்புகேசரம் - எலுமிச்சை.
அம்புசமாகிகம் - காசரைக்கீரை.
அம்புசம் - வெண்தாமரை, நீரில் முளைத்த, செவ்வலரி.
அம்புசனி, அம்பு சன்மம், - தாமரை, நீரில் முளைத்த.
அம்புசாகிதம் - தம்பட்டையவரை.
அம்புசாதகம் - கட்டுக்கொடி.
அம்புசாதம் - தாமரை.
அம்புசாரம் - எலுமிச்சை.
அம்புசூகரம் - பன்றியைப் போன்ற ஓர் முதலை.
அம்புசேதிகம் - செங்கொழுஞ்சி.
அம்புதம் - கோரைக் கிழங்கு, நீர், மேகம்.
அம்புதரம் - கோரைக் கிழங்கு.
அம்புதாகி, அம்புதி - கடல்.
அம்புதிவல்லபம் - பவழம்.
அம்புநீர் - விந்து நீர்.
அம்புநேசம் - தாமரை.
அம்புபீரசாதனம் - தேற்றாங்கொட்டை
அம்பு பூரணநோய் - தான் கர்ப்பிணியாய் இருக்கும் போது தன் குழந்தைக்குப் பால் கொடுத்தலால் அக்குழந்தைக்கு ஏற்படும் நோய்
அம்புப் பிரசாதனம் - தேற்றாங் கொட்டை

அம்புப்பிரசிகம் - செங்கொள்ளு.
அம்புமுது - ஓர் வகை முத்து.
அம்புயக்கினி - பாதிரி.
அம்புயஞானநூல் - தாமரை நூல்.
அம்புயம் - தாமரை, நீர், நீரில் உற்பத்தியாவன, தாது.
அம்புயன் - பஞ்சபட்சி பாடாணம்.
அம்புயாதம் - தாமரை, நீர், நீரில் உற்பத்தியாவன.
அம்புராகம் - அம்புயம்.
அம்புராசி - கடல்.
அம்புராம்புயம் - கடற்றாமரை.
அம்புரு - நீரில் பிறந்த, தாமரை.
அம்புருசம் - செம்பரத்தம் பூ, நாரை.
அம்புரேசம், அம்பு ரோகிணி - தாமரை.
அம்புலா - சீனிப்பாதரை.
அம்புலாக்கனி - பாதிரி.
அம்புலி - சந்திர காந்தி, சந்திரன், நிலவொளி.
அம்புலிகா - புளியாரை.
அம்புலிநகம் - மயிலடிமரம்.
அம்புலிமணி - சந்திர காந்தக்கல்.
அம்புலிமான் - அம்புலி.
அம்புலியம்மான் - சந்திரன்.
அம்புவஸ்தம் - நீர்யானை.
அம்புவல்லி - ஓர் பூண்டு.
அம்புவாகினி, அம்புவாசினி - எலுமிச்சை, பாதிரி மரம்.
அம்புவி - கடல்.
அம்புவியரசு - இளம்பூவரசு.
அம்புறாத்தூணி, அம்புறாழ்தூணி - சரகாண்ட பாடாணம்.
அம்புனேசம் - தாமரை.
அம்பை - வெள்ளைச் சாரணை, மூத்திரக்கிரிச்சனம், வெட்டிவேர், கோரைக் கிழங்கு செம்பருத்தி, சிறு செருப்படை, அமுக்கிரா.
அம்பொருதம் - தாமரை.
அம்பொருந்தகரை - செந்தகரை.
அம்போ - நீரில் பிறப்பன, தாமரை, ஓர் செடி, நாரை.
அம்போகம், அம்போக்கம் - தாமரை.
அம்போசம் - தாமரை, நாரை.
அம்போசயோனி - தாமரை.
அம்போசன்மம் - நீரில் பிறப்பன.
அம்போஜிகை - வெண் குன்றி.
அம்போதம் - மேகம், ஓர் செடி.
அம்போதரம் - மேகம்.
அம்போதி - காற்று, கடல், தண்ணீர் வைக்கும் பாத்திரம்.
அம்போநிதி - கடல்.
அம்போருகம் - தாமரை, நீரில் முளைத்தது, கள், அம்மான் பச்சரிசி (சித்திரைப் பாலாடை).

அம்போறாத் துருமம் - பவழம்.
அம்ம - முலைப்பால்.
அம்மச்சி - செந்தணக்கு.
அம்மடிங்கம் - பட்டாணி.
அம்மட்டம் - வட்டத்திருப்பி.
அம்மட்டி - கொட்டிக்கிழங்கு.
அம்மணி - பெண்ணின் இடுப்பு.
அம்மம் - முலை, முலைப்பால், குழந்தையுணவு.
அம்மரம் - அலரிச்செடி.
அம்மலர்மூலி - செங்குன்றி.
அம்மல் - செரியாக் குணம்.
அம்மனை - தாய், நெருப்பு.
அம்மன் கட்டு - கூகைக்கட்டு.
அம்மா - மாவிலங்கை, ஐம்புலன்.
அம்மாட்டி - அம்மட்டி.
அம்மாதிகம் - செந்திராய்.
அம்மாபத்திரி, அம்மாபத்தினி - வேம்பு.
அம்மாம்பச்சரிசி - பூமியில் தரையோடு தரையாய்ப் படர்ந்து இருக்கும் ஓர் பச்சிலை.
அம்மாரம் - அலரிச்செடி.
அம்மாலிகை - புளி.
அம்மான் பச்சரிசி - சீதேவி செங்கழுநீர், அம்மாம் பச்சரிசி (சித்திரப்பாலாவி).
அம்மி - அம்மிக்கல், குழியம்மி, (மருந்தரைக்குங்கல்).
அம்மிப் பாலுண்ண வரைத்தல் - கல்வத்தில் ஈரமில்லாதபடி குழவியைக் கொண்டரைத்தல்.
அம்மியம் - கள், செந்தாடு பாவை.
அம்மிரம் - மாமரம்.
அம்மிரா - செந்தாழை.
அம்மிலகை - புளி.
அம்மில சாரம் - புளித்த காடி, புளிப்பு.
அம்மிலம் - புளிப்பு.
அம்மில விருக்கம், அம்மில விருட்சம் - புளிய மரம்.
அம்மிலிகா, அம்மிலிகை - புளிப்பு, புளிநறளைக் கிழங்கு.
அம்மீயம் - சிறுகுறிஞ்சா.
அம்மு - சோறு.
அம்முசுகேஷ்டம் - மாமரம்.
அம்முதல் - உண்ணல், அடைத்தல், மூடுதல்.
அம்மை - கடுக்காய், மூங்கில், அமைதி, அழகு, மாட்டுக்கு உண்டாகும் அம்மை, ஆட்டுக்கு வரும் அம்மை, மனிதர்களுக்குண்டாகும் எலும்பைப் பற்றிய தொற்று நோய் (வைசூரி).
அம்மைக்கட்டு - கூகைக்கட்டு.
அம்மை குத்துதல் - பாலெடுத்துக் குத்தல்.
அம்மைக் குரு - அம்மையால் உண்டான

சிறு கொப்புளம்.

அம்மைச்சுரம் - அம்மை நோயினால் ஏற்படும் ஒருவகைச் சுரம்.

அம்மைப்பால் - அம்மை குத்துவதற்காக உபயோகிக்கும் பால், அம்மையின் பால்.

அம்மை முத்து - அம்மைக் கொப்புளம்.

அம்மையார் கூந்தல் - சவரிக்கொடி, (முதியார் கூந்தல், குதிரை வாலிப் பூடு), கொடியார் கூந்தல், எலிச்செவிப் பூடு, மெலியார் கூந்தல்.

அம்மை வடு - அம்மைத் தழும்பு.

அம்மை வார்த்த சொள்ளை - அம்மையினால் ஏற்பட்ட சொட்டு, தழும்பு.

அம்மை வார்த்தல் - அம்மைபோடல்.

அம்மை விளையாட்டு - அம்மையால் வருந்தல்.

அம்மை வேணி - வெண்தகரை.

அம்ரீதம் - கடுக்காய், திப்பிலி.

அம்ருதா - கடுக்காய்.

அயகத்தினை - செந்தினை.

அயகம் - சிறுகுறிஞ்சா, வசம்பு.

அயகரம் - மலைப்பாம்பு.

அயக்கடிசு - உருக்கு.

அயக்கதயம், அயக்கதை, அயக்கதையம் - இரும்புலக்கை.

அயக்கந்தகம் - இரும்பு சேர்ந்த கந்தகம்.

அயக்கம் - நோயின்மை.

அயக்கல் - கிட்டம்.

அயக்களங்கு - இரும்புத்துரு, இரும்புருக்கிய மணி.

அயக்காந்த கற்பம் - அயமும், காந்தமும் சேர்ந்த பற்பம் அல்லது செந்தூரம்.

அயக்காந்த செந்தூரம் - அகத். செந்தூ. 300 இல் கூறியுள்ளபடி ஊசிக் காந்தம் சேர்த்துத் தயாரித்த செந்தூரம்.

அயக்காந்தம் - ஊசிக்காந்தம், வெண்தேவதாரி.

அயக்காந்த வச்சிரம் - ஓர் காயகற்ப மருந்து.

அயக்கிட்டம் - அயத்தை உருக்கும் போது விழுந்த அசடு.

அயக்கிரா - கானல் மா (காட்டுமா).

அயக்கிருட்டி - காந்தக்கல்.

அயக்கிருதி - காந்தக்கல், இரும்பு அல்லது காந்தத்தைக் கொண்டு தயாரித்த மருந்து.

அயக்கீடம் - இரும்புக்கறை.

அயக்கு - அரைக்காற்படி, காலே வீசம் சேர்.

அயக்குடோரி - வாதமுறையில் உருக்குமுகத்தில் கொடுப்பதற்காக இரும்பிலிருந்து தயாரித்த ஓர் மருந்துக் கூட்டு.

அயங்கரையும் திராவகம் - வெடியுப்புத் திராவகம்.

அயங்காயம் - தலைச்சன் பிள்ளை நஞ்சு.

அயசம் - இரும்பு.

அயசர் - சிற்றரத்தை.

அயசாரம் - இருமத்தி.

அயசில வேதை - கோளக பாடாணம்.

அயசிலிடசெம்பி - நீரலரி, கல்தாமரை.

அயசிவவேதை - கோளகபாடாணம்.

அயசீகம் - அயம்.

அயசு - உருக்கு, இரும்பு.

அயசுகிருத்தி - இரும்பினின்று தயாரித்தவோர் ஆயுள்வேத மருந்து.

அயசுக்குள் குருவாய் நின்றோன் - காந்த பாடாணம்.

அயசுபடில் - வெள்ளீய மணல்.

அயச்சட்டி - இரும்புப் பாண்டம்.

அயச்சத்து - வெங்காரத்தை மெழுகாக்கி அத்துடன் சுத்தி செய்த அயப்பொடியைச் சேர்த்து புடமிட்டுத் தயாரித்த ஓர் இரும்புச்சத்து. (போகர் 7000)

அயச்சமந்து - நெய்.

அயச்சாரம் - இரும்புக்கிட்டம்; அன்னபேதியினின்று தயாரித்த ஓர் மருந்துப் பானம். இரத்த சுத்திக்காகக் கொடுக்கப்பட்டது; இரும்பு.

அயச்சிந்தூரம் - இரும்புச் செந்தூரம்; எந்நாளும் இளமையாக இருக்கச் செய்யும் மருந்து.

அயச்சுண்ணம் - இரும்பு சேர்த்துப் புடமிட்ட ஓர் வகைச் சுண்ணம்.

அயச்செந்தூரம் - உலோகச் செந்தூரம்.

அயச்செந்தூரி - நரிமுருக்கு, கிளி முருக்கு.

அயச்செம்பி - ஆட்டுச் செவி மருந்து, செவ்விறகு, செங்கத்தாரி.

அயச்செம்பிச்சி - வேம்பாடம்பட்டை.

அயச்செம்பு - தலைமயிர், அரப்பொடி இவைகளை நல்லெண்ணெயில் துவட்டி எடுத்து அத்துடன் கந்தகம், வெண்காரம், துருசு முதலிய சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சிய பிறகு சுத்தமாக இறங்கும் செம்பு. (போகர் 700)

அயச்செம்புயர்த்தி - கானல் மா.

அயச்சோடம் - மஞ்சபத்திரி (தங்கத்தைச் செந்தூரிக்கும்).

அயட்டி - அம்மான் பச்சரிசி.

அயதம் - சிறுகுறிஞ்சா.

அயதி - திருநாமப்பாலை.

அயத்தாம்புரி - வன்னி.

அயத்தி - இரும்புத் தொட்டிப் பாடாணம்.

அயத்திரவம் - இரும்பு சேர்ந்த நீர்.

அயத்திரா - செந்துருக்கம்.

அயத்திராவகம் - இரும்புத் திராவகம்.

அயத்திலிட ஈயமானோன் - காந்தம்.

அயத்திலிட செம்பி - காட்டுமா, கற்றாமரை, நீரரளி.

அயத்திற்குத் தாய் - கெந்தகம்.

அயத்தின் சரம் - தீபம்.

அயத்தின் சாரம் - இரும்புக்கிட்டம் (சிட்டம்), இரும்புச் சத்து.

அயத்தின் ராவடம் - இரும்புத்தூள்.

அயத்தீ - இரும்புத் தொட்டிப் பாடாணம்.

அயத்துக் கந்தகன் - அஞ்சனபாடாணம்.

அயத்துக்கு உருக்கி - இரத்த மண்டலிப் பூண்டு.

அயத்துருமம் - அலரி, மத்திச் செடி.

அயத்தை ஈயமாக்கி - வீழி.

அயத்தொட்டி - ஓர்வகைப் பிறவிப் பாடாணம்; இதைக் கல்லில் உறைத்தால் பொன்போல் இருக்கும். வங்கம், நாகம், சூதம், கெந்தி, இலிங்கம், தாரம் முதலியவைகளைப் பொடித்துக் காரமான குகையிலுருக்கிட அது உருகித் தன்னிலடங்கும்; இதுதான் அயத் தொட்டிப் பாடாணம்; இது ஓர் வைப்புப் பாடாணம்.

அயநாயகன் - காந்தம்.

அயநீர் - அயச்சம்பந்தமான நீர்.

அயந்தனைச் சிந்தூரமாக்கி - கருங்கொடி.

அயந்திரப்பாகு - ✸சுகந்தகாணம்.

அயந்து - அய்விரலி.

அயபற்பம் - இரும்பைப் புடமிட்டபற்பம்; இதை சயக்காய்ச்சல், சோகை, பாண்டு ஆகியவற்றிற்கும் மூளையைப் பற்றிய நோய்களுக்கும் உபயோகப்படுத்தலாம்; இரும்புத்தூள்; இரும்பு சுட்ட சாம்பல்.

அயபானி - ஓர் செடி.

அயபுச்சி - காட்டுளுந்து.

அயப்பனை - பிரான்சு தேசத்திலிருந்து கொண்டு வந்து பயிராக்கப்பட்ட ஓர் சிறிய பூண்டு.

அயப்பாடாணம் - இரும்பு கலந்த பாடாணம்.

அயப்பிண்டம் - மண்டூரம், இரும்பு, இரும்புக்குண்டு.

அயப்பிரியம் - நீர்க்கடம்பு.

அயமணல் - கருமணல், இரும்புமணல்.

அயமணி - இரும்பையுருக்கிப் பாகப்படுத்திய மணி.

அயமரம் - அலரிச்செடி.

அயமலம் - இரும்புத்துரு, அலரி.

அயமலாதி - வசம்பு.

அயமலைச் சத்து - கிட்டம், இதனால் காயம் இரும்புத்தூண் போலாகும்.

அயமவாதி - வசம்பு.

அயமாரகம் - அலரிச்செடி.

அயமாரணம் - அரச மரம்.

அயமாரம் - அலரிச் செடி.

அயமான் - பச்சரிசி, சித்திரப் பாலாவி.

அயமி - வெண்கடுகு.

அயமிரா - செந்தும்பை.

அயமீயமாக்கி - வீழி.

அயமுருக்கி - காட்டாமணக்கு, இரத்தமண்டலிப்பூடு.

அயமுருக்கு - இரும்பை ஐந்து தரம் உருக்கித் தேர்ந்தெடுத்த எஃகு (போகர் முறை).

அயமூவானதி - எழுத்தாணிப் பச்சிலை.

அயமோதகம் - இரும்பு கலந்த தண்ணீர்.

அயம் - நீர், மழைநீர், அலரி, சிறுபூலா, இரும்பு, சேறு, சோறு, ஆடு, இரும்புத்தூள், குதிரை, காந்தம், பிண்டம், உருக்கு, எஃகு, அயச்செந்தூரம், பாச்சிக் கொடி, அயப்பொடி, பிரண்டை, குளம், அரப்பொடி, வெண்கடுகு.

அயம்செம்பாக்கி - செங்கத்தாரிப் பழச்சாறு.

அயம்பரளி - வசம்பு.

அயம்பருத்தி - செம்பருத்தி.

அயம்பற்றி - காந்தம்.

அயம் பாதம், அயம் பாதி - வசம்பு.

அயம்பெறு புழுக்கை - ஆட்டுப்புழுக்கை.

அயம்மியம் - செந்துவரை.

அயரசதம் - அயவெள்ளி.

அயரசம் - இரத்தத்தைச் சுத்தி செய்து உடம்பிற்குப் பலத்தைக் கொடுக்கும் மருந்து.

அயரஞ்சி - நிலப்பனை.

அயரி - சிற்றரத்தை.

அயரு - தண்ணீர் விட்டான்.

அயர் - ✱சேவுப்பி, பெருந்தும்பை.

அயலி - சிற்றரத்தை, வெண்கடுகு.
அயலோகச்சிலை - அயமலை, இரும்புக்கல்.
அயல் - காரம்; திருநாமப்பாலை.
அயவகண்டம் - முசுமுசுக்கை.
அயவணம் - ஒட்டகம்.
அயவம் - ஓர்வகைக் குடற்புழு.
அயவல்லி - கோவை.
அயவனம் - ஒட்டகம்.
அயவாகனன் - நெருப்பு.
அயவாசி - வசம்பு.
அயவாரி - செந்நாகதாளி, வசம்பு.
அயவாரிதி - செந்நாகதாளி.
அயவாருகம் - செந்நாயுருவி.
அயவானரம் - ஓமம்.
அயவி - சிற்றரத்தை, கடுகு.
அயவிகம் - சிற்றரத்தை.
அயவிகாரம் - செப்பு நெருஞ்சில்.
அயவிரசி, அயவிரலி - அயவிகம்.
அயவில்லை - சர்க்கரையும், இரும்பும் சேர்ந்த ஓர் வில்லை.
அயவீரபிரவிக்கிரம் - ஓர்வகை அயச் செந்தூரம்.
அயவுப்பு - இரத்த விருத்திக்காகக் கொடுக்கும் இரும்பு சேர்ந்த உப்புத் தூள்; அல்லது தகடாகவுள்ள சிவப்பு இரும்புப்பு.
அயவுருக்கு - எஃகு, எருக்கு.
அயவூற்று - இரும்பு சேர்ந்த நீருள்ள ஊற்று.
அயவெட்டு - அயச்சவுடு நீங்கிக் களிம்பூறலற்றுப் போகும்படிப் புடமிட்டெடுத்த செந்தூரம்; துகள் நீங்கிய இரும்புச் சிந்தூரம்.
அயவெள்ளை - இரும்பைப் புடம் போட்டெடுத்த பற்பம்.
அயறு - புண், புண்ணின் செதில்.
அயனம் - பிறப்பு, மூப்பு, பூ, கண்ணின் குழி.
அயனாகம் - இரும்பும் நாகமும் கலந்த உலோகம்.
அயனாதி வடகம் - புடமிட்ட காந்தம், இரும்பு இவைகளுடன் மூலிகைகளைக் கியாழமிட்டுக் கடைச் சரக்குகளைச் சூரணித்துச் சேர்த்தரைத்த குளிகை. இதனால் நீராமை, கவிசை, பாண்டு, காமாலை, மகோதரம் போம்.
அயனாமத்தி - கோவை.
அயனாயகன் - காந்தம்.
அயன்செம்பு - நாகப்பச்சை.
அயன்மனை - பிரமி, வல்லாரை.

அயன் முப்பு - தலைப்பிண்டம்.
அயா - தளர்ச்சி.
அயாகம் - ஊமத்தை.
அயாஞ்சி - நிலப்பனை.
அயாந்திரமாகம் - கருங்காக்கணம்.
அயாமரம் - அலரிச்செடி.
அயாமலம் - கிட்டம்.
அயாரி - அலரி.
அயாரியம் - நெட்டிச்செடி.
அயாலி - கோரை.
அயாவுயிர்த்தல் - பெருமூச்செரிதல், மூர்ச்சை தெளிதல், கொப்புளித்தல்.
அயானம் - இயற்கைக்குணம்.
அயிகம், அயிகா - ஊமத்தை, இலவு மரம் (இலவ மரம்).
அயிங்கவலை - சூடைமீன்.
அயிஞ்சி - நிலப்பனை.
அயிஞ்சிரம் - கருஞ்சூரை.
அயிணம் - மான்தோல்.
அயித்திரம் - கருங்காக்கணம்.
அயிப்பை - ஓர் செடி.
அயிமவதி - கொக்கிறகு.
அயிரகம் - ஊமத்தங்காய், கரூமத்தை.
அயிரச்சகமல்லி - சுக்கு, கரந்தை.
அயிரபம் - கண்டசர்க்கரை.
அயிரமாளிகை - எருமை.
அயிரம் - கண்டசர்க்கரை, மிளகு, கற்கண்டு, வெண்சர்க்கரை, ஊமத்தை.
அயிராபதம் - சாறுவேளை.
அயிரி - நெட்டிப்புல்.
அயிரியம் - நெட்டிச் செடி, நெட்டிமுட்டி.
அயிரை - ஓர் சிறு மீன், நுண்மணல்.
அயிர் - இரும்பு, சர்க்கரை, கருப்பங்கட்டி (வெல்லம்), வெள்வேலம்பட்டை, கற்கண்டு, நுண்மணல், கண்ட சர்க்கரை, சிறுநீர், யானைக் காஞ்சொறி.
அயிலடம் - சிற்றரத்தை.
அயிலம் - இலுப்பை வேர்ப்பட்டை.
அயிலல் - உண்ணல்.
அயிலாலி - செந்நாரை.
அயிலி - சிற்றரத்தை, வெண்கடுகு, சதுரக்கள்ளி.
அயிலிடம் - அயிலடம்.
அயிலேயம் - முசுமுசுக்கை.
அயிலை - அயிரை.
அயில் - முசுமுசுக்கை, இரும்பு, ஆயுதம், வேலம்பட்டை, உண்ணல், கோரைக்கிழங்கு.
அயில் ஆச்சி - அம்மி, அறுகு.
அயிவாவி - செந்நாவி.
அயிவி - கடுகு, சிற்றரத்தை.
அயிற்பூகம் - செந்நெல்லி.
அயினார் - ஈளை, குழந்தைகட்குத் தொண்டையில் ஓசையுடன் உண்டாகும் ஓர் ஈளை நோய்.
அயினாலிகம் - செம்பசலை.
அயினி - நீராகாரம்,

ஒருவகைப் பலாமரம், சோறு.
அயினிக்கீரை - மணலிக்கீரை.
அயின்றல் - உண்ணல்.
அயுட்சடம் - ஏழிலைப்பாலை.
அயோகம் - நோயை நீக்காத மருந்து; முறையற்றும் போதிய அளவில்லாமலும் முரட்டுத் தனமாகவும் கொடுக்கும் மருந்து.
அயோக்கிரம் - உலக்கை, சுத்தி.
அயோமயம் - முழுவதும் இரும்பினால் செய்யப்பட்டது.
அயோமலம் - இரும்புக்கிட்டம் (சிட்டம்).
அயோவிதாலம் - நெல்லரிசி.
அயோற்கம் - அரப்பொடி.
அய்யஞ்சி, அய்யஞ்சு - நிலப்பனை.
அய்யம் - கடுகு.
அய்யலி, அய்யவி - சிறு கடுகு, (வெண்கடுகு).
அய்யலோசிதம் - செம்பொடுதலை.
அய்யவி - சிறுகடுகு, சிறுதேக்கு, சிற்றரத்தை.
அய்யாலு - சிறுகடுகு.
அய்யிரம் - கண்டசர்க்கரை.
அய்யில் - சீனக்கடுகு.
அய்வரை வென்றான் - ✸ சித்திலி விழி
அய்விரலி - ஐவேலிச் செடி, காந்தள்.
அர - பாம்பு.
அரகண்டரி - பாசிப்பயறு.
அரகதி - செவ்வல்லி.
அரகம் - ஓர் பூண்டு, கம்பிழ் (செடி).
அரகாரம் - கடுங்காரம்.
அரகி - சிற்றாமணக்கெண்ணெய்.
அரக்கக்குரியான் - மருள்.
அரக்கங்கெருடன் - கொல்லன்கோவை, ஆகாசகெருடன்.
அரக்கம் - நன்னாரி, இரத்தம், திருநாமப்பாலை, அரக்கரிசி, எருக்கு, சுக்கு, அகில், கொம்பரக்கு, அவலரக்கு, அகிலம்.
அரக்கம்பால் - எருக்கம்பால்.
அரக்கரிசி - அரிசியைப் போன்ற அரக்கு.
அரக்கல் - அரைத்தல், தேய்த்தல்.
அரக்காணி - செம்புளிச்சை.
அரக்காந்தம் - ஓர்வகைச் சிகப்புக் காந்தக்கல்.
அரக்காமரம் - எருக்கு.
அரக்காம்பல் - செவ்வாம்பல், செவ்வல்லி.
அரக்கி - கடுக்காய், பாடாணம், சேங்கொட்டை, கல்லுப்பு, மனோசிலை.
அரக்கிழங்கு - அரரூட்டுக்கிழங்கு, கூவாமாவுக்கிழங்கு.

அரக்கினிரதம் - கொம்பரக்கினாற் செய்த குடிநீர்.

அரக்கு - இது ஒரு பூச்சியினின்று கழியும் பொருள்; இதில் பச்சையரக்கு, சிவப்பரக்கு, செம்பரக்கு, கட்டியரக்கு, முத்திரை யரக்கு (அல்), செய் மெழுகு, அரிசியரக்கு, அவலரக்கு, கொம்பரக்கு என்ற பலவகைகள் உள; **சாதிலிங்கம்**; சாராயம்; பொன்.

அரக்குக் கச்சி - **செம்முள்ளங்கி**, கெம்பு **முள்ளங்கி**.

அரக்குக் காந்தம் - ஓர் வகை சிகப்புக் காந்தக்கல்.

அரக்குக் குகை - சிவப்புக்குகை, ஓர்விதக் குகை.

அரக்குக்குப்பி - சிகப்புப்புட்டி.

அரக்குச் சந்தனாதி - கொம்பு அரக்குடன் சில கடைச்சரக்குகளை நல்லெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி வடிக்கும் ஓர்வகைத் தைலம். தீராத காய்ச்சல் தீரும்.

அரக்குதல் - அரைத்தல், தேய்த்தல்.

அரக்குத் தைலம் - கொம்பரக்கைச் சேர்த்து வடித்த தைலம்; இதனை நாட்பட்ட சுரத்திற்குத் தலைமுழுக பயன்படுத்துவர்.

அரக்கு நாயகி - செங்குருந்து.

அரக்கு நீர் - இரத்த நீர், ஓர் வாசனை, சாதிலிங்கம் கலந்த நீர்.

அரக்கு புளிப்பு - அரக்கினின்று தயாரிக்கும் ஓர் வகைப் புளிப்பு.

அரக்கு பேய்ப்பீர்க்கு - மெழுகுப் பேய்ப்பீர்க்கு.

அரக்கு மஞ்சள் - மஞ்சள் வேர்க்கொம்பு, கருஞ்சிவப்பு மஞ்சள், சிவப்பு மஞ்சள்.

அரக்கு மெழுகு - அரக்கின் பச்சை மெழுகு.

அரக்கு ரோஜா - சிவப்பு ரோஜாப்பூ.

அரக்கு வகத்தி - சிற்றகத்தி.

அரக்கு வட்டச்சாரணை - சிவப்பு வட்டச்சாரணை.

அரக்கு வதம் - கொன்றை.

அரக்கெண்ணெய் - கொம்பரக்குடன் அமுக்கிராவேர், பசும்பால், பழங்காடி, நல்லெண்ணெய் மற்றும் சில மருந்துச் சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி தயாரித்த தலைமுழுக்கெண்ணெய்.

அரங்கல் - அழிதல், அழுந்தல்.

அரங்கல் களிம்பு - கட்டிகளைக் கரைக்கவும், பழுக்கவும் அழுந்தச் செய்யவும் வீக்கங்களை மிருதுவாக்கவும் உபயோகிக்கும் களிம்பு.

அரங்கனம் - ஐந்து; கடுகு, வெந்தயம், பூண்டு, ஓமம், பெருங்காயம்.

அரங்கு - கருப்பம்.

அரங்குதல் - உருகுதல்.

அரசகம் - செம்மணத்தி, கருந்துளசி, துளசி, பூளைப்பூ, திருநாமப்பாலை.

அரசங்கள்ளு - அரசமரத்தினின்று வடியும் பதநீர்.

அரசநாபி - ஓர்வகைச் சிவந்த நாபி.

அரசந்தம் - பெருங்காராமணி.

அரசமசிரயை - எட்டி.

அரச மரம் - அரசு, பூவரசு.

அரசம் - காரமில்லாதது. மூலநோய், இரத்த மூலம், அரச மரம், முருங்கை விதை, செவ்வகத்தி.

அரசம்பதினி - அரச மரத்திலிருந்து வடியும் பதநீர் (கள்ளு).

அரசம் புல்லுருவி - அரச மரத்தின் மீது முளைக்கும் புல்லுருவி.

அரசர் விரோதி - கோவை, ஆவாரை, தொண்டை, வேணு.

அரசர் ஐந்துளர் - ஐந்து பொறிகள்.

அரசவப் பித்தகரம் - காட்டுப்பயறு.

அரசனம் - மஞ்சள், அரசு.

அரசன் - கார்முகில் பாடாணம், துரிசு, வாணகெந்தி, புளி கருப்பட்டி, நீர் இவற்றால் தயாரிக்கப்பட்ட ஒருவகைக் குடிநீர் (பானகெந்தம்), பூவரசு.

அரசன் கன்னி - கெந்தகம்.

அரசன் தோல் - அரசன் பட்டை.

அரசன் ரசம் - பூவரசமரத்தின் பட்டை, பூ, காய் முதலியவைகளின் சாறு; சூதம்.

அரசன் ராசிதம் - செவ்விளநீர்.

அரசன் விரோதி - கோவை, கார்முகில்பாசாணம், பூவரசு, துருசு, வாணகெந்தி, புளி, கருப்பட்டி, நீர் இவற்றால் தயாரிக்கப்பட்ட ஒருவகைக் குடிநீர் (பானகெந்தம்), (பூப்பருத்தி).

அரசாக்கினி - வெண்கடம்பு.

அரசாணம் - அரசு, அரத்தை, தும்பராட்டகம்.

அரசாணி - அரசங்கொம்பு.

அரசாணிக்காய் - பூசனிக்காய்.
அரசாணிக்கால் - அரசங்கொம்பு.
அரசாமியம் - செவ்வகத்தி.
அரசாள் - கரும்பு.
அரசானம் - அரசமரம், அரத்தை, பேரரத்தை, தும்பராட்டம்.
அரசு - பூவரசு, அரசமரம், வாழை, மூங்கில், வெள்ளைப்பூண்டு.
அரசுவெற்பு - அதிவிடயம்.
அரசூலி - பாதரசம்.
அரசெனம் - கோவைப்பிஞ்சு.
அரசேகண்டு, அரசொக்கனம் - கருணைக்கிழங்கு.
அரசோணம் - வெள்ளைப்பூண்டு.
அரச்சகம் - திருநாமப்பாலை, எருக்கு, கொம்பரக்கு.
அரச்செண்டு - கருணைக் கிழங்கு.
அரடு - ஓர் மரம்.
அரட்டி - அசமதாகம், ஓமம்.
அரணம் - கருஞ்சீரகம்,
அரணி - சூரியன், காடு, தீத்தட்டிக்கல், தீக்கடைக்கோல், முன்னை மரம், ஒருவகைப் பூண்டு.
அரணிகம் - தீக்கடைக்கோல்.
அரணிகேது - தீத்தட்டிக்கல், முன்னை மரம்.
அரணித்த பரு - கட்டி.

அரணிய - காடு.
அரணியகசம் - காட்டு யானை.
அரணிய கணம் - காட்டுச்சீரகம்.
அரணிய கதலி - காட்டு வாழை.
அரணியகம் - மலைவேம்பு.
அரணியகற்பாசி, அரணியகாரிபாணி - காட்டுப்பருத்திச்செடி.
அரணிய குசும்பம் - காட்டுச் செந்திருக்க மரம்.
அரணிய குலத்திகை - ஓர் செடி.
அரணியகேது - ஓர் செடி (அறியப்படாதது).
அரணிய கோலி - ஓர் கறிவகை.
அரணிய சடகம் - காட்டுக் கவுதாரி.
அரணிய சாரணை - காட்டிஞ்சி.
அரணிய சாலி - செவ்வகில், காட்டரிசி.
அரணிய சோகி - செம்முள்ளிக்கீரை.
அரணியஞ்சபத்திகம் - பெரிய முள்ளங்கி.
அரணிய தானியம் - காட்டரிசி.
அரணியதிலகம் - காட்டெள்.
அரணிய துளசி, அரணிய மாட்சிகம் - காட்டுத்துளசி, ஓர் ஈ.

அரணிய மார்ச்சாரம் - காட்டுப் பூனை.

அரணிய முட்கம் - காட்டு அவரை.

அரணியம் - காட்டுக் கரணை.

அரணிய யசுவன் - ஓநாய், நரி.

அரணிய ராசன் - சிங்கம்.

அரணியர் - காட்டுக் கரணை.

அரணிய வாயசம் - ஓர் பறவை, காட்டுக் காக்கை.

அரணியா - காட்டுக்கரணை, காட்டு மூங்கில்.

அரணுகம் - வால் மிளகு.

அரணை - அதிவிடயம்.

அரணைவால் துடிப்பு - அரணையின் வால்துடிப்புப் போல மனிதரின் நாடி விரைவாகத் துடித்தல்.

அரண் - மஞ்சள்.

அரதடம் - செங்கழுநீர், ✱ மணியரம்.

அரதம் - காதின்மை, ✱மணியரம், செங்கமுகு, செங்கழுநீர், கொம்பரத்தை, கடம்பு, பவளம், செம்பஞ்சு.

அரதனம் - மிருதபாடாணம், நவமணிப் பொதுப் பெயர் (தேயமணி, தெய்வமணி).

அரதனாகரம் - கடல்.

அரதேசம் - இரசம்.

அரதை - தும்பராட்டகம்.

அரத்தகம் - செம்பஞ்சு.

அரத்தசந்தம் - செஞ்சந்தனம்.

அரத்தம் - சிவப்பு, செம்பஞ்சு, செம்பருத்தி, செம்மெழுகு, செம்பரத்தை, பவளம், அரக்கு, பொன், இரத்தம், செங்கழுநீர் (செங்குவளை), குங்குமப்பூ, செங்கடம்பு, சமுத்திரக் கடம்பு, கடம்பு, மாணிக்கம்.

அரத்தனம் - இரத்தினம்.

அரத்தாங்கம் - பவளம்.

அரத்தி - செவ்வல்லி.

அரத்திதம் - செவ்வாமணக்கு.

அரத்தினி - முழங்கை.

அரத்துவாக்கி - கருஞ்சீரகம்.

அரத்தேர் - தும்பராட்டகம்.

அரத்தை - ஓர் வாசனைவேர், தும்பராட்டம், சிற்றரத்தை, பசரை, பேரரத்தை, முடக்கற்றான்.

அரத்தைக்குழு - ஈரரத்தை.

அரத்தொகுத்தி - செவ்வரத்தி.

அரத்தோற்பலம் - செங்கழுநீர் (செங்குவளை).

அரநெல்லி - வாய் விளங்கம், அருநெல்லி.

அரந்தம் - செங்கழுநீர், கற்பரி பாடாணம், கடுக்காய், தாமரை.

அரந்தளி - பட்டை மரம்.
அரந்தெல்லி - இரைஞ்சி.
அரந்தை - சொரி கொன்னை, சுரவெட்டை, பாரிச சன்னி, தும்பராட்டகம்.
அரபருத்தம் - வாழை.
அரபர்ணி - முள்ளங்கி.
அரபி - ஓர்வகைக் கடுக்காய்.
அரபிக் கடுக்காய் - ஓர் வகைக் கடுக்காய்.
அரபிக் குக்கில் - நீலக் குக்கில்.
அரபிப்பிசின் - ஓர்வகைப் பிசின்.
அரபிப்போளம் - ஓர்வகைப் போளம்
அரபியம் - பிரமிப் பூண்டு.
அரபீசம் - பாதரசம் (இரசம்).
அரபு - குருவி.
அரப்பதுமம் - துளசி, செந்தாமரை.
அரப்பு - இலுப்பைப் பிண்ணாக்கு.
அரப்பு மரம் - ஊஞ்சமரம்.
அரப்பொடி - இரும்புத்தூள் (இரும்பை அரத்தால் ராவிய பொடி).
அரமகள், அரமனாபம் - வாழை.
அரமாரவம் - நாயுருவிப் பூண்டு.
அரமானசூலை - ஓர்வகைச் சூலை நோய்.
அரமி - கடுக்காய்.
அரமியம் - பிரமிப்பூண்டு, நாயுருவி.
அரமீனக்கல் - சீமைக் காவிக்கல்.
அரமீன் - ஓர் வகைக் கடல் மீன்.
அரமுறி - இரும்பு முறிச்செடி, எஃகு.
அரம் - உருக்கு, இரணம், வெட்டிவேர்.
அரம்பை - வாழை, பொன், ஓமம் (அசமோதகம்) சவரிலோத்திரம்.
அரம்பைப்பலம் - வாழைப்பழம்.
அரம்பைப் பூ - வாழைப்பூ.
அரம்பையின் கனி - வாழைப்பழம்.
அரம்பையின் தோல் - வாழைப்பட்டை.
அரம்மீன் - ஓர்வகைக் கடல் மீன்.
அரயக்கொம்மை - ஓர் பூவாழை.
அரயரல் - அரசு.
அரரூட்கிழங்கு - கூவைக் கிழங்கு.
அரலி - அலரி.
அரலை - கடல், கழலைக்கட்டி, விதை, மருள் (ஒருவகைக் கற்றாழை), கோழை.
அரல் - சிலேட்டுமம், காடு, சுடுகாடு.
அரவக்கிரீடி - கீரிப்பூண்டு.
அரவப்பகை - கருடன்.
அரவமணி - உருத்திராட்சமணி,

நாகரத்தினம்.
அரவமணிக்கல் - மணிக்குடல்.
அரவமாகம் - அவல்.
அரவம் - குங்குமமரம்., அதிமதுரம், பாம்பு.
அரவாட்டிப்பச்சை - தொழுகண்ணி.
அரவாய்க்கடிப்பகை - வேப்பிலை.
அரவிகாந்தகம் - சிவப்பு இண்டங்கொடி.
அரவிந்தம் - தாமரைப்பூ, நாரை, இரசம், துளசி, செம்பு.
அரவிந்து - இரசம்.
அரவின் விஷத்துக்காதி - கப்புச்சடைச்சி.
அரவீசம் - இரசம்.
அரவு - விந்து, ஆயிலிய நட்சத்திரம்.
அரவுகடிப்பகை - வேப்பிலை.
அரவைத்தல் - புடமிடுதல்.
அரவைபித்தகரம் - காட்டுப்பயறு.
அரளம் - மரக்காளான்.
அரளி - பீநாறி, அலரி, நாறு மரம், பெருமரம், அரன் மஞ்சள்.
அரளி தொக்கு - பீநாறிப்பட்டை.
அரளிவேர் - அலரிவேர்.
அரள்காலிரம் - சவ்வீரம்.
அரனரதி - குசப்பாலை.
அரனாதி - கார்முகிற்பாடாணம்.
அரனார் வரம் - கொன்றை.
அரனார் விந்து - கொன்றைப் பிசின், பாதரசம்.
அரனிம்பம் - சிவனார் வேம்பு.
அரன் - மஞ்சள்.
அரன்சிறுகு - மான்செவிக்கள்ளி.
அரன்தலையணி, அரன் தலையளி - அறுகு.
அரன்பட்டை - பூவரசன் பட்டை.
அரன்பாகிகம் - செவ்வாழை.
அரன் பிரசாதனம் - செவ்வள்ளி.
அரன்பீசம் - இரசம்.
அரன்பூ - பூவரசம்பூ.
அரன்பூசைமரம் - செம்மந்தாரை.
அரன் பெண்டிர் - கந்தகம்.
அரன் மகாபீசம் - செவ்வுகா.
அரன் மகி - மஞ்சள்.
அரன் முப்பு - தலைப்பிண்டம்.
அரன் விந்து - இரசம்.
அரா - நாகமல்லி, பாம்பு.
அராகம் - பொன், சிவப்பு.
அராந்தல் - ஓர் காட்டுப்பலா.
அராபதம் - வண்டு.
அராமதம் பாணி - கீரிப்பிள்ளை.
அராம் - வாழை.
அராம்பை - கழுதைத்தும்பை.
அராலம் - குங்கிலியம்.

அராலி - பில்லிப்பிச்சு (செடி).

அராவாரம் - திராட்சைப் பழம்.

அராவைரி - மயில், கீரி, கருடன்.

அராளம் - குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம், இருவாட்சி, மரக்காளான்.

அரி - பொன், பெருங்காயம், விஷ்ணுகிராந்தி, சூரியன், காற்று, குரங்கு, கள், அரிசி, சிங்கம், கண்வரி, செம்மறியாடு, கிளி, நெற்கதிர், தவளை, ஒளி, மூங்கில், பாம்பு, குதிரை, நீர்த்துளி, பன்றி, வண்டு, மஞ்சள் நிறம், கொடிவேலி, நெருப்பு, துளசி, சுரம், உள்துளை, குயில், மயில், கருங்கிளி, பனைமட்டை, கருக்கு, கடுக்காய், அன்னம், குன்மம், காசம், கீழாநெல்லி, கொள்ளின்வேர், தான்றிக்காய், மஞ்சள், அரிநெல்லி, கருங்காலி, நிறம், பச்சை, வலிவு, வரி, விசுங்கபட்சி, மரவயிரம், மரகதம், கடல், அடர்த்தி, சந்தனம், செஞ்சந்தனம்.

அரிகந்தம் - செஞ்சந்தனம்.

அரிகமஞ்சரிகா - குப்பைமேனி.

அரிகரப்பான் - குழந்தைகளுக்குப் பெண்குறி, ஆண்குறி முதலிய விடங்களில் புற்றுண்டாகி உருவையழிக்கு மோர் வாதக்கரப்பன்.

அரிகரப்பான்பட்டை - கிளியூறப்பட்டை.

அரிகரி - அத்திக் கொழுந்து.

அரிகாந்தி - விட்டுணுகிராந்தி.

அரிகாரம் - சீனக்காரம், பொரிகாரம்.

அரிகிட்டி - காட்டுப்பன்றி.

அரிகியாந்தம் - பூனைக்காலி.

அரிகிரந்தி - விரைவில் பரவி சதையை அரித்து அழுகச் செய்யும் ஓர் வகைக் கிரந்தி.

அரிகீரை - அறைகீரை.

அரிகுதிரை - நெருப்பு, மூங்கில், நந்தவனம்.

அரிகுப்பை - பொடுதலை, தகரை.

அரிகேசா - இருவேலி.

அரிகேந்திரதாரி - மல்லிகை.

அரிகொடுவேலி - மூங்கில்.

அரிக்காந்தி - விட்டுணுக்கிராந்தி.

அரிக்காமரம் - ஆத்தி மரம்.

அரிக்கி - கடுக்காய்.

அரிக்கியந்தம் - பூனைக்காலி.

அரிக்கிராவி - ஓர்வகைநெல்.

அரிக்குரம் - காட்டுக் கருணைக் கிழங்கு, ஓர் பூண்டு.

அரிங்கம் - அதிமதுரம்.

அரிச சந்தனம் - இலுப்பைப்பூ, கள்.
அரிசதம் - எலுமிச்சை.
அரிசத்தி - அரிதாரம், மஞ்சள், தாமரைப் பூந்தாது.
அரிசநோய் - மூலநோய்.
அரிசந்தனம் - ஐந்தருக்களிலொன்று, செஞ்சந்தனம்.
அரிசந்திரா - செவ்வெருக்கு.
அரிசம் - மிளகு, மஞ்சள், மூலம், பாயுமுளை.
அரிசம் மாரிகம் - நரிக்கொன்னை.
அரிசய மங்கு - கொன்றை.
அரிசயம் - எலுமிச்சை, சரக்கொன்றை, கொன்றை.
அரிசர நவ்வல் - சிறு நாவல், நரி நவ்வல்.
அரிசரி - அத்திக் கொழுந்து, பெருங்குமிழ்.
அரிசர் - பெருங்குமிழ்.
அரிசலம் - எலுமிச்சை, சரக்கொன்றை, கொன்றை மரம்.
அரிசவர்த்தமன் - கண்ணில் உண்டாகும் ஓர்வகைக் கட்டி.
அரிசவிதம் - சேங்கொட்டை.
அரிசனத்துவயம் - மஞ்சள், மரமஞ்சள்.
அரிசனம் - மஞ்சள், கொன்றை, எலுமிச்சை.
அரிசனி - குத்தல்வலி.
அரிசன் - மஞ்சள்.
அரிசன்னியம் - நரிப்பயற்றங் கொடி.
அரிசா - பெருங்குமிழ், மிளகு.
அரிசாகிகம் - பெருங்குமிழ்.
அரிசாரணம் - மாவிலிங்கம்.
அரிசாவிரர் - பெருங்குமிழ்.
அரிசி - தாமிரம், ஆரைக்காலி, ஆறுவகை அரிசி, உயிர்ப்பு, மருத்துவத்திற்குதவும் அறுவகை அரிசி, கார்போகரிசி, புழுங்கலரிசி, வாலுளுவையரிசி, வாற்கோதுமையரிசி, திப்பிலியரிசி, கோதுமையரிசி, பத்தியத்திற்குதவும் அரிசி, வெட்பாலையரிசி, சவ்வரிசி, மூங்கிலரிசி, ஏலரிசி கருங்குருவையரிசி.
அரிசிக்கம்பு - ஓர்வகைக் கம்பு.
அரிசிக் காடி - அரிசிக் கஞ்சியைப் புளிக்க வைத்து அதனின்றும் வடித்த காடி.
அரிசிங்கா மூலி - சிறியாணங்கை.
அரிசிங்கி - அழகைக் குறைக்கும் இரண நோய்.
அரிசிச் சாராயம் - அரிசியைப் புளிக்க வைத்து அதனின்று வடிக்கும் மது.
அரிசிச் சோளம் - ஓர் வகைப் பெரிய சோளம்.

அரிசித் திப்பிலி - சிறுதிப்பிலி.
அரிசிப்புல் - மத்தங்காய்ப்புல், கம்பரிசி.
அரிசியரக்கு - பொடியரக்கு.
அரிசியிலந்தை - நரியிலந்தை.
அரிசிரங்கு - அரிப்போடு கூடிய சிரங்கு (சொறி சிரங்கு).
அரிசினம் - மஞ்சள்.
அரிசு - வேம்பு, மிளகுக் கொடி, தேன், குமிழ்.
அரிசுவை - மிளகு.
அரிசுனம் - மருதமரம்.
அரிசோ பகந்தரவிரணம் - மூலப் பவுத்திரம்.
அரிசோமம் - ஓர்வகைச் சோமப்பூடு.
அரிசோ நோய் - ஆண்குறியில் சிறு சிறு முளைகள் போலெழும்பிப் புண்ணாகி இரத்தம் ஒழுகும் ஓர்வித மேகப்புண்.
அரிசோவர்த்தம நோய் - கண்ணிமைகளில் சதை வளர்ந்து வெள்ளரி விதைகளைப் போல சிரங்குகள் உண்டாகிச் சிவந்து, எரிச்சலையும் சிறிது வலியையும் உண்டாக்கும் ஒருவித கண்ணோய்.
அரிச்சணம் - செஞ்சந்தனம், சந்தனம்.
அரிச்சந்தனம் - இரத்த சந்தனம், ஐந்தருக்களிலொன்று, சந்தனம், செஞ்சந்தனம்.
அரிச்சமை - கொன்றை.
அரிச்சன் - மருந்து.
அரிச்சாவி - பெருங்குமிழ்.
அரிச்சுனம் - மருதமரம், எருக்கு.
அரிச்சோளம் - வெள்ளைச் சோளம்.
அரிச்சோனகம் - நரியீஞ்சு.
அரிடம் - கடுகுரோகிணி, வேம்பு, மூலநோயில் ஓர் வகை.
அரிடரோகிணி - கடுகுரோகிணி.
அரிடலோசனம் - நரிவழுக்கை எனும் பிரமிப்பூடு.
அரிட்டகம் - பூவந்திக் கொட்டை, நோயால் வருந்துதல்; வேம்பு.
அரிட்டக்கிரகம் - பிரசவவீடு.
அரிட்டம் - மோர், வேம்பு, பழரசச் சாராயம், மிளகரணை, மருளூமத்தை, வெள்ளுள்ளி, மரணக்குறி, நிலப்பூசனி, பிரசவிக்கும் அறை, கடுகுரோகணி, பொன்னாங்காய், வெள்வெங்காயம், சிற்றாமணக்கெண்ணெய், முட்டை, தாம்பிரம், கள், வெங்காயம், மிளகு,

நிலவேம்பு, சீமைநிலவேம்பு, ஓர் மரம், செம்பு, ஓர்வித நோய், காக்கை.

அரிட்டம் போக்கி - வெள்ளைப் பூடு.

அரிட்டி - கடுக்காய்.

அரிட்டை - கடுகுரோகணி.

அரிஷம் - மூலநோய் அதாவது ஆசனவாயில் ஏற்படும் இரணத்தோடு கூடிய முளை.

அரிணமஞ்சா - குப்பைமேனி,.

அரிணம் - சந்தனம், சிவப்பு, மான், வெண்ணிறம், யானை, பொன், எலுமிச்சை.

அரிணி - வஞ்சிக்கொடி.

அரிணீ - மான், வல்லாரி, முலைச்சிலந்தி.

அரிணை - கள்.

அரிதகி - கடுக்காய், பெருவில்வம்.

அரித கிருதம் - வாந்தி, குமட்டல் முதலிய பித்த நோய்களுக்காக, விதை நீக்கிய கடுக்காயோடு வேறு சில மருந்துச் சரக்குகளையும் சேர்த்து நெய்யிலிட்டுக் காய்ச்சி எடுத்த மருந்து. (ஆயுர்வேதம்).

அரிதகிலேகியம் - மலம் தாராளமாகப் போவதற்காகக் கடுக்காயைக் கொண்டு தயாரித்த ஓர் லேகியம்.

அரிதகி வடகம் - கடுக்காயை அரைத்து மாத்திரையாக உபயோகிக்கும் மருந்து.

அரிதகு - கடுக்காய்.

அரிதகுஞ்சை - பச்சைக் குன்றி.

அரிதசாகதம் - முருங்கை.

அரிதசாகம் - பெருமுருங்கை.

அரிதசாதகம் - முருங்கை

அரிதமஞ்சரி - குப்பைமேனி.

அரிதமிட்டரி, அரிதமிஷ்டரி - தேள் கொடுக்கி.

அரிதம் - மஞ்சள், நீலநிறம், பொன்னிறப்பச்சை, பசும்புல் தரை, பயறு, திசை, பொன்னிறம், பச்சை.

அரிதம்சம் - மஞ்சபத்திரி.

அரிதர்மம் - வெள்வேல்.

அரிதல் - அரிதாரம்.

அரிதவெலி - மஞ்சள் நிறமான ஓர்வகை எலி. இது கடித்தால் அக்கினி மந்தம், கொட்டாவி, மயிர் கூச்செறிதல் முதலியவை உண்டாகும்.

அரிதளமி - அரிதாரம்.

அரிதளம் - தாளக பாடாணம், பொன்னரிதாரம்.

அரிதாசம் - செம்பை (ஓர் மரம்).

அரிதாரக்கட்டு - தாளகக்கட்டு.

அரிதார செந்தூரி - கப்புச் சடைச்சி.

அரிதார நாகம் - தலைச்சன் பிள்ளையின் தலை மண்டையோட்டினின்று தயாரிக்குமோர் அண்டச் சுண்ணம்.

அரிதார நீற்றி - முட்பலா.

அரிதார பந்தனி - அரிதார செந்தூரி.

அரிதார பாஷிகம் - நரிவெங்காயம்.

அரிதாரப்புகை - அகத், வயித், காவியத்தில் (1000) கூறியுள்ள ஒரு மருந்துப்புகை; கை, காலுளைச்சல், கறடு முதலியவைகளுக்கு அரிதாரத்தைக் கொண்டு போடும் புகை.

அரிதாரம் - பாடாணத்தோடு கந்தகங்கலந்துண்டாகிய ஓர் சரக்கு; இலந்தை; தாளக பாடாணம்; மூங்கில்; பொன்னரிதாரம்; மாயன் விந்து; கொடிவேலி; கஸ்தூரி; சீனம், பர்மா, சுமுத்திரா முதலிய இடங்களினின்று இறக்குமதியாகுஞ் சரக்கு; இதில் கட்டரிதாரம், கரட்டரி தாரம், கனத்தீயரிதாரம், பொன்னரிதாரம், மடலரி தாரம், தகட்டரிதாரம், வைப்பரிதாரம், தாளகம், கல்லரிதாரம் எனப் பலவகையுண்டு.

அரிதாரவஞ்சி - கொத்துமல்லி (தனியா).

அரிதாரவிபூதிச்சி - தும்பி.

அரிதாரவெண்ணெய் - வலி, சொறி, சிரங்கு, கரப்பன், படை, ஆறாப்புண் முதலியவைகளுக்கு, அரிதாரத்தை மற்ற சரக்குகளுடன் சேர்த்து நல்லெண்ணெயிலிட்டுத் தயாரிக்கும் ஓர் மருந்தெண்ணெய்.

அரிதாலம் - அரிதாரம், மஞ்சள் நிறமான ஓர் சாதிப்புறா, பச்சைப் புறா, வெண்ணிறமான மலையாள தேசத்து சாதிப்புறா.

அரிதாவம் - அரிதாரம்.

அரிதாளகம் - பொன்னரிதாரம்.

அரிதாளம் - அரிதாரம், பொன்னரிதாரம்.

அரிதானம் - அரிதாரம், மயில்துத்தம்.

அரிதினவப்பட்சி, அரிதின்பாலை - திருநாமப்பாலை.

அரிதின் வயச்சி - காட்டு நன்னாரி, நன்னாரி, திருநாமப்பாலை.

அரிது - பச்சை.

அரிதேவிநாதம் - அரிதாரம்.

அரிதை - கடுக்காய், பச்சைப்பயறு, கரும்புள், செம்பை, கருஞ்செம்பை.

அரித்தம் - கடுக்காய்.

அரித்தல் - வடிகட்டல், சிறிது சிறிதாகக் கடித்தல், தூசுகளை நீக்குதல், தினவெடுத்தல்.

அரித்தி - கடுக்காய்.

அரித்திகா - நறுவிலி.

அரித்திரசிகை - தாமிரச் சிகை (அறியப் படாதது).

அரித்திரப்பிரமேகம் - பித்தவெட்டை; மஞ்சள் நிறமாக வெள்ளை கண்டு, எரிச்சலுடன் நீரிறங்கிக் கடுப்பையும் விறுவிறுப்பையும் உண்டாக்கும் ஓர்வகைப் பிரமேகம்.

அரித்திரம் - மஞ்சள், சுக்கான்கல், கந்தம், மரமஞ்சள்.

அரித்திரா - மஞ்சள், மஞ்சள் கிழங்கின் மாவு.

அரித்திராசுரம் - உடம்பு முழுவதும் மஞ்சள் நிறம் படர்ந்து தடிப்பு, முகமினுமினுப்பு, கீல்களில் வீக்கம், நெஞ்சுலர்தல், சன்னிபாத சுரத்திற்குரிய குணங்கள் இவைகளைக் காட்டும் ஓர்வகைச் சுரம். இது பித்தக் கோளாறினாலேற் பட்டுக்குடலைத் தாக்கும்.

அரித்திராபம் - மஞ்சள், மஞ்சள் நிறம் (பொன்னிறம்).

அரித்திரா போகம் - உடல் உறவினால் ஏற்படும் பித்தவெட்டை.

அரித்திராபோகி - நின்று சிணுங்கி (செடி).

அரித்திராப் பிரமேகம் - அரித்திரப் பிரமேகம்.

அரித்திரை - மஞ்சள்.

அரித்து - பச்சை.

அரித்துருமம் - தும்பை, பவளம், மத்திச் செடி.

அரிநாம மறுமூலி - விட்டுணுகிராந்தி,

அரிநாரி - குண்டுபனை.

அரிநாலம் - கடுக்காய்.

அரிநிம்பம் - மலைவேம்பு.

அரிநிறக்கல் - நீலக்கல்.

அரிநுகர்மூலம் - கோரைக்கிழங்கு.

அரிநெல்லி - அருநெல்லி.

அரிபரிச்சம் - குன்றிவேர்.

அரிபாலுகம் - தக்கோலம், வாசனை மிளகு.

அரிபிளவை - சதையை அரித்துக்குடைந்து செல்லும் கட்டி; இதில் சதை அழுகி வெளிப்படும். ஓர் வகை விடப்புண்.

அரிப்பிரியம் - நேய மரம், சங்கு, கடம்பு, காட்டுக்கடம்பு, துளசி.

அரிப்பிரியை - துளசி.

அரிப்பினா - பெண்சிங்கம்.

அரிப்புண் - மூக்கு, கண், புருவம் முதலிய இடங்களில் பரவி, சதையை அரித்து புண்ணாக்கி நீடித்து இருக்கும் கிரந்திநோய். மூக்கை அரிக்கும் புண்.
அரிப்புதை - இரவு.
அரிப்புப்படை - உடலில் படர்ந்து அரிப்பை உண்டாக்கும் தோல் நோய்.
அரிப்புழு - சதையை அரித்துத் தின்னும் புழு.
அரிப்புழுக்கல் - சோறு.
அரிப்பூ - ஓர்பூடு.
அரிமகத்துவம் - தேக்கு.
அரிமஞ்சரி - குப்பைமேனி, பூனை வணங்கி.
அரிமஞ்சள் - மஞ்சள், தான்றிக்காய்.
அரிமணல் - நுண்மணல், சலித்த மணல்.
அரிமணி - மரகதம்.
அரிமண்டகம் - பனிப்பயறு. இது பனியைக் கொண்டு விளையும்.
அரிமண்டை - கடலை.
அரிமதா - வெள்வேல், தகரை, வாழை.
அரிமத்தகம் - பச்சைப்பயறு.
அரிமந்தம் - கடலை.
அரிமரம் - பாலுறு முள்ளுமரம்.
அரிமலம், அரிமல் - மாவிலிங்கம்.
அரிமா - ஆண் சிங்கம், ஒட்டு மாமரம்.
அரிமாத்தம் - தூதுவளை.
அரிமான் - அரிமா (ஆண்சிங்கம்).
அரிமின் - அரிதாரம்.
அரிமூங்கில் - மரகதம்.
அரிமூத்திரம் - சிங்கத்தின் சிறுநீர்; இது மிகக்காரம் வாய்ந்தது; விடத்தன்மையுள்ளது; உடலில் பட்டால் புண்ணாகும்; செம்பு பழுக்கும்.
அரிமேகம் - உடலில் நமைச்சலையுண்டாக்கும் ஓர்வகை மேகநோய்.
அரிமேதகம் - ஓர் பூச்சி.
அரிமேதம் - பீவேலமரம், குடைவேல், தும்பை, வெள்வேல்.
அரிமைதா - வெள்வேல்.
அரிமோதகி - நவுகு (முட்செடி).
அரியகண்டகி - வளையலுப்பு.
அரியகம் - கொன்றை மரம்.
அரியகரப்பான் பட்டை - கிளியூறல்பட்டை.
அரியசம் - சரக்கொன்றை, கொன்றை, முத்தக்காசு.
அரியசாரணம் - மாவிலிங்கம்.
அரியசாரணை, அரியசாரன் - சாரணைக் கொடி, மாவிலிங்கமரம்.

அரியணைச் செல்வி - அரிதாரம்.

அரியதசமாத்தகம் - தூதுவளை.

அரியபச்சை - வங்காளப் பச்சை (அதாவது) செம்பின் களிம்பு.

அரியமா - சூரியன்.

அரியமான் - ஓர் பூண்டு.

அரியம் - கடுகுரோகிணி, வேம்பு.

அரியல் - கள்.

அரியவனாதி - இலவங்கப்பட்டை.

அரியாசம் - ஓர் வாசனைத் திரவியம்.

அரியாணம் - பெருங்காசி அல்லது பெருஞ்சீரகம்.

அரியா யோகம் - மருந்து, மருந்துக்கூட்டு.

அரியாறு - அரிசி (காண்க).

அரியான் - குருவை நெல்.

அரியின்திப்பிலி - அரிசித்திப்பிலி.

அரியுண்மூலம் - கோரைக்கிழங்கு.

அரியுப்பு - கறியுப்பு, கெந்தகபேருப்பு.

அரியூர்தி - கருடன்.

அரியேறி - கவுரி பாடாணம்.

அரியேறு - ஆண் சிங்கம்.

அரியோகிதம் - நாகப்படக் கற்றாழை.

அரிரோகணி - பீதரோகணி.

அரிலாதிகம் - நாட்டுவாழை.

அரிலி - தினைத்தாள், அரிதாள்.

அரில் - மூங்கில், சிறிய காடு, சிறுபுதர், மரகதம்.

அரிவல்லபை - பாதரி.

அரிவல்லி - வட்டு.

அரிவாகை - பன்றிவாகை.

அரிவாஓமம் - தக்கோலம்.

அரிவாசி - குதிரைப்பல் பாடாணம்.

அரிவாட்கள்ளன், அரிவாட்கொண்டன் - அரிவாள் கள்ளன்.

அரிவாண்மனைப்பூண்டு - இது ஓர் தாழ்ந்த செடி, ஓர் முட்செடி.

அரிவாண் மூக்கன் - அரிவாள் மூக்கன்.

அரிவாலுகம் - முசுமுசுக்கை, ஏலாவாலுகம் (பேரேலம்), சுக்கான்.

அரிவாள் கள்ளன், அரிவாள் முகம், அரிவாள் மூக்கன் - காயப்பூண்டு; ஆயுதத்தாலுண்டான காயத்தை ஆற்றுந் தன்மையுள்ள பூண்டு; அரிவாள் போல் இலைகளையுடைய பூண்டு; அரிவாள் பிடிப்பதனால் கணுக்கையில் உண்டாகும் வீக்கம் அல்லது நோய்.

அரிவாள் மூக்கு - பிளிரை, அரிவாளைப் போன்ற மூக்குடைய ஓர் பறவை; காயப்பூண்டு.

அரிவாள் மூக்குப் பச்சிலை - அரிவாண்மனைப் பூண்டு.

அரிவானனம் - ✸முள்ளங்கம்.

அரிவி - நொச்சி, வஞ்சிக்கொடி.

அரிவிக் கள்ளன் - அரிவாள் கள்ளன்.

அரிவிடந்தீண்டி - செய்யான்.

அரிவீகம் - நெடுநாரை.

அரிவுசம் - சிறுகுறிஞ்சா.

அரினம் - மான், சிவப்பு.

அரினி - கோழி, கருங்கோழி, மேற்தோல் கருப்பாயுள்ள கோழி.

அரின்முப்பு - தலைப்பிண்டம்.

அரீடம் - கடுகுரோகணி, கடுகு.

அரு - அணு, காயம், புண், அறிவு, அட்டை.

அருகசனி - பேரேலம்.

அருகசாமி - சிறுகடலை.

அருகஞ்சி - சீந்திற்கொடி.

அருகணம் - பச்சைமிளகாய்.

அருகணி - நான்முகப்பிரண்டை, பிரண்டைக்கொடி.

அருகணோதை - பச்சை வாழை.

அருகபம் - சாதி முத்து.

அருகம் - சீந்திற்கொடி, அகிற்கட்டை, யானை எலுமிச்சை.

அருகனும் சோமனும் - சூரிய சந்திர நாடிகள்.

அருகன்வாகனம் - தாமரைப்பூ.

அருகாவிரா - பெருங்குமிழ்.

அருகி - கள்.

அருகியரத்தம் - பூனைக்காலி.

அருகியன் மருதம் - செம்பாலை.

அருகியாத்தம் - பூனைக்காலி.

அருகிலம் - கற்கடகசிங்கி.

அருகின் வசி - தீயபாகல்.

அருகு - சீந்தில்.

அருகுவைத்தல் - சூட்டுக்கோலிடல்

அருகேசனி - அருகசனி.

அருகோலம் - அந்திமல்லிகை.

அருக்கணம் - கொண்டைக்கடலை.

அருக்கநாள் - ஞாயிற்றுக் கிழமை.

அருக்கபாதவம் - வேப்பமரம்.

அருக்கபுஷ்பிகை - கொத்தான்.

அருக்கம் - எருக்கு, சுக்கு, தாம்பிரம், இரும்பு, உணவு, குதிரை, நெருப்பு, பளிங்கு, பொன், நீர்க்காக்கை.

அருக்கம்பால் - எருக்கம்பால்.

அருக்கல் - சுண்டக்காய்ச்சல், அச்சம்.

அருக்கன் - சூரியன், சுக்கு, பேரீஞ்சு, எருக்கு.

அருக்கன் கொம்பு - சுக்கு.

அருக்கன் கோபிகம் - பொந்தம் புளியமரம்.

அருக்கன் பாரி - நிலக்குரோசினை.

அருக்கன்பால் - அருக்கம்பால்.

அருக்காசன் - யானை.

அருக்கி - கடுக்காய்.

அருக்கிய திரவியம் - பூசைமுறைக்கு உதவும் பொருட்களாகிய அட்சதை, தருப்பைநுனி, வெண்கடுகு முதலியவை.

அருக்கியந்தம், அருக்கியாதகம் - பூனைக்காலி.

அருக்கினம் - நோயில்லாமை.

அருக்கு - எருக்கு, சீந்தில், எருக்கிலை.

அருக்குசளி - சீந்திற்கொடி.

அருக்குதல் - சுண்டக்காய்ச்சல்.

அருக்கும் - எருக்கு, பொன், நீர்க்காக்கை.

அருக்கோபலம் - பளிங்கு, சூரிய காந்தக்கல், சூரிய காந்தப்பூ.

அருங்கலச் செவ்விதழ் - பொற்றாமரை.

அருங்கலம் - பொங்குதாமரை, (தாமரைப் பூவில் ஒருவகை) தாமரைப் பூவினுட் பகுதி.

அருங்கிசிரோகம் - தலையில் ஏற்படும் ஓர் நோய்.

அருங்கிடை - பட்டினி, அதிகப்பட்டினி.

அருங்கிடையாய்க் கிடத்தல் - நோயால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடத்தல்.

அருங்கினி மேடவர்த்தமம் - கண்ணின் இமையைப் பற்றிய ஓர் வகை நோய்.

அருங்கொம்பில் பூ - கொம்புத் தேன்.

அருங்கோடை - கடுவெயிற்காலம், அக்கினி நட்சத்திரம்.

அருசகம் - சேங்கொட்டை.

அருசகா -பப்பரப்புளி.

அருசஞ்சி - சீந்தில்.

அருசம் - சீந்தில், மூலம், மூக்கில் வளர்ந்த சதை.

அருசள் - கல்.

அருசள் கவலு - சிலாசத்து.

அருசனாகதி - வேம்பு.

அருசனி - பிரண்டை.

அருசாகுமிழ் - பெருங்குமிழ்.

அருசாரை - நாளா (செடி).

அருசாவிரா - பெருங்குமிழ் மரம்.

அருசி - சுவையின்மை, பசியின்மை, பித்தவரோசிகம், உணவில் விருப்பிருந்தும் உண்ண முடியாமை.

அருசிகரம் - நீர்விளா.
அருசிசூலை - அருசியை உண்டாக்கும் ஓர்விதச் சூலை.
அருசிப்பித்தம் - பித்தக் கோளாறினால் உணவை வெறுக்கும் ஓர்வகை நோய்.
அருசியரத்தம், அருசியார்த்தம் - பூனைக்காலி.
அருசிராணம் - பழுக்கச் செய்து ஆற்றும் மருந்து.
அருசீன வயசி - திருநாமப்பாலை, திரிபாலை.
அருசுராணம் - புண்கழுவும் நீர்.
அருசுனம் - எருக்கஞ்செடி, பாகல், பொன், மத்தி, மருதமரம், அறுகு, வெண்மை, செம்மத்தி, மயில், கடப்பம்பூ, புல், அரக்கு, வெள்விழிமேல் கடப்பம்பூ நிறமான படலத்தை உண்டாக்கும் ஓர் வகைக் கண்ணோய்.
அருச்சணி - பேரேலம்.
அருச்சந்தம் - செம்பு.
அருச்சாலி - பெருங்குமிழ்.
அருச்சுனம் - அரிசுனம்.
அருச்சுனி - ஓர் பாம்பு, தலைப்பிடிக்கி, பசு.
அருச்சுன் - மருந்து.
அருஞ்சந்தம் - செம்பு.
அருஞ்சாவிரா - பெருங்குமிழ்.
அருஞ்சிகை - பரவும் இரணம்.
அருஞ்சிலைக்கல் - கெண்டகச் சிலை.
அருஞ்சில் - அழிஞ்சில், செம்மரம், சேமரம்.
அருஞ்சோதி - ஓர்வகைச் சிகப்பு நெல்.
அருடம் - மிளகு, வேம்பு, பூனைக்காஞ்சொறி, கடுகுரோகணி, கோதுமை.
அருட்கரம் - சேங்கொட்டை.
அருட்கிழங்கு - கருணைக்கிழங்கு.
அருட்சத்தி, அருட்சித்தி - பாதரசம்.
அருட்சிலை - கருங்கல்.
அருட்சோதி - கௌரி பாடாணம்.
அருட்டகம் - கடுகு ரோகணி.
அருட்டம் - கடுகுரோகணி, வேம்பு, முட்டை, மிளகு, செம்பு.
அருட்டன் - மிளகு.
அருட்டி - நடுக்கம், மிளகு.
அருட்டெண், அருட்டெனம், அருட்டே - மிளகு.
அருட்டை - கடுகுரோகணி.
அருஷிரைநோய் - தலையில் வேர்க்குருவைப் போலுண்டாக்கி அதனின்று ஊன்வடியச் செய்யும் ஓர் இரண நோய்.

அருணகமலம் - செந்தாமரை.

அருணகுட்டம் - வாயுத் தொடர்பால் உடல் முழுவதும் கருஞ் சிவப்பான தழும்புகள் உண்டாகி குத்தல் வலியையேற்படுத்தி துன்புறுத்தும் ஓர் வகைக் குட்ட நோய்.

அருணக்கனி - எலுமிச்சம் பழம்.

அருணச் சிவப்பு, அருண நிறம் - சூரியனைப் போன்ற சிவந்த நிறம்.

அருணபகம் - மிளகு.

அருணபுட்பம் - ஒருவகைப் புல்லின் பூ, ஓர் பூண்டு.

அருணமணி - மாணிக்கம்.

அருணம் - எலுமிச்சை, மஞ்சிட்டி, செம்மறியாடு, ஆமணக்கெண்ணெய், மான், கோழி, பொன், அதிவிடயம், ஆடு, யானை, வேம்பு, செம்பு, மிளகு, சிந்தூரம், விடியல், அதிகச் சிவந்த நிறம், கருமை கலந்த சிவப்பு, சிவப்பான தழும்பு படிந்ததும் திமிர் வாய்ந்ததுமான ஓர்வகைக் குட்டம். ஓர் சிறிய விடப் பிராணி (ஓர்வகைக் கருஞ்சிவப் பெலி), ஓர் பூண்டு, சிகப்புப்பசு, கெம்பு.

அருணயா - காட்டுக் கருணை.

அருணலோசனம் - புறா, சிவந்த கண்.

அருணவம் - கடல், நீர்.

அருணவூர் - இந்திரகோபப்பூச்சி.

அருணவெலி - ஓர் வகைக் கருஞ்சிவப்பெலி.

அருணவேலி - செங்கொடிவேலி.

அருணனாசனம் - அருணலோசனம்.

அருணனிற புட்பி - சிவப்பு அலரி.

அருணனினம் - திருநாமப்பாலை, நன்னாரி.

அருணன் - சூரியன், புதன், ஏகம்பச்சாரம், வயிரம்.

அருணா - அதிவிடயம், மஞ்சிட்டி, கபிலச்சிகப்பு.

அருணாக்கிரசன் - கருடன்.

அருணாதி - வேம்பு.

அருணாதியெலி - ஆறுவித விடமுள்ள எலிகள். இவை கடித்தால் சன்னி பாதக் குறிகளுடன் இரத்தம் வடிதல், கட்டிகள் எழும்புதல் முதலியவை உண்டாகும்.

அருணாத்து மசன் - சடாயு.

அருணாநதி - வேம்பு.

அருணி - சித்திர மூலம்.

அருணினம் - அருணனினம்.

அருணோதயம் - விடியற்காலை, சூரியோதயம்.
அருணோபலம் - கெம்பு.
அருண் - விலாமிச்சு.
அருண்டி - எலுமிச்சை.
அருண்மரம் - முதிராத மாதுளை.
அருதகி - கடுக்காய்.
அருதா - சதாப்பிலை; இது குழந்தைகட்கு மேற்பூச உதவும்.
அருதாவேசனி - பெருங்காளான்.
அருதிவருதி - திரிபாலை.
அருதினவயச்சி - திருநாமப்பாலை.
அருத்த நாள் - பாதிநாள், உச்சிப்பொழுது.
அருத்தநிசா - நடு இராத்திரி.
அருத்தபாகம் - சமபங்கு.
அருத்தம் - பொன், குக்கில், குங்கிலியம், பாதி.
அருத்தயாமம் - அருத்தநிசா.
அருத்தரம் - மரமஞ்சள்.
அருத்தராளி - செம்பருத்தி.
அருத்தல் - உண்பித்தல், அனுபவித்தல்.
அருத்தி - பாதம், கள்.
அருத்தியத்தம் - பூனைக்காலி.
அருத்திரமாசு - பம்பளிமாசு.
அருத்திரம் - மரமஞ்சள், கிழங்கு மஞ்சள்.
அருத்திராளி - அருத்தராளி.
அருத்துதல் - உண்ண வைத்தல், பாதியாகச் செய்தல்.
அருத்துருமம் - வெள்வேலமரம்.
அருத்துரோகிதம் - பரங்கியாமணக்கு.
அருநங்கன் - நாகப்பாம்பு.
அருநீர் - கண்ணீர்.
அருநீர்த்ததும்பல் - எப்போதும் நீரொழுகும் ஓர் கண்ணோய்.
அருநீலியம் - சிறுநீலி.
அருநெல்லி - வரிநெல்லி, சிறுநெல்லி, கருநெல்லி, கருவேம்பு.
அருநேரளி - பிடங்குநாரி. (ஒரு செடி)
அருந்தகம் - பொன், எருக்கு.
அருந்தும்மட்டிக்காய் - சிறுதும்மட்டி.
அருந்துருமம் - வெள்வேல்.
அருபம் - மிளகு.
அருபருத்தம் - வாழை.
அருபாகம் - கையாந்தகரை.
அருபூலா - வறட்பூலா நீர்ப்பூலா.
அருப்பகம் - பலமில்லாதது, விலங்கின் குட்டி.
அருப்பகன் - குழந்தை.
அருப்பபலம் - இலிச்சை.
அருப்பம் - கள், கீரை, மோர், தொடரிப்பூண்டு, இடித்த மா, முகநோய், பிட்டு, காடு, பனி, நோய், தயிர்க்காடி, துக்கம்.

அருப்பம் பூச்சி - ஓர்வகைப் பச்சைப் பூச்சி.

அருப்பலம் - அனிச்சமரம், புல்லரிசி.

அருப்பவம் - அனிச்சை.

அருப்பிரமம் - தொட்டால் வாடி

அருப்பு - தயிர்.

அருமணவன் - ஓர் வகை அகில்.

அருமரம் - முதிர்ந்த மாதுளை மரம், வெள்வேல்.

அருமருந்து - அமிர்தம், பெருமருந்து.

அருமம் - கண்ணிலுண்டாகும் கழலையைப் போன்ற ஓர் சிறிய கட்டி. இது தசைநார் நரம்புகள் பொருந்தியுள்ள சதைத் துணுக்கைப் போலிருக்கும்; இதில் ஐந்து விதமுண்டு.

அருமூலி - மூர்ச்சை தெளியும்படி மூக்கில் நசியமிடும் ஓர் மலை மூலிகை.

அருமேதகம் - விடப்பிராணி கடித்ததனால் ஏற்பட்ட வீக்கம் அல்லது கொப்புளம்.

அரும் - சீந்தில்.

அரும்பம் - சாலாங்கபாடாணம்.

அரும்பவம் - அனிச்சை.

அரும்பி - குங்குமப்பாடாணம்.

அரும்பு - மொக்கு, பூ.

அரும்பை - பேய்த்தும்பை

அருருவம் - பெருமரம்.

அருவதா - சதாப்பிலை, கழலை.

அருவதான் - சதாப்பிலை.

அருவருளிமூலி - சிற்றாமணக்கு.

அருவல் - இறுகப்பிடிக்குமோர் வலி, கண் கரித்தல் (அருவுதல்).

அருவாபு - சாரணை.

அருவாப்பூண்டு - ✱முரனகுதும்பை.

அருவி - தினைத்தாள்.

அருவிநீர் பாய்தல் - கண்ணினின்று தாரை தாரையாய் நீர் வழியும் ஒரு கண்ணோய்.

அருவு - அத்தி.

அருவொருதி - வேம்பு.

அருளகம் - வெள்ளெருக்கு.

அருளகிலாச்சம் - பூனைக்காலி.

அருளக்கமயம் - தூதுவளை.

அருளம் - பொன்.

அருளரசி, அருளரிசி -வெட்பாலையரிசி, குடசப்பாலை.

அருளரோசிகம் - புல்லுருவி.

அருளல் - தூக்கம் விழித்தல்.

அருளவம் - அழிஞ்சில், பெருமரம்.

அருளாகி - குடசப்பாலை.

அருளாசி - வேம்பு, வெட்பாலை, குடப்பாலை.

அருளாதி - குடசப்பாலை

அல்லது வெட்பாலை (குளப்பாலை), தூதுவளை.

அருளாதிக்கியாழம் (குடிநீர்) - வெட்பாலை அரிசியுடன் கடைச் சரக்குகளைச் சேர்த்துச் செய்த குடிநீர்; வயிற்றிரைச்சல், இரத்தக்கடுப்பு இவைகள் தீருவதற்குப் பயன் படுத்துவர்.

அருளாதோதியம் - புளிப் பிலந்தை.

அருளாந்தை - பாளை யுடைச்சி.

அருளாபு - சாரணை.

அருளாபோகிகம் - புளி மாதுளை.

அருளாப்பு - சாரணை.

அருளானவன்னம் - தங்கம்.

அருளி - வீரம்; இருள் மரம்.

அருளு - பெருமரப்பட்டை.

அருளுத்த சாரம் - ஊர்க்குருவி.

அருளுந்து, அருளுபதி - வேம்பு.

அருளுவம் - அழிஞ்சில், பெருமரம்.

அருளுறுதி - வேம்பு, கோடகசாலை, சந்தனம்.

அருளோதியம் - புளிப்புக்கொடி முந்திரி.

அருள் - இரும்பகம் (இருள்மரம்).

அருள்சத்தி அருள்சித்தி - இரதம்.

அருள்சோதி - கௌரி பாடாணம்.

அருள்பாத மூலி - நரிப்பாலை.

அருள்மரம் - முதிர்ந்த மாதுளை மரம்.

அருள்மேஷக வர்த்தமம் - வாயு இமைச்சந்தில் நிற்கும் போது இமைகள் ஓயாது துடிக்கவும் அன்றி ஒருவேளை துடித்து மறு வேளை துடியாமலும் அவ்வாறன்றி துடிக்காமலும் மூடாமலும் இருக்கச் செய்யும் ஓர் வகைக் கண்ணோய்.

அருள்விருக்கம் - பஞ்சதரு (தெய்வீக மூலிகைகள் ஐந்து).

அருனாகதி - வேம்பு.

அருஞ்சிகை நோய் - பித்தத்தினால் தலையில் தினையைப் போலும் கடுகைப் போலும் பல கொப்புளங்களை உண்டாக்கும் ஒரு விரணநோய்.

அருதா - நாகதாளி, பாம்பாட்டிகள் உபயோகிக்கும் ஓர் வகை வேர்.

அருபகம் - சிற்றாமணக்கு, சதாப்பிலை.

அருபம் - ஆகாயம், வெள்விழியில் நீர் கோர்த்து, வடிந்து,

கண் மத்தியில் எரிச்சலுண்டாக்கிப் பீளைகட்டிப் பகல் வெளிச்சம், மங்கிய விளக்கு வெளிச்சத்தைப் போல் தோன்றும்படிச் செய்யும் ஓர் வகைக் கண்ணோய்.

அரூபவலி - உள்வலி.

அரூபி - கற்பூரம், குங்குமப் பாடாணம்.

அரூபிமணல் - வெள்ளிமணல்.

அரேசகண்டு - கருணைக்கிழங்கு.

அரேசகம் - வாழை.

அரேசகானம் - கருணைக் கிழங்கு.

அரேசகுனா - கடுகு.

அரேசனம் - வெள்ளைப் பூண்டு.

அரேசனாக்கினா - வெண்கடுகு.

அரேசானகம் - புளிப்புக் கொழுமிச்சை.

அரேசிகம் - வாழை.

அரேசோபனம் - நறும்பிசின்.

அரேசோனிதம் - புளிப்புநாவல்.

அரேட்டம் - மிளகு.

அரேணவம் - கருப்புக்கடலை.

அரேணிகம் - வால்மிளகு.

அரேணு - அதிவிடயம், தக்கோலம், கடலை.

அரேணுகப்பூ - கடுக்காய்ப்பூ.

அரேணுகம் - கடுக்காய்வேர், காட்டு மிளகு, வால்மிளகு (கௌந்திக்காய் வேர்).

அரேணுகை - காட்டு மிளகு.

அரேதம் - திமிசு.

அரேரூட்டிமா - அரோரூட்டிச் செடியின் கிழங்கினின்று தயாரித்த மாவு.

அரேவதகம் - முட்பலாசு.

அரை - இடுப்பு, பாதி, அடிவயிறு, அல்குல், அரசு, அரைத்தல், அடி மரம்.

அரைகல் - அம்மி, கலுவம்.

அரைக்கடுவன் - இடுப்பு, தொடைச்சந்து இவ்விடங்களில் படர்ந்து காணும் ஓர் வகைப் படை. இதனால், சொறி, சிரங்கு, புண், நமைச்சல், இவையுண்டாகும்.

அரைக்கல் - அரைத்தல்.

அரைக்காசப்புல் - பூனைப்புல் (அறியப் படாதது).

அரைக்கீரை - அறுகீரை.

அரைக்கீரை நல்வித்து - சுக்கில சுரோணிதம்.

அரைக்குழந்தை - பிரசவித்த சிறு குழந்தை.

அரைக்குளகம் - ஒருபடி, அரை மரக்கால்.

அரைக்கூறு - காய்ந்த நீர், கைபொறுக்குஞ் சூடுள்ள நீர்.

அரைங்கரம் - நான்கு நாழி.
அரைசிலை - அம்மி.
அரைசோறு - செரியாத அன்னம், பிரசவித்த பெண்ணுக்குக் கொடுக்கும் உணவு, பாதி வெந்த சோறு.
அரைத்தலைநோய் - தலையின் ஒரு பக்கத்து வலி.
அரைநா - முதலை.
அரை நெக்கல் - பாதி பழுத்த அல்லது அரைக்காயான.
அரைநெரி - தொடைச் சந்திற்காணும் நெரிக்கட்டி.
அரைபடுதல் - உரைபடுதல், அரைக்கப்படுதல், பாதியாகப் பிளத்தல்.
அரைப்பு, அரைப்புக்கட்டி - இலுப்பைப் பிண்ணாக்கு.
அரைப்பை - அல்குல்.
அரைமண்டலம் - 20 நாள்.
அரை மனிதன் அமுரி - சிறு பையன் சிறுநீர்.
அரைமுறி - பச்சிலை, பூண்டு.
அரையலிடுகை - தேய்த்தல்.
அரையல் - துவையல்.
அரையன் - தூள், அரசமரம், கோவைக்கொடி.
அரையன்விரோதி - கோவை.
அரையாப்பு - பலமாதர்களைப் புணருவதால் அரையில் வரும் கட்டி.
அரைவன் - வெந்தோன்றி.
அரைவாதம் குழந்தைகளுக்கு இடுப்பின்கீழும் கால்களிலும் உண்டாகும் இளம்பிள்ளை வாதம்; தொடைச் சந்திலுண்டாகும் ஓர் வகை வாதம்.
அரோ - அத்தி.
அரோகணி - அரோகணிக் கடுக்காய் எனும் ஓர்விதக் கடுக்காய்.
அரோகம் - மருது.
அரோகி, அரோகிணி - கடுக்காய்.
அரோகி முதல் - கடுக்காய் வேர்.
அரோசகண்டு - கருணைக் கிழங்கு.
அரோசகநாசனி - மாதுளை.
அரோசக நோய் - நோயுற்ற காலத்தில் நாக்கு நரம்பின் தன்மை கெட்டு அதனாலுண்டாகும் ஓக்காளம்; திரிதோடங்கள் தனித்தோ ஒன்றுபட்டோ கோளாறடைவதனால் அன்னதாரை தடைபட்டு அதனால் உணவில் விருப்பமில்லாது வெறுப்பை யுண்டாக்கும் நோய்.
அரோசகம் - உணவில் வெறுப்பு; செரியாக் குணம்; பசியின்மை.
அரோசகாரி - தூம்புரவாலி அதாவது செந்துருக்கம்.

அரோசனம், அரோசி - அருவருப்பு.

அரோசிகசுரம் - பசியின்மை, மாந்தம் முதலியவைகளோடு கூடிய ஓர்வகைச் சுரம்.

அரோசிகம் - வாழை, அருசி, ஒக்காளம், உணவில் வெறுப்பு.

அரோசிகம் போக்கி - பசியின்மை அல்லது மாந்தத்தைப் போக்கு மருந்து.

அரோசிகை, அரோசிப்பு - ஒக்காளம், பசியின்மை.

அரோசு வெடிப்பு - அதிவிடயம்.

அரோணிக்கபாலி - கழுதைத் தும்பை.

அரோரூட்டு - அமெரிக்காவில் விளையுமோர் செடி.

அரோரூட்டுமா - ஒரு கிழங்கின் மாவு.

அரோனுகம் - வால்மிளகு.

அர்க்க காந்தம் - ஓர் பூண்டு.

அர்க்க கீராதித் தைலம் - எருக்கம்பால், சதுரக்கள்ளிப்பால், இவைகளினின்று எடுக்கும் தைலம்.

அர்க்க கேட்டம் - மஞ்சள் சந்தனம்.

அர்க்கட் சீராதித் தைலம் - அர்க்ககீராதித் தைலம்.

அர்க்க பந்து .- தாமரைக் கொடி.

அர்க்க பத்திரை - ஆடுதின்னாப்பாலை.

அர்க்க பரணி - எருக்கிலை.

அர்க்க பாதபம் - வேப்பமரம்.

அர்க்க பித்தசமனி - காஞ்சிரை அதாவது எட்டி.

அர்க்க புட்பி - சிற்றாமுட்டி.

அர்க்க புட்பிகம் - வேளைச்செடி.

அர்க்கப் பிரியா - செவ்வரத்தை.

அர்க்க மூலம், அர்க்கம் - ஆடுதின்னாப்பாலை, நெய், பொன், அரிசி, எருக்கு, கோதுமை, செம்பு, கடுகு, பால், நீர்க்காக்கை, தருப்பை, தயிர்.

அர்க்கலவணம் - வெடியுப்பு.

அர்க்கன் - நெருப்பு.

அர்க்காகவம் - சூரியகாந்தக்கல், ஓர் பூண்டு.

அர்க்கியாகம் - சிற்றிலைப் பிலவு (செடி).

அர்க்குளா - ஓர்வகைக் கடல்மீன்.

அர்சாநோய் - ஆசன வளையங்களில் மாமிச முளைகள் வளர்ந்து துன்புறுத்தும் மூல நோய்.

அர்ச்சகம் - எலுமிச்சந்துளசி.

அர்ச்சகாகிரகம் - குழந்தை பிறந்த 11 ஆம் நாள் அல்லது 11 ஆம் மாதத்தில்

தாய் அல்லது குழந்தைக்குக் கிரக தோடக் குற்றத்தினாலேற்படும் ஓர்வகை நோய்.

அர்ச்சுகம் - வெள்ளலரி.

அர்ச்சுனம் - மருது, வெள்விழியில் படலத்தை எழுப்பி அதில் முயல் ரத்தம் போன்ற சிகப்பு புள்ளிகள் காணும்படிச் செய்யும் ஓர்வகைக் கண்ணோய்; பொன்; ஓர் புல்; வெள்ளி; கடப்பம்பூ.

அர்ச்சுன விருட்சம் - மருது.

அர்த்தகம் - சாதிலிங்கம், தண்ணீர்.

அர்த்தகேசம் - புன்னை.

அர்த்த சந்திரகம் - வேளைச் செடி.

அர்த்த சந்திரக்குறி - நகக்குறி.

அர்த்த சித்தகம் - நொச்சி.

அர்த்த திக்தம் - ஓர் கசப்புச் செடி.

அர்த்த நாசிப் பழம் - சவுரிக்காய்.

அர்த்த பக்குவம் - பாதி பழுத்தது.

அர்த்த பாதம் - ஓர் செடி.

அர்த்த பாராவதம் - ஓர்வகைப் புறா, கவுதாரி.

அர்த்தபிதாபூதம் - பூதவடிவமும் பூதத்தின் குணங்களும் ஏற்படும் ஓர் வித நோய்.

அர்த்த பிரசாதனி - பீதரோகிணி.

அர்த்த புட்பி - சிறுநாகப்பூ மரம்.

அர்த்தபேதநோய் - ஒற்றைத் தலைவலி.

அர்த்தம் - பாதி, செங்கழுநீர்.

அர்த்தராத்திரி - மணிபூரகம்.

அர்த்தராத்திரி சுரம் - நடு இரவில் உண்டாகும் காய்ச்சல்.

அர்த்தனி - நோய்.

அர்த்தாங்கத்திமிர் - உடம்பின் ஒரு பக்கத்தில் உணர்ச்சியின்மை, உடம்பின் ஏதாவதொரு பாதியிலுணர்ச்சி யின்மை.

அர்த்தாங்கவலி - உடம்பின் ஒரு பக்கத்து வலி, வாதத்தினால் உடம்பில் ஒரு பக்கம் உண்டாகும் குத்தல் வலி.

அர்த்தாங்க வாதம் இரத்தவோட்டம் குறைவதனால் வரும் வாத நோய்; பக்கவாதம்; பாரிச வாயு.

அர்த்தாங்க விசிவு - பக்க வாதம், உடம்பின் ஒரு பக்கத்து வாயு பரவி, அவ்விடத்து வலியை ஏற்படுத்தும் இசிவு.

அர்த்தாப்பு உருளைக்கிழங்கு.

அர்த்தாவபேதகம் - தலையில் ஒரு பக்கங் காணும் வலி.

அர்த்தித வாதம் - முகத்தில் ஏற்படும் வாத நோய்.

அர்த்திராப்பிரமேகம் - பித்தவெட்டை, மஞ்சள் நிறமாக வெள்ளை கண்டு எரிச்சலுடன் நீரிறங்கிக் கடுப்பையும் விறு விறுப்பையும் உண்டாக்கும் ஓர் வகைப் பிரமேகம்.

அர்ப்பம் - பனி, பூண்டு.

அர்ப்புதம் பாம்பு, கோரைக்கிழங்கு, இமையைப் பற்றிய ஓர் வகைக் கண்ணோய்; மார்பெலும்பின் மிருதுவான பாகம்; இரண்டு மாதத்திய பிண்டத்தைப் போன்றது; வீக்கம், சதை வளர்ச்சி, புரைக் கழலை.

அர்ப்புதவர்த்தும நோய் - கண்ணிமை யினோரங்களில் மாமிச மெத்தையைப் போன்று சதை வளர்ந்து சிவந்து வலியை உண்டாக்கும் ஓர்விதக் கண்ணோய்.

அர்ப்புதா காரம் - கட்டியைப் போன்றது; நறுவிலி.

அர்ப்புதின் - கட்டி, வீக்கம்.

அர்ப்புதோட்டநோய் - உதடுகளில் சிறிய வீக்கத்தை உண்டாக்கும் நோய்.

அர்மம் - சதை வளர்த்தியை உண்டாக்கும் ஓர் வகைக் கண்ணோய்

அர்வதா - சதாப்பிலை.

அலகநீரணி - மரமஞ்சள்.

அலகப்பிரியம் - மருது.

அலகமனானே, அலகமான் - திப்பிலி.

அலகம் - யானைத்திப்பிலி, வேப்பலகு.

அலகர்த்தம் - தண்ணீர்ப் பாம்பு.

அலகளுங்கு, அலகனாங்கு - திப்பிலி.

அலகா - தொடைச்சந்து.

அலகாபிதம் - புளிப்பு முந்திரிகை.

அலகு - பலகறை, மகிழவிதை, மின்மினிப்பூச்சி, அலகெலும்பு (தாடையெலும்பு), பொன்னாங்கண்ணி, ஆண்பனை, பயிர்க்கதிர், கரடிப்பல், அளவு, நெல்லின்மணி, களிம்பு, வேலின்முனை, ஆயுதப்பொது, பெண் குறி, துடைப்பம்.

அலகுகிட்டுதல் - சன்னி முதலிய தோடங்களினால் பல் கிட்டுதல்.

அலகுகோலி - அறுகு, கற்றாழை.

அலகுசோதி, அலகுசோலி - அறுகு.
அலகுஞ்சம் -மின்மினிப்பூச்சி.
அலகுபருப்பு - பட்டாணிக் கடலை.
அலகுபனை - ஆண்பனை, ஓர்வகை மடற்பனை, சீனப்பனை.
அலகுபாக்கு - மெல்லிய வில்லைகளாய் வெட்டி வேக வைத்துச் சாயமேற்றின பளபளப்பான ஓர்வகைப் பாக்கு.
அலகுபீசன் - பூனைப் பிடுக்கன்.
அலகுமாரகம் - பூனைப்புல்.
அலகுமூலம் - விலாமிச்சை வேர்.
அலகுவிறைப்பு - சீதளத்தினால் தாள் இறுகிப்போதல்; தாடை கிட்டுகை.
அலக்ஷ்மன் - மிக்க வெப்பம்.
அலகேந்தி - அமுக்கரா.
அலகை - ஆனைக்கற்றாழை, கொத்துமல்லி, கற்றாழை, பேய்க்குமட்டி, பேய்மிரட்டி, துளசி, தன் உடம்பின் இரத்தம் உறிஞ்சப்படுவதாக எண்ணங் கொண்டு அதனால் உடம்பு வற்றிச் சித்தப் பிரமையை உண்டாக்கும் ஓர் பைசாசம்.
அலகைசுரம் - கீழ்க்காய் நெல்லி.
அலகைச்சாறு - கற்றாழைச்சாறு.
அலகைச்சுரம் - கீழ்க்காய் நெல்லி.
அலகைப்புடோல் - பேய்ப்புடோல்.
அலகை மலடு - பேய்மலடு, பிசாசத்தினால் கருவற்று மலடாகுதல்.
அலக்கு - கிளை.
அலக்கை சுரம் - அலகைச்சுரம்.
அலங்கங்கணம் - வாலுளுவை.
அலங்கநாரி - முத்துச்சிப்பி.
அலங்கம் - திகைப்பூச்சி.
அலங்கல் - துளசி, தாழை, மாலை, தளிர், மாந்தளிர்.
அலங்கனாரு - முத்துச்சிப்பி.
அலங்கனாரே, அலங்காங்கு - திப்பிலி.
அலங்காரம் - வெடிகாரம், சாதிக்காய், பெருஞ்செம்பரத்தை, வால்மிளகு.
அலங்காரவர்ணம் - சிவப்பு.
அலங்காரவல்லி - குறிஞ்சா.
அலங்கார் தூளிதம் - கூந்தற்பொடி.
அலங்கிதம் - கருவண்டு.
அலங்கிதன் - அரிதாரம்.
அலங்கை - துளசி.

பேய்க்கொமட்டி.

அலசகநோய் - வயிற்றுப் பிசத்தினால் ஏற்படும் நோய்.

அலசகம் - உதரவாயு, செரியாமையால் உண்டாகும் ஓர் வயிற்றுப் பொருமல்.

அலசகுட்டம் - இரத்த நிறமாக, ஆற்றில் கிடக்கும் சிறு கூழாங்கற்களைப் போன்ற கொப்புளங்களை உண்டாக்கி, அவை உடைந்ததும் இரணமாகி நமைச்சலை உண்டாக்கும் ஓர்வகைக் குட்டம்.

அலசநோய் - மாந்தத்தினால் குழந்தைகட்கு இரணம் ஏற்படும் ஓர் கொடிய நோய்.

அலசப்புண் - சேற்றுப்புண்.

அலசம் - முதலில் சோகை உண்டாகி, பிறகு வாதபித்தம் அதிகரித்து, உடம்பு மஞ்சள், நீலநிறமடைந்து வீக்கங் கொள்ளும் ஒருவகைப் பாண்டு நோய். (அலிமுகப்பாண்டு), ஓர் மரம், ஓதம், மந்தம்.

அலசல் - யானைத்திப்பிலி.

அலசவிரண நோய் - அழுகற்பண்டம், புழுதி, சேறு முதலியவைகளை மிதிப்பதால் விரல்களின் சந்துகளிலுள்ள சதை தின்னப்பட்டு, வெளுத்து தினவு, எரிச்சலை உண்டாக்கும் ஓர்வகை இரணநோய். விரற்புண், சேற்றுப் புண்.

அலசாரம் - பூவரசம் பட்டைச் சாம்பல், பிறாமட்டைச் சாம்பல், கீரைத் தண்டுச் சாம்பல்.

அலசி - ஒருவித நத்தை, பாறைகளில் இருக்கும், இதனை உணவாகவும் தூண்டிலிரையாகவும் பயன்படுத்துவர்; பேய்ச்சுரைக்கட்டி என்னும் ஓர்வகைக் கட்டி; இது வெண்மையும், சிவப்புமான பல பருக்களாகக் கிளம்பி மிக்க வலியை உண்டாக்கும்; வீக்கத்தை உண்டாக்கும் மேகவிரணம்.

அலசி நோய் - இலிங்கவிரணம்; நோய் கொண்ட பெண்களுடன் உடலுறவு கொள்வதால், ஏற்படும் மேகச்சொறி, மேகவூறல் முதலிய பலவித தோல் நோய்களையும் எலும்பு நோய்களையும் உண்டாக்கும். உடம்பில் கட்டிகளை ஏற்படுத்தி அதிலிருந்து சீழ்வடியச் செய்யும். மேகச் சம்பந்தத்தினால் கருவிழிக்கு வெளியில்

வீக்கத்தை உண்டாக்கி அங்கு நோயையும் கடைவிழியில் நமைச்சலையும் இமைகளில் வெடிப்பையும் உண்டாக்கும் ஓர்விதக் கண்ணோய்.

அலசிவர்த்தம நோய் - கண்ணிமைகளில் கடினமான கட்டிகளை உண்டாக்கி எப்போதும் பீளையைத் தள்ளும் ஓர்வகைக் கண்ணோய்.

அலசிவிதை - ஆழிவிரை, அகத்தி விரை.

அலசை - ஆற்றுத்தும்மட்டி; மேகத்திலான பேய்ச்சுரைக்காய்க் கட்டி, இது 10 வகை மேகக் கட்டிகளில் ஒன்று; அதிக பேதி, தாகம், சோர்வு, சுரம், வலி, வேதனை முதலிய குணங்களை ஏற்படுத்தும்; வயிற்றுப்பிசம்; சேற்றுப்புண்; ஓர்விடப் பிராணி; ஓர் கொடி; காட்டுப்பிரண்டை.

அலஞ்சரம் - மண்சாடி, தண்ணீர்க்குடம்.

அலட்டம் - நாய்வேளை.

அலட்டு சன்னி - உடம்பு அலண்டு போவதாலேற்படும் சன்னி; அதிகக் காய்ச்சலால் ஏற்படும் சன்னி; வலிப்போடு கூடிய சன்னி; பிதற்று சன்னி; காயத்தினால் உடம்புக்கு அதிர்ச்சி கண்டு அதனாலேற்படும் சன்னி.

அலணம் - நீர்க்கோழி.

அலதி - மஞ்சள்.

அலத்தகம் - செம்பஞ்சுப்பூண்டு, செம்பருத்தி, செம்பஞ்சுக் குழம்பு, அரக்கு.

அலத்தம் - செம்பருத்தி, செம்பஞ்சு.

அலத்தல் - துன்பம்.

அலத்தி - மின்மினிப் பூச்சி.

அலத்திடு சன்னி - துன்பத்தை உண்டாக்கும் சன்னி.

அலத்து - உமுரி.

அலத்துவா - கிளாக்காய், நெல்லி.

அலத்தை - கொத்துமல்லி.

அலத்துருஞ்சூலி - பெருஞ்சூலி.

அலநாண் - திப்பிலி.

அலந்தகம் - செம்பஞ்சு.

அலந்தம் - கடுக்காய்.

அலந்தலை - மயக்கம்.

அலந்தல் - மயிலடிக்குருந்து, செங்கத்தாரி.

அலந்தாரி - எழுத்தாணிப் பூண்டு.

அலந்தை - செம்பஞ்சு.

அலப்புகா - சிவப்பம்மான் பச்சரிசி.

அலமாகம் - நாயுருவி.

அலமானே, அலமானை அலமான் - திப்பிலி.
அலமிச்சா - விலாமிச்சு.
அலமிளகு - திப்பிலி.
அலம் - தண்ணீர், நறும்பிசின், தேள், தேள்கொடுக்கு, பொன்னரிதாரம், அரிதாரம், இஞ்சி, சோற்றுப்பு, பூமி.
அலம்பல் மரம் - வெடங்குறுணி (மரம்).
அலம்பி - தசநாடிகளில் ஒன்றாகிய நாவிலோடு மோர் நாடி.
அலம்புசம் - வாந்தி செய்தல்.
அலம்புசை - தசநாடிகளில் ஒன்று; இது மூலாதாரந் தொட்டுக் காதளவாய் நிற்பது.
அலம்புடம் - வாந்தியெடுத்தல்.
அலம்புடை, அலம்புருடன், அலம்புருடை - அலம்புசை.
அலரஞ்சங்காரம் - வெடிகாரம்.
அலராக்கியம் - பொற்கொன்றை.
அலரி - கண்வரி, கோமாரி (நோய்), தேனீ, கோதுமை, நீராவி, பூப்பொது, நகம், அலரிச்செடி, ஓர் மரம் கோதும்பை, காட்டலரி ஈழத்தலரி, ஆற்றலரி குங்குமவலரி, அல்லது செவ்வலரி, நீரலரி, பச்சையலரி, சீமையலரி அல்லது மஞ்சளலரி, வெள்ளலரி, கொத்தலரி, இரட்டை வெள்ளலரி, இரட்டைச் சிவப்பலரி.
அலரிக்கண்ணாடி - உடும்பின் நகம்.
அலரிசபோதம் - உடும்பு.
அலரிவிழுந்தலையழுவாள் - குண்டுபனை.
அலருடன் மாது - பெருந்துளசி.
அலர் - மஞ்சள், மலர்ந்த பூ, நீர், மிளகுக்கொடி, பொன்னரிதாரம், செவ்வியம்.
அலர்க்கம் - வெள்ளெருக்கு, ஒருவகைக் கிருமி, பேய்நாய்.
அலர்த்தம் - கடைக்கள்ளி.
அலர்த்தல் - மலர்தல்.
அலர்ந்த பூ - கொத்தான் செடி.
அலர்ந்தல் - கொத்தான்.
அலர் பூ - சுரை.
அலர்ப்பகம் - விலாமிச்சை.
அலர்மத்தம் - இலாமிச்சு.
அலர்வனம், அலவணம், அலவமை - இந்துப்பு.
அலவன் - ஆண் நண்டு, பூனை, சந்திரன், இஞ்சிரசம்.
அலறி - நகம், அமுக்குரா, குதிரை நீர்.
அலறுசன்னி - படுத்திருக்கும் போது

அடிக்கடி திடீரென அலறியலறி எழுந்து உட்காரச்செய்யும் ஓர் விதச் சன்னிபாத சுரம்; சுரமன்றி பிற நோயிருக்கும் போதும் அலறி எழுந்து உட்காரச் செய்யும் ஒருவகைச் சன்னி.

அலறுபித்தம் - கூச்சலிடும் பித்த நோய்.

அலற்கம் - நாய்களுக்கு ஏற்படும் சுரம்.

அலன் - சனிக்கிழமை.

அலன்றல் - சாதல்.

அலா - சுரை.

அலாகம் - எருக்கு.

அலாகலம் - வசநாபி.

அலாகலி - பரட்டைக்கொடி.

அலாகு - தண்ணீர், கொத்தான்.

அலாசம் - நாக்குப்புற்று, நாக்கின் அடியும் மூலமும் வெந்து குருக்கள் தோன்றி சீழ் பிடித்துச் சில நாள் கழிந்ததும், நாக்கு மரத்துப் பிரள முடியாமல் போகும்; இரத்தக் கெடுதியினாலும் கபக் கோளாறினாலும் ஏற்படும்.

அலாடம் - கஞ்சா.

அலாந்து - ஓர் விடப் பிராணி.

அலாபதம் - விலாமிச்சை.

அலாபாதிகம் - அம்மான் பச்சரிசி.

அலாபு - சுரைக்கொடி, சுரைக் குடுக்கை.

அலாபுகநோய் - கழுத்தின் உட்புறத்தில் சதை வளர்ந்து சுவாசக் குழலையடைத்து மூச்சுவிட முடியாமல் வருத்தும் நோய்.

அலாபுகம் - சுரைக்காய்

அலாபொருகம் - பெருங்கடுக்காய்.

அலாமிச்சா - விலாமிச்சு.

அலாமுதி - பச்சிலை.

அலாம் - கடைக்கள்ளி

அலாம்புசம் - பேய்ச்சுரை.

அலாரம் - ஓர்விதக்கற்றாழை.

அலாரி, அலாரிதா - அலரி.

அலாருகம் - பெருங்களா.

அலாவு - சுரைக்கொடி.

அலி - கொடுக்குள்ளது, நெருப்பு, வானம்பாடி, காக்கை, மது, குயில், நறுவிலி, வண்டு, தேள், வைரமில்லாத மரம், கள், நறுவுள்ளி, சோறு.

அலிகம் - நெற்றி, நறுவிலி.

அலிகலவம் - ஓர்விதக் காக்கை.

அலிகை - நாணல்.

அலிசம் - ஆளிவிதை.

அலிசி - ஆளிவிதைச் செடி.

அலிசிக் குவிகம் - உள்நா.

அலிசி விதை - ஆளிவிதை.

அலிச்சர்ப்பம் - ஒருவகைப்பாம்பு; நீண்ட உருவத்தையும், வெளுத்த படத்தை உடையதும், அதன் விடத்தினால் பேதி, நடுக்கல், பயம், சுரம்,

காமஇச்சை முதலிய குணங்களை உண்டாக்கும் ஓர் வகைப் பாம்பு.
அலிஞ்சரம் - மண்சாடி.
அலித்தம் - சந்தனம்.
அலித்தூர்வம் - ஓர் பூண்டு.
அலிந்து - வீழி.
அலிபகம் - நாய், கருவண்டு, தேள், வானம்பாடி.
அலிபத்திரிகம் - ஓர் பூண்டு.
அலிபரணி - காய்ஞ்சொறி.
அலிப்பட்சிதோடம் - குழந்தையின் தோள், முதுகு, கண்டம், முழங்கை ஆகிய இடங்களில் குழிவிழுதலையும் வாந்தி, பேதி, தாகம் ஆகிய குணங்களை உண்டாக்குவதுமான ஓர் நோய்.
அலிப்பான் - வெடியுப்பு.
அலிப்பிரியம் - செங்கழுநீர், பாதிரி.
அலிப்பினம் - வெடியுப்பு.
அலிப்புண் - நாறும் இரணம்.
அலிமகம் - தேனீ; வானம்பாடி; இலுப்பை; தாமரைப் பூந்தாது; பெண்களைத் தாக்கும் ஓர்வகைச் சோகை நோய்.
அலிமரம் - உள், வெளிப் பக்கங்களில் வைரம் பாயாத மரம்; பாலும் நாருமுள்ள மரம்.
அலிமுகப்பாண்டு நோய் - முதலில் சோகையுண்டாகி வாதபித்தம் அதிகரித்து உடல் மஞ்சள் அல்லது நீல நிறம் அடைந்து வீக்கங் காணும் ஓர்வகைப் பாண்டு நோய்.
அலிமோதை - முன்னை.
அலியன் - செங்கடுக்காய்.
அலியன் குறிஞ்சி - செந்தொட்டி.
அலியூன் - யுனானி முறையில் வழங்கும் மூலிகை.
அலீகம் - நெற்றி.
அலீகன் - தலை.
அலீமகம் - காமாலையில் ஒருவகை.
அலுமம் - புளிப்பு.
அலுவீகம், அலுவீசம் - வில்வம் (இலை).
அலுவேகிகம் - பெருங்காயநாறி.
அலூகம், அலூரம் - வில்வம்.
அலேகம் - பஞ்சலோக மணல், லோக மணல்.
அலை - மது, பூமி, கடல், நீர், கடலின் அலையடித்து ஒதுக்கிய கருமணல்.
அலை கங்கணம் - வெண்காரவுள்ளி.
அலைதாடி - ஆடு அல்லது மாட்டின் கழுத்தில் புடைத்து ஆரம் போல் தொங்கும் தசைமடிப்பு.
அலைத்திசம் - தினை.
அலைமனோதயசி - மாணிக்கம்.

அலையிற்றிரண்ட தீபம் - கடல்நுரை.
அலோகி, அலோசி - பசலைக் கொடி.
அலோசிகம் - கண்ணிற்குள் பார்வைக்கு ஆதாரமாக உள்ளது.
அலோதகம் - பெருங் கொத்தவரை.
அலோபி, அலோமி - பொற்றலைக் கையாந்த கரை.
அலோமுகம் - பெருங்காளான்.
அல் - விறகு, இருட்டு, சுக்கு, அந்திப்பொழுது, மயக்கம், அல்லாதது, அதிசாரம், இரவு.
அல்கந்தி - அந்திப்பொழுது.
அல்கல் - சுருங்கல், இரவு, நாள், குறைதல்.
அல்குகலி - உப்பங்கழி.
அல்குதல் - சுருங்குதல்.
அல்குப்பை - பொற்றலைக் கையாந்தகரை.
அல்குலழற்சி - பெண்குறியின் வெளியுறுப்புகளின் வேக்காடு.
அல்குல் கண்டதாபனம் - அல்குலில் சுமரிக்கு ஏற்படும் அழற்சி.
அல்குல் கழலை - அல்குலின் இரு உதட்டின் பக்கங்களில் ஆழமாக வெடித்துப் புண்ணாகி நாற்றத்துடன் நீரொழுகும் ஓர் பெருங்கழலைக் கட்டி.
அல்குல் சிலந்தி - பெண்களின் வெளியுறுப்புகளில் காணும் இரணத்தோடு கூடிய புண்.
அல்குற்சூலை - பெண்களின் சூதகத் தாரையில் ஏற்படும் வலி; சூதகத் தாரையில் அழற்சியினால் ஏற்படும் குத்தல் நோய்.
அல்குற்திரவித்தல் - சூதகப் பெண்களுக்கு நீர் முதலியவை ஒழுகல்.
அல்குற்பவுத்திரம் - பெண்குறியின் பூப்பகம் அல்லது மூத்திரத்தாரை, பேரிதழ், ஆசனவாய் இவற்றிலேற்படும் பலவிதப் பவுத்திர நோய்கள்.
அல்குற் பிறை - தீட்டுத்தாரையின் சதைப் பாகங்களுக்கு மிகுந்த உணர்ச்சியால் ஏற்படும் பிடிப்பு வலி.
அல்சி - ஆழிவிதைச் செடி.
அல்நார் - கல்நார்.
அல்லகம் - செந்தாமரை, செங்கழுநீர்.
அல்லசங்கம் - வெள்ளி.
அல்ல மாகிகம், அல்லம் - இஞ்சி.
அல்லரி - வெள்ளாம்பல்.
அல்லல் - சேறு.
அல்லல்கழனி - உடல்.

அல்லவிரை - நேர்வாளம்.
அல்லவென் - கடுகு.
அல்லாசி - பெருங்கொடி முந்திரிகை.
அல்லாரி - அல்லி, வெள்ளல்லி, காயா, வெள்ளாம்பல், நெய்தல், சயம்.
அல்லாருகம் - பெருந்தாளி.
அல்லி - பூந்தாது, அகவிதழ், தாமரை, அல்லியரிசி, காயா, ஆகாசவல்லி, வெள்ளல்லி, நீலவல்லி, சிற்றல்லி, செவ்வல்லி, செங்கழுநீர், வெண்கடுகு, இளவேர், ஆம்பல், இரவு, சயம், வெள்ளாம்பல், பேய்க்கொம்மட்டி, (அல்) நெய்தல்.
அல்லிகம் - பேய்க்கொம்மட்டி.
அல்லிக்கொடி மூலசெயநீர் - சாகா உப்பு செயநீர்.
அல்லிக் கொடிமூலம் - சாகா உப்பு, அல்லிக்கிழங்கு.
அல்லிக்கோணி - பேய்க்கற்றாழை.
அல்லித்தண்டு - ஆம்பல்தாள்.
அல்லித் தாமரை - வெள்ளாம்பல்.
அல்லிபுட்காலி - காயா அகவிதழ்.
அல்லிப்பிஞ்சு - பூவிழாத பிஞ்சு.
அல்லி மூக்கு - இரத்தமொழுகும் மூக்கு.
அல்லி மூலகம், அல்லி மூலம் - அல்லிக்கிழங்கு.
அல்லியக்கிழங்கு - கொட்டிக்கிழங்கு.
அல்லியம் - கொட்டி, தொட்டி, பேய்க்குமட்டி.
அல்லியரிசி - அல்லிவிதை.
அல்லியோரங்கை - சீரிப்பிள்ளை.
அல்லிரி - அல்லி.
அல்லி வஞ்சி - பட்டாணி.
அல்லி வாதாளி - அமுக்குரா.
அல்லி வெண்டம் - கடுகு.
அல்லுகம் - பெருங்கொய்யா.
அல்லுரம் - வில்வபத்திரி.
அல்லூரம் - வில்வமரம், வில்வ பத்திரி.
அல்லை - வள்ளைக் கொடி.
அல்லைக்கிழங்கு - அல்லிக்கிழங்கு.
அல்லோன் - சந்திரன், ஓர்மரம்.
அவ - வெள்ளைக்காய் வேளை.
அவகண்டம் - முகப்பரு.
அவகதவாய் - கீழ்க்காய் நெல்லி.
அவகத்தம் - புறங்கை.
அவகத்தலா - அவகதவாய்.
அவகம் - தண்ணீர், தலைமுடி.
அவகர்த்தம் - குழி.
அவகர்த்தவிரணம் - புறங்கையில் குழிவிழும்

ஓர்வகை விரணம் (குழிப்புண்).
அவகாகம் - நோயுள்ள உறுப்பை, அந்நோய் தீரும் மூலிகைக் குடிநீரில் அமிழ்த்து வைத்தல்; நீராடுமிடம்.
அவகாரம் - யானை மீன், . யானைச் சுறா.
அவகார்த்த விரணம் - அவகர்த்த விரணம்.
அவகீனம் - தேள்.
அவகேசி - பூத்துங் காயாத மரம்.
அவகொசுப்பு - பெருந்தும்பை.
அவகோசி - பூத்துங்காயாத மரம்.
அவகோலம் - அழிஞ்சில்.
அவக்கதலர், அவக்கலா - கீழ்க்காய் நெல்லி.
அவக்காட்சிதம் - பெருஞ்சிமிட்டி.
அவக்கிரசம் - காடி, புளிப்பு.
அவக்குவாதம் - செரியாமை, முறையுடன் செய்யப்படாத குடிநீர்.
அவக்குறி - மரணக்குறி, கெட்ட குறி.
அவக்கைசுரம் - கீழாநெல்லி.
அவசதம் - கல்லூரி. (செடி)
அவசதேலா - கீழ்க்காய் நெல்லி.
அவசம் - மயக்கம், மூச்சொடுக்கம்.
அவசர்க்கம் - உடம்பின் கழிவு.
அவசர்ப்பிணி - தேய்பிறைபோல் சுருங்குங்காலம்.
அவசா - உணவு.
அவசாதகம், அவசாதம் - இளைப்பு, களைப்பு.
அவசாதனம் - சிலந்தி முதலிய புண்களின் சதை வளர்த்தி கரைதல்; சதை வளர்த்தியைச் சூடுகாட்டித் தீய்த்து அகற்றல்.
அவசானகாலம் - மரணகாலம்.
அவசானம் - மரணம்.
அவசி - கழுதைப்பாலை அல்லது நஞ்சறுப்பான்.
அவசிகத்தம் - கடனுரை.
அவசீனம் - தேள்.
அவசுப்பம் - துடரி.
அவசுரம் - உணர்வு கெட்டு மயங்கி, வியர்த்து, கழிச்சல், நித்திரை, முதலியவைகளை உண்டாக்கும் சுரம்.
அவசுனரி - காட்டு முருங்கை.
அவசோதி - எவட்சாரம் அல்லது வெடியுப்பு.
அவஞ்சம் - ஆணுறுப்பு.
அவடம் - முருங்கை.
அவடம்பாதி - வசம்பு.
அவடி - திரைச்சீலை.
அவடு - பிடரி.
அவட்டம் - நாய்வேளை, வால்மிளகு.

அவட்டம்பம் - பாரிச வாயு.
அவணம் - இலவணம்.
அவதஞ்சம் - செழுமலர்க்கொன்றை.
அவதம் - பல்குழி, உடம்பின் குழி விழுந்த பாகம்.
அவதர்ப்பணம் - சாந்தப்படுத்தும் மருந்து.
அவதாகம் - வெட்டிவேர்.
அவதாதம் - மஞ்சள் நிறம், வெண்மை.
அவதாரணம் - மண்வெட்டி.
அவதான முதிர்ச்சி - விலாமிச்சை வேர்.
அவதி - அளவு.
அவதி கத்தம் - கடல்நுரை, கடற்சிப்பி.
அவதிசயகாரம் - அரிதாரம்.
அவதினிறம் - ஆவிற்புங்கு.
அவதும்பரகுட்டம் - அத்திப்பழத்தைப் போல் உடம்பில் கொப்புளங்கள் எழும்பி நசுங்கி இரணமாகி துன்புறுத்தும் ஓர்வகைக் குட்ட நோய்.
அவதும்பரம் - அத்திப்பழம்.
அவதேகி - பெண்மரம், உள் காழ்ப்பு இல்லாமரம்.
அவதோகம் - பால்.
அவத்தகண்ணி - வெருகு.
அவத்தம் - நாய்வேளை.
அவத்திகண்ணி - வெருகு, எருக்கு.
அவத்துப்பூசை - மருக்கொழுந்து சக்களத்தி.
அவநகை - மஞ்சம்புள். (நுணா)
அவந்தகண்ணி - மெருகன் கிழங்கு
அவந்தாதிதம் - பெருஞ்சிலும்பான்.
அவந்தி - திப்பிலி, காடித் தண்ணீர், கிளி, அரிசியைப் புளிக்க வைத்த தண்ணீர்.
அவந்திகை - கிளி, மஞ்சளவரை.
அவந்தி கண்ணி - வெருகஞ்செடி.
அவந்திசோமம் - புளித்த கஞ்சி, காடி.
அவந்தி நாதம் - பெருஞ்சின்னி.
அவபத்தியம் - பத்தியந் தவறல், இச்சாபத்தியம்.
அவபாகுகம் - கைகளைச் சூம்பச் செய்தல்.
அவபாகுகவாதம் - தோள்களையும், கைகளையும் சூம்பச் செய்யும் ஓர்வித வாத நோய்.
அவபாசினி - தோலின் முதற்பாகம்.
அவபாதனம் - வெட்டுதல்.
அவபீடம், அவபீடனம் - பச்சிலைகளின் சாற்றைக் கொண்டு செய்யப்படும் நசியம், இது தும்மலை உண்டாக்கும்.
அவபுஷ்பம் - அத்தி.
அவபேதகம் - பிளத்தல் போன்ற வலி.

அவபேதகவாதம் - முகத்தில் பல இடங்களில் வாயு பரவி நெற்றி பிளப்பது போன்று வலியை உண்டாக்கும் வாதநோய்; சிலேட்டுமத்தினால் உண்டாகி கண், புருவம், நெற்றியைத் தாக்கும்.

அவப்பித்தாண்டி - அகத்தி.

அவப்பிரசவம் - ஆறுமாதத்திற்கு மேல் ஏற்படும் பிண்ட அழிவு.

அவமதாங்குசம் - மதயானை.

அவமந்தநோய் - ஆணுறுப்பில் பல கொப்புளங்களை உண்டாக்கி அவற்றினின்று இரத்தமும், சீழும் வரச் செய்து வலியை உண்டாக்கும் இரண நோய்.

அவமிருத்தியோகம் - தீய நட்சத்திரங்களுடன் மிருத்தை கிரகமும் கூடிய நாள்; இந்நாளில் நோய் கொள்ளில் மரணம் நிகழும்.

அவமிருத்து - அவமரணம் (துன் மரணம்).

அவமிருத்துச் செந்தூரம் - மரணத்தைத் தடுக்க தங்கம், ரசம், அப்பிரகம் முதலியவற்றின் சத்துக்களை எடுத்து மறைவாகத் தயாரிக்கும் சத்துச் செந்தூரம்; கற்பவகைகளில் ஒன்று.

அவமீதம் - பொற்றலைக்கையாந்த கரை.

அவமோசனம் - கக்குதல்.

அவம் - ஆகாயத்தாமரை.

அவய - வெண்கடுகு.

அவயகம் - விலாமிச்சை.

அவயம் - விலாமிச்சை, அடைவைத்தல், மலர்செரி.

அவயவம் - உடம்பின் உறுப்பு, உடல், விலாமிச்சை.

அவயவி - உடல்.

அவரகம் - பெருமூங்கில்.

அவரகாத்திரம் - கால்.

அவரங்காணை - கிராம்பு.

அவரஞ்சக்காரம் - வெடிகாரம்.

அவரதிமாது - வட்டக் கிலு கிலுப்பை.

அவராவபதனம் - கருவழிதல், நஞ்சுவிழுதல்.

அவரி - அவுரி, நீலி.

அவரிகம் - இதயம் தன்னிடத்தை விட்டு நழுவியிருத்தல்.

அவரிஷகேது - பெருஞ்சார்வேளை.

அவருகம் - பெரும்பிரமி.

அவரை - கொள்ளு, அவரை, முதிரை, முதலாயின.

அவரோகம் - சடுதியிற் கொல்லும் நோய்; ஆலம் விழுது; மரத்தைச் சுற்றிக்

கொடி படருகை; அமுக்கிரா.

அவரோகி - ஆலமரம்.

அவரோபணம் - வேரோடு பிடுங்கல்.

அவரோலாலையம் - அணில் பிள்ளை.

அவர்கம் - கஞ்சி.

அவர்நியாகை - கொட்டைக்கரந்தை.

அவலத்துமம் - நாய்க்குவளை, நோய், சேங்கொட்டை, அவுபலபாடாணம்.

அவலம்பக சிலேட்டுமம், அவலம்பனம் - இதயத்தானத்திலும் தோள்களின் பொருத்துகளிலுமிருக்கும் ஓர்வகைச் சிலேட்டுமம்.

அவலரக்கு - அவலைப்போல் தட்டையாக இருக்கும் ஒருவகை அரக்கு.

அவலன் - நோயாளி, உடற்குட்டமுடையவன்.

அவலாவி - பெரும்பீளை.

அவலி - பூனைக்காலி, வெண்கடுகு.

அவலிகம் - வில்லைபத்திரி.

அவலுப்பு - அவுரியிலிருந் தெடுக்குமோர் வகையுப்பு.

அவலேகம் - இளகியம் (இலேகியம்), குடிநீர், நாவினாற் பருகும் மருந்து.

அவலேபம் - பூசுதல்.

அவலேபனம் - நாவினாற் பருகல், தைலம், பூசுதல்.

அவலை - கடுப்பு.

அவல் - செங்கழுநீர், கோஷ்டம்.

அவல்குசம் - ஓர் செடி.

அவல்குசை - சில்லாங்கொட்டை, கார்போகி விதை.

அவல்குலி - ஓர் விடப்பூச்சி.

அவளிகை - குடல்களின் மேற்பக்கம் நான்கு பட்டைகளுள்ளதாய்க் கவர்ந்து தொங்கும் ஓர்வகைச் சவ்வு.

அவள் - ஆலமரங்கீழ்க்கன்று.

அவற்கம் - அரிசிக்கஞ்சி, கஞ்சி.

அவற்காளான் - தட்டையாயுள்ள ஓர் வகைக்காளான்.

அவற்கொசப்பு - பெருந்தும்பை.

அவற்சாதி - இலவங்கப்பட்டை.

அவற்பாடாணம் - ஓர்வகைப் பிறவிப் பாடாணம் அதாவது விளைவுப் பாடாணம்.

அவனம் - கொடியத்தி.

அவனாசிகம் - கிச்சிலி.

அவாகு - கஞ்சி.

அவாகெவுற்றம், அவாகேசவுப்பி, அவாகேசவுப்பு பெருந்தும்பை.

அவாக்கிரசம் - காடிநீர்.
அவாசத்திரம் - சுக்கு.
அவாசியதேசம் - சொல்லக்கூடாத விடம்.
அவாதி - புளிக்காடி.
அவாதீசரம் - சிற்றரத்தை.
அவாத்தம் - புறங்கை.
அவாநிதி - சுவாசித்தல்.
அவாபுஷ்பி - பெரிய சதாப்பிலை, சதாப்பிலை, பேயத்தி.
அவாபுளப்பி, அவாபுளிப்பி - பிரமிப்பூடு.
அவாமாருக்கம் - வெண்ணாயுருவி.
அவாரணீயம் - தீராத; அசாத்தியநோய்ச்சிகிச்சை.
அவாரமுகி - பிரமதண்டு.
அவாரி - சிறுநீர்.
அவாரிகா - கொத்தமல்லி, (தனியா).
அவாவிகை - பெருந்தெள்ளு (பெரிய தெள்ளுக்காய்ச் செடி).
அவானபுஷ்பம் - செஞ்சாதிப்பூ.
அவானமுகி - பிரமதண்டு.
அவி - சோறு, சூரியன், நெய், நீர், ஆடு, மலை, எலி, நீராகாரம், காற்று, புழுக்கு, உணவு, மாதவிடாயான பெண்.
அவிகசம் - அதிகம், மலராதது; குவிந்திருப்பது; குவிவு.
அவிகசிதம் - குவிந்தது.
அவிகண் - ஓர் வகைக் கண்ணோய்.
அவிகந்திகம் - குழிமீட்டான்.
அவிகம் - பாலாடை, வைரம், ஆடு, இரத்தினம்.
அவிகாயம் - எரிச்சல், நுரையீரல் வெந்து புண்ணாகும் ஓர்வகைச் சய நோய்; தோல்வெந்ததனால் ஏற்பட்ட தழும்பு; அழற்சி.
அவிகாய விரணம் - ஓர் கண்ணோய்; காது, வாய், கண், மூக்கு இவற்றில் அரிப்புண்டாகி கண் கனத்து பீளை சேர்ந்து குத்தலெடுத்து சிவந்து அடிக்கடி மூடித்திறக்கும் ஓர் கண்ணோய்.
அவிகை - பூமண்.
அவிக்கினம் - ஓர் மரம்.
அவிசபுச்சகம் - மரக்காரை.
அவிசம், அவிஷம் - கஸ்தூரி மஞ்சள்.
அவிசலி - சீந்தில்.
அவிசற்கினம் - விடாச்சுரம்.
அவிசற்பல் - சொத்தைப்பல்.
அவிசு - உப்பின்றிச் சமைத்த பச்சரிசிச்சோறு, வெண்ணெய், நீர், சோறு.
அவிசுப்பம் - தொடரிப்பூடு.
அவிடசிங்கி - சுக்கு.
அவிடம், அவிட்டம் - கோரைக்கிழங்கு, 23 ஆம் நாள்.
அவிதீர்க்கி - வெண்சீரகம்.
அவிதூசம் - ஆட்டுப்பால்.

அவித்தியசம் - பாதரசம், சூதம்.

அவித்துருமம் - இலுப்பை.

அவித்துவையல் - பச்சடி.

அவித்தூசம் - ஆட்டுப்பால்.

அவித்தூற்றுமெண்ணெய் - ஊற்றிய விளக்கெண்ணெய்.

அவித்தை மூலி - கஞ்சா.

அவிநீர் - வெந்நீர்; மூலிகைகளைக் கொண்டு தயாரித்த தேன் கலந்த குடிநீர்.

அவிபாடித நோய் - வாத பித்த சிலேட்டுமத்தினால் ஆணுறுப்பின் தோல் தடித்து வெடித்து புண்ணாகும் நோய்.

அவிப்பாரம் - கையாந்தகரை.

அவிப்பிணம் - வெடியுப்பு.

அவிப்பிரியம் - ஓர்வகைப்புல், கடம்பு மரம்.

அவியங்கம் - பூனைக்காலி.

அவியதத்துவம் - மரத்துப் போதல்.

அவியதம் - கடுக்காய்.

அவியம் - கடுகு, இலாமிச்சு.

அவியல் - புழுக்கம், வெப்பம், அவிக்கப்பட்ட சோறு, வெந்த புண், வாய்ப்புண்.

அவியற்பல் - சொத்தைப் பல்.

அவிரணசுக்கிரன் - கருவிழியில் வெண்ணிற சவ்வு படர்ந்து நீர் வடிந்து வலி கொள்ளும் கண்ணோய்.

அவிராசகம் - பெருந்தேள் கொடுக்கிப்பூடு.

அவிரி - நீலிப்பூடு.

அவிரிரா - பெரும் புள்ளடி.

அவிருகம், அவிருதம் - அதிவிடயம்.

அவிரேசனம் - மலவறட்சி, பேதியாகாமை.

அவிரை - பெரும் பூ.

அவிர் - புல், பீனசப்புல்.

அவிழ் - சோறு.

அவிழ்தம் - மருந்து.

அவிழ்தல் - இளகுதல், சொட்டுதல், மலர்தல்.

அவினி - அபினி.

அவினிரஞ்சம் - அபினையைக் கொண்டு தயாரித்த ஓர் வகைக் குடி நீர்.

அவு - குன்றி.

அவுசுப்பம் - தொடரிப் பூண்டு.

அவுசுமாபகவாதம் - சடராக்கினியின் மிகுதியால் உண்டாகும் வாதநோய்.

அவுசூசிகம் - தொடரிப்பூண்டு.

அவுடதம் - மாற்று மருந்து, மருந்து.

அவுஷதி - வல்லாரை.

அவ்டாஞ்சி - நெல்லிக்காய்.

அவுதசியம் - பசுவின் பால்.

அவுதும்பரகுட்டம் - அத்திக்காயைப் போலுடம்பெங்கும் எழும்பி திமிர், மயக்கத்தை உண்டாக்கும் ஓர் வகைக் குட்டம்.
அவுபசர்க்கிக நோய் - உடம்பு மெலிந்திருக்கும் போது கண்ணை உற்றுப் பார்ப்பதனால் உண்டாகும் கண்ணோய்.
அவுபலபாடாணம் - ஒருவகைப் பிறவிப் பாடாணம் அதாவது விளைவுப் பாடாணம்.
அவுபுஷ்பம் - அத்தி.
அவுரம் - கௌரி பாடாணம்.
அவுரி - நீலிப்பூண்டு.
அவுரிஷியம் - உளுந்து.
அவுரிப்பச்சை - பச்சைக் கற்பூரம்.
அவுழதம், அவுழ்தம் - அவுடதம்.
அவுளியா - வெளவால் மீன்.
அவுறுதம் - கிரந்தி, பித்தாதிக்கம், மேக நோய்.
அவுன்சு - ஒரு அளவு. (30 மி.லி)
அவெளி - நரிவிளா.
அவேகி - போத்திக்கீரை.
அவேத்தியம் - பசுங்கன்று.
அவை - மனோசிலை, கல்மதம், சிறுநாகப்பூ, எலுமிச்சை.
அவைத்தல் - தானியங்களைக் குத்தல், அவித்தல்.
அவைப்பு - குத்தின அரிசி அல்லது தானியம்.
அவையம் - விலாமிச்சு, எவச்சாரம்.
அவையல் - குத்தின அரிசி, அவல், திரட்சி.
அவையளம் - கடுக்காய்.
அவைரு - தண்ணீர் சேராத.
அவைரு துருசு - நீரில்லாத் துருசு.
அவ்வந்திக் கண்ணி - மெருகு.
அவ்வமை - இந்துப்பு.
அவ்வயன் - கடுக்காய்.
அவ்வரோதயம் - எலி.
அவ்விதை - நேர்வாளம்.
அவ்வியஞ்சனம் - கொம்பில்லா மிருகம்.
அவ்வியதம் - ஓரிலைத்தாமரை.
அவ்வியதா - கடுக்காய்.
அவ்வியதி - குதிரை.
அவ்வியதிதி - இரவு, பூமி.
அவ்வியம் - நெய்.
அவ்வையன் - கடுக்காய்ப் பிஞ்சு.
அவ்வையார் கூந்தல் - அம்மையார் கூந்தல்.
அழகபேதம் - அதிவிடயம்.
அழகயிலி - சித்தரத்தை.
அழகர் - வெள்ளெருக்கு.
அழகவேதம் - அழகபேதம்.
அழகான கருப்பி - நீலஞ்சோதி.

அழகி சம்பங்கி - கொடிச்சம்பங்கி.

அழகிய வாணன் - ஓர்வகை மட்டை நெல்.

அழகியாள் - செவ்வகத்தி.

அழகு - சர்க்கரை, வெல்லம், கண்ட சருக்கரை.

அழகு காமாலை - உடல் பளபளப்பு, கைகால் அசதி, புருவம், கண், சிறுநீர் முதலியவை மஞ்சள் நிறமாகல், ஆணுறுப்பில் எரிச்சலை உண்டாக்கல், செரியாமை, வயிறுப்பல் முதலிய குணங்களை உண்டாக்கும் ஓர் வகைக் காமாலை.

அழகு சப்பாணி - குழந்தைகளை நடக்கவியலாதபடி செய்யும் முடக்குவாயு.

அழகு சம்பங்கி - அழகி சம்பங்கி.

அழகு சிவப்பி - செவ்வகத்தி.

அழகுதுரைச்சி, அழகுதுரைப்பெண் - இந்திரபாடாணம்.

அழகுதேமல் - உடம்பில் சில பாகங்களில் மேல்தோல் மஞ்சள் நிறமடைந்து தழும்பு தழும்பாகத் தோன்றி, பார்ப்பதற்கு ஒருவிதமான அழகை உண்டாக்கும் தோல் நோய்.

அழகு பூச்சூடி - நீரரளி.

அழகுபேதம் - அதிவிடயம்.

அழகு முல்லை - ஓர் வகை மலையாளத்து முல்லைப் பூ.

அழகு யேக்கியம் - நரிமுருக்கு.

அழகு வண்ணத்தி - மருதாணி.

அழகு வர்ணன் - சூதம்.

அழக்கர் - வெள்ளெருக்கு.

அழக்கு - ஆழாக்கு.

அழசிகம் - எருக்கு.

அழசிதிப்பிலி - பெருந்திப்பிலி.

அழத்தியம், அழத்தியன் - சோமனாதிப்பெருங்காயம்.

அழப்பாசக்கு - முடக்கொத்தான்.

அழலி - நெருப்பு.

அழலிக்கை - வயிற்றெரிச்சல்.

அழலை - தொண்டைக் கரகரப்பு, உடம்பின் காந்தல், களைப்பு.

அழலைக்கிராணி - உடம்பின் வெப்பத்தால் ஏற்படும் கழிச்சல்.

அழலைச்சுரம் - உடம்பு அதிக வெப்பங் கொண்டு ஏற்படும் ஓர்வகைக் காய்ச்சல்; கணச்சூட்டினால் குழந்தைகளுக்கு ஏற்படும் சுரம்.

அழலை நோய் - குழந்தைகட்குக் கணச் சூட்டினால் உள்ளுறுப்புகள் வெந்து அதனால் ஏற்படும்

ஓர்வகைக் கண நோய்.

அழலோன் - சூரியன், நெருப்பு.

அழல் - எருக்கு, கொடிவேலி, உறைப்பு, தீ, கள்ளி, நஞ்சு, சூடு, சுரச்சூடு, நெருப்பு, எரிவு.

அழல்காய் - மிளகு.

அழல்கெங்கை - பெண்கள் கருக்குழியில் உண்டாகும் பனிக்குடத்து நீர்; அழல் நீர்.

அழல் சொரிந்த உப்பி - கல்லுப்பு.

அழல் நீர் - தென்னங்கள்.

அழல்பால் - எருக்கு.

அழல் மண் - மிதித்தால் எரிச்சலை உண்டாக்கும் மண்; உவர் மண்.

அழல் மண் வெதுப்புங்கோபி - குழலாதொண்டைச் செடி.

அழல் விசை, அழல்விதை - நேர்வாளம்.

அழல்விரியன் - கடித்தால் தாங்க முடியாத எரிச்சலையும் வலியையும் உண்டாக்கும் (எரிவிரியன்) ஓர் விரியன் பாம்பு.

அழல் விரை - நேர்வாளம்.

அழவண, அழவணம், அழவனம், அழவாணம் - மருதோன்றி.

அழற்கண் - அழற்சி விழி.

அழற்காடு - உழமண் வெளி.

அழற்காமாலை பித்தத்தாலுடம்பில் எரிச்சலை உண்டாக்கும் ஓர் வகைக் காமாலை.

அழற்காய் - மிளகு, மிளகாய்.

அழற்குத்தல் - கொடிய நாற்றம் வீசல்.

அழற்சி - கொதிப்பு, உள்ளழற்சி, உறைப்பு, எரிவு, கால்நடைகளுக்கு வரும் நோய்.

அழற்சிநஞ்சு - உடம்பின் உள்ளுறுப்பை வெந்து போகச் செய்யும் விடம் அல்லது விடங்கூடிய மருந்து.

அழற்சியிலா நஞ்சு - உள்ளுக்குக் கொள்வதால் அழற்சியை உண்டாக்காத விடம்.

அழற்சிவிழி - அழற்சியை உண்டாக்கும் ஒரு வகைக் கண்ணோய்.

அழற்சூடி - கொடிவேலி.

அழற்பால் - உடம்பில் பட்ட இடத்தில் வேகச் செய்யும் பால். (எருக்கம் பால், தில்லைப்பால்).

அழற் பித்தம் - உடம்பில் பித்தக் கொதிப்பினால் மயிர் இளமையில் நரைத்து உடம்பு வெளுத்துக் கடைக்கண் சிவந்து ஞானம் பேசும் ஓர்வகைப் பித்த நோய்.

அழற்புண் - சிவந்த இரத்தம் வடியும் புண்.

அழற்புற்று - வெள்விழியில் எரிச்சலையும் விம்மலான தசையையும் உண்டு பண்ணும் ஓர்விதக் கண்ணோய்; இது அசாத்தியம்.

அழற்றி - அழற்சி; எரிவு; கண்ணைச் சுற்றிலும் குறி போட்டது போல் கருப்புண்டாகி வலியேற்பட்டுக் கடைக்கண்களில் வீக்கங் கண்டு இளஞ்சிவப்பாகிப் பீளை கட்டியும் நெற்றி, கன்னம் இவ்விடங்களில் அதிக வலியையுமுண்டாக்கும் ஓர் கண்ணோய்.

அழற்றின கண்ணோய் - கண் அழற்றி.

அழனம் - பிணம், தீ.

அழனாகம் - நாவினால் நக்குவதனால் எரிச்சலை உண்டாக்கும் ஓர்வித நாகப்பாம்பு.

அழன் - அழனம்.

அழாக்கு - ஆழாக்கு.

அழி - சோறு, நெய்.

அழிகட்டு - ஒன்றை அழித்தற்காகச் செய்யும் எதிர்ச் செய்கை; விடத்தை முறிப்பதற்கு மாற்று; தடை; மந்திர சக்தியால் விடத்தன்மையைப் போக்கும் மருந்து.

அழிகண் - பார்வையைக் கெடுக்கும் ஒரு வகைக் கண்ணோய்.

அழிகண் பிரித்தல் - கண் மிகவும் வலித்து, நொந்து விழியின் மேல்தசை மூடி கண்ணைச் சுற்றிப் புண்ணாக்கிப் பீளைகட்டும் ஓர்வகைக் கண்ணோய்.

அழிகரு - அழிந்த சினை, செத்துப்பிறந்த பிண்டம்.

அழிகருப்பம் - பலகாரணங்களால் சினையழிதல்.

அழிகிரந்தி - பாதம் அல்லது காலில் சதை சிவந்து இரணமாகி அழுகிப் பரவும் ஒருவகைக் கிரந்தி; ஆறாத புண்; உடம்பில் மேகத்தினால் சிறு சிரங்கைப் போல் தோன்றிப் படர்ந்து, மாறாத தினவை உண்டாக்கும் ஓர் வகைப் புண்.

அழிகுட்டம் - உடல் முழுவதும் இரணங்கள் ஏற்பட்டு சதை அழுகித் துன்புறுத்தும் ஓர்வகைக் குட்டம்.

அழிகுட்டி - வயிற்றில் மரித்த சிசுப்பிண்டம், கருப்பமழிந்த பிண்டம்.

அழிஞ்சகி - பெருசெருப்படை, செருப்படை.

அழிஞ்சியேறி - ஏறழிஞ்சில்.

அழிஞ்சில் - செம்மரம்,

சேமரம், கிராணித் திரவியம்.

அழிஞ்சு - அழிஞ்சில் வேர்.

அழிபிண்டம் - கருவழிந்த பிண்டம்.

அழிமருந்து - கருவைக் கலைக்கு மருந்து.

அழிவாயு - நவாச்சார வாயு.

அழின் சதை - நாகமல்லி.

அழுகண் - எப்போதும் நீர் வழிந்து கொண்டிருக்கும் கண்ணோய்; கண்ணீர்த் தாரையின் சுருக்கத்தினால் ஏற்படும் கண்ணீர் ஒழுக்கு.

அழுகண்ணி - எப்போதும் நீர் ஒழுகிக் கொண்டிருக்கும் ஒருவித மரம்; எப்போதும் புண்ணினின்று நீர் வடிந்து கொண்டிருக்கும் ஓர் வகைக் குட்டம்; வைத்திய முப்பு; இரத்தம், சீழ் ஒழுகிக் கொண்டிருக்கும் இரண நோய்; தேவாங்கு.

அழுகண்ணிப்பால் - சுயமான முலைப்பால்.

அழுகற் சிரங்கு - நீர் கசிந்து கொண்டிருக்கும் ஒருவகைப் புண்.

அழுகற் பீனசம் - சிராய்ப் பீனசம்.

அழுகிரந்தி - சதை அழுகிய புண்.

அழுகுசப்பாணி - அழுகு சர்ப்பம் நாவினால் தீண்டுவதால் சதை அழுகி இரணத்தை உண்டாக்கும் ஓர் நோய்; ஓர் விடமுள்ள உயிர்.

அழுகு சர்ப்பம் - ஓர்விட முள்ள பாம்பு.

அழுகுணி - காதில் வரும் ஓர்வகைக் கரப்பன்.

அழுகுபுண் - சதையைத் தின்று கொண்டே போகும் ஓர் வகை நாற்றப்புண்; சதையை அரித்து துணுக்குகளாக வெளிப்படுத்தும் ஓர் வகைக் கிரந்திப் புண்.

அழுகுரற்பறவை - புலம்பும் குரலுடைய பட்சி.

அழுகை மாது - கவிழ்தும்பை.

அழுகை வாடிமூலி - அழுகண்ணி.

அழுக்ககற்றி - வண்ணான்காரநீர், சாம்பற்சாரநீர்.

அழுக்ககற்றும் கல் - சுக்கான் கல்.

அழுக்ககற்றும் பூ - பூநீறு, ஓர் களிமண்.

அழுக்ககற்றும் வண்ணாத்தி, அழுக்காற்றும் வண்ணான் - சவர்க்காரம்.

அழுக்கணவன் - இலை தின்னும் புழு, புழுக்கூடு.

அழுக்காமை - ஓர்விதக் கடலாமை.

அழுக்கு - ஆமை; சுரம் முதலிய நோய் வரும்

போது உதடு, பல்லில் படியும் ஊத்தை; குழந்தை பிறந்தவுடன் பெண்களுக்கு வெளிப்படும் உதிரம் அல்லது ஊநீர்.

அழுக்கு தங்கல் - பிரசவித்த பிறகு வரவேண்டிய அழுக்கு வராமலிருத்தல்.

அழுக்கு தேமல் - உடம்பில் சில பாகங்களில் தழும்புகள் ஏற்பட்டு அவற்றில் அழுக்கு நிறைந்து தேய்த்தவுடன் தோலுரியும் ஓர் வகைத் தேமல்.

அழுக்கு நீர் - சூதகநீர், பிரசவித்த பிறகு வெளிவரும் இரத்தம் அல்லது ஊநீர்.

அழுக்கு விழல் - பிரசவித்த பிறகு அழுக்கு விழல், நஞ்சு விழல்.

அழுங்கல் - நோய், மலை, கண் கலங்கல், உருவழிதல், அழுதல், கை, கால், கறுப்பேறல்.

அழுங்காமை - ஓர்வகைக் கடலாமை.

அழுங்கு - இரவில் கரையான்களைத் தின்று பூமியின் கீழ் வளையுள் வசிக்கும் ஓர் பிராணி., நலுங்கு.

அழுங்கோடு - அழுங்கின் மேல் செதில்கள்.

அழுஞ்சி - ஐங்கோலம்.

அழுதாலி - பூனைக்காலி.

அழுதில் - கற்கடகசிங்கி.

அழுத்துப்புரம் - சிறுகுறிஞ்சா.

அழுப்பு - சோறு.

அழுவம் - காடு, ஆழமான கடல், நடுக்கம், நாடு.

அழைப்புமூலிகை - துடரிவேர், சிறியாணங்கை, அழுகண்ணி (மாந்திரிகத்தில் வசியத்திற்குப் பயன்படும்).

அள - அரிதாரம், வண்டு, மது.

அளகபேதம் - அதிவிடயம்.

அளகமம் - புல்லுருவி.

அளகம் - வெள்ளெருக்கு, பெண்களின் தலைமுடி, சுரை, பன்றி முள், நீர், மழைநீர், காட்டகத்தி.

அளகன் - சோரபாடாணம்.

அளகு - சேவல், கோழி, கூகை, பறவைப்பேடு.

அளக்கமளம் - மணி.

அளக்கம் - வெள்ளறுகு, வெள்ளெருக்கு.

அளக்கரம் - வெள்ளெருக்கு.

அளக்கரர் - உப்பளவர்.

அளக்கர் - கடல், பூமி, உப்பளம், சோறு.

அளக்காய், அளக்கு - வெள்ளெருக்கு.

அளங்கன் - மல்லிகை.

அளஞ்சி, அளஞ்சை - அழிஞ்சில்.
அளட்டம் - நல்வேளை.
அளதா - வெள்ளெருக்கு.
அளத்தகம் - செம்பருத்தி.
அளத்தம் - அரத்தை, ஆகாசம், பொன், முடக்கொத்தான்.
அளத்தியம் - சவர்க்காரம், நீலபாடாணம்.
அளத்தியன் - பெருங்காயம்.
அளத்துப்பச்சை - உவர் நிலத்தில் உண்டாகும் மருக்கொழுந்துச் சக்களத்தி, மருக்கொழுந்து.
அளத்துப் பாசிதம் - பெருமுன்னை.
அளத்துப்புல் - முயிற்றுப்புல்.
அளத்துப் பூசினி - பெரும் பூசனி.
அளத்துப்பூளை - ஓர்வகைப் பூளைப் பூச்செடி.
அளப்பம் - உடம்பிலிருக்கும் பித்து.
அளப்புக்கு - முடக்கொத்தான்.
அளமம் - பொன்.
அளம் - உப்பளம், அளாதிப்பாடாணம், உப்பு மண்பூமி, நெய்தனிலம், பொன்.
அளம்பல் - மான் கொம்புப் பூச்செடி (வாதுமை மரம்); வெடங்குறுணி (ஓர் மரம்).
அளம்பல் மரம் - வெடங்குறுணி மரம்.
அளம்பற்றுதல் - உப்புப் பூர்த்தல்.
அளருகம், அளருக்க, அளருக்கு - தூதுவளை.
அளருதல் - கலத்தல்.
அளர்க்ககம் - சத்திச்சாரம்.
அளர்க்கம் - தூதுவளை.
அளர் - நீர், உவர்மண், மஞ்சள், களிமண், சேறு.
அளர்க்காடு - உவர்மண்வெளி.
அளவஞ்சிமூலி - தேட்கொடுக்கி.
அளவர் - உப்பமைப் போர்.
அளவன் - சோரபாடாணம், உப்புக்காய்ச்சுவோன்.
அளவி - கையாந்தகரை.
அளவினார் - நேர்வாளம்.
அளவு - தடி, தண்டு.
அளவு சக்கு - முடக்கொத்தான்.
அளவுதடி - ஆணுறுப்பு.
அளவை - அளவு, நாள்.
அளறு - காவிக்கல், நீர், தூதுவளை, குழம்பு.
அளறுதல் - நெரிதல்.
அளாவல், அளாவன், அளாவுதல் - கலத்தல்.
அளி - கள், காய், மது, தேன், கருந்தேனீ, காகம், வண்டு, மரவுரி, மதுரம்.
அளிகம் - நெற்றி, தேன்.
அளிக்குலம் - தேனீக் கூட்டம்.

அளிஞ்சி - அழிஞ்சில், ஓர் செடி.

அளிதல் - கரையும் படி அவித்தல், குழையும் படி அவித்தல், குழைதல், உருகுதல், கனிதல், கலத்தல்.

அளிதோடம் - கருவழிந்ததால் ஏற்பட்ட குற்றங்கள்; குழந்தை களுக்குக் குடித்த பால் தங்காது, நெஞ்சடைப்பு, உடம்பு நாற்றம், கைகால்வலி முதலிய குணங்களை உண்டாக்குமோர் நோய்.

அளிலாமயம் - வாதநோய்.

அளீகம் - நெற்றி.

அளுங்கு - ஓர்வகைக் கிளிஞ்சில்; அழுங்காமை; அழுங்கு எனுமோர் பிராணி.

அளுங்கோடு - அழுங்கு என்னும் பிராணியின் கொம்பு.

அளேசவுப்பு, அளேசுவிடயம், அளேசு வெப்பம், அளேசு வெப்பு - அதிவிடய வேர்.

அளேரியம், அளேருகம் - பெருவெங்காயம்.

அளேறுகம் - தூதுவளை.

அளை - தயிர், மோர், வெண்ணெய், மலைக்குகை.

அளைகுதல், அளைதல் - கலத்தல்.

அளையெடுத்தல் - புரையோடல், துவாரமிடல்.

அளைவு - கலத்தல்.

அள் - கன்னம், காது, நீர்முள்ளி, அள்ளு மாந்தம், வரண் முள்ளி.

அள்வழுப்பு - காது குறும்பி.

அள்ளதுள்ள போதல் - சடுதி மரணம் (அகால மரணம்)

அள்ளத்தி - ஓர் மீன்.

அள்ளநோய் - அள்ளு மாந்தம்.

அள்ளல் - சேறு.

அள்ளாத்தி - கண் பெருத்த ஓர் வகை மீன்.

அள்ளி - வெண்ணெய்.

அள்ளு - அள்ளுநோய்; குழந்தைகளுக்கு ஏற்படுமோர் சுவாசநோய், வலி; காது.

அள்ளு மாந்தம் - குழந்தைகட்கு நா முள்தோடத்தினால் விலாப்பக்கம் இரண்டும் உயர எழும்பித் துன்பமும் வலியுமுண்டாக்கு மோர் நோய். இதைத் 'தெறகத்திக் கணம்' என்பர்.

அள்ளூரல் - அறணை அல்லது காட்டுக் கருணை.

அள்ளூறல் - வாயூறல்.

அள்ளெடுக்குதல் - நோயினால் விலாதூக்கல்.

அள்ளெடுத்தல் - இறக்குங்கால் மூச்சுவிட முடியாமல் விலாப்பக்கத்தைத் தூக்கி விடுதலானவோர் மரணக்குறி.

அள்ளெலும்பு - கன்னப் பொறியெலும்பு (காதருகில் இருக்கும் எலும்பு).

அற - முழுவதும்.

அறகண்ணி - எருக்கன் கிழங்கு.

அறக்கதாருகம் - பெருஞ்சண்பகம்.

அறக்கந்தகம் - செந்தாமரை.

அறக்கப்பிளப்பி - திருநாமப்பாலை.

அறக்கமா - புளிமா.

அறக்கம் - சுக்கு, திருநாமப்பாலை.

அறக்காடு - சுடுகாடு.

அறக்காந்தம் - செந்தாமரை.

அறக்கிளப்பி - திருநாமப்பாலை.

அறக்குளா மீன் - சூரை மீன்.

அறங்கை - உள்ளங்கை.

அறசோகணக்கு - கருணைக் கிழங்கு.

அறச்சந்தகாரன் - சாரைப்பாம்பு.

அறச்சித்தகம் - வெண்ணொச்சில்.

அறணை, அறணையம் - காட்டுக் கருணை.

அறதனம் - மிருதபாடாணம், நவமணிப் பொது, மாரி, மணியரம்.

அறதினம் - மணி.

அறத்தம் - செங்கழுநீர், பவழம்.

அறத்தனம் - மணியரம்.

அறத்தேந்து புஷ்பிகை - மணியரம்.

அறநெறி - ஊசலாங்கொடி.

அறப்பகேசு - வசம்பு.

அறப்பதுமம் - செந்தாமரை.

அறமறை - வாழை.

அறமியம் - பிரமி.

அறமிளகரணை - ஓர்வகை மிளகரணை.

அறம் - நோய்களுக்கு மருந்து கொடுத்தல்.

அறல் - கருமணல், இரும்பு மணல், சிலேற்றுமம், தண்ணீர், கடற்கரை, நீர்க்கடுப்பு.

அறவச்சுண்ணம் - புடமிட்ட சுண்ணம்.

அறவாடி - சர்வத்திராவகம்.

அறவிந்தம் - தாமரை.

அறவுளி - நோயாளிக்கு மந்திரித்தல்.

அறவூதல், அறவைத்தல் - புடமிடல்.

அறளை - ஓர் நோய்.

அறளைப்பு, அறளையம் - காட்டுக் கருணை

அறாமதி - நாரை.

அறாமை - கவிழ்தும்பை.

அறாம்பை - தும்பை.
அறிகருவி - உடம்பினுணர்ச்சியைப் புலப்படுத்தும் உறுப்பு.
அறிசா - பெருவரை மீன்.
அறிதுயில் - விழிப்பில் நித்திரை கொள்ளுமோர் நோய்.
அறிப்பலம் - திப்பிலி.
அறியகம் - நோயை உண்டாக்குமோர் பைசாசம்.
அறியசாரணை - மாவிலிங்கம்.
அறியபலம் - அறிப்பலம்.
அறியல் - மூங்கில் மரம்.
அறிவழி - கள், புத்திகெடல், பைசாசம்.
அறிவழிதல் - புத்திகெடல், மரணக்குறி.
அறிவிலாப்பிரமை - மந்த பித்தம், பித்த நோய் நாற்பதில் ஒன்று.
அறிவினொளி - கற்பூரசிலாசத்தின் சாரம்.
அறிவு பிறத்தல் - மூர்ச்சை தெளிதல்.
அறிவுறுதல் - உணர்ச்சி கொள்ளல்; தூக்கத்தினின் றெழுதல்.
அறுகங்கட்டை - அறுகம் புல்லினடி வேர்; அறுகு.
அறுகங்கிழங்கு - அறுகம் புல்லின்டியிற் காணப்படும் வாசனைக் கிழங்கு.
அறுகம் - சுருக்கு.
அறுகால் - வண்டு, தேனீ, பாம்பு.
அறுகீரை - அறைக்கீரை, பத்தியக்கீரை, வாதம், கபம், சீதளம் முதலியவைகளைப் போக்கும்.
அறுகு - ஆண் புலி; சிங்கம்; யாளி; யானை; ஆளி விதையை அரைத்துப் பிழிந்த ரசம்; அறுகம் பூ; ஒருவகைப் புல்; முயற்புல்.
அறுகு தராசு - சிறு தராசு.
அறுகு மூலி - வெள்ளறுகு.
அறுகு மெறுகும் - எருக்கிலை.
அறுகை - அறுகம்புல், அறுத்தல், அறுப்புண்ட கை.
அறுக்கம் - சந்தனம், எருக்கு, சுக்கு.
அறுக்கிளாமீன் - ஓர் கடல் மீன்.
அறுசரக்கு - கல்லுப்பு, சாரம், வெடியுப்பு, படிகாரம், துருசி, வெண்காரம் முதலிய ஆறுவகைச் சரக்குகள்.
அறுசுவை - கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு, காரல் உவர்ப்பு.
அறுசுவைக்காதி, அறுசுவையாதாரம், அறுசுவையுப்பு - கல்லுப்பு.
அறுசோகம் - கெந்தி.

அறுதம் - ஓர்வகைச் சீமைப்பூடு.

அறுதி - சாவு.

அறுதொழில் - மலநீக்கம்.

அறுத்தல் - செரித்தல், நோயில்லாமற் செய்தல்.

அறுநீர் - வெடியுப்பு உருகும் போது துருசு, சீனம், வெண்காரம், பூநீறு, நவாச்சாரம், கழுதைமண்டையோடு முதலியவைகளைப் பொடித்துப் போட்டுக் கிண்டிப் பனியில் வைத்து இறக்கும் ஓர் வகைச் செயநீர். (அண்டநீர், சிறுநீர்).

அறுபதம் - கையாந்தகரை, ஆறுகால் வண்டு.

அறுபதாங்கொட்டை - ஆமணக்குக் கொட்டை.

அறுபதாங் கோழி - 60 நாளைக்கொரு முறை முட்டையிடுங் கோழி.

அறுபத்து நாலு பாடாணம் - தமிழ் வைத்தியத்திற் சொல்லியுள்ள 32 பிறவிப் பாடாணம், 32 வைப்புப் பாடாணம் ஆக 64 பாடாணம்.

அறுபத்தை - கையாந்தகரை.

அறுபருத்தம் - வாழை.

அறுப்பன்பூச்சி - தானியப்பூச்சி.

அறுப்பா - வாழை.

அறுப்பை - தும்பை.

அறுமதம் - கையாந்தகரை.

அறுமனை - ஊத்தை நாறிப் பூண்டு.

அறுமுகம் - வேங்கை மரம்.

அறுமுகவாகனம் - மயிலிறகு.

அறுமுகன் விசிறி - மயூரச்சிகை. (அறியப்படாத செடி)

அறும்பை - கவிழ்தும்பை.

அறுவகை அரிசி - வெட்பாலையரிசி, விளாவரிசி, கார்கோலரிசி, வாலுளுவை, உருளரிசி, உலுவா அரிசி.

அறுவகைச் சரக்கு - நந்தியுப்பு, அரப்பொடி, அப்புப்பொடி, காசுக்கட்டி, நாகரசம், தாளகம்.

அறுவகைச் செயநீர் - அறுநீர்.

அறுவகை பேதி - அன்னபேதி, மாமிசபேதி, சொர்ணபேதி, அஸ்திபேதி, சகஸ்திரபேதி, துகபேதி ஆக ஆறுவகை பேதி.

அறுவகை மூத்திரம் - மனிதனின் சிறுநீர், ஆடு, பசு, கழுதை போன்ற மிருகங்கள் ஐந்தின் சிறுநீர்.

அறுவாய் - வெட்டு பட்ட இடம்.

அறுவித ரேகை - மயூரச்சிகை. (அறியப்படாத செடி)

அறை - கற்பாறை,

மலைக்குகை, பிரசவவீடு, மலையினுச்சி, சுரங்கம், அம்மி, கண்ணறை, தேன்கூட்டின் அறை, வெட்டுக்கை, துண்டம்.

அறைக்கீரை - அறுகீரை.

அறைக்கீரைக்காய் - வெள்ளரிக்காய்.

அறைக்கீரைவிதை - அறைக்கீரையினின்று எடுக்கும் சிறிய கருப்பு விதை; இவ் விதையின் தைலம், தலை மண்டைக்குக் குளிர்ச்சியைத் தரவும் தலை மயிர் வளரவும் உபயோகப்படும்.

அறைக்குழந்தை - பிரசவித்த அறையினின்று வெளிவராத குழந்தை.

அறைத்தி - கடுக்காய்.

அறைநீலி - கொத்துமல்லி.

அறைபவனாதி - வெண்காரவுள்ளி.

அறைவாடிக்கிளி - பொன்னாங்காய்.

அறைவீட்டு நோய் - பிரசவித்த அறையினின்று வெளிவராத முன்பே தோன்றும் நோய்கள்; சன்னி, சுரம், கிராணி வலி முதலியன.

அறோதகம் - வாழை.

அறோதயம் - சிறுகீரை.

அற்கண்ணி - எருக்கன் கிழங்கு.

அற்கப்பிளப்பு - திருநாமப் பாலை.

அற்கம் - வெண்துளசி, தும்பைச்செடி, அலரி, குன்றி, நந்தியாவட்டம், முருக்கு, வன்னிமரம், வெள்ளெருக்கு, வேம்பு.

அற்கரா - பேயிலுப்பை, திருநாமப்பாலை.

அற்கி - ஓரிலைத்தாமரை.

அற்சகன் - விடப்பாலை.

அற்சனையாதி - வில்வம்.

அற்சிரம் - முன்பனிக்காலம்.

அற்பகதம் - வாழை.

அற்பகந்தம் - செந்தாமரை.

அற்பகம் - குழந்தைப்பருவம், துராலப்பை என்னுமோர் சிறுபூண்டு, முன்னை.

அற்பகன் - குழந்தை.

அற்பகாந்தம் - பேயெள்ளு.

அற்பகால சுரம் - சிறிதுநேரம் அடிக்குஞ்சுரம்.

அற்பகெந்தம், அற்பகெந்தரம் - செந்தாமரை.

அற்பகேசி, அற்பகேசு - வசம்பு.

அற்பகேதுமம் - சந்தனம்.

அற்பகை - பேயகத்தி.

அற்பசுரம் - பெண்கள் பிரசவித்த பிறகு அதிர்ச்சியாலும் பலவீனத்தாலும் சில நாள் வரையிலிருந்து பிறகு நீங்கும் சுரம்;

ஒத்துணர்ச்சியினால் உண்டாகும் சுரம்; ஒன்று அல்லது இரண்டு நாளைக்கு அடிக்கும் சொற்ப சுரம்.

அற்பதுமம் - செந்தாமரை.

அற்பதேதம் - வாழை.

அற்பத்திரம் - துளசி.

அற்பபத்திரம் - திருநீற்றுப் பச்சை.

அற்பபத்திரை - சிறிய இலைகள் உள்ளது, நிலப்பனை, சோம்பு, ஒருவகைத் துளசி

அற்பபிரமாணகம் - வெள்ளரி.

அற்பபுட்பகம் - திலக மரம், சிறு வாழை.

அற்ப மாரி, அற்ப மாரிசம், அற்ப மாரிடம் - காட்டுச் சிறுகீரை, சிறுகீரை.

அற்ப மூரினி - பேயவரை.

அற்பம் - நாய், பஞ்சு, பனி, புகை, களம்புல்.

அற்பயத்திரம் - ஓர் துளசி.

அற்பருத்தம் - வாழை.

அற்பவல்லிகை - கார்போக விதை.

அற்பவிஷபாம்பு - சிறிது விஷமுள்ள பாம்பு.

அற்பாசமனம் - சிறுநீர்விடுதல்.

அற்பாயு - வெள்ளாடு.

அற்புதசயா - சூரத்துக் கடுக்காய்.

அற்புதகிரந்தி - சில நாளைக்குள் கண்டுகண்டாக இரணத்தை எழுப்புவதுடன் பருத்துயர்ந்து எரிச்சலும் தினவும் அதிகரித்துக் காணுமோர் வகை இரணக் கிரந்தி.

அற்புதநோய் - புரைக்குழல்.

அற்புதப்புண் - அதிக வலியும் வீக்கமும் உடைய புண்; உள்ளில் மிகுந்த வலியோடு கூடிய வீக்கம்; விலாவின் குருத்தெலும்பு; தண்ணீர்.

அற்புதலை - நுணா.

அற்புதவதி - மிளிறை, அரிவாளைப் போன்ற இலைகளையுடைய ஒரு பூண்டு; காயப்பூண்டு.

அற்புதவர்த்தமம் - இரைப்பையில் மந்தமான வலியையும் வீக்கத்தையுமுண்டாக்கும் கண்ணோய்.

அற்புதவாதம் - முகத்தில் வாயு ஏற்பட்டு நரம்பிழுத்து பித்தம் அதிகரித்து வாய்கோணி கண் சாய்த்து காணுமோர் நோய்.

அற்புதவேணி - கருப்பு மந்தாரை.

அற்புதாக்கிரகம் - குழந்தை பிறந்த 12-ஆம் நாள் அல்லது 12-ஆம் மாதம் அல்லது 12-ஆம்

வருடத்தில் தாய் அல்லது குழந்தைக்குத் தோடத்தால் வரும் நோய்.

அற்புதோட்டநோய் - உதடுகளில் வீக்கத்தையும், சிவந்த நிறத்தையுமுண்டாக்கும் நோய்.

அற்றகம் - கல்நார்.

அற்றசெம்பு - களிம்பற்ற செம்பு.

அற்றம் - சோர்வு, மெலிவு, வருத்தம்.

அற்றறா வாயு - வயிற்றிலுள்ள அதிகமான வாயுவினால் செரியாமை ஏற்பட்டு தினமும் புளித்தேப்பம் அதனுடன் பலவீனம், உடம்புக் கொதிப்பு முதலிய குணங்களுண்டாகும் குன்மவாயு.

அற்றிப்பூரசாதனி - அவுரி.

அற்றூரம் - மரமஞ்சள்.

அனகபுஷ்பகம் - கலப்பைக் கிழங்கு.

அனகம் - புல்லுருவி.

அனகாமிதம் - பேயெலுமிச்சை.

அனக்கம் - எருக்கு.

அனக்கிராந்தம் - கண்டங்கத்திரி.

அனங்கமாதா - செம்பஞ்சு, அரக்கு.

அனங்கம் - இருவாட்சி, பேய்க்குமட்டி, மல்லிகை, வாய்வு, ஆகாயம், உடம்பில்லாதது.

அனங்கலி - சிறுதேள் கொடுக்கி (எலும்புருக்கிபோம்)

அனங்காகினி - பேய்க்கொள்ளு.

அனங்குரி - விரலற்ற.

அனசனம் - முதன்மையான உணவு.

அனசு - ஓர் அளவு.

அனசூயம் - எரிச்சலின்மை.

அனஞ்சனம் - ஆகாயம்.

அனட்சம் - முட்டையிற் பிறப்பன, குருடு.

அனதிநோய் - அதிக நோயில்லாமை.

அனதுச் சீவன் - ஓர் பூண்டு.

அனத்தல் - காய்தல்.

அனத்தியன் - சோமனாதி.

அனந்தகம் - மயிற்சிகை, (ஒருசெடி) ; குப்பைமேனி.

அனந்த காந்தம் - மருக்கொழுந்து.

அனந்த காரம் - வெந்தோன்றி.

அனந்த கிரி - அரளிப்பூ.

அனந்த ஞானி - சூரியன்.

அனந்த திராவி - கொல்லைப்பல்லி (ஓர் பூண்டு).

அனந்த பீதம் - மருக்கொழுந்து.

அனந்த மூலம் - கிருட்டிணவல்லி.

அனந்த மூலி - அலரி.

அனந்தம் - குப்பைமேனி, சிறு குறிஞ்சா, சிறுகாஞ்சொறி, பெருநன்னாரி, அறுகு, கோளகபாடாணம், பொன், ஆகாயம், கொடிப்பசலை, மிருதபாடாணம், இருவாட்சி, நன்னாரி, மயிற்சிகை, (ஒரு செடி) வேலிப்பருத்தி, சிந்துவாரம், (ஒரு செடி) அப்பிரகம், கழுதைப்பாலை, பருத்தி, வெந்தோன்றி.

அனந்தரகம் - பேய்ச்சீந்தில், பருத்தி.

அனந்தரம் - வேலிப்பருத்தி, அறுகம்புல்.

அனந்தர் - பருத்தி, மயக்கம், தூக்கம், மனத்தடுமாற்றம்.

அனந்தலாவிகம் - பேய்ச்சீரகம்.

அனந்தவங்கம் - பூனைக்காலி.

அனந்தவாதம் - முகமும் கழுத்தும் சோரும்படிச் செய்யும் ஒரு நோய்; உடம்பில் அனைத்திடங்களிலும் பரவுவதால் இப்பெயர் பெற்றது; திரிதோடத்தால் ஏற்படும்; தலையிற் காணுமோர் நோய்; புறவீச்சு, இது பிடரி நரம்பைப் பற்றித் தலையில் வலியையும் கண், புருவம், கன்னப்பொறி, தாடை முதலிய இடங்களில் பரவி அங்கங்கு சுவரணையறச் செய்யும்.

அனந்தவோபயம் - கருநாய்.

அனந்தன் - வெடியுப்பு, காய்ச்சற்பாடாணம், பொன், சோரபாடாணம், படத்தில் புள்ளிகளையுடைய பாம்பு, கடுக்காய், ஆகாயம், கொடிப் பசலை, நன்னாரி, கோளகபாடாணம்.

அனந்தா - பருத்தி.

அனந்தி - தான்றிக்காய், கொற்றான்.

அனந்துடையோன் - ஈ.

அனந்தை - அறுகு, கொற்றான் கொடி, நெல்லி மரம், பூமி, செடிப்பாசி, வெண்புல்.

அனபகா - சமுத்திர சோகி.

அனபத்தியம் - மலட்டுத்தன்மை.

அனமாச்சுரம் - பொன்னாங்கண்ணி.

அனமாருதம் - இந்திரகோபம்.

அனம் - சோறு, அன்னப்பறவை.

அனம்பு - சாதகப்பறவை (வானம்பாடி), நீர் (ஈரம்) இல்லாதது.

அனயகம் - இருவாட்சி, மல்லிகை.

அனயகை - பெருங்கொட்டைக் கரந்தை, துவரை.

அனரவன் - வெந்தோன்றி, பாடாணம், பஞ்சபட்சி பாடாணம்.

அனலசம் - பேய்க்கொம்மட்டி.

அனலசனப்பட்சி - நெருப்புக்கோழி.

அனலதீபனம் - பசியையுண்டாக்குவது.

அனலபித்தம் - உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் பித்தநீர்; சூட்டினால் வரும் ஒருவகைப் பித்த நோய்.

அனலப்பிரபம் - முடக்கொத்தான்.

அனலமுரி - அமுரியுப்பு.

அனலம் - சித்திரமூலம், நெருப்பு, வெப்பம், செரிக்குந்தன்மை, பாசகநீர், பித்தம், சேரான் கொட்டை.

அனலல் - எரிதல், சூடாயிருத்தல்.

அனலாசனப்பட்சி - அனலசனப்பட்சி.

அனலாடுவேந்தன் - கார்முகில் பாடாணம்.

அனலி - சூரியன், தீ, செந்திராய், அகத்தி, அரளி.

அனலிமுகம் - சூரிய புடம்.

அனலுக்குள் அசையா சூதகத்தி - சுணங்கன் விருட்சம்; 21 மகா மூலிகைகளுள் ஒன்று.

அனலேசு வெப்பம் - அதிவிடயம்.

அனலேறு - இடி.

அனலோடுவேந்தன் - அனலாடு வேந்தன்.

அனல் - கொடிவேலி, பித்தம், வன்னியிலை, மூலாக்கினி, வெப்பம், சித்திரமூலச்சாறு, சிறுகாஞ்சொறிவேர், உயிர்வேதனையிலொன்று.

அனல்காய் - அரிநெல்லி.

அனல் காலி - சூரிய காந்தக்கல்.

அனல்காவி - சூரிய காந்தக்கல், விடங்கொண்ட சிவந்த பாதங்களையுடைய சிலந்திப் பூச்சி.

அனல் பாலி - தில்லைமரம்.

அனல்முகம், அனல்மூலம் - சித்திரமூலம்

அனல் வாதம் - எரிச்சலையுண்டாக்கும் ஒரு வாதநோய்; உடல் வெப்பத்தினால் ஏற்படும் ஓர் வகை வாத நோய்.

அனல்வாதை - பசி, வெப்பத்தினாலேற்படும் நோய் அல்லது துன்பம்.

அனல் விந்தை, அனல் விரை - நேர்வாளம்.

அனல் வென்றி - தங்கம்.

அனல்வேகியிலை - எருக்கிலை.

அனற் கண்டர் - துருசு.

அனற்கண்பார்வை - நடை அதிகமாவதால் உடம்பில்வெப்பம் அதிகமாகி அதனாலுண்டாகும் ஓர்வகைக் கண்ணோய்.

அனற்கல் - சக்கிமுக்கிக்கல்.

அனற்காலி - அனல்காலி.

அனற்கோபம் - அழற்சியால் ஏற்பட்ட ஓர்வகைக் கண்ணோய்.

அனற்சுக்கிரன் - கருவிழியில் நோயையும் உள்ளில் காந்தலையு முண்டாக்கும் கண்ணோய்.

அனற்சுரம் - உடம்பில் நெருப்பைப் போன்று சூட்டையுண்டாக்கும் சுரம்.

அனற்சூரணம் - பிரண்டைத்தூள், சதுரக்கள்ளிப்பட்டை, உப்பு முதலான சரக்குகளைச் சேர்த்துப் பொடி செய்து மேல்நோக்கும் வாய்வு; காமாலை முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் சூரணம்.

அனற்பாலி - அனல்காலி.

அனற்றல் - எரிதல், சுடுதல்.

அனற்றிராவகம் - அக்கினித்திராவகம்.

அனற்றுதல் - வயிறுளைதல், எரித்தல்.

அனனம் - உள்நாக்கு, கீழ்வாய், ஆல், சோறு.

அனா - சுவாசம்.

அனாகதசுரம் - மார்புத்தானத்தில் இருந்து எழும் ஒருவகைக் காய்ச்சல்.

அனாகதம் - இதயம்.

அனாகதர்த்தவம் - மாதவிலக்கு ஆகாத பெண்.

அனாகதவாத சூலை - இருதயத்தான நரம்பைப்பற்றிக் குத்தல் வலியையுண்டாக்கும் ஓர் விதச் சூலைநோய்.

அனாகதவாயு - மென்மேலும் உண்பதாலும் நொந்துபோன சோறு, ஊசற்கறி இவற்றைப் புசிப்பதாலும் மலம் இறுகி வயிறு பொருமி வாந்தியையும் கழிச்சலையும் உண்டாக்கும் வாத நோய்; இருதயதானத்திலேற்படும் வாயு.

அனாக்கம் - பச்சோந்தி.

அனாசி - அன்னாசிப்பழம்.

அனாசிப்பூ - ஓர் சீனத்துக் கடைச்சரக்கு.

அனாதி - வித்து (விதை), விந்து.

அனாதிகுளி - கொத்துமல்லி.

அனாதியுப்பு - கல்லுப்பு.

அனாதிரியதித்தம் - நிலவேம்பு.

அனாதுரம் - நோயற்றிருத்தல்.

அனாத்தம் - இதயம்.
அனாத்தல் - கற்கடகசிங்கி.
அனாமயம் - நோயின்மை
அனாமலம் - காட்டுக்கொடி, மாதுளை.
அனாமிகை - இடுப்புக்குழி, மோதிர விரல், விரல்கள்.
அனாயாசக வாதம் - சீதளம், பத்தியங் காக்காமையினால் இரத்த ஓட்டம், மலசலம் இவை பாதிக்கப்பட்டு உடம்பு கனத்து குத்தல், மரத்தல் முதலியன உண்டாகும் ஓர் வாத நோய்.
அனாரியகம் - அகருக்கட்டை.
அனாரியதித்தம், அனாரியம் - நிலவேம்பு.
அனார்ச்சபம், அனார்ச்சவம் - நோய்.
அனாவத்துவம் - மூச்சுடனிருத்தல்.
அனாவன் - பஞ்சபட்சிபாடாணம், வெந்தோன்றி.
அனாவிலம் - தெளிவுடன் இருத்தல்.
அனான்மா - உடம்பு.
அனி - நெற்பொரி.
அனிகலம் - மாவிலிங்கம்.
அனிசம் - தூக்கமின்மை.
அனிசனார் - நாகமல்லிகை.
அனிசாகியம் - பேய்ச்சுண்டை.
அனிசி - நற்சீரகம், பேய்ச்சுரை, சோம்பு.
அனிசு - ஆனைச்சீரகம், பெருஞ்சீரகம்.
அனிசூம் - சோம்பைப் போல் சற்று முக்கோண வடிவமுள்ள பசுமையான சிறிய சோம்பு அதாவது ரூமிச்சோம்பு.
அனிச்சநாகம் - மல்லிகை.
அனிச்சம் - வைத்திருந்தாலும் அல்லது முகர்ந்தாலும் வாடக்கூடிய (ஒரு சிறப்பு வகையைச் சேர்ந்த) பூக்கள் உள்ள மரம், வரகு, அரசு.
அனிச்சி, அனிச்சை - நாகமல்லிகை, பேய்ச்சேம்பு.
அனிஞ்சில் - வில்வம்.
அனிட்டம் - நான்முகப்புல்.
அனிதிதம் - பேய்த்தம்பட்டை.
அனித்தம் - சந்தனம்.
அனித்தியவுப்பு - காய்ச்சுலவணம்.
அனித்திரை - தூக்கமின்மை; சிலேத்துமத்தினால் உடம்பிற்குண்டாகும் நிலைமை.
அனித்திரை சுரம் - தூக்கம் பிடிக்காது ஓயாமல் இருமலை உண்டாக்கும் ஒருவகைச்சுரம்.
அனிப்பிராயயம் - புருவத்தையும் கண்ணோரங்களையுந்

தாக்கி வலியையும் வீக்கத்தையும் உண்டாக்கும் ஓர்விதக் கண்ணோய்.
அனிமாலினம் - சாவு.
அனிமேடம் - ஓர்வகை மீன்.
அனியூகம் - பேய்த்தும்பை.
அனிலக்கினகம் - தான்றிமரம்.
அனிலக்கினம் - வாதநோய்களைக் குணப்படுத்துவது.
அனிலசகன் - நெருப்பு.
அனிலசம் - செம்முகக் குரங்கு.
அனிலச்சூலை - வாதத்தினால் ஏற்படும் சூலை.
அனிலபுட்பி - கருஞ்செம்பை.
அனிலம் - காற்று, பிறப்பு, வாதநோய்.
அனிலன் - பிராணவாயு, வாயு.
அனிலாமயம் - வாத நோய்.
அனீகனி - தும்பை.
அனீகினி - தாமரைப்பூ.
அனீசு - அன்னாசு, பெருஞ்சீரகம் (நட்சத்திர சீரகம்).
அனீதக்கியம் - கஞ்சா.
அனு - தாடை, தாய்ப்பால், நோய், சமம், சாவு, தேய்த்தல், பூசுதல்.
அனுகதம் - இதயம்.
அனுகம் - செஞ்சந்தனம், சந்தனம்.
அனுகாகிதம் - பேய்த்துவரை.
அனுகு - செஞ்சந்தனம்.
அனுகூல்லியகை - நிலவேம்பு.
அனுகோதம், அனுகோர்த்தம் - சிறு மூளை அல்லது துணை மூளை.
அனுக்கம் - பாம்பு, செஞ்சந்தனமரம், பலவீனம், பயம், சோம்பல், வருத்தம், குழந்தைநோய், சந்தனம்.
அனுக்கிரகம் - தாடைக்கேற்படுமோர்வித உணர்ச்சியின்மை.
அனுக்குரோசம் - இரத்தம்.
அனுங்கம் - புணர்ச்சி, சந்தனம், பாம்பு.
அனுசங்கமம் - புணர்ச்சி, மூட்டு.
அனுசசோடகம் - தோள்பொருத்துவாதம்.
அனுசபீடம் - தோள்பட்டை.
அனுசம் - பிரபுண்டரீகம், சேர்த்தல்.
அனுசயம் - காலில் வரும் நோய்; உடம்பில் மேற்பாகத்தில் வரும் கொப்புளம் அல்லது கட்டி; தலையில் வரும் கட்டி.
அனுசயை - உட்சதையில் எழும்பி மேல் நோக்கி வரும் ஒருவித வீக்கம்.

அனுசரணம் - வழக்கம், பழக்கம்.
அனுசாயம் - மாலைவேளை.
அனுசாரம் - தீம்பிரண்டை, தித்திப்புப்பிரண்டை.
அனுசிரஞ்சவாதம் - பேசவும் உண்ணவும் முடியாதபடி எப்போதும் வாயைத் திறந்தாவது மூடியாவது இருக்கச் செய்யும் ஒரு வகை வாத நோய்.
அனுச்சிட்டம் - சுத்தம்.
அனுட்டனம் - சோம்பு.
அனுட்டினம் - நீலோற்பலம்.
அனுதரிசம் - மது உண்ணுங் கலயம், தாகம்.
அனுதாப கழலை - ஒத்துணர்ச்சிக் கழலை.
அனுதாப சுரம் - ஒத்துணர்ச்சியால் உண்டாகும் சுரம்.
அனுதாவனம் - சுத்தி செய்தல்.
அனுதேகம் - உடம்பு.
அனுதைலம் - வாதநோய்க்கு, இந்திய முறையில் உபயோகிக்கும் பூசுத்தைலம்.
அனுதோதம் - தொட்டிப்பாடாணம்.
அனுத்தம்பவாதம், அனுத்தம்பனம்- இருதாள்களையும் மரத்து இறுக்கி நாவை, உள்ளுக்கிழுத்துத் துன்பத்தை விளைவிக்கும் வாத நோய்; மோவாய்க் கட்டைப் பிடிப்பு; சன்னியால் தாளிறுத்தல்.
அனுத்தானம் - முகங்குப்புற இருக்கும்படி கிடத்தல்.
அனுத்துருதம் - ஒரு கால அளவு; ஒருமாத்திரையின் கால்பங்கு (கால் அளவு)
அனுபசயம் - நோய் குணப்படாத நிலைமை.
அனுபத்தியேது - சீதளம், நோயின் தன்மையைக் குறிக்கும் அறிகுறி.
அனுபந்தம் - பிறந்த குழந்தை; ஒன்றோடொன்று சேர்க்கப்படுவது; பின்னால் வரும் நோய்; உபநோய்.
அனுபந்தி, அனுபந்தை - தாகம், விக்கல்.
அனுபாகம் - தாடைப்பக்கம்.
அனுபாசனம் - உபமருந்து, கூட்டு மருந்து அல்லது சேர்க்கை மருந்து.
அனுபானம், அனுபானியம் - 1. மருந்தை உட்செலுத்தவும், 2. அருவருப்பு தரும் மருந்துகளை ஒக்களிக்காது உட்செலுத்த வேண்டியும். 3. மருந்து வெளிவராமல் இருக்கவும். 4. மருந்தைப் பொதிந்தோ வேறு விதமாக சுவையுண்டாகும்படி செய்தோ உட்செலுத்த

வேண்டி உணவு உண்டபின் சாப்பிடும் குடிநீர்; மேற்கண்ட காரணங்களுக்காக மருந்து சாப்பிடும்போது பருகும் குடிநீர்; அல்லது உட்கொள்ளும் பொருட்கள், தேன் நெய் சர்க்கரை, வெல்லம் வெண்ணெய்.

அனுப்பினுட் சுவை - சேர்ந்த உப்பின் ருசி, உப்பு.

அனுப்பு - உப்புடன் உதவியாக சேர்ந்தது கறியுப்பு, புளியுப்பு.

அனுப்புசக்தி - முடக்கொத்தான்.

அனுமஞ்சீவி - அனுமனால் கொண்டு வரப்பட்ட சஞ்சீவி அதாவது உயிர் தரு மருந்து; ஆயுள் விருத்தியை யுண்டாக்கு மருந்து; சாகாமலிருக்க வேண்டி, கொள்ளும் மருந்து (காய கற்பமருந்து).

அனுமதை - ஓர்விதப்புல்.

அனுமந்தசம்பா - ஓர்வகைச் சம்பா நெல்.

அனுமரச்சா, அனுமாசக்கா, அனுமாசாக்கா - பொன்னாங்கண்ணி.

அனுமூலம் - பேய்த்துளசி.

அனுமை - கண்இமையினடி, கண்ணின் புற வருகு.

அனுமோட்சம் - தாடையெலும்பு நழுகல்.

அனுராகமூலி - காம இச்சையை உண்டாக்கும் மூலிகை.

அனுருகம் - ஓர் வகைப்புல்.

அனுலேபகம் - உடம்பில் பூசும் சந்தனம் முதலிய வாசனைப் பொருட்கள்; பூசுந் தைலம்; தைலம் முதலியவற்றைப் பூசுதல்.

அனுலேபம் - ஒற்றடம், பூசுதல்.

அனுலேபனம் - பூசுதல், பூசும் பொருள்.

அனுலோபனம் - குடலுக்குள்ள இயற்கையான அசைவு.

அனுலோமனம் - வாயுவை வெளிப்படுத்தும் பேதி மருந்து.

அனுவட்டம் - சிறிது உருண்டையாயிருக்கும் ஓர்வகை முத்து.

அனுவல்லிப்பூடு - கஞ்சா.

அனுவாசம், அனுவாசனம் - வாசனையூட்டல்.

அனுவாசன வஸ்தி - தைலம், குடிநீர், நெய் முதலியவை கூட்டி குதமார்க்கமாய் பீச்சுங் குழலினால் கூட்டி உள்ளுக்குப் பிரயோகிப்பது.

அனுவாசிதம் - தயாரித்து உபயோகிப்பது; புகை போடுதல்.

அனுவிருத்தம் - முட்டைவடிவம்.
அனுவெல்லிதம் - கட்டு கட்டல், கால் கை கட்டு.
அனூகசம் - இஞ்சிப் பூண்டு.
அனூசம் - தண்ணீரில் வளர்தல்.
அனூசரம் - கரிப்பில்லாத உப்பு, பூநீரின் பிரிவு அதாவது சோடாவுப்பு, சவர்க்காரம்.
அனூபகம், அனூபசம் - இஞ்சி.
அனூரு - முடவன்.
அனூர்த்துவர்த்தி - மேல் கதுப்பினெலும்பு.
அனூர்த்துவ வத்தி, அனூர்த்துவ வாத்தி - மேல்தாடையெலும்பு.
அனூவிரிச்சம் - விலாப்பக்கம்.
அனேகமூகன் - செவிடும் ஊமையுமானவன்.
அனேதிரு - வெப்பம் அல்லது மின்சார சக்தி எளிதில் ஊடுருவிச் செல்லாத பொருள்.
அனை - ஓர் வகை ஆற்று மீன்.
அனைக்கருங் கிழங்கு - பூபரிக் கிழங்கு.
அனோக்கம் - மரம், மரப்பொது.
அனோபகம் - பேய்த்தேற்றா.
அனோபசம் - இஞ்சி.
அன்சு - ஓர் மருந்தளவு.
அன்பகம், அன்பகர் - சமுத்திர சோகிப்பூண்டு அல்லது சமுத்திரப்பாலை.
அன்பரீசப்பூ - மலர்ந்த கிளிஞ்சில் சுண்ணாம்பு.
அன்பரீசம் - கிளிஞ்சில்.
அன்பர் - சமுத்திரசோகி.
அன்புபாதி - வாழை.
அன்புவிஷம் - நாதவுப்பு.
அன்பு வேணிகை - செம்பாவட்டை.
அன்புள்ளமாமி - நாரத்தை.
அன்றில் - பேடையை விட்டுப் பிரியாத கிரவுஞ்ச பட்சி.
அன்று துளிர்த்தான் செடி - கிள்ளினவுடனே துளிர்க்குஞ்செடி.
அன்றெரித்தான் பூடு, அன்றெரிந்தான் பூண்டு - சிறுபுள்ளடி.
அன்ன ஆவிருத வாதம் - செரியாமையால் ஏற்படும் வாதநோய்.
அன்னகந்தி - வயிற்றுளைவு.
அன்னகாளிகை - சிவப்புப் பொன்னாங்கண்ணி.
அன்னகோபம் - கண்ணுக்குள் எரிச்சலுண்டாகிச் சிவந்து, விம்மி விழி புடைத்துக் கண்ணுறுத்துமோர் வித நோய்.
அன்னக்கட்டு - அரைத்தெடுத்த சுடு சோற்றை இரணங்களின்

மேல் வைத்துக் கட்டுவது; புண்களின் மேல் வைத்துக் கட்டுவதற்கு, சோற்றுப் பசையுடன் மற்ற மருந்துகளும்சேர்ந்த கட்டு மருந்து.

அன்னக்களை - பசியினால் ஏற்படும் களைப்பு, மிகுதியாகப் புசிப்பதால் ஏற்படுங் களைப்பு.

அன்னக்காலன் - அன்னபேதி.

அன்னக்கூர்மை - கல்லுப்பு.

அன்னங்குணத்திலிராமை - சாப்பிட்டசோறு வயிற்றில் தங்காமை.

அன்னசம் - ஓர்வித விக்கல்.

அன்னசலம் - கஞ்சி, நீராகாரம்.

அன்னசாரம் - அன்னச்சத்து, கஞ்சி.

அன்னசுத்தி - நெய், பசு நெய்.

அன்னசூலை - வயிறு மந்தமாக இருக்கும்பொழுது அளவு கடந்து புசிப்பதனாலேற்படும் ஓர்வகைச் சூலை நோய்.

அன்னதாகம் - கொழுப்பு, கைப்பு, எளிதில் செரிக்காத உணவுப் பொருட்களை உட்கொள்வதால் ஏற்படும் தாகம்.

அன்னதாரை - உண்ணும் உணவு வாயினின்று வயிற்றுக்குச்செல்லும் வழி.

அன்னதாரைப்புற்று - உணவு செல்லும் வழியில் புற்றைப்போல் உண்டாகும் பல கண்களையுடைய சிலந்திக்கட்டி, தொண்டைப் புற்று.

அன்னதாழம்பழம் , **அன்னதாழை** - ஓர்வகைத் தாழை, பரங்கித்தாழை அல்லது அன்னாசி.

அன்னதானச் சம்பா - ஓர்வகை நெல்.

அன்னத்தமுதுடை - வெள்ளாடு.

அன்னத்திரவ சூலை - அன்னசாரத்தின் கோளாறினால் ஏற்படும் ஓர்வித வயிற்றுவலி.

அன்னத் துவேஷம் - உணவில் வெறுப்பு.

அன்னத்தூவி - அன்னப்பறவையின் இறகு.

அன்னபம் - ஆலமரம், சூல்.

அன்னபலம் - ஆலமரம்.

அன்னபானோக்காளம் - உண்டவுடன் சோற்றையும், தண்ணீரையும் வாந்தி செய்தல்.

அன்னபூரணம் - சிறுகட்டுக் கொடி.

அன்னபேதி - அன்னத்தைப் பேதித்தல்; ஓர்பூண்டு; சோறு சோறாகக்கழிதல், ஒரு மருந்து;

காற்றழை சாறு.

அன்னபோதம் - இரசம்.

அன்னப்பாகு - உண்டசோறு வயிற்றினுட் சத்தாக மாறுமுன் குடலில் தங்கி நிற்கும். சிறிதளவு சீரணமான அன்ன ரசக் குழம்பு; கஞ்சி.

அன்னப்பால் - கஞ்சி, சோற்றின் சத்து, கொதித் தண்ணீர், இரைக் குடலிலுண்டாகும் உணவின் குழம்பு; அன்னச்சத்து சேர்ந்த பால்.

அன்னமயகோசம் - ஐந்துவகை கோசங்களுள் ஒன்றாகிய உடம்பு.

அன்னமயத்தன்மை - சத்தியுப்பு.

அன்னமயம் - உயிர்நிலைக் காதாரமாக விளங்கும் ஐந்துவகைக் கோசங்களிலொன்று; சோற்றுப்பு.

அன்னமலம் - கஞ்சி; சோற்றினின்று சத்தைப்பிழிந்து விட்ட திப்பி; மலம்; சாராயம்.

அன்னமழகியரி, அன்னமழகியரிசி - உடம்பிற்குச் சுகத்தைக் கொடுக்கும் ஓர் வகை உயர்ந்த அரிசி.

அன்னமாசகி - சிறுகாஞ்சொறி.

அன்னமிடுமுன் இடும்பூ- சோற்றுப்பு.

அன்னம் - நீர்ப்பறவைகளிலொன்று கவரிமான், கற்றாழைச்சோறு, தங்கம், மண்கீழ்ப்பூமி, சுண்ணாம்பு, சோறு.

அன்னயம் - குயில், உடம்பு, சோற்றின் பலன், ஆல்.

அன்னரசம் - இரைப்பையில் உணவு செரித்து இரத்தமாவதற்கு முன் அதனின்று பிரியும் வெண்மையும் பிசுபிசுப்புமுள்ள கஞ்சி போன்ற ஒருவகை நீர்.

அன்னர் - கல்நார்.

அன்னவம் - கடல்.

அன்னவாகி, அன்னவாகிக்குழல், அன்னவாகி சுரோதசம் - இரைக்குழல் (கண்டத்திலிருந்து இரைப்பைக்குச் செல்லு மோர் பெரிய குழல்)

அன்னவாசயம் - வயிறு.

அன்னவிடாய் - உணவின்மையால் ஏற்படும் சோர்வு, பசியால் உண்டாகும் களைப்பு.

அன்னவூறல் - கஞ்சி, நீராகாரம், வடிகஞ்சி.

அன்னவேதி - அன்னபேதி, சாப்பிட்ட உணவைப் பேதிக்குந் தன்மையுள்ள அன்னாசயத்திலுண்டாகும் பாசக நீர், ஓர் பூண்டு.

அன்னவேதிச்சிந்தூரம் - சுரம், மேகம், மார்புநோய் முதலியன நீங்குவதற்கு உபயோகிக்கும் சிந்தூரம்.

அன்னாசயம் - அன்னவாசயம்.

அன்னாசயவிரணம் - வயிற்றிலுண்டாகும் புண்.

அன்னாசி - பரங்கித்தாழை.

அன்னாசு - அன்னாசிப்பூ.

அன்னார் - கல்நார்.

அன்னிகாருகம் - மலப்புழு.

அன்னியகம் - இருவாட்சி; மல்லிகை.

அன்னியசாரம் - குங்கிலியம்.

அன்னியசுவேதம் - வசம்பு.

அன்னியதோ வாதநோய் - கண், நெற்றி முதலிய இடங்களில் மிக்க வலியை யுண்டாக்குமோர் கண்ணோய்.

அன்னியபதார்த்தம் - மாமிசபண்டம்.

அன்னியபிருட்டம் - குயில்

அன்னியபிருத்து - காக்கை.

அன்னியம், அன்னிய விருதம் - குயில்.

அன்னிய புட்டம் - குயில்.

அன்னியம் - குயில், சிறு கரும்பு.

அன்னியவாபம் - தன் முட்டைகளை வேறு பறவைகளின் கூடுகளில் வைக்கும் குயில்.

அன்னிய வோடாலிகாகிரகம் - தாய் அல்லது குழந்தையைத் தாக்கும் ஓர்வகைக் கிரக தோடம்.

அன்னியேத்துக வாதம் - உப்பு அல்லது சீதளப்பண்டங்களை உண்பதால் வாயு, பித்தத்துடன் கூடி, முதுகு, கழுத்து, விலாப்பக்கம் முதலிய இடங்களில் பரவி வலி ஏற்படுத்தும் வாதநோய்.

அன்னிலா - சீத்தா, அனிநுணா.

அன்னீயம் - கரும்பு.

அன்னுகம் - பேய்ப்பசலை, பேய்ப்பருத்தி.

அன்னுவாசனம் - அபானவாயினுள்ளே புகட்டும் நெய்ப்பற்றுள்ள ஓர் மருந்து.

அன்னெறிச்சான், அன்னெறிஞ்சான் - சிவனார் வேம்பு.

அன்னை - கொன்றை மரம்.

அன்னோபிதம் - மஞ்சள் குன்றிமணி.

அச்சிட்டோர் : மத்திய கூட்டுறவு அச்சகம், சென்னை-2. போன்: 849739